# நல்லதோர் வீணை செய்தே...



மனோ ஜெகேந்திரன்

# நல்லதோர் வீணை செய்தே...

மனோ ஜெகேந்திரன்

ஜெகன் பதிப்பகம்
19, RIPLEY PLACE,
HASSALL GROVE, NSW - 2761
AUSTRALIA

# நல்லதோர் வீணை செய்தே...

மனோ ஜெகேந்திரன்

ஜெகன் பதிப்பகம்

19, RIPLEY PLACE,
HASSALL GROVE, NSW - 2761
AUSTRALIA

நல்லதோர் வீணை செய்தே...
மனோ ஜெகேந்திரன்

நாவல்

© ஆசிரியர்

முதற் பதிப்பு: மார்ச், 2000
பக்கம் : 204

பதிப்பு:
ஜெகன் பதிப்பகம்
19, RIPLEY PLACE,
HASSALL GROVE, NSW - 2761
AUSTRALIA

வடிவமைப்பு
வே. கருணாநிதி

அச்சிட்டோர்:
தி பார்க்கர்
293, அகமது வணிக வளாகம், இரண்டாவது தளம்,
இராயப்பேட்டை நெடுஞ்சாலை, சென்னை - 600 014. Ph. 821 5684

## அணிந்துரை

'நல்லதோர் வீணை செய்தே' என்ற நாவலின் மூலம் ஓர் புதிய உலகை - நாம் சந்திக்காத மனிதர்களை - திருமதி மனோ ஜெகேந்திரன் அறிமுகம் செய்கிறார்.

ஏற்கனவே சிறுகதை, குறுநாவல் எழுதிய அவர் இந்த நாவல் மூலம் நாவல் படைப்பிலக்கியத்திலும் காலடி வைக்கிறார்.

எழுத்து இலக்கியம் என்பதே மக்களைப் பற்றிப் பேசுவது. அதில் ஒவ்வொரு படைப்பாளிக்கும் வெவ்வேறு பார்வைகள், கோணங்கள் இருக்கும்.

இங்கு 'வித்யா' என்ற பெண்ணைச் சுற்றி வருகிறது இந்நாவல். நாகரீகம், விஞ்ஞானம் என்று நாம் பேசிக் கொண்டாலும் பெண ணைச் சுற்றியுள்ள தளைகள் இன்றும் அறுபடவில்லை தான். 'பெண்ணடிமை' இன்றும் இருக்கிறது. அதன் உருவம் வித்தி யாசமானது தான். இதனை ஒரு ஆண் உணர்வதை விடப் பெண்கள் தான் உணர முடியும். மீனின் கண்ணீர் மீனுக்கு மட் டுமே தெரிந்து கடல் நீரிலே கலந்து விடுவதைப் போல் இங்கே இந்தச் சமூகத்திலே பெண்களின் கண்ணீர் பெண் களுக்கு மட்டுமே தெரிந்து கரைந்து விடுகின்றது.

ஒரு காலத்தில் கண்ணீரே தண்ணீராய் இருந்தது பெண்க ளுக்கு. இன்று பெண்கள் அந்தத் தண்ணீரில் இருந்து மீண்டு நிமிர்ந்து நிற்கத் தொடங்கியிருக்கிறார்கள். மகாகவி பாரதி பெண்களுக்கு ஓர் தலைவன். இந்நாவலில் பாரதியின் கவிதை வரிகள் அற்புதமாய் ஆங்காங்கே கதையோடு வருகின்றன. அக்கவிதை வரிகளை அற்புதமாய்க் கையாண்டிருக்கிறார் மனோ ஜெகேந்திரன்.

இந்நாவலின் கதை என்ன?

வித்யாவைச் சந்தித்தால் அது உங்களுக்குத் தெரியும்.

அந்த வித்யா கற்பனைப் பாத்திரமென்று நான் நினைக்க வில்லை. இம்மண்ணில் எங்கோ வெவ்வேறு பெயர்களில் இருக்கலாம். மேலைநாட்டு ஜினாவாகட்டும்; கீழைத்தேய சீதை யாகட்டும். அவர்களுக்குத் துயரங்கள் பொதுதான்.

இதனை இப்போது புலம் பெயர்ந்து சிட்னியில் வாழ்கிற திருமதி மனோ ஜெகேந்திரன் அதிகமாகவே உணர்வார். சீதையைச் சந்தித்த அவர் ஜினாவைச் சிட்னி வீதிகளில் சந்தித்திருக்க லாம். வித்யாவையும் அப்படித்தான் சந்தித்திருப்பார். இந்த 'வித்யா'க்களை திருமதி மனோ ஜெகந்திரனால் தான் உணர முடியும்.

பெண்ணடிமையை எதிர்த்துப் பெண்களே பேசவும் எழுதவும் வந்து விட்டாலே போதும்; ஆணும் பெண்ணும் நிகராகிவிடும். முதல் முயற்சிக்கு என் வாழ்த்துக்கள்!

அன்புடன்

***மாத்தளை சோமு***

# முன்னுரை

அன்புள்ள மனோ,

நலம். நலம் தானே! தங்களது 'நல்லதோர் வீணை செய்தே' நாவலைப் படித்து முடித்து அது பற்றி உங்களுக்குக் கடிதம் எழுதத் தாமதமானதற்கு முதலில் மன்னிக்கவும். படித்த உடனேயே எழுத வேண்டும் என்கிற ஆவல் என்னை பிடித்து உந்தித் தள்ளினாலும், சின்னதும் பெரியதுமாய்ப் பலப்பல வேலைகள்...

ஆன்னாலும் அவ்வப்போது உங்கள் எழுத்தின் தாக்கம் என்னுள்ளே குளத்தில் விட்டெறிந்த கல்போல் சலனத்தை உண்டு பண்ணாமல் இல்லை. நல்ல அற்புதமான கதை. நீரோட்டமான கற்பனைத் திறன் உங்களுக்கு இயற்கையிலேயே கைவந்து இருக்கிறது. பாத்திரப் படைப்புகள் அனைத்தும் அருமை. இன்னமும் வித்யா மனசிலேயே நிற்கிறாள். ஏன்... அவளது சித்தி கூட! அன்பும் அடக்கமும் உருவான பெண்ணுக்கு வாழ்க்கையில் ஏற்படும் இன்னல்களை மிக அழகாகச் சித்தரித்து இருக்கிறீர்கள்.

உங்களது கதை ஓட்டத்திற்கு நடுவே ஆங்காங்கே சிதறி இருக்கும் இலங்கைத் தமிழ் மட்டுமே என்னை யோசிக்க வைத்தது. மற்றபடி கதையில் அதற்காக நீங்கள் வரைந்த ஓவியங்களோ மிக அருமை. எழுத்திலும் ஓவியத்திலும் என்னை போலவே உங்களுக்கும் ஆர்வம் இருப்பது எனக்கு வியப்பையும், மகிழ்ச்சியையும் கொடுக்கிறது. இரண்டுமே கற்பனையின் வடிகால்கள் தாம். கடவுளால் ஆசிர்வதிக்கப்பட்ட ஒரு சிலருக்கே இப்படிப்பட்ட கலைகள் கைவருகிறது.

உங்களைப் பற்றி திருப்பூர் கிருஷ்ணன் அவர்களிடம் பேசிக்கொண்டு இருந்தேன். இங்கே 'மின்னம்பலம்' இன்டர்னெட் தமிழ் பத்திரிக்கைக்கு அவர் ஆசிரியராக வும் திரு. சுஜாதா உதவி ஆசிரியராகவும் இருக்கிறார்கள். உங்களது கவிதைகளையும் சிறுகதைகளையும் கூடப் படித்தேன். எளிமையாகவும் நறுக்காகவும் இருக்கின்றன. W.W.W. Minnambalam. comக்கு அனுப்பி வைக்கவும்.

அன்புடன்,

***அனுராதா ரமணன்***

# என்னுரை

என்னுரை என்று இந்த நாவலைப் பற்றி அதிகம் எழுதும் ஆவல் எனக்கு ஆரம்பத்தில் ஏற்படவில்லை. காரணம், என்னுள் வியாபித்து எழுந்த கேள்விக்கு, இயைந்த பதிலை, இந்நாவலாக எழுத்து வடிவில் வெளிக் கொணர்ந் ததுமே அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து விட்டேன்.

அப்படி நான் வைத்த முற்றுப்புள்ளி, பெண்களின் வாழ்க் கைக்கு அஸ்தமனமாக அமையாமல், அடுத்த அடி யைத் தொடங்குவதற்கான ஆரம்பமாக அமையவேண் டும் என்பது தான் என் அவா. அது சரியா, தவறா என் பதை வாசகர்களான நீங்களும் புரிந்துகொள்ள நான் வழி வகுக்க வேண்டும். அப்போதுதான் என் முடிவு சரியா னதுதான் என்று, எனக்கு நீங்கள் தரப்போகும் ஆதரவு, என் எழுத்திற்கு என்றும் பக்கபலமாக அமையும். எனது இந்த நம்பிக்கை நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமா னால், என்னுரை என்ற போர்வையில் என் நோக்கம் தெளிவாக வெளிப்படத்தான் வேண்டுமல்லவா? எனவே தான் இந்த என்னுரையை எழுத நான் முன்வந்தேன்.

பண்பாடு, கலாச்சாரம் - பேசுவதற்கு நல்லது. எழுதுவ தற்கு மிக நல்லது. ஏன் வாழ்க்கைக்கும் மிகமிக நல்லது தான். அதில் ஐயமேற்படுதற்கு அவசியமே இல்லை தான். ஆனால் அதே பண்பாடும், கலாச்சாரமும் நாளாந்த வாழ்க்கையில் வரும்போது அதை நடைமுறைப்படுத்த முயலும்போது வாழ்க்கைப் பாதையில் நடைபயில நாம் எடுக்கும் ஒவ்வொரு அடிக்கும், நாம் ஒவ்வொரு புள்ளி களைப் போடும் போது... நாமே நமக்காகத் தொடுத்த

புள்ளிகளால் அமைந்த கோலத்திற்குள் நம் வாழ்வு தத்ரூபமாக அமைந்து விட்டால் அதற்கு ஈடு இல்லை தான். ஆனால் அத்தகைய வாழ்க்கை எம்மில் எத்தனை பேருக்குத்தான் கிடைக்கிறது? அது ஒரு சிலருக்குத் தானாய் அமைந்துவிடும். இன்னும் சிலரிற்குத் தேடினாலும் திருப்தியாய்க் கிட்டாது. வேறு பலரோ தம்மை அறியாமலே அதைத் தொலைத்து விட்டுத் தவியாய்த் தவிப்பதும் உண்டு. அப்படியாயின் அவர்களது அந்த வாழ்க்கைத் தவிப்பின் முடிவுதான் என்ன?

இன்றைய சமுதாயச் சூழலில் சல்லடை ஆக்கப்படும் எத்தனையோ பெண்கள் அவர்கள் அவர்களுக்காகவே தொடுத்த கோலங்கள், வெறும் கோடுகளாய் மாறிவிடும் போது, அவர்களின் வாழ்க்கையே ஒரு கேள்விக்குறி ஆகி விடுகிறது. அது மட்டுமா? அந்தக் கேள்விக்குறியே அவர்களைச் சூழ்ந்துள்ள சமூகத்தினருக்கு விடுப்பிற்குரிய ஒரு ஆச்சரியக் குறியுமாய் ஆகியும் விடுகிறது!

வீணையின் தந்தி அறுந்து விட்டால், அதைத் தூக்கிப் புழுதியில் எறிந்து விடுவது வெறும் மடமை. அறுந்த தந்தியைச் சரி செய்து அந்த வீணையை மீண்டும் மீட்டுவது தான் புத்திசாலித்தனம். அதை நாமெல்லோருமே பேச்சளவில் அழகாய் ஆமோதித்து விடுவோம். அதில் எவ்விதப் பிரச்சனையும் இல்லை. ஆனால் அதை எப்படி செயலலளவில் மீண்டும் சீர் செய்வது என்பது தான் சர்ச்சைக்கு உரிய விஷயமாகி விடுகிறது. வீணையின் தந்தியை அறுத்தவன் நல்லவனா, கெட்டவனா என்று ஆராய்ச்சி செய்வதில் என்ன பயன்? அல்லது அவன் தந்தியை அறுத்தாலும், அவன் நல்லவன் தான் என்று இந்தச் சமூகம் முடிவு கட்டி விட்டால், அவன் கையிலே தான் அந்த வீணை மீண்டும் அகப்பட வேண்டும் என்று நினைப்பதுதான் எந்த வகையில் நியாயம்? அதை எல்லாம் ஒதுக்கி விட்டு, ஏதுமறியாத அந்த வீணை, அது தான் யார் மடிமீதமர்ந்து சுருதி கூட்டப்

படவேண்டும் என்பதைத் தானே நிர்ணயிக்க முயல் வதில் தான் என்ன தவறு? முடிவு தேட முயலும் அந்த வீணையில் பிறந்த கேள்விதான் இது.

*உதிர்ந்து விழுந்த மலர், மண்ணாகி, மரமாகி,*
*முகையாகி மீண்டும் மலரவில்லையா?*
*ஒளிதனை இழந்த நிலவு, மறைவாகி, பிறையாகி*
*நிறைவாகி மீண்டும் ஒளிரவில்லையா?*
*மலர் என்றும் நிலவு என்றும் மங்கைக்கு*
*அவைதனை உவமை மயமாக்கி விட்டு*
*மலர்தனிற்கும் நிலவுதனிற்கும் மறுவாழ்விற்கு*
*வழி வகுத்த இயற்கை வட்டம்*
*மடந்தைக்கு மட்டும் மௌனச் சதிகூட்டி*
*வாழா இருக்கும் மடமையுமேனோ?*
*சருகாக அவள் வாழ்வுதிரச் சந்தி சிரிப்பதில்*
*யாருக்குத் தானென்ன இலாபம்?*
*கருகாது அவள் வாழ்வு மலரக் கதிர் உதிப்பதில்*
*எவருக்குத் தானென்ன நஷ்டம்?*

இந்தக் கேள்விக் குறிக்காக நான் தேர்ந்த பதில் ஆச்ச ரியக் குறியல்ல. நிச்சயமாக அது முற்றுப்புள்ளி தான். அதன் விளைவாக என் எழுத்தில் பிறந்தது தான் இந்த 'நல்லதோர் வீணை செய்தே...

முற்றுப்புள்ளி வைத்ததுதான் வைத்தாகி விட்டதே. இன் னும் அதை ஏன் இலைமறை காயாய்க் கண்ணாமூச்சி காட்ட வேண்டும்? ஒளிவு மறைவின்றி அதை வெளிக் கொணரும் போது தான் ஒரு முற்றுப் புள்ளியை எய்த முன், கடந்து வந்த பாதையில் சந்தித்த அரைத் தரிப்பு, காற் தரிப்பு... அதாவது சிக்கல்களும், சங்கடங்களும் வெளிப்படும். அப்போதுதான் அதைப் படிப்போரின் கருத்தும் மாறும். மாறும் காலத்திற்கேற்ப, மாறுதலடையும் கருத்தை ஏற்கும் மனப்பக்குவம் பிறக்கும். வாழத் துடிப்போரை பார்க்கும்போது, வம்பு பேசாதிருக்கச்

சொல்லும், வாழத் தவிப்போரைக் காணும் போது, அவர்கள் வழியை அடைக்காது ஒதுங்கச் செய்யும். இன்னும் விளக்கமாய்ச் சொல்லப் போனால் நாமும் வாழ்வோம், அவர்களையும் வாழ விடுவோம். நமக்கும், அவர்களிற்கும் என்று வெவ்வேறான வாழ்க்கை வரம்புகள் கலைந்து, 'எமது வாழ்க்கை' என்ற ஒரு வரம்பை வட்டமாகக் கொண்ட வாழ்க்கைக்கு, வழி பிறக்கச் செய்யும் பண்பை எம் இனத்தவரிடையே மலரச் செய்வோம். அப்போதுதான் நாம் பிறந்த மண்ணில் நாம் காண விழையும் எழுச்சி, எம் பண்பாட்டிலும்,. கலாச்சாரத்திலும் பரிணமிக்க, எமது மொழி ஊடகமாகப் பயன்பட வேண்டும் என்ற என் ஆவலும் பூர்த்தியாகும்.

அந்த ஆவலை வெளிக் கொணர்வதற்காய் நான் வடித்த எழுத்திற்கு, நாளாந்த எழுத்துப் பிரவாகப் பணிகளுக்கு மத்தியிலும் நயமுற முன்னுரை உவந்தளித்த எழுத்தாளர் அனுராதா ரமணன் அவர்களிற்கும், அருமையான அணிந்துரையோடு அளப்பரிய ஆதரவையும் சேர்த்துக் கொடுத்த எழுத்தாளர் மாத்தளை சோமு அவர்களிற்கும் எழுத்தையும் ஓவியத்தையும் எழிலோடு ஒருங்கிணைத்து ஏற்றமுற அச்சிட்ட தி பார்க்கர் திரு. வே. கருணாநிதிக்கும், நாவலை நல்ல முறையில் வெளிக் கொணர்வதற்கு ஆய பணிகளில் அன்புடன் கை கொடுத்த அனைவரிற்கும் குறிப்பாகச் செல்வி சாந்தினி கிருஷ்ண சர்மா அவர்களிற்கும் ஆக்க பூர்வமாகத் தரும் ஒத்துழைப்பின் மூலம் என்னை என்றும் எழுதத் தூண்டும் அன்புத் தமிழ் வாசக நெஞ்சங்களிற்கும் அனைத்துக் கோடி நன்றிகள்!

நன்றிகள்!! நன்றிகள்!!!

அன்புடன்

*மனோ ஜெகேந்திரன்*

# 1

எண்ணும் காரியங்களெல்லாம் – வெற்றி
யேறப் புரிந்தருளல் வேண்டும். – பாரதி

பொங்கிக் குதித்து நுங்கும் நுரையுமாகப் பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருந்த கங்கை ஆற்றின் இரு மருங்கிலும் கண்ணுக் கெட்டிய வரை மூங்கில் மரங்கள் தழையத் தழையத் தழைத்து வளர்ந்திருந்தது. புலர்ந்தும் புலராத பொழுதின் இனிய விளையாட்டினால், மூங்கில் இலைகளில் படிந்திருந்த பனித்துளிகள் மெல்லமெல்ல மறைந்து கொண்டிருந்தன.

கால்களை நீருள் அளைந்தவாறு தன்னை மறந்த நிலையில் அமர்ந்திருந்த வித்யாவின் நினைவுகளில் எத்தனையோ எண்ணங் கள். சாதாரண நாட்களாயிருந்தால் 'மூங்கில் இலை மேலே, தூங்கு பனி போலே......' என்ற அவளிற்குப் பிடித்தமான பாடலை அனுப வித்து அனுபவித்துப் பாடிக் கொண்டிருப்பாள். ஆனால் இன்றோ? உள்ளத்து உணர்வுகளை அடக்க முடியாதவளாகவோ, அல்லது அதற்காக முயலாதவளாகவோ அமர்ந்திருந்த அவள் விழிகளில் இருந்து பனித்துளிகளைக் கோத்துத் தொடுத்தாற்போல் கண்ணீர் வழிந் தோடிக் கொண்டிருந்தது. உள்ளத்துள்ளே பூட்டிப் பூட்டி, அடக்கி வைத்திருந்த துன்ப நினைவுகளின் தேக்கம் மடைதிறந்தாற் போல் பெருகிக் கொண்டிருந்தது.

இப்படி எத்தனையோ நாட்கள் அவள் தன்னை மறந்து, அந்த ஆற்றின் மருங்கில் மண்டியிட்டமர்ந்து, தனக்கு மட்டுமே கேட்கக் கூடிய குரலில் பாடிக் கொண்டிருப்பாள். ஆனால் அன்று இருந்த நிலைக்கும், இன்று இருக்கிற நிலைக்கும் எவ்வளவு வித்தியாசம். ஆமாம்! இன்று அவள் புது வாழ்வின் முதற்படியில் காலடி எடுத்து

வைக்கத் தயங்கி நின்று விம்முகிறாள். எந்தப் பெண்தான் தன்னைப் பெண்பார்க்க யாராவது வருகிறார்களென்று அழுவாள்?

அதுவும் நான் அகப்பட்டிருக்கும் கூண்டை விட்டுச் சிறகடிக்கத் தக்க சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறதே. கூண்டு திறக்கப்பட்டும், என் சிறகை நானே ஒடித்திட விரும்பினாலும் வெளியே தள்ளப்பட்டு விடுவேனே. என்னுடைய நிலையை நினைத்தாலேயே..... அம்மா, அப்பாதான் இல்லை. வந்த சித்தியாவது கொஞ்சம் அன்பாய் இருக்கக் கூடாதோ? குடும்பம் என்றால் கூடேயொழியக் கூண்டு இல்லை என்பாங்க. என்னுடைய கடந்த கால வாழ்வுதான் கூண்டென்றால் வரப்போகிறதும் அப்படித்தானா அமைய வேண்டும். இனியாவது நல்ல காலம் வருமென்றால், வரப்போகிற காலத்திலும் வந்த காலமே நல்லது போலல்லவா இருக்கு. என் நிலையை நினைத்தாலேயே சிரிப்புத்தான் வருகிறது...' என்று எண்ணமிட்டவாறே இருந்த வித்யா தன்னை மறந்து சிரித்துவிட்டாள்.

என்னடி வித்யா, உனக்குச் சிரிப்புக் கூட வருகிறதே. இன்னுமா வீட்டுக்குப் போகல்லை? ஏன் சித்திகிட்டே இன்னும் நாலு குட்டு வாங்கணுமோ? நீட்டி முழக்கியவாறே உலுக்கினாள் பக்கத்து வீட்டுக் காமாட்சி அத்தை.

சுய நினைவை அடைந்த வித்யா, திடுக்கிட்டெழுந்து சுற்று முற்றும் திரும்பிப் பார்த்தாள். பொழுது நல்லாகப் புலர்ந்து விட்டதால், கிராமத்துப் பெண்கள் குடமும் கையுமாக ஆற்றை நோக்கி நடையைக் கட்டிக் கொண்டிருந்தனர். அவசரமாக மணலைத் தட்டிக் கொண்டு எழும்பிய வித்யா, குடத்தை நிறைத்துக் கொண்டு, தெருப் பக்கமாய் விடுவிடு என்று நடந்தாள். ஓட்டமும் நடையுமாக அவள் போவதையே பார்த்துக் கொண்டிருந்த காமாட்சி அத்தை,

"என்ன பைத்தியக்காரப் பெண்ணோ இது? விடிய முன் ஆத்துக்கு வர்றதும், ஏதோ வரையறுதும், பாடுவதும், பாவம் பொண்ணு பார்க்க வரப்போறாங்களேயென்று துளிச் சந்தோஷமிருக்கா" என்று தனக்குள்ளே முணுமுணுத்தவாறு, தன் இடுப்பிலிருந்த குடத்தை நிரப்பிக் கொண்டு தன் மருமகளுடன் திரும்பவும் சேர்ந்து கொண்டாள்.

"என்ன அத்தே, உங்களுக்குள்ளேயே முணுமுணுத்துக் கொள்றீங்க யாராம் அவளைப் பெண் பார்க்க வாறாங்க? மனம்

வந்துட்டதாமா அவ சித்திக்கு, அவளுக்கு ஒரு நல்ல காரியம் பண்ண?” என்றாள் வசந்தா வியப்புடன்.

“ம்... என்னவோ பாவம். அந்த பெண்ணுக்கு எண்டைக்குத் தான் நல்ல காலம் பொறக்கப் போறதோ? அவ தலைவிதியின் அழகைப் பாரேன். பார்த்த மாப்பிள்ளையை உருப்படியானவனாய், ஒழுங்கானவனாய்ப் பார்க்கத்தானும் மனம் வரலலையே அந்தப் புண்ணியவதிக்கு! அந்தப் பிள்ளையாண்டான்தான் உருப்படாத தடிக்கழுதையாச்சே. ஏன் உனக்குத்தான் தெரியுமே அவனை. அவன்தான் அந்தக் கிருஷ்ணனை” என்று நீட்டி முழக்கியவளைத் தொடர்ந்து பேசவிடவில்லை வசந்தா.

“அடக்கடவுளே! இந்தப் பெண்ணுக்கென்று ஒருத்தன் வராட்டாலும் பரவாயில்லை. அவனிடமா கழுத்தை நீட்டணும்? பணம் கொஞ்சமிருந்தால் பத்துமோ? அந்தக் கழுதைக்குக் கல்யாணம் வேறு கேடா?” ஆத்திரத்துடன் வெடுவெடுத்தாள் வசந்தா.

“பணம் என்ன பணம். அந்தத் தடிப்பயலுக்கு எவன்தான் பெண் கொடுப்பாங்க? அதுவும் உனக்குச் சங்கதி தெரியுமா? இவளுக்கு ஒண்ணுமில்லையாம். வித்யாவைத் தனக்குப் பண்ணி வைத்தால் ரொக்கமாகப் பதினையாயிரம் உமாக்குக் கொடுக்கிறனன்டானாம். அந்தக் சொக்குப் பொடியில் மயங்கித்தான் சிவகாமி, வித்யாவுக்கு இவனைப் பண்ணி வைக்கப் பாக்கிறாள்” என்ற காமாட்சி, அக்கம் பக்கம் பார்த்தவாரே,

“சேகர், தான் இதற்கொரு வழி பண்றன் எண்டான். எப்படியோ இது குழம்பினால் சரிதான்” என்று கிசுகிசுத்தாள்.

விறுவிறுவென்று வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்த வித்யாவை உமாவின் வித்யாக்கா, வித்யாக்கா, கொஞ்சம் நில்லேன். நானும் கூட வாறன்' என்ற கூப்பாடு நிற்க வைத்தது. பின்னால் ஓடாத குறையாக வந்து கொண்டிருந்த உமா, வாடிக்கிடந்த வித்யாவின் கண்கள் வியப்பினால் விரிவதைக் கண்டதும், தன் கூப்பாட்டை நிறுத்திவிட்டு அவளுடன் சேர்ந்து நடந்தாள்.

“அக்கா” என்று தயங்கியபடி நீட்டியிழுத்தாள் மீண்டும் உமா.

“வித்யாக்கா கிருஷ்ணன் வீட்டவங்கள் வந்து உன்னைப் பண்ணிக்கப் பிடிக்கல்லையாம் என்று சொல்லி அனுப்பி விட்டுக் காலை

வண்டியிலே புறப்படப் போகிறாங்களாம். அவன் அம்மா கடைசி நேரத்திலே தனக்கு இதிலே சம்மதமில்லையாம் என்றிட்டுப் புறப்பட் டிட்டதாய் அவர் சொன்னார்" என்று முடித்தாள் உமா.

"அவரா? அவரென்றால்...... யாரவர் உமா?"

"அவரில்லை வித்யாக்கா. அதுதான் அந்த அடுத்த வீட்டுச் சேகர் தான் சொல்லிட்டுப் போனார் உன்கிட்டே சொல்லும்படி" என்றாள் தடுமாறியபடி. அவளது தடுமாற்றத்தையோ சந்தோஷத்தையோ கூடக் கவனிக்காமல் ஆர்வத்துடன் அவளைக் கட்டிக் கொண்டாள் வித்யா.

"அடேயப்பா, அந்தச் சேகர் சொன்னது சரியாத்தான் போச்சு. உண்மையைச் சொல்றேனே. அவர்தான் கிருஷ்ணன் அம்மாக்காரி யிடம் போய் ஏதோ சொன்னாராம். என்ன சாக்குப் போக்குச் சொன் னாரோ தெரியவில்லை. எப்படிச் சொன்னாரோ எனக்கு அவர் அது பற்றிச் சொல்லவில்லை. கடைசியில் அவங்க மனதையே மாத்திட் டார். ஆனால் அதனாலே அவங்க ஏதோ தன்னையும் உன்னையும் சேர்த்துச் சந்தேகப்படுறாங்க போலிருக்காம். என்னவோ ஒரு மாதிரி யாக இதற்குத் தலை முழுகியாச்சுது" என்று விளக்கினாள் உமா. பேசிக் கொண்டே வீட்டை அடைந்து விட்ட வித்யாவும் உமாவும் பக்கத்து வீட்டுத் திண்ணையில் அமர்ந்து பத்திரிகை படிப்பதாகப் பாவனை செய்து கொண்டிருந்த சேகரைப் பார்த்து அர்த்த புஷ்டி யுடன் இரகசியமாக முறுவலித்து விட்டு வீட்டுள் காலடி எடுத்து வைத்தது தான் தாமதம்.

"தரித்திரம் கெட்ட நாயே" என்று ஆரம்பித்த சிவகாமியின் அர்ச்சனை தொடர்ந்து முழங்கியது. ஆனால் வித்தியாக்கிருந்த உற் சாகத்தில் அவற்றைக் காதில் வாங்காமலேயே பின் கட்டை நோக்கிச் சிட்டாகப் பறந்து விட்டாள் அவள்.

எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி
எங்கும் வெற்றி, எதனினும் வெற்றி — பாரதி

வித்யாவின் தந்தை சிவராமன் ஓகோன்று பணம் படைத்த குடும் பத்தில் பிறக்காவிட்டாலும், சோற்றுக்கும் துணிக்கும் போராடும் வறு மையிலும் பிறக்கவில்லை. ஏதோ ஓரளவு நல்ல நிலையில், ஓரளவு வசதியுடனே வாழ்ந்து வந்த அவருக்கு வாழ்க்கையில் குறையிருக்க

வில்லை. பட்டணத்தில் தங்கிப் படித்துக் கொண்டு. திருமணத்தில் இஷ்டமில்லாது, இளமையைக் கழித்துக் கொண்டிருந்தபோது, அவர் வாழ்வில் குறுக்கிட்ட காந்திமதியின் அழகும், குணமும் அவரைக் கவர்ந்தது மட்டுமல்ல, அவரது திருமணத்தை இரகசியமாக நடத்தவும் தூண்டியது. காரணம் அவர்களிற்கிடையிலிருந்த சாதி வேறுபாடும், அந்த வேறுபாட்டை ஏற்க மறுத்த அவர் தந்தையின் பிடிவாத குணமும் தான். மணமான அடுத்த வருஷம் வித்யா பிறக்கவும், காந்திமதி கண்ணை மூடவும் சரியாக இருந்தது. மனைவியை இழந்த கவலையுடன், அதே அழகைக் கொள்ளை கொண்டாற் போல் கொழு கொழு என்றிருந்த குழந்தை வித்யாவை வளர்க்கும் பொறுப்பும் சேர்ந்த போது தான் சிவராமன் திணறினார். கடிதம், போக்குவரத்தேயற்றிருந்த அவரது பெற்றோரும், இந்த நிலையில் மகனைத் திரும்பத் தம்முடன் சேர்த்துக் கொண்டனர். ஆனால் அவர்கள் விருப்பப்படி மறுமணம் செய்ய வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்ட போதோ, அல்லது அதன் பிறகோ, அவர் வெறும் இயந்திரமாகத்தான் வாழ்ந்தார்.

சிவகாமி எவ்வளவோ நல்லவள் தான். ஆனால் எந்தப் பெண் தான் அன்பான பார்வையோ, ஆசையான பேச்சோ இல்லாத ஒரு இயந்திரக் கணவனுடன் சந்தோஷமாக வாழ்வாள்? அவள் வாழ்வில் புகுந்த ஏமாற்றம், அவள் குணத்தையே அடியோடு மாற்றி விட்டது. தனக்குக் கிட்டாத அன்பின் முழுமை, வித்யாவுக்குக் கிட்டியபோது தான். விரக்தியடைந்திருந்த அவள் மனதில் பொறாமையின் தீ, சுடர் விட்டது. உமாவும் சுந்தரும் பிறந்த பிறகு, தன் குழந்தைகளிலேயே தன் ஏமாற்றத்தைப் போக்கிக் கொண்டாள். போதாக்குறைக்கு, இருந்த கொஞ்ச நஞ்ச காணியும், புணமும் சிவராமன் பாரிசவாத நோயால் பீடிக்கப்பட்டதுடன் வைத்தியச் செலவாகக் கரைந்து விட்டது. மணமான நாலாம் வருஷமே மஞ்சள் குங்குமத்தை இழந்து விட்டாள் சிவகாமி. இல்லற வாழ்வைப் பற்றிக் கோட்டை கட்டிக் கொண்டிருந்த சிவகாமிக்கு, ஆரம்பத்திலே ஏற்பட்ட ஏமாற்றம் ஏக்கமாகி, ஏக்கம் பொறாமையாக வித்யாவின் மேல் பாய்ந்ததில் வியப்பென்ன?

அதன்பயன், வித்யாவின் படிப்பு எஸ்.எல்.சி.யுடனேயே நிற்பாட்டப்பட்டு விட்டது. அவளுக்கு இரண்டு வயது இளையவளான உமா அப்போதுதான் எஸ்.எல்.சி யை முடித்து விட்டுத் தட்டெழுத்து.

சுருக்கெழுத்து வகுப்புகளுக்கு போய் வந்து கொண்டிருந்தாள். அடுத்தவன் சுந்தர் ஏழாம் பாரத்தில் இருந்தான். வித்யாவுக்குப் படிப்பதில் இருந்த ஆர்வத்தைக் காட்டிலும் பாடுவதிலும், வரைவதிலும் வீணை வாசிப்பதிலும் தான் ஆர்வம் அதிகமாயிருந்தது. அவளது ஆர்வத்திற்கு ஓரளவு உறுதுணையாய் இருந்தது, பக்கத்து வீட்டுக் காமாட்சி அத்தையின் மூத்த மருமகள் வசந்தா தான். உள்ளூர்ப் பாடசாலையிலேயே பாட்டுச் சொல்லிக் கொடுத்து வீணை ஆசிரியையாகப் பணியாற்றிக் கொண்டிருந்த வசந்தாவிடந்தான் ஒழிந்த நேரங்களில், சித்திக்குத் தெரியாமல் பாட்டும் வீணையும் கற்றுக் கொண்டாள். காமாட்சியின் இரண்டாவது மகன் தான் சேகர். காமாட்சி மகளில்லாத குறை தீர வித்யாவை அன்பாக நடத்தினாள். பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு நான்கு வருடங்களாக வித்யா அந்த வீட்டில் பட்டபாடு அவளைப் படைத்த ஆண்டவனுக்குத் தான் தெரியும். இந்த நிலையில் தான் கிருஷ்ணன் பகுதியினர் வித்யாவை மணம் செய்ய வந்தது மட்டுமல்ல, கிருஷ்ணன் தாய்க்குத் தெரியாமல் தான் சுருட்டி வைத்திருந்த பதினையாயிரத்தை உமாவுக்குக் கொடுக்க முன் வந்ததும் - எல்லாம் கிருஷ்ணன் திட்டம் தான். சிவகாமிக்கென்ன பயித்தியமா? வருகிற சீதேவியைக் காலால் எட்டி உதைக்க? ஓமென்று சம்மதித்து விட்ட பிறகு திடீரென்று சம்மதமில்லையென்று மாப்பிள்ளை வீட்டார் சப்புக் கொட்டியதும், அவளிற்கு வந்த ஆத்திரத்தில் என்ன செய்கிறோம் என்று அறியாமலே வசை பாடிக் கொண்டிருந்தாள்.

வாசலில் மணியடிக்கும் சத்தம் கேட்கவே,

“எந்தக் கடன்காரன் இந்த நேரங்கெட்ட நேரத்தில் வந்து கழுத்தறுக்கிறான்” என்று வந்தவனுக்குச் சேர்த்து அர்ச்சனை செய்தவாறு முன் பக்கம் போனாள். வாசலில் நின்று கொண்டிருந்த தந்திச் சேவகனைக் கண்டதும்,

“அடக் கடவுளே, தந்தியா, எனக்குக் கையும் ஓடலை, காலும் ஓடுலையே, அடியே வித்யா அடியே இதை வந்து படிச்சுப் பாரேண்டி” என்று படபடத்தாள். உள்ளே பூத்தொடுத்துக் கொண்டிருந்த வித்யா தான் ஓடி வந்து, கையெழுத்து இட்டு விட்டுத் தந்தியின் வாசகத்தைப் படித்தாள்.

“நாளை மெயிலில் வருகிறேன் - ஜனார்த்தன்” என்று வாசித்தது தான் தாமதம்.

"அந்த டாக்டர் தம்பி வர்றானாமடி அடி உமா, அடி உமா, நம்ம ஜனார்த்தனன், தம்பி ஜனன் வாறானாமடி" என்று உற்சாகமாகக் கூவியவாறு உள்ளே சென்றாள்.

வாசலில் இவ்வளவுக்கும் மௌனமாக நின்றிருந்த வித்யா,

"ஜனன், ஜனன், ம்..... இனிமையான பெயர்தான். சித்தியின் ஆர்ப் பாட்டத்தையும், அமர்க்களத்தையும் பார்த்தால் நாளைக்குப் படை யல் தான். நம்ம தலையில்தான் எல்லாம் வழக்கம் போல்" என்று எண்ணமிட்டவாறே, உள்ளே சென்ற சித்தியைத் தொடர்ந்தாள்.

வித்யாவுடன் சேர்ந்து முதல் பூத்தொடுத்துக் கொண்டிருந்த உமாவோ, தாயைப் போல் ஜனனின் வரவில் ஆர்வம் காட்டாது, தொடர்ந்து பூவைத்தொடுத்துக் கொண்டிருந்தாள். மெல்ல அவள் அருகில் மீண்டும் வந்தமர்ந்த வித்யா,

"யாரது உமா, அந்த ஜனன்? வந்து சித்தியின் ஒன்று விட்ட தம்பி யின் பிள்ளையோ? தத்துவமோ, தந்திரமோ என்னது.... மனோதத்து வம் படித்துக் கொண்டிருந்த டாக்டர் ஜனன் தானே" என்றவள் உமா வின் கண்களில் எதையோ தேடினாள் தலையை நிமிர்த்தாமலேயே.

"ஆமாம், அவர்தான்" என்று சர்வசாதாரணமாகச் சொன்ன உமா,

"வித்யாக்கா, உன்னிடம் ஒன்று சொல்ல வேண்டும்....." என்று தயங்கியவள், மீண்டும் "அல்லாட்டி இப்போ வேண்டாம்" என்று தடுமாறினாள்.

"என்ன உமா இது? இரண்டொரு நாட்களாகவே பார்க்கிறன். ஏதோ தடுமாறுகிறாயே? என்னது? என்னிடம் சொல்ல என்ன தயக் கம்" என்று ஆவலுடன் உமாவைப் பார்த்தாள்.

வித்யா. உமா தனக்குள்ளேயே முறுவலித்துக் கொள்வதையும், சொல்ல முடியாமல் தவிப்பதையும் பார்க்க, ஏதோ புரிவது போலு மிருந்தது புரியாதது போலிமிருந்தது.

"பரவாயில்லை வித்யாக்கா, இப்போ சொல்லாட்டாலும் பிறகு சொல்லித்தானே தீரணும். அதனாலே இப்பவே.... அம்மாதான் ஜனன் வாறாரென்று அடுத்த வீட்டுக்குத் தம்பட்டம் அடிக்கப் போய்விட் டாளே. அதனாலே... சொல்லிடறேன்.... முன்னுக்குப் பின்னாகத் தடு மாறினாள் உமா.



அவளையே குறுகுறு எனப் பார்த்துக் கொண்டிருந்த வித்யா வின் கண்கள் திடீரென ஆச்சரியத்தால் மலர்ந்தன.

"அடடே எப்போ தொடக்கம் இந்தப் புது நாடகம்? சேகரண்ணா சரியான அமர்த்தல் ஆள்தான். என்கிட்டே கூடச் சொல்லலையே"

என்று கேலியாகப் பேச்சைத் தொடங்கியவள் சித்தியைக் கண்டதும், வாயைப் பக்கென்று மூடிக் கொண்டாள். வெற்றிலையைக் குதப்பிக் கொண்டே வந்த சிவகாமி,

நாளைக்கு இரவு டாக்டர் தம்பி ஜனன் வந்திடும். நிலாச் சாப்பாடு தான். இப்பவே சொல்லிவிட்டேன், வித்யா. எல்லாம் பிரமாதமா யிருக்க வேண்டும். சேகரைச் சொல்லிட்டேன் ஸ்ரேசனுக்குப் போய்த் தம்பியைக் கூட்டி வரச் சொல்லி. நாளைக்குத் திருவிழா முதல்நாள். ஆதலால் நாங்களெல்லாம் கோயிலுக்குப் போயிட்டு வாற நேரம் றெயில் வந்திடும். நீ எல்லாத்தையும் சரியாச் செஞ்சுட்டி" என்னடி" என்று வித்யாக்குச் செய்ய வேண்டிய வேலைகளை அடுக்கிக் கொண்டு போனவள், ஏதோ பாடத்தை உருப்போட்டுக் கொண்டிருந்த சுந்தரை, பக்கத்துத் தெருவிலுள்ள வாடகை வண்டிக்காரருக்குச் சொல்லி வருமாறு விரட்டினாள்.

"என்ன உமா, சித்தி பண்ற அமர்க்களத்தைப் பாத்தால் உன்னை ஏதோ இதில் மாட்டப் பாக்கிறாள் போலல்லவா இருக்குது" என்று குறும்பாகச் சிரித்தாள் வித்யா.

"ஆமாம்! அம்மாக்கென்ன. பணத்தைப் பாத்த உடனேயே பாயா சம் பண்ணத் தொடங்கி விடுவாள். எனக்கு ஜனன் மாப்பிள்ளையா கவும் வேண்டாம். நான் அவருக்குக் கழுத்தை நீட்டவும் வேண்டாம். நான் சேகரைத் தான்....." டக்கென நாக்கைக் கடித்துக் கொண்டாள் உமா.

"ஏன்? ஏன்?... மிச்சம்... மிச்சத்தையும் முடிப்பதுதானே" என்று குறும்புடன் நிமிண்டிய வித்யாவை "சும்மா இரேன் வித்யாக்கா. நீ வேண்டுமானால் ஜனனைப் பாத்துக் கொள்ளேன். என்னை ஏன் வம்பில் மாட்டுகிறாய்?" என்று மடக்கியவாறே, தொடுத்த முல்லைச் சரத்தைச் சுவாமி படத்திற்குச் சாத்த எழுந்தாள் உமா.

நம்பினார்க் கெடுவதில்லை
நான்கு மறைத் தீர்ப்பு — பாரதி

மாலை மங்கிற நேரம், உமாவின் ஜடைக்கு வைத்துப் பின்னுவ தற்காகப் பறித்த தாழம்பூக்களைச் சேர்த்தபடி, ஆற்றங்கரை அடுத்துச் செல்லும் ஒற்றையடிப் பாதையில் இறங்கி வந்து கொண்டிருந்தாள்

வித்யா. ஆற்றங்கரையை அடுத்தடுத்தாகச் சிறிது தூரத்தில் தாழை மரங்கள் நிறை மண்டிக் கிடந்ததால், அவ்விடத்தை எல்லோரும் தாழங்காடென்றே அழைத்து வந்தனர். சாதாரணமாகத் தாழம்பூ மணத்திற்காகப் பாம்புகள் வருவதாகையால், அந்தப் பக்கம் யாருமே வருவதில்லை. வித்யாவுடன் துணைக்கு வந்த சுந்தரும், நடுவழியில் முரண்டு பிடித்துக் கொண்டு, திருவிழாப் பார்க்க நேரமாகிறதென்று, பக்கத்து வீட்டுப் பாலுடன் பறந்து விட்டான்.

பறித்த தாழம் பூக்களை கை நிறைய அணைத்துக் கொண்டு, மேடாயிருந்த அந்த ஒற்றையடிப் பாதையில் இறங்கி வந்து கொண்டிருந்தாள் வித்யா. "பார்ப்பதற்குத் தனித்ததோர் அழகும். நிறைய மணமும் இருந்தும் பெண்கள் தலைக்குச் சூடுவதுடன் சரி. இறைவனடியைப் பூஜிக்கும் பாக்கியம் இந்த பூவிற்கு இல்லையே. இப்படித்தான் சில பெண்களின் வாழ்வும் அமைந்து விடுகிறது. அழகும், குணமுமாய் அவர்கள் மணமாயிருந்தென்ன பயன்? தாழம்பூப் போல் சாதாரணமானவர்களின் ரசனைக்குரியதாயிருந்தும், அது பூரணமடைவதற்காக உரியவர்களால் ஏற்க இயலாமற் போலாகி விடுகிறது. சாதியென்றும், சமயமென்றும், சீதனமென்றும் உருவாகும் பிரச்சனைகளால் தக்க கணவனை அடைய முடியாத பெண்கள் நிலையும், அப்போது, இந்தத் தாழம்பூப் போல் தான் ஆகி விடுகிறது. அவர்கள் வாழ்வும், உரியவனால் அர்ச்சிக்கப்படாது, பூரணமடையாத வாழ்வாகி விடுகிறது" என்று எண்ணமிட்டவாறே, இறங்கி வந்து கொண்டிருந்தவளின் தாவணித் தலைப்பு எதிலோ தடக்கவே, ஒருவேளை தாழங்கருக்கில் சிக்கி விட்டதாக்கும் என்று எண்ணியவாறே மெல்லத் திரும்பியவளின் கண்களில் கிலி படர்ந்தது.

நவநாகரீக உலகையே கரைத்துக் குடித்த கோலத்தில், ஒரு கையில் சிகரட் டும், மறு கையில் தாவணித் தலைப்புமாக நின்று கொண்டிருந்த கிருஷ்ணனிடம் வசமாக மாட்டுப்பட்டு விட்டோம் என்பதை உணர்ந்த வித்யாவுக்கு ஒரு கணம் என்ன செய்வதென்றே தெரியவில்லை. மறு கணம்... தாவணித் தலைப்பை ஒரு கையால் இழுத்த வண்ணம் பாய்ந்தோட முற்பட்டவள், கிருஷ்ணனின் முரட்டுக் கரங்கள் அவள் கைகளை இறுக்கியதும், அதிலிருந்து விடுபடத் திமிறினாள்.

"வித்யா" கரகரத்த குரலில் உறுமினான் கிருஷ்ணன்.

"மரியாதையாய்க் கூப்பிடக் கூப்பிடக் காதில் விழாதவளாட்டம் போனால் வேறு எப்படி உன்னை நிறப்பாட்டுவது?" விகாரமாய்ச் சிரித்தான் அவன்.

"ஏன், என்னைப் பண்ணிக்கக் கசக்குது என்று என்னை தூக்கி எறியலாம் என்றா பார்த்தாய்? போன வருஷம் கோயில் திருவிழா லீவுக்கு வந்த இடத்தில் கண்ட உன்னை முறையாய்ப் பண்ணிக்கப் பாத்த என்னையா வேண்டாமென்றாய்? உன் கள்ளக் காதலன் சேகர் என் அம்மா கிட்டேயே சொன்னானே, உங்கள் லீலைகளை. உன்னை என்னிஷ்டத்திற்கு பண்ணிக்கலாமென்றால் என் அப்பன் தன் சுய சம்பாத்தியத்தில் ஒரு சதமில்லை என்கிறான். அம்மாவோ, தாழ்ந்த சாதிக்காரப் பெண்ணு மகளையா கட்டிக்க போகிறாய் என்று கத்தக் கத்த, உன் சித்தி பேச்சுக்காகப் பதினையாயிரம் வேறு கொட்டப் பாத்தேன் பாரு. உனக்குப் பிடிக்கலை்லைன்று திமிராச் சொல்லிட்டா விட்டுடுவேனா?" குரோதமாய் உறுமியபடி வித்யாவை இன்னும் இழுத்தான்.

"என்னை விட்டிடு, ஐயோ என்னைத் தொடாதே தொடதே" மிரட்சியுடன் வெருண்டவாறு வீரிட்டாள் வித்யா.

"உன்னை இப்படியே விடுவதற்காகவோ இவ்வளவு தூரம் தேடி வந்தனான். றெயில் வர்ற நேரமாச்சு என்றதையும் பார்க்காம ஓடி வந்தது உன்னைத் தொடாமல் சும்மா பார்க்கத்தானே?" வெறியுடன் அவளைத் தாவி அணைத்தான் கிருஷ்ணன்.

மதுவின் நெடி அவள் மூக்கைத் துளைத்தது. அருவருப்பும், ஆவேசமுமாகத் தன் பலங்கொண்ட மட்டும் உதறினாள் வித்யா விருட்டென்று. திடீரெனப் பின்புறமாக மல்லாந்து நிலை தடுமாறி விழுந்தவனை எழும்ப விடாது மீண்டும் உதைத்தான் சேகர். தட்டுத் தடுமாறி எழும்பிய கிருஷ்ணன், கைகால்களில் ஒட்டிக் கொண்டிருந்த மணலைத் தட்டிக் கொண்டிருந்த சேகரைக் கண்டதும், எழுந்த வேகத்திலேயே ஓடினான். முழங்கால்களிற்கிடையில் முகத்தைப் புதைத்தவாறு விக்கி விக்கி அழுது கொண்டிருந்தவளை ஆதரவுடன் பார்த்தான் சேகர். அவள் முகத்தை மூடிக் கொண்டிருந்த கரங்களைப் பற்றி ஆதரவுடன் எழுப்பினான்.

"சரி சரி.. முடிந்தது முடிந்துவிட்டதே. அந்த கழுதை தான் போயிட்டானே, அழாதே வித்யா, சொன்னால் கேளேன்.... இதென்னது? அழா

தெயென்று சொன்னால், அதற்கு அர்த்தம் இன்னும் கூட அழுகிறதா? ஆமாம் தாழங்காட்டுக்குத் தனிய ஏன் வந்தாய்? சிவகாமி அத்தைக்கு வேறு ஆள் அகப்படவில்லையா? என்னைத் தானும் கூப்பிட முடியவில்லையா உனக்கு? வழியில் சுந்தர் பயல் நீ தாழங்காட்டுக்குப் போகிறதைச் சொல்லிருக்காவிட்டால் என்ன நடந்திருக்கும்?" மண்ணில் விழுந்தபோது தாழங்கருக்கள் கீறியிருந்த இடங்களைத் தன் கைகளால் மெதுவாகத் தேய்த்தவாறே பேசினான் சேகர்.

"நான் வேணுமானால் வேறு தாழம்பூப் பறித்து வருகிறேன். நீ நேராக இந்தக் கோலத்துடன் வீட்டுக்குப் போகாமல், ஆத்துக்குப் போய் முகத்தை அலம்பிவிட்டு... அல்லது வேண்டாம். அந்த மடையன் வழியில் எங்காவது நிற்பான். நீ ஒண்ணும் தனியாகப் போக வேண்டாம். நான் உன் கூட வந்திட்டு ஸ்ரேசனுக்குப் போறேன். இருக்கிற பூவே உமாக்குத் தாராளமாகப் போதும்," என்று பேசிக் கொண்டே முன்னால் நடந்தான் சேகர், அதுவரை மௌனமாக அவனைப் பின் தொடர்ந்து நடந்து கொண்டிருந்த வித்யா உமாவின் பெயரைக் கேட்டதும் களுக்கென்று சிரித்தாள். முன்னால் நடந்து கொண்டே கேள்விக் குறியுடன் முகத்தைத் திருப்பினான் சேகர்.

"என்கிட்ட கூடச் சொல்லலையே சேகரண்ணா உமா பற்றி" கண்களைச் சுழற்றினாள் வித்யா. மறையாத கண்ணீர்க்கிடையில், ஆனந்தமும் குழந்தைத்தனமுமாக மின்னும் அவளது கண்களைக் கண்டதும் சேகருக்கும் சிரிப்பு வந்து விட்டது.

"ஏன் வித்யா? உனக்கிப்போ எத்தனை வயதாகிறது?" சேகரின் கேள்விக்கு அர்த்தம் புரியாமலேயே "பதினெட்டாகிறது. ஏன் மாப்பிள்ளை பார்க்கப் போறீங்களா" என்றாள் வித்யா விளையாட்டாக.

"பெண்களிற்கு வயது வளர வளர வாய் குறையுமாம். உனக்கென்னடா என்றா வரவர வாயும், உன் ஜடையைப் போல நீளுது. வயது வந்திட்டுதே என்றாயினும் கொஞ்சம் அமரிக்கையாய் இருக்கக் கூடாதோ? அசல் பைத்தியம். இப்பதான் கொஞ்சம் முன்னாடி பெரிசா அழுதாய். ஐந்து நிமிஷமில்லை. இருக்கிற பல்லில் ஒன்றாவது மறையாமல் சிரிக்கிறியே" என்றான் சேகர் கேலியாக.

"ஏன் உங்க உமாவை விடவா?" என்று சேகரைப் பேச்சைத் தொடராதபடி, இடைவெட்டினாள் வித்யா. அதைக் கவனியாதவன்

போல், மேலே தொடர்ந்தான் சேகர். "உன்னை மாதிரிப் பயித்தியமா மற்றவர்களிற்கு, பல்லைக் காட்டவும், கடிக்கவும். அடடே நேரமாகி விட்டதே. ஜனனைக் கூப்பிடப் போகணுமே"

"ஜனனா, ஜனன், ஜனன் என்றால் அவர்தானே அந்த" என்ற வளை இடை மறித்தான் சேகர்.

"அவருமில்லை. சுவருமில்லை சும்மா வழவழன்று தொண தொணக்காமல் ஓடு வீட்டுக்கு. மறந்துதானும் இங்க நடந்ததைப் பற்றி மூச்சு விடாதே." என்றவனின் குரலைக் கேட்க அவள் அங்கிருந்தால் தானே.

தாவணியும், பின்னலும் பக்கத்திற்கொன்றாகப் பறக்கத் துள்ளி யோடியவனைப் பார்த்தவறே நடந்தான் சேகர்.

"ம்.... விசித்திரப்பிறவி. ஒரு நிமிஷம் உம்மனா மூஞ்சியாயிருப் பாள். பார்க்க ஐயோ பாவம் என்கிற மாதிரி அழுவாள். அடுத்த நிமி ஷமே எல்லாத்தையும் மறந்திட்டுச் சிரிப்பாள். குழந்தை உள்ளமென் றாலும் உறுதியான மனம். அசல் நவரசக்கலவை" என்று எண்ண மிட்டவாறே ஸ்டேசனை நோக்கி நடந்தான் சேகர். வீட்டை நோக்கி ஓடின வித்யாவின் மனதில் அவனைப் பற்றியா நினைவு எழப் போகிறது. சித்தியின் திட்டலிருந்து தப்ப வழிபார்க்க வேண்டுமென்ற தைத் தவிர வேறெதுவாக இருக்க முடியும்?

## 2

அசைவறு மதிகேட்டேன், இவை
அருள்வதில் உனக்கேதுந் தடையுளதோ? – பாரதி

பட்டணத்திலேயே பிறந்து வளர்ந்து படிப்பையும், முடித்த ஜனார்த்தனிற்குத் தகப்பனில்லை. தாய்தான் எல்லாம். மூத்தவன் சங் கீத். அடுத்தவன் ஜனார்த்தன். ஜனன் என்று பெயரைச் சுருக்கி விட் டார்கள் அவனது நண்பர்கள். ஜனனிற்கு அடுத்தவள் வாணி. சரியான துடுக்கு. வாயும் கண்ணும் ஒரு நிமிடம் சும்மா இருக்காது. அவர்க ளுக்கடுத்த ராஜுக்கு பதினான்கு வயதாகிறது. நேரே இளையவளான

மீனா பரமசாது. கடைக்குட்டிகளான ரமேசும் லதாவும் இரட்டை பிற விகள். அடிக்கடி சண்டைப்போட்டுக் கொள்வதும் பிறகு தமக்குள் ளேயே சமாதானப்பட்டுக் கொள்ளுவதிலுமே பொழுதைப் போக்கிக் கொள்ளும் இரட்டை வால்கள். ஜனனின் தகப்பன் இரண்டு கம்பனி களுக்கு அதிபராக இருந்ததுடன் வேறு பல கம்பனிகளில் பெரும் பங்குதாரராகவுமிருந்தார். அதனால் அவர்களின் வாழ்வு பணத்தி லேயே செழித்துக் கொண்டிருந்தது. மூன்று வருஷங்களுக்கு முன் திடீரென்று பொதுவாக எல்லாப் பணக்காரருக்குமே வந்து விடும் மாரடைப்பினால் போய்விட்ட அவரைப் பற்றிய கவலையையே மறந்து விட வைத்து விட்டது சங்கீத்தின் நிலையால் ஏற்பட்ட தீராத புதுக் கவலை.

சங்கீத்திற்குத் திருமணமாகி இரண்டொரு மாதங்களுக்கிடையி லேயே தம்பதிகளிற்கிடையில் பிளவேற்பட்டு விட்டது. கலையில் ஆர்வங் கொண்டவனாக மட்டும் இருக்கவில்லை சங்கீத். கலையே பித்தாக இருந்த அவனுக்குக் கல்யாணத்திலே நாட்டமிருக்க இல்லை தான். ஆனால் தாயின் மனங்கோணாமல் ஜெயாக்கு மாலையிட்ட போது, மகிழ்ச்சியுடன் தான் ஏற்றான். ஜெயாவும் பணக்கார வீட்டுப் பெண்ணென்றாலும், பட்டதாரியாயுமிருந்ததென்ன, இங்கிதம் தெரிந் தவளாக, அனுசரித்துப் போகும் பக்குவம் உடையவளாய்த் தானிருந் தாள். பதவிசாய்க் குடும்பம் நடத்தத் தெரிந்த அவளை எல்லோருக் குமே பிடித்துத்தான் இருந்தது.

ஏன், சங்கீத்திற்கும் பிடித்துத்தான் இருந்தது. ஆனால் அவனது கலை உணர்விற்கு நிறைவளிக்கும் கலைமகளாக இருக்க முடிய வில்லை அவளால். சிறந்த மனைவியாய் மட்டுமே இருக்கத்தான் முடிந்தது அவளால். இயற்கையிலேயே, உள்ளத்தில் ஊற்றெடுக்க வேண்டிய கலை உணர்வுகள் மட்டும் ஜெயாவினுள்ளத்தில் சுரக்க வில்லை. சில தனிப்பட்ட குணாதிசயங்களை வேண்டுமானால் ஓரள விற்கு மாற்றலாம்; மறைக்கலாம்; வளர்க்கலாம்; அழிக்கலாம். ஆனால் சில தனித்துவமான மெல்லிய உணர்வுகளைத் தானாக மலர வேண்டிய உணர்வுகளைத் தானாகவோ அன்றி மற்றவர்களாலோ மலர வைக்க முடியாது. கலை உணர்விற்கு நிறைவு காண மனைவியை நாட முடிய வில்லை சங்கீத்தால். கல்யாணத்திற்கு முன்பே தன் தனித்துவமான

போக்கிற்கேற்ற பெண்ணைத் தேட யோசிக்காத தன் தலைவிதியை உணர்ந்து, தன் போக்கை மெல்ல மாற்ற உத்தேசித்தாலும் அவனால் முடியவில்லை. இசையும், இலக்கியமும், சித்திரமும், சங்கீதமும் தந்த திருப்தியை ஜெயாவால் தர இயலாததால் தோன்றிய சில்லறைச் சச்சர வுகள் நாளாவட்டத்தில் புரையோடத் தொடங்கி விட்டன. தன் கலைத் தாகத்தை, கலை வெறியைத் தீர்க்கும் தன்மையை, தனக்குரிய மாதி டம் காண முடியாததை மதுவில் காணமுற்பட்டான். அல்லாவிடில் கச்சேரி கச்சேரி என்று வெளியே திரியத் தலைப்பட்டான். வழக்கமா கவே முன் கோபமும் முரட்டுத்தனமும் கொண்ட சங்கீத்திற்கு ஈடு கொடுத்து வாழ முயன்றாள் ஜெயா. ஆரம்ப காலத்தில் அவர்களிற் கிடையில் ஏற்பட்ட பிணக்கெல்லாம், ஜெயா தாய்மையில் கனியத் தொடங்கியதும் மெல்லக் கரைய, மீண்டும் தென்றல் அவர்களிற்கிடை யில் உலாவத் தொடங்கியது. விதிக்குப் பொறுக்கவில்லை போலும். எதிர்பாராத விதத்தில் அது விபத்தாக மாறிவிட்டது. ஆமாம்! விருந் தொன்றிற்குச் சென்றுவிட்டு நேரமாகி விடவே. வேகமாக வந்து கொண்டிருந்த வண்டி. எதிரில் வந்து கொண்டிருந்த லாரியுடன் மோத வேண்டி வந்து விட்டது. மழைத்தூறலோடு மலைப் பள்ளத்தாக்கு மாகச் சேர்ந்து, விபத்திற்குச் சாக்காகி விட்டது. மலையும் பள்ளமுமாக இருந்த இடத்தில் கார் அடிப்பட்டு உருண்டு விட்டது. அத்துடன் ஜெயா வென்னும் குடும்பச் சுடரும் அணைந்து விட்டது. சங்கீத்தின் உயி ருக்கு ஒன்றும் நேர்ந்து விடவில்லை. தெய்வாதீனமாகக் காலில் தான் பலத்த காயம். ஆனால்... ஆனால் அவன் நடந்ததையோ, நடக்கிற தையோ, நடக்கப் போவதையோ உணரும் சக்தியை, சித்தத்தை இழந்து விட்டான். ஜனனோ, மற்றவர்களோ எதிர்பாராத இடி இது. சங் கீத்தின் நிலை அவர்கள் நெஞ்சங்களில் இருளைப் புகுத்தி விட்டது.

அந்த வருஷம்தான் ஜனன் இன்ரேண்ஷிப்பிற்காக உள்ளூர் அரசாங்க வைத்தியசாலையொன்றில் பணியாற்றிக் கொண்டிருந்தான். சங்கீத்தின் நிலையை மாற்ற அவன் பட்ட கஷ்டத்திற்கு முற்றாக உட னேயே பயன் கிடைக்காவிடினும் முன்னேற்றம் காண, டாக்டர் ஜோன் சின் திறமை உதவியது. அகில உலக வைத்திய நிபுணர்கள் கலந்து கொள்ளும் மகாநாட்டிற்காக லண்டனிலிருந்து, அவுஸ்திரேலியா

விற்குப் போய்க் கொண்டிருந்தவர், தன்னுடன் பழைய வைத்தியக் கல்லூரி மாணவராயிருந்த டாக்டர் வேதகிரியின் அழைப்பை மேற் கொண்டு, இலங்கையில் இரு வாரம் தங்கினார்.

அப்போது அவர் செய்த ஆபரேஷனும், மனோநிலை வைத்திய முறைகளும்தான், சங்கீத்தை அவன் பழைய நிலைக்குக் கொண்டு வந்தது. ஏறக்குறைய 6 மாதங்களுக்கு பிறகு சங்கீத் வாழ்வில் மீண் டும் ஒளியை எட்டிப் பார்க்க வைத்தது. ஆனால் ஆறு ஆபரேஷன் முடிந்த பின் டாக்டர் வேதகிரி ஜனனுக்கு சொன்ன அறிவுரை,

“ஜனன், நீயும் ஒரு டாக்டர். ஆகையால் உன்னிடம் மறைக்க வும் முடியாது, மறைக்கவும் கூடாது. டாக்டர் ஜோன்சிற்கே ஆரம்பத் தில் இந்தக் கேசில் நம்பிக்கையே கிடையாது. இப்போதுள்ள நிலை மையைப் பார்த்துத்தான் அவருக்கு ஓரளவு திருப்தி. அவர் இன்று மாலையே அவுஸ்திரேலியாக்குப் புறப்படுகிறார். ஹி வில் பே எ விசிற் ஒன் ஹிஸ் வே பக். சங்கீத்திற்கு குணமாகி விடும் என்பதில் சந்தேக மில்லை. ஆனால் ஒன்று. இன்னும் சில காலத்திற்கு அதிர்ச்சியோ, ஏமாற் றமோ ஏற்படாமல் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ஜெயாவைப் பற்றின நினைவுகள் அவன் மனத்தில் எழும்தான். அக்ஸிடென்றில் தெய்வாதீனமாகக் காலில் காயத்துடன் எழும்பியவனுக்கு, ஜெயா போய்விட்டாள், அவளுடன் குழந்தையும் போய்விட்டது என்பதை உணர்ந்ததால் ஏற்பட்ட அதிர்ச்சிதான் அவனது பழைய மன நிலைக் குக் காரணமென்றாலும், அதை அவன் ஏற்கப் பழகிவிடுவான். புதிதாக வேறேதும் அதிர்ச்சி வராவிட்டால் தற்போதைக்குப் போதும், அப்படி ஏதாவது ஏற்பட்டு விட்டால் திரும்பவும் ஒரு வேளை ஏதாவது... ஆல் ரைட். கூடியவரை பழைய நினைவுகளைத் தவிர்த்து விடுவதுதான் நல்லது” என்றவர்,

“இன்னொரு முக்கியமான நியூஸ். உனக்குத் தெரிந்ததுதானே. டாக்டர் ஜோன்ஸ் உனக்கொரு வெரி குட் சான்ஸ் தர உத்தேசித்துள் ளார். தன்னுடைய நேசிங்கோமை விடப் பிறம்பாக, மனோதத்துவ டாக்டர்களுக்கும், நியூரோ சேஜன்களுக்குமாக லண்டனில் ஒரு ஆராய்ச்சிக் கழகம் நடத்தி வருகிறார். வருடாவருடம், சில நாடுகளி லிருந்து இவ்விரண்டு டாக்டர்களைத் தேர்ந்து இரு ஆண்டுகளிற்கு அங்கு பயிற்சியும், அடுத்த நாலு ஆண்டுகளிற்கு அங்கேயே வேலை

யும் கொடுக்கப்படும். இம்முறை இங்கு வந்ததால் என்னையே செலக்ட் பண்ணச் சொன்னார். யு ஆர் வன். நான் சொல்வது உனக்குப் புரியுமென்று நினைக்கிறேன்" என்று விளக்கினார் டாக்டர் வேதகிரி.

என்ன பேசுவது என்றே ஜனனுக்குப் புரியவில்லை. பதிலே பேசாது மௌனியாக இருந்த ஜனனையே பார்த்தார் அவர்.

"ம்..... உனக்கு இன்ரறஸ்ட் இல்லாத மாதிரி இருக்கிறாயே ஓ... சங்கீத்தின் நிலையைப் பற்றி யோசிக்கிறாயா? அதைப் பற்றி மட்டும் கவலைப் படாதே. தற்ஸ் மை புறப்ளம். ஓ.கே உனக்கு இந்த மாதிரி ஒரு வாய்ப்புக் கிட்டுமோ, கிட்டாதோ. சந்தர்ப்பங்களை ஓரளவுக்குத் தான் நம்மால் உருவாக்க முடியும். அந்தச் சந்தர்ப்பங்கள் நம்மைத் தேடி வரும் போது, அவற்றைத் தக்க முறையில் பயன்படுத்தவும் பழகிக் கொள்ள வேண்டும். நான் இதற்கு மேல் உனக்கு சொல்வதற்கில்லை. இற் இஸ் லெப்ற் ரு யு ரு டிசைட், அன்ட் லெற் மீ நோ யுவர் டிசிஷன் லேற்றர்" என்றவாறே எழுந்தார் டாக்டர் வேதகிரி.

தன் செயலெண்ணித் தவிப்பது தீர்ந்திங்கு
நன் செயல் செய்து நிறைவு பெறும் வணம் – பாரதி

நாட்கள் உருண்டோடி ஒரு மாதமாகி விட்டது. வெளிநாட்டுப் பயணத்திற்கு வேண்டிய ஆயத்தங்களை ஏற்பாடு செய்து முடித்த பின் தான், லண்டன் பயிற்சிக் கழகத்திலிருந்து தவிர்க்க முடியாத காரணங்களால், இன்னும் சில வாரங்களிற்குப் பயிற்சி ஆரம்பமாகும் திகதி பிற்போடப்பட்டிருக்கிறதென்றும், திகதி முடிவு செய்யப்பட்டதும், விபரம் கேபில் மூலம் அறிவிக்கப்படும் என்றும் அறிவித்திருந்தார்கள். டாக்டர் வேதகிரியின் கண்காணிப்பிலேயே, சங்கீத்தின் நிலைமை ஏறக்குறையக் குணமாகி விட்டதால், சங்கீத்தைப் பற்றிய பிரச்சினையில்லாமல், நண்பர்களிற்கிடையே பொழுதைக் கழித்தான் ஜனன்.

இப்போ ஜனனுக்கு வீட்டில் இருக்கவும் பிடிக்கவில்லை. அன்றும் வழக்கம் போல் தாயின் நச்சரிப்பைத் தாங்கிக் கொண்டு வீட்டில் இருக்கவும் பிடிக்காமல், வெளியில் செல்லவும் பிடிக்காமல், டெக் செயரில் சாய்ந்த வண்ணம் கிடந்தவன், பக்கத்தில் தாயின் நிழலைக் கண்டதும், என்ன என்ற பாவனையில் தலையைத் திருப்பினான். லக்ஷ்மீகரமும், பொலிவும், மகிழ்வுமாக வீட்டை மிடுக்கொடு மலர்வதி

அம்மாள் வளைய வந்து கொண்டிருந்த காலமெல்லாம், தந்தையினதும், ஜெயாவினதும் அடுத்தடுத்த இடிகளுடனும், சங்கீத்தினதும் நிலையுடனும் கனவானது போன்ற பிரமை. சில மாதங்களுள்ளேயே ஆளே மாறிய கோலம்.

"ஏனம்மா, உன்னிலையே எலும்பைப் பற்றிப் பிடித்து விடலாம் போலிருக்கே. அண்ணாவின் விடயத்தில் அளவிற்கு மீறி உடலைக் கெடுக்க வேண்டுமா? உதவிக்காவது யாரையாவது வைத்துக் கொள்ளக் கூடாதா?" என்றான். "உடம்பிற்கென்னடா குறை? உங்கப்பா எதைத்தான் குறைவா வைச்சுட்டுப் போனார், சங்கீத்தும் கடவுள் புண்ணியத்தில் ஒரு மாதிரி இருக்கிறான். நீ தான் இன்னும்".... என்று அஸ்திரம் பழையபடி தன்னை நோக்கித் திரும்பவே, வழக்கம் போல் நண்பர்களிடையே நழுவ எழுந்தான் ஜனன்.

"என்னடா ஜனன். மருமகள்மாருக்கும் எனக்கும் பிராப்தமே இல்லை போலிருக்கே. இன்னிக்குக்கூட சிவகாமிகிட்டேயிருந்து கடிதம் வந்திருக்கு. நம்ம சாதி, சனம், உறவும் விட்டுப் போகாமல் இருக்கும் உமாவைப் பார்க்கிறதாயும் போகுது, ஊருக்குப் போகிற சாக்கில், அவன் சிறீதரனையும் பார்க்கிறதாயும் போறது. பணக்கார வீட்டுப் பெண் பட்டணத்துப் பெண என்று நீ சொட்டையும் சொல்ல முடியாது. உன் பிடிவாதம் போல் சீர்செனத்தி ஒன்றும் இல்லாமலும் பண்ணிக்கலாம். நீ வாறதாய் அவங்களிற்கு எழுதட்டுமா?" என்று தொடர்ந்தாள்.

தான் லண்டனுக்குப் போகிறதும் போதும், அம்மாக்கு மருமகள் தேடறதும் போதும் என்று மனதுக்குள் முணுமுணுத்தவாறு அப்போதைக்கு அவன் வெளியேறினாலும், கடைசியில் மலர்வதி அம்மாளின் பிடிவாதம்தான் வென்றது. அம்மாவின் விருப்பத்திற்காகப் பெண் பார்க்கப் போகிற சாக்கில் சிறீதரனுடன் நின்று விட்டு வரலாம். கொஞ்சக் காலத்திற்குக் கிராமச்சூழல் ஒரு மாறுதலாகவும் இருக்கும் என்று எண்ணமிட்ட படியாறதான் சிவகாமி அத்தைக்குத் தான் வருவதாகத் தந்தி அடித்திருந்தான் ஜனன்.

நாளைக் கண்டதோர் மலர் போல் – ஒளி
நண்ணித் திகழ முகந் தந்து. – பாரதி

மாலை மங்கிக் கொண்டிருந்த நேரம், ஸ்ரேசனில் வண்டி நின்றதும், தனது தோள் பையுடன் இறங்கிச் சுற்றும் முற்றும் நோக்கியவன்.

தன்னையே சற்று உற்று நோக்கிக் கொண்டு வாலிபனொருவன் அவசரவசரமாக நெருங்குவதைக் கண்டதும், ஜனனும் அவனை நோக்கித் திரும்பினான். ஜனனைத் தயக்கத்துடன் நெருங்கிய அவன்,

"நீங்கள் பட்டணத்திலிருந்துதானே வருகிறீர்கள். டாக்டர் ஜனார்த்தனன் என்பது...." என்ற தயக்கத்துடன் இழுக்கவே,

"ஆமாம். நான் தான். நீங்கள்..." என்று ஜனனும் பதிலுக்கு இழுத்தான்.

"நான் சிவகாமி அத்தை வீட்டிற்கடுத்த வீட்டுக்காரன். நீங்கள் வருவதால் உங்களைக் கூட்டி வர அனுப்பினார்கள். வெளியில் வண்டி நிற்கிறது. வாருங்கள். போகலாம் தானே. இவ்வளவு பேசிக்கொண்டு போகிறேன், என் பெயரை முதலில் சொல்லாமல். சேகர் என்று கூப்பிடுவார்கள்" என்று முறுவல் செய்தான் அவன்.

இந்தக் காலத்திற்குரியதென்றும் சொல்ல முடியாது. அந்தக் காலத்தான் என்றும் சொல்ல முடியாத பழைய மாடல் காரொன்று வெளியே மர நிழலில் நிற்பாட்டப்பட்டிருந்தது. இருவரும் வசதியாகப் பின்னால் அமர்ந்ததும்,

"நான் வேளைக்கே வந்திருப்பேன். சற்றுத் தாமதமாகி விட்டது. வழியில் வீண்தொல்லை ஒன்று என்னைத் தேடி வந்து விட்டது. அதனால் தான்" என்ற சேகரும், ஜனனும் கொஞ்ச நாளிகை பொதுப்பட்ட முறையில் பேசிக் கொண்டனர். ட்ரைவர் வண்டியைச் செலுத்த ஆம்பித்ததும், ஜனன் யன்னலூடே பார்வையைச் செலுத்தினான்.

சிறிது நேரம் என்ன பேசுவதென்று தெரியாமல் மௌனமாக இருந்த ஜனனை நோக்கிச் சேகர் தான் மறுபடி பேச்சை ஆரம்பித்தான். "நீங்கள் இதற்கு முன் இங்கு வந்திருக்கிறீர்களா?" என்று.

"ஆமாம், ஒரு தடவை வந்திருக்கிறேன். சின்னவனாயிருந்தப்ப, ஆனால் இப்போ எல்லாமே மாறிவிட்டதே. இவ்வளவு வசதிகள் இந்தக் கிராமத்திலிருக்குமென்றே நான் நினைக்கவில்லை." ஆற்றங்கரையோரமாக எழுப்பப்பட்டிருந்த வாசகசாலையைத் தாண்டும் போது, மூங்கில் மரங்களின் நடுவே சலசலத்து ஓடிக் கொண்டிருந்த ஆறு, மங்கியும் மங்காமலும் தத்தளித்துக் கொண்டிருந்த அந்த மாலைப் பொழுதில் பார்க்க மனோரம்மியமாக இருந்ததால், அந்தப் பின்னணியிலேயே ஆழ்ந்து விட்டான் ஜனன்.

கிறீச்! திடீரென்று வண்டி ஒரு குலுக்கலுடன் கிறீச்சிட்டு நின்றது. கதவைத் திறந்து கொண்டு, ட்ரைவர் இறங்கி ஓடியதைக் கண்டதும் தான், ஏதோ நடந்து விட்டதென்பதைப் புரிந்து கொண்ட மறு விநாடி அவர்களும் அவசரமவசரமாகக் கீழே இறங்கினார்கள்.

பதினேழு, பதினெட்டு வயது மதிக்கத்தக்க இளம் பெண்ணொருத்தி தாவணியைச் சரி செய்து கொண்டு, கீழே கொட்டிக் கிடந்த பூக்களைப் பொறுக்க முயன்று கொண்டிருந்ததைக் கண்டதும், அடிபடவில்லை என்று அவன் டாக்டர் மூளை கணக்கிட, மெல்ல அருகில் வந்து,

“ஏதாவது பலமாக அடிபட்டு விட்டதா? தவறுதலாக நடந்து விட்டது. மன்னித்துக் கொள்ளுங்கள்” என்று கனிவான குரலில் ஜனன் கூறியது தான் தாமதம், வெடுக்கென்று தலையை நிமிர்த்தினாள் அவள்.

எந்த நிமிடமும் விழுந்து விடுமோ என மின்னிப் பளபளத்துக் கொண்டிருந்த கண்களும், இடுப்பிற்கு கீழே அவிழ்ந்து புரண்டு கொண்டிருந்த நீண்ட கூந்தலும், காற்றில் பறந்தடித்துக் கொண்டிருந்த தாவணியுமாக நின்று கொண்டிருந்த வித்யாவைக் கண்டதும்,

“அட நீயா? நல்ல வேளை அடிகிடி படவில்லை. தற்கொலைக்கு எங்கள் வண்டிதான் அகப்பட்டதா?” என்று சிரித்தான் சேகர்.

“வடி கட்டின முட்டாள் தனம்” படபடவென்று வெடித்தாள் வித்யா.

“எது? நீயாகக் காரைப் பார்க்காமல் ஓடிவந்து குதித்ததுதானே? சரி சரி, இரண்டாந்தடவையாக இன்று தலை தப்பி விட்டது.. ஆ.. ஆ.. வேண்டாம், வேண்டாம் வாயைத் திறக்கப் பார்த்தியோ கண்கள் தான் முதலில் திறந்து வழிவிட்டுவிடும் கங்கை ஓட” நீர் நிரம்பிய அவள் கண்களை நோக்கிச் சிரித்தான் சேகர்.

“வெவ்வெவ்வே” உதட்டையும் கண்களையும் ஒரு சுழற்றுச் சுழற்றி அழகு காட்டியவள், சேகர் அருகில் இருந்த அந்த வாலிபன் தன் செய்கையைப் பார்த்து மெல்ல முறுவலிப்பதைக் கண்டதும், அவனை மேலும் கீழுமாக ஒரு தடவை குறுகுறுவெனப் பார்த்தாள். மறுகணம் தாழம்பூக்களைத் தாவணியுடன் சேர்த்தணைத்தவாறே, தெருவை அடுத்தாற் போலிருந்த ஒற்றையடிக் குறுக்குப் பாதையில் புள்ளிமானெனப் பறந்து விட்டாள்.



அவள் போனபின்னும், அந்தக் திக்கிலேயே பார்த்துக் கொண் டிருந்த ஜனனைச் சேகரின் குறும்புச் சிரிப்பு திரும்பிப் பார்க்க வைத் தது. சிரித்துக் கொண்டே வண்டியில் ஏறப் போனவன் கண்களைக் கீழே

கிடந்த தாழம்பூ கவர்ந்தது. அதை எடுக்கக் குனிந்த போதுதான், பூ வருகில் சிறிய பென்சிலொன்றும், ஏதோ வரையப்பட்டிருந்த தாளொன்றும் அவன் கண்களில் தட்டுப்பட்டது. வியப்புடன் அதை எடுத்த ஜனனின் கண்கள் இன்னும் அதிவியப்புடன் விரிந்தன. அழகான ஆற்றங்கரையோரமும், நிலவின் ஒளியில் மின்னும் மூங்கிலும், தாழையுமாக வரையப்பட்டிருந்த அந்தக் காட்சி தத்ரூபமாக இருந்தது. படத்தையும் அவனையும் மாறிமாறிப் பார்த்த சேகர்,

"ஓடற பரபரப்பில் இதை விழுத்தி விட்டாளாக்கும். அசல் பைத்தியம் வித்யாக்கு, அதுதான் அவளிற்கு வீட்டில் கீற... வசதியிருப்பதில்லை. அதனால்.... இப்படித்தான் ஒழிந்த நேரங்களில் ஆற்றங்கரைக்கு வந்து தன்பாட்டில் பாடுவாள். கதை கவிதைகள் எழுதுவாள். அல்லது ஏதாவது படம் இப்படித்தான் கீறுவாள்!" என்றான் விளக்கம் சொல்வது போல. அவ்வளவு நேரமும் அந்தப் படத்தையே நோக்கிக் கொண்டிருந்த ஜனனிற்கு, ஏதோ உதயமாகவே, சட்டென்று ஆற்றுப் பக்கமாகத் தலையைத் திருப்பினான்.

"அடேயப்பா, இதே ஆற்றங்கரை தானே. இந்தப் படத்திலுள்ள ஆறையும் மரங்களையும் எங்கோ பார்த்திருக்கிறேனே என்று மூளையைக் குழப்பினேனே. இப்பொழுதுதான் ஸ்ரைக் பண்ணியது இதே ஆறென. அதே மாதிரி இருக்கிறதில்லையா சேகர்?" பேசிக் கொண்டே வண்டியுள் திரும்ப ஏறியவன், வண்டி வீட்டை அடையுமட்டும் ஏனோ மௌனமாகவே இருந்தான்.

**ஓங்கி வருமுவகை யூற்றி லறிந்தேன்**
**ஒட்டுமி ரண்டுளத்தின் தட்டி லறிந்தேன்.** – பாரதி

"சேகரண்ணா, சேகரண்ணா அண்ணி உங்களை உடனே வந்திட்டுப் போகட்டாம்" என்று கூப்பாட்டுடன் ஓடி வந்தான் பாபு; எப்போதடா வண்டி வருமென்று வாசலிலே பழியாக அதுவரை கிடந்தவன். வண்டியிலிருந்து சிவகாமி வீட்டு வாசலில் பெட்டியை இறக்கி வைத்த சேகர், போவதா, விடுவதா என்று தயங்குவதைக் கண்டதும்,

"பரவாயில்லை. நீங்கள் போங்கள். பக்கத்து வீடுதானே. பிறகு சந்திக்கலாம் தானே. தாங் யூ சோ மச்" என்று விடை கொடுத்து விட்டு, 'வாசற் கதவை இரண்டு தடவை தட்டினான் ஜனன்.

மீண்டும் அவன் தட்டியபோது, உள்ளேயிருந்து யாரோ ஓடிவரும் கொலுசுச் சத்தமும், தாழ்ப்பாள் விலக்கப்படும் சத்தமும் அடுத்தடுத்துக் கேட்டது. கதவு திறந்தது தான் தாமதம், திறந்த கதவருகே அதே பெண்ணைக் கண்டதும் திகைப்பால் வாயடைத்து விட்டான் அவன். அவளும் அவனை எதிர்பார்க்கவில்லை போலும். ஆச்சரியம் மேலிட அவனையே நோக்கியவள்,

"நீங்கள்.... நீங்கள்...." என்று தடுமாறினாள். ஒரு கணத்தில் தன்னைச் சுதாகரித்துக் கொண்ட ஜனன்,

"சிவகாமி அத்தையில்லையா? நான் வருவதாக நேற்று ரெலிகிராம் அடித்திருந்தேனே ஜனார்த்தனன்" என்று.

"அட்டா, அந்த டாக்டர் தம்பிதான் நீங்களா?" என்று தன்னை மறந்து சிவகாமியின் அடுத்தடுத்த 'டாக்டர் தம்பி' என்ற அழைப்பைக் கேட்டுக் கேட்டுப் பழகிவிட்ட வித்யா, தன்வாயைப் பொத்திக் கொள்ள முயன்றபோது,

"இதென்னது, கையில் இரத்த கொட்டுதே" என்று ஜனன் சுட்டிக் காட்டிய போதுதான் தன் கையைக் கவனித்தாள்.

"ஐயையோ, அரிவாள்முனை கீறிவிட்டதாக்கும். கதவு திறக்க வரும் அவசரத்தில் அப்படியே கறிகாயைப் போட்டுவிடும் போது" என்றவள் கையை வெடுக்கென உதறினாள்.

அவளது முகத்தையே அதுவரை பார்த்துக் கொண்டிருந்த ஜனன், சட்டென்று தன் கைக்குட்டையை, உதறிப் பிரித்து, அவள் கை விரலைப் பற்றி, இறுகச் சுற்றிக் கட்டுப் போட்டான் வெகு சாதாரணமாக. சுற்றுமுற்றும் பார்த்த ஜனன், கூடத்திலிருந்த கூஜாவிலிருந்த நீரை, அதன் அருகிலிருந்த கிண்ணத்துள் ஊற்றி வந்து, அவள் விரலை அதனுள் அமிழ்த்திய பிறகே அவன் சாதாரணமானான். டாக்டராச்சே அவன். இரத்த ஓட்டம் நிற்கும் வரை, அவள் எழிலும், உருவமும் அவன் மனக்கண் முன் எழவேயில்லை. ஆனால் வித்யாக்கோ..... முதலில் திடுக்கிட்டுக் கையை உதறியவள், பிறகு, ஜனனின் இறுகிய பிடிக்குள் தன்னைத் தளர விட்டாள். என்னதான் முயன்றும் வித்யாவால் தன் உணர்வுகளைப் படபடப்பை அடக்க முடியவில்லை. நாடி நரம்புகளில் சிலிர்த்தோடிய உணர்வுகளில் விரல்கள் துடிதுடித்தது. முதலுதவி

முடிந்த பின்னும், கிண்ணத்தைத் தாங்கிக் கொண்டிருந்த ஜனன் நிமிர்ந்து,

"ரைப்ரைட்டிங் நிறையச் செய்திருப்பாய் போலிருக்கிறதே. ஏன் இப்படி விரல்கள் தந்தியடிக்கின்றன?" என்று குறும்பாகச் சிரித்தான். அவள் கைகளை விடக் கண்கள் படபடப்பதைப் பார்த்தவன்..... ஒரு கணம் தன்னை மறந்து தான் விட்டான்.

"வந்து .... சித்தி வந்து விடுவா. அதுவரை அப்படி, அப்படி அமரலாம்...." ஆசனத்தைச் சுட்டிக் காட்டியவள், திடீரென்று தயக்கத்துடன் முறுவலித்தவள், மறுகணம் உள்ளே மருண்டோடியதைக் கண்டதும், தனக்குள்ளே மெல்லச் சிரித்தவாறே அங்கிருந்த சோபாவில் அமர்ந்தான் ஜனன். அடுத்த சில விநாடிகள் இனிமையான அந்த சுகானுபவத்தில் லயித்திருந்தவனை டக்கென்ற ஓசை எழுப்பியது.

ஆவி பறக்கும் காப்பி தம்ளரை அவனருகே மேஜை மீது வைத்துவிட்டு மீண்டும் உள்ளே நழுவிய வித்யாவையே பார்த்தான் ஜனன்.

"அடடே, டாக்டர் தம்பி வெகு நேரமாகி விட்டதா? இன்றைக்கு வண்டி நேரத்திற்கு அதிசயமாய் வந்து விட்டதாக்கும்" வாயெல்லாம் பல்லாக புடவைத் தலைப்பைப் போர்த்தபடி உள்ளே வந்தாள் சிவகாமி. அவள் பின்னால் வந்து கொண்டிருந்த உமாவை,

"இது தான் தம்பி உமா" என்று அறிமுகப்படுத்த ஆரம்பித்ததும், உள்ளே எரிச்சலுடன் நழுவ ஆரம்பித்த உமா, ஒரு கணம் தயங்கினாள். வணக்கம் என்ற பாவனையில் கையைக் குவித்தவள், ஜனன் மீண்டும் சிவகாமியுடன் ஏதோ பேசத் தொடங்கவே, இதுதான் சாக்கென உள்ளே நழுவினாள்.

உள்ளே சமையலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வித்யாவின் காதுகளில்,

"தம்பியைக் கொல்லைப் புறத்துக்குக் கூட்டிப் போய் இடத்தைக் காட்டு உமா. தம்பி குளிச்சிட்டு வந்ததும், ஆறுதலாகப் பேசிக் கொண்டிருக்கலாம். சோப்பையும் டவலையும் குடுத்திட்டியா?" என்று சிவகாமியின் தடபுடல் உத்தரவு விழுந்தது. ஜனனை அனுப்பி விட்டு சமையல் கட்டுக்கு வந்த சிவகாமி,

"ஏண்டி, வீட்டுக்கு யாராச்சும் வந்தா, வந்தவங்களை உட்கார வைச்சுட்டு, எனக்கு ஆள் அனுப்பத் துப்பில்லையாடி? சேகர் கூட இரகசியம் பேச மட்டும் தெரியுமோடி?" என்று வெடுவெடுத்தவள், மறதியாய் வைத்த சோப்பை எடுக்க மீண்டும் அங்கு திரும்பி வந்த ஜனனைக் கண்டதும், தன் கடுகடுத்த முகபாவத்தை மாற்றிக் கொண்டாள் சிவகாமி.

## 3

கடுமை யுடையதடீ எந்த நேரமும்
காவலுன் மாளிகையில். – பாரதி

மாடியில் நிலா நிறையக் காய்ந்து கொண்டிருந்தது. ஜனனிற்கு மொட்டை மாடியில் நிலாச் சாப்பாட்டிற்கு ஆயத்தம் செய்வதற்காக, மேலுக்கும், கீழுக்குமாக நடை பயின்று கொண்டிருந்தாள் வித்யா. மொட்டை மாடியை ஒட்டினாற் போல் படர்ந்திருந்த முல்லைக் கொடிப் பந்தரிற்கருகில்தான் சாப்பாட்டிற்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்தாள். பின் கட்டிலிருந்து மாடிக்குச் செல்வதென்றால், கூடத்திலிருந்து செல்லும் படிக்கட்டு வழியாகத்தான் மேலே சொல்ல வேண்டும். கூடத்திலிருந்த ரேடியோ அருகிலிருந்து பத்திரிகை படிக்கிற பாவனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஜனன் கண்களில் நொடிக்கொரு தடவை வித்யாவின் உருவம் தட்டுப்பட்டுக் கொண்டிருந்தது. உமா ஜனனில் வரவால் வெளியே வரப் பிடிக்காமல் அறைக்குள்ளேயே அடைந்து கிடந்ததால் வித்யாக்கு கீழேயும், மேலேயுமாக மாறிமாறி ஏறி இறங்குவதிலேயே பொழுது போனது. அதை அவள் உள்ளூர விரும்பினாள் என்றுதான் சொல்ல வேண்டும். மெல்லிய இள நீலப் பாவாடையும் சோளியுமாக, இடையில் கருநீலத் தாவணியுமாக, தழையத்தழைய ஈரங்காயாததால் பின்னலிட்டிருந்த முடியில் செருகப்பட்டிருந்த மல்லிகையுமாக, மாடிக்கும் பின் கட்டிற்குமாக நடமாடிக் கொண்டிருந்த வித்யாவைக் கடைக் கண்ணால் ரசித்துக் கொண்டிருந்தான் ஜனன். சிவகாமி தன்னிடம் மறைந்து கொண்டிருந்த பணச் செழிப்பை, முற்றாக மறைத்து விடாதபடி, ஜனனுக்குக் காட்ட விரும்பியதால்தான், வித்யாவிற்கும் கிடைத்த கருணையால்தான், அந்த எழிற் கோலத்தைக் கண்டு ரசிக்க முடிந்தது ஜனனால்.

அடுத்தநாள் மாலை தன்னுடைய நண்பனொருவன் வீட்டுக்குச் சென்று அங்கு சில நாட்களைக் கழித்து விட்டு ஊர் திரும்பப் போவ தாக ஜனன் கூறுவதும், இன்னும் இரண்டு நாட்களாவது தங்கிப் போகும்படி சிவகாமி கேட்பதுவும்... வித்யாவிற்கு நெஞ்சில் ஏதோ நெருடுவது போலிருந்தது.

"என்னை விட்டு ஓடிப் போக முடியுமா? இனி முடியுமா?"... ரேடி யோவில் எதோச்சையாக ஒலிபரப்பப்பட்ட பாடலைக் கேட்டதும் ஜனன் சட்டெனத் திரும்பினான். அதுவரை அவனைத் திரும்பியே பார்க்காதது போல் சென்று கொண்டிருந்த வித்யாவும், மெல்லத் தன் பார்வையை ஒரு கணம் அவன்மேல் திருப்பி விட்டு மறுகணம் சிவ காமியின் நினைவு வந்தும், மறைந்து விட்டாள். இந்த நாடகத்தைத் தன்னறை யன்னலருகே எதேச்சையாய்க் கண்ட உமா தனக்குள் ளேயே சிரித்துக் கொண்டாள்.

ஜனனை மாடிக்குப் போகச் சொல்லி விட்டு, உமாவின் அறை யுள்ளே சென்றாள் சிவகாமி. எப்படியாவது அவளையும் வெளியே இழுத்துவிட வேண்டும் என்ற முடிவுடன் அவள் உமாவின் அறைக் குள் போனதும் தான் ஜனன் மாடிக்கு வந்தான். தண்ணீர்க் குவளையை வைத்து விட்டு வித்யா திரும்புவதைக் கண்டதும் ஏதாவது பேசி விடத் துடித்தான் ஜனன். ஆனால் என்ன பேசுவது? சட்டென்று,

"ஒரு நிமிஷம் வித்யா. கை எப்படியிருக்கு இப்போ?" என் றான். கேட்டதற்குப் பதில் கிடைக்காததால், தலையைத் திருப்பிய வனுக்கு ஆவலும் நாணமும் பளபளக்க மின்னிய அவளது விழிகள் தான் ஆசை ஆசையாகப் பதிலளித்தது.

"ஏன் வித்யா, ஏதாவது மௌன விரதமா? ம்..?" அதற்கும் விடை கிடைக்கவில்லை அவனுக்கு. பயங்கலந்த அவள் பார்வைக்கு விளக் கம் கூறுவதுபோல் மாடிப்படியில் சிவகாமியின் குரலும், உமாவின் முணுமுணுப்பும் கேட்டது.

"இவள் எதற்கு இவ்வளவு பயப்படுகிறாள்" என்று தனக்குள்ளே யோசித்தவாறு இலையின் முன் அமர்ந்தான் ஜனன். வித்யாவும் சாப் பிட அமருவாளோ, மாட்டாளோன்று எதிர்பார்த்த அவனுக்கு உமா வின்,

"வித்யாக்கா, எவ்வளவு நேரந்தான் உனக்காகக் காத்திருப்பது? இன்றைக்கு எல்லோருமாகச் சாப்பிடலாமே" என்ற குரல் தித்தித்தது. உமாவிற்கு ஜனனின் விருப்பம் புரிந்திருந்ததால் தான் ஜனன் முன் சிவகாமி மறுத்து வாயைத் திறக்க மாட்டாள் என்ற துணிச்சலுடன் வித்யாவைக் கூப்பிட்டாள்.

"வேண்டாம் உமா, நீங்களெல்லாம் உட்காருங்கள்" மெல்லிய குரலில் மறுத்தாள் வித்யா.

"வேண்டாமடி உமா. எல்லோரும் சாப்பிட உட்காந்தால் யார் பரிமாறுவது? அவளிற்கென்ன? கொஞ்சம் முன்னே பின்னே சாப்பிட்டாப் போச்சு" சிவகாமியின் குரல் தடுத்ததும், ஜனனுக்குப் பரிமாறுந் திருப்தியுடன், ஜனனின் நுனி வாழை இலையில் நீரைத் தெளித்து விட்டு, முல்லை மொட்டு மாதிரிச் சாதத்தை வடித்து விட்டு, மௌனமாகக் கூட்டு, வத்தல், குழம்பு என்று பரிமாறத் தொடங்கினாள் வித்யா.

"சமையல் பிரமாதம் அத்தை" சிவகாமிக்குச் சொன்னாலும், ஜனனின் பார்வை வித்யாவையே நாடியது. ஆனந்தம் துள்ளியோடிய அந்த விழிகளையே பார்த்துக் கொண்டிருக்கலாம் போலிருந்தது ஜனனுக்கு.

"எல்லாம் உமா செஞ்சதுதான்" அழகாக சிவகாமி கதை விட்டதும், பக்கென்று எழுந்த சிரிப்பை அடக்க முயன்ற உமாக்குப் பிரக்கேறி விட்டது.

சுந்தரின் தொடர்பான கேள்விகளிற்கெல்லாம் சலிக்காமல் பதிலளித்துக் கொண்டிருந்தான் ஜனன். அப்படியே வித்யாவுக்கும் தன்னைப் பற்றிய விபரங்களைத் தெரிவித்து விடலாமல்லவா? உமாவோ ஜனனின் பார்வை அடிக்கடி பாயுமிடத்தைக் கவனித்து விட்டாளாகையால், கலகலப்பாகவே அவனுடன் பேசிக் கொண்டிருந்தாள். காமாட்சியின் குரல் கீழே கூடத்தில் கேட்கவே, ஜனனும், உமாவும் தங்களுக்குள் பேசிக் கொள்ளட்டுமே என்ற நப்பாசையுடன், வேகமாகச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு கீழே இறங்கினாள் சிவகாமி. 'அப்பாடி' என்று வித்யாவின் முகத்தில் தோன்றிய பாவத்தை அப்படியே அபிநயம் பிடித்தாள் உமா.

"ஏன் வித்யாக்கா? உனக்குக் கூடப் பேசாமலிருக்கத் தெரியுமா? பல்லைக் காட்டினால் ஜனன் பயந்து விடுவாரென்றா? ஜனன் மனோ

தத்துவ டாக்டரேயொழிய டென்ரிஸ்ற் இல்லை. அம்மா இங்கு இல் லாத போது கூட அடக்கமான பெண்ணாயிடியே.... ஏணாம்?" மீண் டும் மீண்டும் சீண்டினாள் உமா.

"பொறு, பொறு வரட்டும் சேகரண்ணா, வரட்டும், நீ எவ்வளவு அடக்கமான பெண்ணாய்ப் போகப் போகிறாய் என்றுதான் பார்ப் பமே" என்றவள் அப்போதுதான் மொட்டைமாடிப் படியில் வந்து கொண்டிருந்த சேகரைக் கண்டதும்,

"அட ஆயுசு நூறுதான். அடங்காப்பிடாரி யொன்றை அடக்கிற தற்குத் தக்க சமயத்தில் அபயம் தந்த அசட்டு அண்ணாவே" என்று வழக்கமான உற்சாகத்துடன் தன்னை மறந்து ஆரம்பித்தாள் வித்யா.

"அது யாரந்த அடங்காப் பிடாரி? ஓ......ஓ..... இங்கு நீ ஒருத்தி தானே அப்படி இருக்கிறாய். அண்ணலே என்பதை அண்ணாவே என்று மாற்றிக் கூப்பிடுகிறாயா? உன் வாயை அடக்கி ஆளப்போகும் அந்த அதிர்ஷ்டம் கெட்ட அண்ணல் யாரோ என நானறியலாமோ....?" சேகர் அவளுக்கே சாட்டையைத் திருப்பவே,

"பாரேன் உமா, இவரை......" என்று சிணுங்கினாள் வித்யா.

"இவரைப் பார்க்க உமாக்கு நீதான் சொல்லித் தரணுமாக்கும். ஆமாம்! அதை விட்டுத் தள்ளு. பின்நேரம் வீட்டுக்குப் போகிறேன் என்று பறந்தாயே? நான் ஸ்ரேசனுக்குப் போய்த் திரும்பு மட்டும் எங்கே சுற்றிக் கொண்டிருந்தாய்?" மேலும் அவளை வம்புக்கிழுத்தான் சேகர்.

"நானொன்றும் உங்களை மாதிரி ஊர் சுற்றப் போகவில்லை. அந்தத் தடிப்பயல் கிட்டே இருந்து தப்பிட்டேனில்லை. அதனால்....." நாக்கைக் கடித்துக் கொண்டாள் வித்யா.

"உமாக்கிட்டே சொல்வதில் தப்பில்லை தானே அண்ணா! க்கும்... என் வாய்க்குப் பூட்டுப் போடத்தான் உங்களுக்குத் தெரியும். ஏதோ நான் சொல்லாட்டால் உமாக்குத் தெரியாமல் போய்விடப் போறதாக் கும். அதுதான் உமா, தாழங்காட்டிற்குப் போயிட்டு வந்தேனே, வாற வழியில் அந்த முட்டாள் கிருஷ்ணன் கிட்டே மாட்டிக்கிட்டன். வந் தாரே இந்தக் கிருஷ்ணபரமார்த்தா. விட்டாரே உதை இரண்டு. அவன் பறந்துட்டான். சரி. அதுக்குப் பிறகு ஆத்துக்குப் போயிட்டு, ஏதோ

கிறுக்கிக் கொண்டிருந்ததில் நேரமாயிட்டுது. அதனால்தான் விழுந் தடிச்சு ஓடியாறப்போ இவங்க இவங்க....." அதுவரை தொடர்பாக வந்த பேச்சு மீண்டும் தடங்கியது.

"இவங்க, இவங்க... இவங்களிற்கென்ன? தொடரேன் மிச்சத்தை.." சேகரின் குதர்க்கத்திற்கு அழகு காட்டியவள்,

"ஐயையோ, வரைஞ்ச அந்தப் படத்தை அங்கே போட்டிட்டு வந்திட்டேனே. எந்தக் கடன்காரன் கையில் மாட்டிச்சோ" என்று உதட்டைச் சுழித்தாள் வித்யா. இவ்வளவு நேரமும், இதில் பங்கு பெறாமல், அவர்களையே தப்பு, தப்பு, வித்யா பேசுவதையே, பேசும் அழகையே, அவள் பேசும் போது அவள் முகத்தில் மாறிமாறிப் பட ரும் பாவங்களையே கண் கொட்டாமல் ரசித்துக் கொண்டிருந்த ஜனன் அப்போதுதான் வாயைத் திறந்தான்.

"அந்த ஆத்தங்கரைப் படம் தானே. அதை எடுத்த கடன்காரன் நான்தான். என்னிடம் தான் அது இருக்கிறது."

"ஐயையோ, நான் உங்களைக் கடன்காரன் என்று சொல்லலை... அந்தப் படம் உங்ககிட்டயா மாட்டிட்டுது" தன்னை மறந்து அவனு டன் பேசிவிட்டதை உணர்ந்ததும் முகம் சிவந்து விட்டது அவளிற்கு.

"ஏன், என்னிடம் மாட்டக் கூடாதா? ஏன் நான் வைத்திருந்தது தப்பென்றால் உன்னிடமே தந்திடுறேனே"

"ஐயையோ, தப்பில்லை, தப்பில்லை. வந்து......" மேலே படி களில் ஏறி வந்து கொண்டிருந்த சுந்தரைக் கண்டதும் வாயை மூடிக் கொண்டாள் வித்யா.

வேலைகளை முடித்துக் கொண்டு மாதுளைச் செடி அருகே சென்றாள் வித்யா, உமாவுடன்.

"உமா என் கை இரண்டும் சரியில்லை. ஜலம் கொஞ்சம் எடுத்து வாயேன். செம்பில் இருக்கணும்" என்றால், அதுவரை தன் பின்னால் நின்று பேசிக் கொண்டிருந்த உமாவிடம். ஜனன் அந்தப் பக்கம் வந்த தையோ, உமா குறும்புச் சிரிப்புடன் நழுவி விட்டதையோ வித்யா கவனிக்கவில்லை தான். அருகில் நீண்ட செம்பை வாங்கிக் கையைக் கழுவிய பின், செம்பைக் கொடுப்பதற்காகத் திரும்பினாள். அங்கே.... ஜனனை எதிர்பார்க்கவில்லை என்பதை அவள் பார்வையே காட்டியது.

"நீங்களா நான் உமா என்று நினைச்சிட்டேன்." போவதற்காக முன்னுக்கு ஓரடி எடுத்து வைத்தவள். ஜனனில் விழிகளில் சட்டென்று தெரிந்த ஏமாற்றத்தைக் கண்டதும், சற்றுத் தயங்கினாள்.

"ஏன் வித்யா? என்னுடன் பேச இவ்வளவு பயமா?"

"எனக்கென்ன பயம். அப்படியெல்லாம் ஒன்றுமில்லையே"

"அப்படியென்றால்......"

"எனக்கு என்னவோ மாதிரித் தோணுது. அதனால்தான்." சுற்று முற்றும் பார்த்தவாறே மிரண்டாள் வித்யா.

"என்னவோ போலென்றால் விருப்பமில்லையா? அல்லது தயக்கமா?....... ம்"

"ம்....ம் விருப்பமில்லையென்று நான் சொல்லலையே?.... ஆனால்.... ஏனோ" என்று முறுவலித்தாள் வித்யா.

"ஏனோ என்றால்...."

"ஏனோ என்றால் ஏனோ தான்" முறுவலித்தவாறே உள்ளே ஓடிவிட்டாள் வித்யா.

நினையாத விளைவெல்லாம் விளைந்து கூடி
நினைத்த பயன் காண்பதவள் செய்கையன்றே?

– பாரதி

அதிகாலையிலே எழுந்து உலாவி விட்டு வரும் பழக்கமுள்ள ஜனன், மறுநாள் எழுந்தபோது, ஒருவரும் எழும்பி விட்டதற்கான அறிகுறி தென்படாததால், ஓசைப் படாமல் மாடியிலிருந்து கீழே வந்தான். வெறுமே சாத்தப்பட்டிருந்த முன் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தான். இரவு முழுக்கத் தூங்க விடாமல் செய்த வித்யாவை நினைக்க நினைக்க மனம் நிறைவதுபோல் ஒரு பிரமை.

"அடேயப்பா, விழிகளாலேயே மொழி பேசுகிறாளோ? என்னுடன் மட்டும் ஒரு வார்த்தை பேச அவள் படும் பாடு. தாழம்பூவும் கையுமாக ஓடிவந்தவள் திடீரென்று என்னையே மாற்றிவிட்டாளே. இதற்குத்தானா, இந்த உணர்விற்குத்தானா பெயர் காதல்? அவள் கண்களே கவி பாடுதே. முதன் முதலாகக் கண்டபோது, மிரட்சியும் அழு

கையுமாகப் பார்த்தாளே வெடுக்கென்று ஒரு பார்வை. எதிர்பாராமல் வீட்டில் வந்திறங்கியபோது... அதிர்ச்சியின் கிண்ணம் தான் அவள் கண்கள். அவள் கைகளுக்குக் கட்டுப் போட்ட போது, அந்தக் கண் கள் பட்ட பாடு. நாணமும், போலிக் கோபமும் கலந்து குழையும் போது... சே..! இந்த மனோதத்துவம் படித்த நேரத்திற்கு அண்ணா மாதி ரிப் பிறகு இலக்கியம் படித்திருந்தாலாவது கவி பாடியிருக்கலாம் அவள் கண்களைப் பற்றியே. பாவம் சிவகாமி அத்தைக்கு இவ்வளவு பயந்து நடுங்குபவளிடம் எப்படிப் பேசுவது? எப்படியாவது அவள் விருப்பத்தைத் தெரிந்து கொண்டு அம்மாவிடம் சொல்லிடணும்" என்று எண்ணமிட்டவாறே கால் போன போக்கிலேயே நடக்க ஆரம் பித்தான்.

நடந்து கொண்டிருந்தவனைத் திடீரென்று தடைசெய்தது. ஆத் தங்கரையோரமாக வீசிய அதிகாலைத் தென்றலோடு மிதந்து வந்த அந்த இனிமையான பாடல். காற்றிலே கலந்து மென்மையாகக் கேட்ட அந்தப் பாடலிலே தன்னை மறந்து லயித்தவன், குரல் வந்த திக்கை நோக்கி நடந்தான். மூங்கில் மரங்களிற்கிடையில், உயரக்கிடந்த பாறை யொன்றில் அமர்ந்திருந்த அந்த உருவம்.... ஆச்சரியம் மேலிட வேக மாக அவளை நெருங்கினான் ஜனன். ஜனன் பின்னால் வந்ததையோ, நின்றதையோ கவனிக்காத வித்யாதான் தன்னை மறந்து பாடிக் கொண்டிருந்தாள்.

**கண்ணன் மனநிலையைத் தங்கமே தங்கம்**
**கண்டுவர வேண்டுமடி தங்கமே தங்கம்.....**

பாடல் முடியுமட்டும் மௌனமாகத் தள்ளி நின்றிருந்த ஜனன், அவள் அருகில் மெல்ல வந்து, எதிராய் இருந்த செங்குத்தான பாறையொன் றில் முழங்காலைத் தூக்கி வைத்துக்கொண்டு வசதியாக அமர்ந்தான். அவனை அந்நேரத்தில் அவளும் எதிர்பார்க்க இல்லையாதலால் அவள் திடுக்கிட்டுவிட்டாள்.

"நீங்களா? நீங்கள் எப்போ வந்தீர்கள்?" என்றாள், தன்னை நெடு நேரமாகக் கவனித்திருப்பானோ, தான் பாடிய பாடலை ஒருவேளை கேட்டிருப்பானோ என்ற எண்ணம் மேலிட.

"ஏன், வரக்கூடாதா வித்யா?"



"இல்லை. இல்லை. அதற்காகச் சொல்லவில்லை. சாதாரணமாக நானும் சேகரண்ணாவுந்தான் அநேகமாக அதிகாலையிலேயே வந் திடுவம். எனக்கு இந்தச் சூழ்நிலையில் மணிக்கணக்காக இருக்கப் பிடிக்கும். அதனாலே நான் வெள்ளனவே வந்திடுவன். நான் தனிய வாறதால், கொஞ்சம் கழித்து எனக்குத் துணையாகச் சேகரண்ணா வந்து அந்தப் பக்கம் போய்விடுவார். என் கூட வரமாட்டாரேயொழிய நான் எங்கு போனாலும் எனக்கு நிழல் மாதிரித்தான் அவர். அத னாலேதான் சொன்னேன், உங்களை எதிர்பார்க்கவில்லையென்று"

"அடடே, மூச்சுவிடாமல் என்கூடப் பேச இப்ப தான் உனக்கு மனம் வந்ததாக்கும். நான் அப்பவே வந்திட்டேன். உன் குரல் இனி மையா, அல்லது அந்தப் பாடலில் பொதிந்த அர்த்தம் இனிமையா என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்ததால் தான் உடனே உன்னைக் குழப்பவில்லை. ஆமாம்! யார் அந்தக் கண்ணன், அவ்வளவு தூரத் திற்கு அவன் மனநிலையை அறியத் துடிக்கிறியே? வித்யா... ம்?"

விளங்காதது போல் வினாத் தொடுத்தான் ஜனன். மணலில் காலால் கோலம் போட்டுக் கொண்டிருந்த வித்யாவால் என்ன தான் சொல்ல முடியும்? அவளையே கண்கொட்டமல் பார்த்த ஜனன் ஒரு கணம் நிதானித்து விட்டு,

"நேரிடையாகவே கேட்கிறேன் வித்யா. கண்ட மறுநாளே காதல் வசனம் பேசும் முட்டாள் என்று என்னை நினைச்சுடாதே. நான் எந்த நேரமும் விரைவாக ஊருக்குத் திரும்ப வேண்டி வந்திடும். அதனால் தான் உடனேயே கேட்கிறேன்... அதாவது. அதாவது... நீ அறியத் துடித்தது யாருடைய மனநிலையை வித்யா? நான் நினைப்பது, எதிர் பார்ப்பது சரியானால், என்னுடைய ஊகமும் விருப்பமும் கூட அது தான். அந்தக் கண்ணன் யார் வித்யா? நானாக இருக்கலாமா? என் றான். ஆவல் பொங்கும் அவனது விழிகளில் தேங்கிய ஆசையைக் காண வித்யா தலையை நிமிர்த்திப் பார்த்தால் தானே?

"வித்யா, உமாவைத் தான் பார்க்கும் சாட்டில் இங்கு வந்தேன். ஆனால் அதற்கு முன்பே உன்னைப் பார்த்திட்டன். நேரடியாகவே கேட்கிறேன். என்னைப் பிடித்திருக்கா இல்லையா? சொல்லேன்.. ம்... ம்.. மணலில் படம் போடறதுதான் உன் பதிலா? வாயைத் திறந்து பதில் சொல்லேன்... இப்படிப் பேசாமலிருந்தால், மௌனம் சம்மதத் திற்கு அறிகுறியென்றெடுக்கிறதா? அல்லது நான் கேட்டது உனக்குப் பிடிக்கவில்லையா? ... ம் உனக்குப் பிடிக்காவிட்டால் வேண்டாம்?" என்றவாறே விருட்டென்று எழுந்தான் ஜனன். இதுவரை மௌனமே, நாணமே கோலமாயிருந்த அவளால் அதற்கு மேலும் பேசாதிருக்க முடியவில்லை.

"ஜனன்" உணர்வுகளின் ஒலி, வாயில் பிறந்தொலித்து விட்டது. ஜனனின் பார்வை அவள் கண்களையே, கண்களைக் கடந்து நெஞ் சத்துள்ளே ஊடுருவி, உணர்வுகளை மீட்டிச் சிலிர்த்து விடவே, சட் டென்று பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள் வித்யா.

"ம்... வித்யா. என்ன?" செல்லமாகக் கேட்டவாறே மீண்டும் அமர்ந்தான் ஜனன். அவனை ஒரு தடவை நிமிர்ந்து பார்த்தாள் வித்யா. மறுதடவை அவள் விரல்கள் மணலில் ஏதோ எழுதியது. 'சம்மதம்' என்ற வார்த்தையைத் தவிர வேறெதை அவளால் எழுத முடியும். அவளையும், அதையும் மாறிமாறிப் பார்த்தான் ஜனன். அவன் மாறி மாறிப் பார்த்ததைக் கண்டதும், சட்டென்று, தன் இரு கரங்களாலும் முகத்தை மூடிக் கொண்டாள் வித்யா.

"வித்யா... வித்யா.... ஜனன் என்ற ஒரு வார்த்தை, சம்மதம் என்ற இன்னொரு சொல். இதற்கே இவ்வளவு வெட்கமா? பெண்களிற்கு

நான்கு குணங்களில் ஒன்றுதான் நாணம் என்று கேள்விப்பட்டிருக் கிறேன். ஆனால் நாணமே பெண்ணாக மாறிய விந்தையை இன்று தான் கணக்கிடைத்திருக்கு" ஆசையுடன் அவள் கைகளை மெல்லப் பிரித்து, அதனுள்ளே தன்னைப் பார்க்கத் துடிப்பதும், பாராமல் துடிப் பதுமாகத் துடிதுடித்துக் கொண்டு நாணம் குழையக் குழையத் தவித்த அவள் விழிகளில் தன் விழிகளைக் கலந்தான் ஜனன்.

தன்னை மறந்து அவளையே விழுங்கி விடுபவன் போல் பார்த்துக் கொண்டிருந்த ஜனன் திடீரென்று தன் சுய உணர்வை அடைந்தான்.

"நேரமாகிவிட்டதில்லையா. வித்யா எவ்வளவோ பேசணும்தான். ஆனால் ஊராட்கள் வரத் தொடங்கி விட்டதால், இனியும் இங்கிருந் தால் உனக்கு வம்பாகிவிடும். மாலை போவதற்குள் மீண்டும் உன்னை, இங்கு சந்திக்கலாமல்லவா?..... இல்லையென்று மட்டும் சொல்லி விடாதே...!. ம்..... என்ன வித்யா....? அப்புறமாக எனது பிளான்களைச் சொல்கிறேனே... ம்..." தன் விழிகளாலேயே அவனுக்குச் சம்மதந் தந்து விட்டு, இடுப்பில் குடத்தைத் தூக்கி நிறுத்தியவாறு, மணலில் கால்கள் புதையத் திரும்பி நடந்தாள் வித்யா. அவளையே பார்த்துக் கொண்டிருந்த ஜனனின் மனத்தில் துளிர்த்த மகிழ்ச்சி அவன் முகத் தில் தெரிந்தது.

"க்கும்... குட் மார்னிங் ஜனன். முதல்லே குட் மார்னிங் சொன்னா உங்க காதில் விழாதென்று தான் இப்போ சொல்றேன். பல்லுத் துலக்க உங்க பின்னால் வந்தவனிற்கு இப்படி ஒரு ஓசிப் படக்காட்சி. ஏன் மிஸ் பண்ண வேண்டும். பயப்படாதேங்கோ கொஞ்சம் தள்ளித் தான் நின்றேன்." குறும்பாகச் சிரித்தான் சேகர். அசடு வழியச் சிரித்த ஜன னிற்கு இந்தச் சந்தர்ப்பத்தை விட்டால் வேறில்லையே. எனவே சேக ரிடமே வித்யாவைப் பற்றிய விபரங்களை அறிந்து கொண்டதுடன், தன்னைப் பற்றியும் சொல்லிக் கொண்டான் ஜனன்.

## 4

உள்ள தெலாமோர் உயிரென்று தேர்ந்தபின்
உள்ளங் குலைவதுண்டோ மனமே! – பாரதி

அன்று மத்தியானச் சாப்பாடு கேலியும், கிண்டலுமாக நடந்து கொண்டிருந்தது. சிவகாமிக்குப் பொதுவாகச் சேகரைப் பிடிக்காவிட்டாலும், ஜனன் ஜாடைமாடையாக் கோடிட்டுக் காட்டியதால், அன்று சேகரையும் சாப்பாட்டிற்கு அழைத்திருந்தாள். சேகர் வந்திருந்தது உமா பாடு உல்லாசமாக இருந்தது. சாப்பிடும்போது அன்று மாலை தன் நண்பன் ஒருவன் வருவதாகத் தெரியப்படுத்தினான் ஜனன்.

"அதெப்படி தம்பி. அப்படியானால், இப்ப போய்த்தான் தீர வேண்டுமா, அப்படியானாலும் போயிட்டு இரண்டு நாளில் திரும்பிடலாந் தானே" - சிவகாமி அழைப்பு விடுத்தாள்.

எப்போதடா இந்த அழைப்பு வருமென்று பார்த்துக் கொண்டிருந்த ஜனனும் அதை உடனே ஏற்றுக்கொண்டான். அவனுக்கும் போக மனமில்லைதான். ஆனால் தொலையிலிருந்து வரும் சிறீதரனைச் சும்மா திருப்பி அனுப்ப முடியாதே. அவன் தகப்பனாருக்கு வேறு தான் வருவதாக வாக்குக் கொடுத்திருந்ததால், அடுத்த நாளே போயிட்டுத் திரும்பிடலாம் என்று எண்ணமிட்டான். சித்தி நகர்ந்த பின்னராலாவது, அதுவரை அவன் போவதைப் பற்றி அக்கறையில்லாதது போல் நின்றிருந்த வித்யா ஏதாவது சொல்வாளென எதிர்பாத்தான் ஜனன்.... ம் ம். ஆனால் வித்யாவும் சித்தியைத் தொடர்ந்து விறுவிறுவென வெளியேறியதைக் கண்டதும் அவனுக்குக் குழப்பமாகி விட்டது. சாப்பாடு முடிந்து எவ்வளவோ நேரமாகியுங் கூட, சிவகாமி வழக்கம் போல் கூடத்தில் தலையைச் சரித்த பின் கூடத் தன்னைத் திரும்பியே பார்க்காத வித்யாவையே எதிர்பார்த்து, எதிர்பார்த்து ஏமாற்றம் அடைந்து கொண்டிருந்தான் ஜனன். சேகரும் உமாவும் ஜனனுடன் பேசுவதைச் சாக்காக வைத்துக் கொண்டு ஆரம்பத்தில் ஜாடைமாடையாய் பேசிக் கொள்ள ஆரம்பித்தவர்கள், நேரம் போகப் போக ஜனன் அங்கிருப்பதையே மறந்துவிட்டார்கள். தானிருக்கும் சாக்கில் தான் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு உமாவுக்கும் சேகருக்கும் பேச முடிகிறதென்பதை விளங்கி விட்டதால், இருக்கவும் விரும்பாமல் எழுப்பவும் வழியில்லாமல், தவித்தவனுக்கு சிவகாமிதான் சமய சஞ்சீவியாகக் குரல் கொடுத்தாள்.

"வித்யா, பக்கத்துத் தெருவில் புடவைக்காரன் விசாலாட்சி வீட்டிற்கு வந்திருக்கிறானாம். உமா தனக்குக் கோயில் விழாக்குக் கட்ட

ஒண்ணு வேணுமென்றாள். நல்லதேதும் இருக்காண்ணு பார்த்துட்டு வந்திடுறேன். சேகர் போனதும் கதவைச் சாத்தி விடு. வர அரை மணி யாகும். சுருக்கா நாளைக்கு இட்லிக்கு அரைச்சிடு என்ற குரல் கேட்டது. ஜனனும் உமாவும் பேசிக் கொள்வதானால் அரைமணி வரை அவகாசமுண்டு, சேகர் வீட்டுக்கு நட, வித்யா இட்லிக்கு அரை என்ற செய்தி எல்லோருக்கும் கிடைத்தது. கதவு சாத்தப்படும் சத்தத்தைத் தொடர்ந்து இதுதான் சமயம் என்று மெல்லக்கீழே இறங்கி வந்தான் ஜனன்.

கிணற்றுப் படிக்கட்டில், முழங்கால்களில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அமர்ந்திருந்த வித்யாவின் முடி அவிழ்ந்து நிலத்தில் தேய்வதைக் கூடக் கவனியாமல், எங்கோ கனவுலகில் ஆழ்ந்திருந்த வித்யாக்கு, ஜனனின் குரல் எட்டவில்லை. மெல்ல அருகில் வந்து, அவள் தோள்களை ஆதரவுடன் பற்றியபோதுதான் சுய உணர்வை அடைந்து எழுந்தவள், மீண்டும் அப்படியே அமர்ந்து கொண்டாள். ஒரு கணம் இன்பப் போராட்டத்தில் மூழ்கித் திளைத்த அவளின் கைகளை ஏந்திய அவன் கரங்களுள் அவள் விரல்கள் படபடத்தன. ஆசை வெட்கமறியாததுதான். ஆனால் நாணம் அப்படியல்லவே. ஆண்கள்தான் சந்தர்ப்பங்களையும், சூழல்களையும் மறந்து ஆசையை, ஆசையின் விளைவுகளை வெளிப்படையாகக் காட்டிக் கொள்வார்கள். ஆனால் பெண்களோ? ஆசை அனைத்தையும் நாணத்தால் மூடி மறைத்து, சமய சந்தர்ப்பங்களை உணர்ந்த பின் தானே, தங்களிற்குரியவனிடம் தங்களை வழங்குவார்கள் இல்லையா? வித்யா மட்டும் விதிவிலக்கா என்ன? சுற்றும் முற்றும் மிரட்சியுடன் நோக்கியவள், ஒருவருமில்லையென்பதை உணர்ந்ததும், சிவகாமியும் இப்போதைக்குத் தலைகாட்டமாட்டாள் என்ற நினைவுடன், ஜனன் உட்காரச் சற்று இடம்விட்டுத் தள்ளி உட்கார்ந்தாள். ஜனன் அமரவில்லை. நின்ற நிலையில் அவளை ஊடுருவி நோக்கினான்.

"வித்யா, சாதாரண மனிதர்கள் எப்போது கவிகளாக மாறி விடுகிறார்கள் தெரியுமா?" விடை தெரியாத வியப்புடன் அவனை ஏறிட்டு நோக்கினாள் வித்யா.

"பெண்களின் முகத்தில் நாணம் குமிழிட்டு வியாபிக்கையில் தான், கவிகள் மனதில் கவிதை பிறக்குமாம் என்று கேள்விப்பட்டிருந்

தேன். இதுவரை இது தவறென்றிருந்ததுதான் தவறு. என்று இப்போ எனக்குப் படுகிறது. இப்போ உன் முகத்தைப் பார்க்கையில் அது மற றவங்கட்குப் பொருந்துதோ, இல்லையோ, எனக்கு ரெம்பப் பொருந்து கிறது வித்யா." கோபத்தை எல்லாம் மறந்து பக்கென்று சிரித்தாள் வித்யா.

"ஏதேது, எப்போது தொட்டுக் கவியாகினீர்கள்?"

"ஒவ்வொரு பெண்ணும், ஒவ்வொரு கவிதையானால், ஒவ்வொரு ஆணும் கவிதான். காதலன் நினைவிலோ, நெருக்கத்திலோ, காதலி இருந்து விட்டால் அங்கு காதல் கவிதை பிறக்காமல் என்ன செய் யும்? ஆனால் அவனைக் கவிதை வடிக்கச் செய்து கவியாக்கிய பெருமை அந்தக் கவிதைக்குத்தானே உரியது. அதாவது நான் கவி யாவதென்றால் சிறப்பு உனக்குத்தானே."

"அடடா, அழகாகப் பேசிப் பழக்கமாக்கும். டாக்டர் தொழிலில் பட்டம் பெற்றீர்களா? அல்லது இந்தப் பேச்சிலா?"

"நான் எதில் டாக்டர் பட்டம் பெற்றேன் தெரியுமா? மனோதத்து வத்தில். சாதாரண டாக்டர்களே கெட்டிக்காரர்களாவது எப்படித் தெரி யுமா? உடலின் நோய் தீர்த்து உள்ளத்திற்கும், உள்ளத்தின் நோய் அழித்து உடலிற்கு உயிர் ஊட்டுவதினாலும் தான் தெரியுமா? சாதா ரண டாக்டர்களின் வெற்றியே இப்படியென்றால், மனோதத்துவத்தில் டாக்டர் என்றால்.... இன்னும் அதி தேர்ச்சியடைந்திருக்க வேண்டு மில்லையா? தத்துவம் என்றால் உண்மை. மனோதத்துவம் என்றால் மனதையும், மனதில் எழும் எண்ணங்கள் பற்றியதுமான உண்மை கள். மனோதத்துவத்தில் டாக்டர் என்றால், மனதில் ஏற்படும் உண் மையான உணர்வுகளை உணரும் தத்துவம் பெற்றிருக்க வேண்டு மல்லவா?"

"இவ்வளவு உங்களைப் பற்றிப் பெருமை அடித்துக் கொள்கிறீர் களே, இப்போ என் மனதில் இருக்கிறதைக் கண்டு பிடியுங்களேன், பார்ப்பமே"

"இப்போதா, என்னென்று சொல்லட்டுமா? ஏன் தான் இந்த ஜன னுக்கு இன்று மாலையே சிறீதரனோடு ஓட வேணுமோ? என் தவிப் புத் தெரியாதா? என்று தானே அர்ச்சனை செய்கிறாய். எப்படி நான்

சொன்னது சரிதானே!" கண்களை அகல விரித்து அவனையே நோக்கினாள் வித்யா.

"அப்படியே, சொல்லி விட்டீர்களே"

"இந்தச் சாதாரண விஷயத்தைக் கூடக் கண்டு பிடிக்க முடியாத முட்டாளா நான்? உன் கண்களை விட, உன் நினைவுகளை வெளிக்காட்ட கண்ணாடி வேறு தேவையில்லையே"

"சரி சரி பழையபடி வேதாளம் ஏறிவிட்டது முருங்கை மரத்தில். ஆரம்பித்து விட்டீர்களா பழைய பல்லவி பாட."

"ஆரம்பிப்பதற்குக் காரணமே நீதானே. ஆனால் ஆரம்பத்திலேயே கோபப்படுகிறாயே, இரண்டு நாள் போவதற்காக. இரண்டு நாட்களிற்கே இப்படியென்றால் இரண்டு வருஷம் என்றால் எப்படியிருப்பாய்?"

"ஜனன், ஏன் இப்படியெல்லாம் பேசுகிறீர்கள்? இரண்டு வருஷமென்ன? எத்தனை வருஷமானால் என்ன, நான் காத்திருக்கத் தயார்"

"ஆனால் நான் காத்திருக்கத் தயாரில்லை. ஊருக்குப் போன உடனேயே அம்மாவுடன் திரும்பி வருவேன். உடனே நம் கல்யாணத்தை முடிச்சிட்டுத்தான் லண்டன் பயணம்."

"என்ன, லண்டன் பயணமா?" ஆச்சரியத்துடன் பார்த்தாள் வித்யா.

"ஆமாம். வித்யா... இன்னும் ரெண்டு கிழமைகளில் நான் மேல் படிப்பிற்காக லண்டன் போக வேண்டும். சிறீதரன் வீட்டிலிருந்து நாளன்றைக்கே திரும்பி வந்து, மறுநாள் ஊருக்குப் போய், இரண்டு நாளில் அம்மாவுடன் வந்து, எல்லாத்தையும் முடிச்சிடலாம். அப்புறம் உனக்குச் சம்மதமென்றால் நான் திரும்பி வரும்வரை நீ அம்மாவுடன் இருக்கலாம்."

"இரண்டு வருஷமா" அவள் குரலின் ஏக்கம் அவனிற்குப் புரிந்துதானிருந்தது.

"எனக்கு மட்டும் கஷ்டமாயிராதா? இரண்டு வருஷமும்... ம்.. இங்கிருந்தாலென்ன, எங்கிருந்தாலென்ன? எங்கு சென்றாலும், என்னுள் உன் நினைவில் புள்ளிகளாலேயே வட்டம் தொடுக்கப்பட்டு

விடும். அந்த வட்டத்துக்குள் என்றுமே நிறைந்திருக்குப் போவதும் உன் நினைவுதானே வித்யா, எனக்கு அதுவே போதும். ஆமாம் உன் ஏக்கத்தைத் துடைக்கும் மருந்து என்னென்ன? சொல்லு பார்க்க லாமே? முடிந்தால் ஞாபகார்த்தமாக ஒன்று தரலாமா நான்? அவள் சலனத்தை மாற்றுவதற்காக குறும்பாகப் பேச்சை மாற்றினான் ஜனன்.

"அடடே, உன் முகத்திலென்ன? நினைத்த நேரமெல்லாம் ரோஜா நிறம் பரவுதே .உனக்குச் சிவப்பு நிறமென்றால் நிரம்பப் பொருந்துது. சிவந்த மொட்டுப் போன்ற ம்..ம் இதழ்கள். மெல்லிய சிவந்த நீண்ட விரல்கள். இரண்டிற்குமே இடைப்பட்ட, சுண்டினால் சிவந்துவிடும் இளஞ்செம்மை நிறம் உன், உன் உடலிற்கு. எல்லாவற் றையும் விட, செம்மையான கதைகள் பேசும் கண்கள் உனக்கு. அட சீ.. காலேஜ் நாட்களில் கிரிக்கெட் அடித்த நேரத்தில் அல்லது பேச்சுப் போட்டிகளிலே மணிக்கணக்காகச் செலவழித்த நேரத்தில் ஒரு பகுதி யையாவது கவிதை எழுதப் பழகியிருக்க வேண்டும். அல்லது, அண்ணா மாதிரி, வக்கீலுக்குப் படித்துவிட்டு பிறகு இலக்கியம் படித்து விட்டு பிறகு பத்திரிக்கை ஆசிரியனாக இருப்பது போல், டாக்டர் தொழிலை விட்டிட்டு நானும்... என்று" தொடரப் போனவளை இடை வெட்டினாள் வித்யா.

"சினிமாக்கு வசனகர்த்தா ஒருத்தர் தேவையென்று கேள்விப் பட்டேன். அந்த வேலையைப் பார்த்து தரவா?"

"ஓ.... தாராளமாய். உன்னைப் பார்த்துப் பார்த்தே சிறந்த வசன கர்த்தா ஆகிவிடலாம், உன் நினைவுகளை மனசுக்குள்ளே பூட்டிப் பூட்டி வைக்காமல், வெளியிட அருமையான சந்தர்ப்பமும் கிடைக் கலாமல்லவா?"

"நான் கேட்டது சினிமாக்கே ஒழிய வாழ்க்கைக்கு அல்ல."

"வாழ்க்கையே ஒரு சினிமாதானே. அங்கும் சுற்றிச் சுற்றி வாழ்க் கையில் நடக்கிறதைத்தானே காட்டுகிறார்கள். ஆடுவதும், ஓடுவதும், பாடுவதும், இடையில் அழுவதும், இறுதியில் கல்யாணம், குழந்தை குட்டியுடன் சுபம். இவ்வளவுதானே! அந்தச் சினிமாவை நம் வாழ்க் கையிலேயே காட்டி விட்டால் போச்சு."


"சே... சே... என்ன கண்றாவிப் பேச்செல்லாம் என்னிடம் பேசு கிறீர்கள். வெட்கமாயில்லை?"

"உன்னுடன் பேசாமல் வேறு யாருடனாவது பேசினால்தான் வெட்கம். பேசுவதற்கே இப்படியென்றால்...." குறும்புடன் இழுத்தான் ஜனன்.

"உங்களுடன் பேசி வெல்லவே முடியாது. சரி சரி சித்தி வந்து விடுவாள். இனி நான் போகணும்" தாவணியைச் சரி செய்தவாறே எழுந்தவளின் குறுக்கே, கரத்தை நீட்டி மறித்தான் ஜனன்.

"அவ்வளவு அவரசமா வித்யா"

"ஆசையைப் பார் ஆசையை" அழகு காட்டியபடியே அவன் கரங்களை விலத்தியபடி எழுந்தவள், திடீரென அப்படியே திகைத்து விட்டாள்... காரணம். பின்கட்டு வாசல் அருகே அப்போதுதான் வந்து நின்ற சிவகாமியின் முகத்தில்.. அனல் தெறித்தது. பயத்தினால் உடல் வெலவெலத்து விட்டது வித்யாக்கு.



"வித்யா" ஆங்காரமாகக் கத்தினாள் சிவகாமி. மறுகணம், அவள் கையிலிருந்த செம்பு ஆத்திரத்துடன் ஒரு மூலையை நோக்கிப் பறந்தது. ஜனனின் முன்னிலையில் அடக்க முற்பட்ட ஆத்திரத்தின் விளைவுதான் அது.

சப்த நாடியும் ஒடுங்கிடத் திகைத்தபடியே நின்றிருந்தாள் வித்யா. இவ்வளவும் ஒரு விநாடியில் நடந்து முடிந்து விட்டது. ஜனன் தான் மெல்ல எழுந்து அவளருகில் வந்தான்.

"ஏன் வித்யா? இப்படி நடுங்குகிறாய். பின்னால் தெரிய வேண்டியது கொஞ்சம் முன்னாடி தெரிந்துவிட்டது. நான் இருக்கிறேனே! ஏன் பயம்?" ஆத்திரத்துடன் கூறியவாறு? அவள் தோள்களில் கைகளை வைத்ததுதான் தாமதம், வெடுக்கென்று அவன் கைகளை உதறி விட்டுப் பாய்ந்தோடினாள் வித்யா மறுகணம்.

மறுகணம் "அம்மா", என்று வீறிட்டு அலறியவாறே கீழே சாய்ந்தாள். சிவகாமி வீசிவிட்டுச் சென்ற செம்பு நீரும், வாசற்படியும் அவளை நிலை தடுமாறி வழுக்கிவிடச் செய்து விட்டது. அலங்கோலமாகப் பின் கட்டு வாசலில் தலைக்குப்புற வீழ்ந்து கிடந்த வித்யாவைக் கண்டதும் தான் ஜனனுக்கு நடந்ததென்னவென்று விளங்கியது. அவளை நோக்கி ஓடினான் ஜனன். பக்கத்தில் ஓடி வந்த உமாதான், அவனுடன் சேர்ந்து வித்யாவைத் தூக்கி எழுப்ப உதவினாள்.

மறுகணம், கைகள் பரபரக்க, இரத்தம் பீறிடுவதைத் தடுக்க தலையை நிமிர்த்தி, நெற்றியை அழுத்தித் தன் கைக்குட்டையால் இறுகக் கட்டிவிட்டு நெற்றில் வழிந்த இரத்தத்தைத் துடைத்தான். அவசரத் திற்கென்று தன் கிற் பாக்கில் வைத்திருந்த முதலுதவிப் பெட்டியை எடுத்து வர உமாவை விரட்டிவிட்டு, நீரில் நனைத்துப் பிழிந்த மற்றக் கைக் குட்டையால் நெற்றியை அழுத்தி மீண்டும் துடைத்துவிட்டு, சிகாட்டின் பவுடர் தூவிக் கட்டி விட்டு, அவளைத் தன் தோளிலேயே சாய்த்துச் சென்று படுக்க வைத்த பின்னர் தான் அவன் பழைய நிலையை அடைந்தான். கையிலிருந்த இரத்தக் கறையைக் கழுவிக் கொள்ள மீண்டும் வெளியே வந்தபோது, உமாவும் வெளியே அவனைத் தொடர்ந்து வந்தாள். இவ்வளவு அமர்க்களத்திற்கும் சிவகாமி அங்கு இல்லை.

"என்ன நடந்தது உமா? சேகரைக் காணமே?"

"வந்து..... நீங்கள் கீழே இறங்கிப் போனதும், நானும் சேகரும் பேசிக் கொண்டிருந்த சுவாரசியத்தில் அம்மா திரும்பி வந்ததைக் காணவில்லை. திடீரென்று, "வெளியே நட்டா வேலை செய்யக் கூட வக்கில்லாதவனே" என்று கத்தியபோதான் நாங்கள் திடுக்கிட்டு விட்டோம்.

சேகர், பேச்சுக் கொடுத்தால் அம்மாக்கு ஆத்திரம் அதிகமாகுமே தவிரப் பிரயோசனமிராதென்றதால் பேசாமல் வெளியே போய் விட்டார். என் மீது பாய்ந்தபோதுதான் அம்மாவிற்கு உங்கள் நினைவு வந்திருக்கிறது. எங்கே நீங்கள் என்று கேட்ட போது, நான் வாயே திறக்கல்லை. அம்மாக்கு ஏதோ பொறி தட்டியிருக்கணும், தேடிக் கொண்டே அங்கு நேரே வந்துட்டதால் என்னால் ஒன்றுமே அதிர்ச்சியில் செய்ய முடியவில்லை.... அப்படியும்... வித்யாக்காவைத் தேடற சாக்கில் இரு தடவை பெரிசாக் கூப்பிட்டான். ஆனால் உங்களிற்குக் கேட்கல்லையாக்கும். வித்யாக்காவோடு உங்களைக் கண்டதும் அம்மாக்கு உங்களைத் திட்டவும் முடியவில்லை. காமாட்சி அத்தையைப் பார்த்து, சேகரை அடக்கி வைக்கிறதா, இல்லையா என்று இரண்டிலொன்று கேட்கப் போகிறதாகக் கத்திக் கொண்டு போயிட்டார். பெத்த பெண்ணை அடக்க முடியவில்லை.... ஆனால்....."

"உமா" வித்யாவின் குரல் மெல்லியதாக அறையிலிருந்து வந்தது. சற்றுத் தெளிவுடன் அவள் கட்டிலிலிருந்து எழும்ப முயல்வதைக் கண்டதும் உள்ளே விரைந்தான் ஜனன். ஜனனைப் பார்த்ததும் அவள் கண்ணிலிருந்து கண்ணீர் வடிந்து கன்னத்தில் உருண்டோடியது.

"வித்யா ஒண்ணுக்கும் பயப்படாதே. நான் சீறிதரன் வீட்டுப் பயணத்தை ரத்துச் செய்திட்டான். நான் இங்கேயே நின்று" என்று ஆரம்பித்தவன், வசந்தா சுந்தர் தொடர விடுவென வந்த சிவகாமியைக் கண்டதும் நிற்பாட்டினான். சுந்தர் தாய்க்கு, வித்யாக்குப் பலமாக அடிப்பட்டுவிட்டதெனச் சொல்லிக் கொண்டிருக்கிறதைக் கேட்ட வசந்தா மனங்கேளாமல் உள்ளே வந்து விட்டாள்.

"என்ன வித்யா ஓடியாரப்போ பார்த்து வரவேண்டாமா. தம்பி அவளுக்குப் பலமான காயமொண்ணுமில்லையே," பரபரப்பாகக் கேட்டாள் வசந்தா. பொதுவாக எல்லோருக்குமே இல்லையென்று தலையாட்டினான் ஜனன்.

"நாலைந்து நாளில் காயம் ஆறிவிடும். காயம் பெரிசென்றில்லை. நல்லவேளை காயம் இன்னும் கொஞ்சம் கூடவாயிருந்திருந்தால் ஸ்ரிச்சஸ் போடவேண்டி வந்திருக்கும். உமா அந்த வெள்ளைப் பவுடரை இட்டு இரண்டு தரம் நாளிற்குக் கட்டி விடு. மறந்திடாதே.

என்ன?" என்றவாறே ட்ரெற்றோல் போத்தலை எடுத்து முதலுதவிப் பெட்டியில் வைத்தான் ஜனன்.

"ஜனன் மாமா, யாரோ சிறீதரனாம், உங்களைப் பார்க்கணுமாம்", உள்ளே ஓடிவந்தான் சுந்தர். தயங்கியவாறே உள்ளே நுழைந்த சிறீதரனை வரவேற்கக் கூடத்திற்கு வந்தான் ஜனன்.

"ஜனன் உட்கார நேரமில்லை. உடனே உன்னையும் கூட்டிப் போகனும், அப்பாக்கு உடம்பு நல்லாயில்லை. நீ இருந்தால் தெம்பா யிருக்குமென்றுதான் ஓடி வந்தன். இப்பவே புறப்படுகிறாயா? டாக்சி வெயிட் பண்ணுது."

அவசரப்படுத்திய சிறீதரனுக்கு என்ன பதில் சொல்வது? வித்தியாவை இந்த நிலையில் விட்டுப் போகவும் மனமில்லை. ஆனால் அப்பாக்காக உதவி தேவை என்று வந்து நிற்கிற சிறீதரனை என்னவென்று திருப்பியனுப்ப முடியும். வித்தியாவும், வாங்கப் போகும் திட்டுக்களை ஜனன் முன்னாடி ஏன் வாங்க வேண்டும் என்று நினைத்தவளாய், அவளும் ஜனன் இரண்டு நாளால் திரும்பி வரும்படி ஜாடையாய் உமாக்குச் சொல்வதும் அவனுக்கு விளங்கியது. தன் சுய நலத்தை விட உதவியென்று வந்து நிற்கும் அவனை எப்படி ஏமாற்ற முடியும் என்பது தான் ஜனனுக்கு சங்கடமாயிருந்தது. எல்லோரிடமும் பொதுவாகச் சொல்லிவிட்டு உமாவிடம் வந்தான் ஜனன்.

"உமா நான் நாளை அல்லது மறுநாள் வந்து விடுவேன். வித்தியாவை உன் பொறுப்பில் தான் விட்டுப் போறேன். வந்தவுடனேயே, ஊருக்குப் போக முன்னமேயே அத்தையிடம் நம் கல்யாணத்தைப் பற்றி பேசிமுடிவெடுக்க வந்துவிடுவேன் என்று சொல்லி விடு என்ன?" என்று இரகசியமாய் சொல்லிவிட்டு வித்யா படுத்திருந்த அறைக்கு வந்தான் ஜனன்.

"வித்யா நான் போயிட்டு வந்திடுவன், காயத்தைக் கவனிச்சுக்கோ நான் வருமட்டும். அப்புறம் நான் வந்து கவனிச்சுக்கிறேன், எல்லாத்தையும்" குரலைத் தாழ்த்திக் கூறிவிட்டுச் சிறீதரனுடன் வெளியே நடந்தான் ஜனன். அவன் போவதைத் தானும் பார்க்க முடியாதபடி பயமும், கண்ணீரும் வித்யாவின் கண்களை மறைத்தது. கண்களைத் திறந்தால் அழுகை வெளிப்பட்டு விடுமோ என்னவோ என்று இறுகக் கண்களை மூடிக் கொண்ட விட்டாள் வித்யா.

சொல்லு மொழிகள் குழந்தைகள் போலொரு
சூதறி யாது சொல்வான். – பாரதி

ஜனன் சிறீதரன் வீட்டிற்கு வந்து இரண்டு நாட்களாகி விட்டது. நடந்ததெல்லாம் திடீரென்று ஆரம்பித்துத் திடீரென்று அதன் எல்லையை நெருங்கி விட்டாற் போலிருந்தது ஜனனுக்கு. காரணம்... சிறீதரன் வீட்டுக்குள் நுழைந்த அவர்களை வரவேற்றது வேறு யாருமில்லை. சாட்சாத் சிறீதரனின் அப்பாதான். குழப்பத்துடன் பார்த்த அவனைப் பார்த்துச் சிரித்தான் சிறீதரன்.

"எப்படிடா என் ரிக்ஸ்? அப்பாவைப் பார்த்தாலே தெரியவில்லை அவர் நல்லாத்தான் இருக்கிறார். நீ இங்கு வருவதாக எழுதியதுமே நான் தீர்மானிச்சு விட்டேன். உன்னை எப்படியாவது ஒரு கிழமையாவது இங்கு மறிச்சுடனும் என்று. வாடா வாடா என்றால் வர மாட்டாய். நீ வேற ஏதோ குருட்டு யோசனையில் சிக்கி இருந்ததால், பேச்சுக் கொடுக்க விரும்பவில்லை. அதுதான் இந்தக் குருட்டு வழி, டாக்சியில் அலுப்பினால் தூங்கி வழியிற மாதிரிச் சாக்கில் வாயை மூடிக் கொண்டிருந்தேன். இப்ப குட்டை அவுக்கிறதில் தப்பில்லைதானே" என்று சிரித்தபோது ஜனனுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. சங்கடத்தை மறைக்கப் பேச்சை மாற்றினான் ஜனன். அன்றிரவே எப்படியும் சிறீதரனிடன் தன் நிலையை எடுத்துக் கூறிவிட்டு மறுநாளே புறப்பட வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டான் ஜனன். ஆனால் விதியை மாற்ற மதியால் முடியுமா? அன்றிரவு பெய்த கடும் மழையினால் ஏற்பட்ட மண் சரிவினால் முதல் சென்ற பஸ் வண்டி தடம் புரண்டுவிட்டதால் பாதையில் தடங்கலேற்பட்டு விட்டது. போக்குவரத்தே முற்றாகத் தடைப்பட்டு விட்டபோது ஜனனில் டாக்சி மட்டும் விதிவிலக்கா என்ன? தவித்துப் போனான் ஜனன்.

அவனை அன்புடன் உபசரித்த சிறீதராின் பெற்றோரை முறித்துக் கொண்டு புறப்பட எத்தனித்தும் ஜனனால் முடியாமல் போய் விட்டது. ஏழு பிள்ளைகளைக் கொண்ட நடுத்தரக் குடும்பம் அவர்களது. சிறீதரனின் மூத்த இரு அக்காமாரும் ஒரு அண்ணனும் திருமணமாகித் தனிக்குடித்தனம் போயிருந்தாலும் பள்ளி விடுமுறைக்காகக் குழந்தை குட்டிகளுடன் வந்திருந்ததால் வீடு எந்நேரம் கல

கலப்பாகவே இருந்தது. சிறீதரனின் மூன்று தம்பிமாரும், மற்றக் குழந்தைகளும் "ஜனன் மாமா, ஜனன் மாமா" என அவனையே சுற்றிக் கொட்டமடித்துக் கொண்டிருந்தார்கள்.

இரண்டு நாட்களாக அவர்களின் சூழலில் தன்னை மறக்க முயன்றாலும் வித்யாவை மட்டும் அவன் மறக்க நினைக்கவும் இல்லை. நினைக்க மறக்கவுமில்லை. பகலிலோ பொழுது போய்விடும். ஆனால் இரவிலோ? வித்யாவின் நினைவு அவன் ஏகாந்தத்தை உரிமை கொண்டு விடும். அவளைப் பற்றி நினைப்பது ஒரு கணம் இனிமையாயிருக்கும். மறுகணம் துன்பமாகிவிடும். ரோஜாவின் இதழை மெல்ல நுகருகையில், தட்டுத்தடுமாறி அதன் முட்களாலும் உறுத்தப் பட்டு விடுவது போல், வித்யாவின் குறுகுறுப்பான அன்பு நிறைந்த பேச்சு அவன் இதுவரை அனுபவித்திராத இனிமையை ஊட்டும். இன்பலாகிரியின் எதிர்காலக் கனவுகளில் ஆழ்ந்து விடுகையில், அவளது சூழலும், அவள் படும் ஏக்கத்தின் பிரதிபலிப்புகளும் முள்ளைப் போல் அவனை ஊடுருவ ஆரம்பித்துவிடும். இன்பமும், துன்பமும் நிறைந்த உணர்வுகள் அவன் தனிமையைச் சாடும். அவளது நினைவுகளும் அவளை விட்டுக் காத தூரம் பறந்து பிரிந்திடப் போகும் எண்ணங்களுமாக ஆட்டிப் படைத்தன ஜனனை. அவளது நினைவுகளிலே ஆழ்ந்த ஜனனிற்கு மறுநாள் அங்கு போவதற்கான வழி பிறந்ததும் தான் நிம்மதியாக உறங்கினான். ஆமாம் அவன் பிராத்தனையைக் கேட்டோ என்னவோ, தடைப்பட்டிருந்த போக்குவரத்து மீண்டும் ஓடத் தொடங்கியதுதான் தாமதம் சிறீதரனே டாக்சியைத் தயார் பண்ணி விட்டான்.

## 5

நானும் பல தினங்கள் பொறுத்திருந்தேன் – இது
நாளுக்கு நாளதிக் மாகி விட்டதே. – பாரதி

பொலபொலவெனப் பொழுது விடிந்து கொண்டிருந்தது. விடிந்து கொண்டிருந்த பொழுதை வெறிக்கப் பார்த்தாற்போல் உட்கார்ந் திருந்தாள் வித்யா.

"ஜனன் போய் இன்றுடன் இரண்டு நாட்களாகி விட்டதே, இன் றைக்காவது வருவாரோ? ஏன் வரவில்லை? ஒரு வேளை அவர் நண்

பரின் அப்பாவிற்கு ஏதும் ஆகிவிட்டதோ? சீ சீ... அப்படி ஒன்றும் நடந்திருக்காது. பின் ஏன் வரவில்லை? அவருக்கு நேரமில்லையா? சே சே .... இரண்டுமே காரணமாயிருக்காது. வரவரச் சித்தியின் போக்கும் மோசமாகிறது. போதுமே இந்த இரண்டு நாட்களாகப் பட்டபாடு. என்னென்றுதான் மனம் வந்ததோ? ஏற்கனவே நிலத்தில் வீழ்ந்து நெற்றியில் போட்ட கட்டுக்குத் துணையாக நேற்று இன்னொன்று துடைப்பத்தால் வாங்கிய அடியால் போட வேண்டி வந்துவிட்டதே. உமாவாலும் ஒன்றும் செய்ய முடியாதபடி அவள் தன்னை நொந்து அழுகொண்டிருக்கையில் இதை எப்படி அவளிடம் பிரஸ்தாபிப்பது? சேகரண்ணா பாடுதான் திண்டாட்டமாகி விட்டது. சே! என்ன பேச்சு பேசிவிட்டாள் இந்தச் சித்தி. வேலையெடுக்காமல் இந்த வீட்டிற்குள் காலடி எடுப்பதில்லை என்றிட்டாரே சேகரண்ணா. காமாட்சி அத்தை கூட இந்தப் பக்கமில்லையே" என்று எண்ணமிட்டவாறே படுக்கையில் மீண்டும் விழுந்து புரண்டு கொண்டிருந்தாள் வித்யா.

"வித்யாக்கா வித்யாக்கா" மெல்லிய குரலில் கிசுகிசுத்தாள் உமா. என்னது என்ற பார்வையுடன் எழுந்தவளைச் சத்தம் போடாதிருக்கும் படி சைகை செய்தவாறே கொல்லைப்புறம் அழைத்துச் சென்றாள் உமா.

"வித்யாக்கா இன்று மத்தியானம் ஜனன் வருகிறாராம். நீ ஒரு வேளை ஆற்றுப்பக்கம் வருவாய் என்று அங்கு விடிய வந்து சேகருடன் காத்திருந்தாராம். உன் கஸ்டகாலம் நீ தான் போகல்லையே, போதாக்குறைக்கு அந்த நேரம் பார்த்து ஆத்துப் படித்துறையில் விழுந்து பாபுப் பயல் காலை ஒடிச்சிட்டதால் நேரே ஆஸ்பிட்டலுக்குப் போயிட்டு இங்க வர்றதாகச் சொல்லிட்டுச் சேகரும் ஜனனோட ஆஸ்பிட்டலுக்கு ஓடிட்டார். ஏன் ஜனன் வர்றார் தெரியுமா? அம்மாவிடம் உன்னைப் பற்றி பேசி முடிவெடுக்கத்தான்" என்றவாறே அதுவரை தன் கையில் ஒளித்து வைத்திருந்த பூப்பொட்டலத்தை அவளிடம் நீட்டினாள். கனகாம்பரமும், மல்லிகையும் அவள் கை நிறைய மணத்தது.

"ஜனன் தான் உன்னிடம் தரச் சொன்னாராம். சரி சரி வா. அம்மா எழும்ப முன்னமே சமையலை முடிச்சிடப் பார்ப்பம்" என்றவாறே கிணற்றுக் கட்டை நோக்கி ஓடினாள் உமா.

சேகரைச் சந்தித்துப் பேசிய மகிழ்ச்சி அவளிற்கு இருக்காதா பின்னே? கடிகாரம் நான்கு தடவை அடித்து ஓய்ந்து விட்டது. அதையே ஏமாற்றத்துடன் பார்த்துக் கொண்டிருந்த வித்யா, இனியும் சித்திக்குச் சாக்குப் போக்குச் சொல்ல முடியாது என்றுணர்ந்தவளாய் உமாவுடன் புறப்பட ஆயத்தமானாள். புறப்பட ஆயத்தமாயிருந்த உமாவிற்கு வித்யாவின் ஏமாற்றம் புரிந்துதானிருந்தது. காலை பதினொரு மணி தொட்டே இருவரும் ஜனனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்களிற்குத் தெரியுமா? பாபுவின் கால் முறிவு சற்றுப் பலமாக இருந்ததால் பக்கத்து ஊரிலிருந்த புது ஆஸ்பிட்டலிற்கு அவர்கள் போய்விட்ட விடயம். நான்கு தடவை கடிகாரம் அடித்ததுமே சிவ காமி நச்சரிக்கத் தொடங்கி விட்டாள். அவள் திட்டம் அவளோடு. இனியும் நேரம் கடத்த முடியாததால் சேலையை மாற்ற உள்ளே சென்றாள் வித்யா. தலையை வேண்டா வெறுப்பாகப் பின்னிப் பொட் டிட்டுக் கொண்டாள்.

உமாவின் ட்ரெசிங் டேபிளில் இருந்த பூப்பொட்டலத்தை எடுத் துப் பிரித்துத் தலையில் சூடப் போனவள் ஒரு கணம் தயங்கினாள். புத் தம் புதிதாய்க் காலையில் விரிந்திருந்த மல்லிகை வாடிச் சோர்ந்து இருந்தது. கனகாம்பரம் தான் இன்னும் புதுச் சிலிர்ப்புடன் சிரித்துக் கொண்டிருந்தது. "ஆம், அழகும் நிறமும் கொண்ட கனகாம்பரத்தில் மணமில்லை. ஆனால் விரைவில் வாடிப் போகாது. ஆனால் மணம் நிறைந்த மல்லிகையோ விரைவில் வாடிப் போகிறது. என் மனம் மாதிரித்தான் சோர்ந்து விட்டது அதுவும். என் மனம் மட்டுந்தானா? அல்லது என் வாழ்வும் மல்லிகை மாதிரி வாடி விடுமோ. சீ சீ ஏனிந்த அசட்டுக் கற்பனை" என்று தன் எண்ணங்களின் ஓட்டத்திற்குத் தடை போட்டவளாய்த் தழையத் தழைய இறங்கிய பின்னலில் பூவைச் செருகியடி வெளியே வந்தாள். அவளைச் சீக்கிரம் வரும்படி ஜாடை காட்டினாள் உமா. சித்திக்குச் சொல்லிவிட்டு வெளியே புறப்பட்டாள் வித்யா.

"ஏன் உமா, ஏனிப்படி அவசர அவசரமாய்க் கூப்பிட்டுவிட்டுப் பேசாமலேயே வருகிறாய். ஆமாம் கோயில் அந்தப் பக்கத்திலே அல்லவா? அதை விட்டுவிட்டு ஏன் பஸ் ஸ்டாண்ட் பக்கம் போகிறா யடி?" என்றவளைக் குறும்புடன் பார்த்தாள் உமா.

"எல்லாம் போக வேண்டிய இடத்திற்குத்தான் போகிறோம். பேசாமல் வாயேன்." என்று அடக்கிவிட்டு விடுவிடுவென நடந்தாள் உமா.

கூட்டம் முழுவதும் கோயில் பக்கம் சென்று கொண்டிருந்தது. அன்றுதான் திருவிழாக் கடைசி நாளானதால் ஜனங்கள் முழுவதும் அந்தப் பக்கம் செல்ல, சிவகாமி மட்டும் கால் உளுக்கிக் கொண்டு விட்டதென்று ஏதோ முணுமுணுத்தவாறு வீட்டிற்குள் முடங்கிவிட்டாள். திருவிழா முடிய இரவு வெகுநேரமாகி விடும். உமா முன்னமே தன் சிநேகிதி, அன்று ஊருக்குத் திருவிழாப் பார்க்கத் திரும்பி வருவதாகக் கூறி அவள் வீட்டுக்குச் சென்று இரவு தங்கி வருவதற்காகச் சிவகாமியிடம் சம்மதம் கேட்டபோது அவள் முதலில் சம்மதிக்கவில்லைதான். ஆனால் அப்புறமோ கோயில் விழாச் சாட்டில், ஊருக்கு வந்திருந்த கிருஷ்ணனை மீண்டும் வீட்டுக்கு வரும்படிச் செய்தி அனுப்பி விட்டாள் சுந்தரிடம். வித்யாவுக்கு மெள்ளக் காதும் காதும் வைத்தாற் போல்கிருஷ்ணனைப் பண்ணி விட்டால் உமாக்கு ஜனனைப் பண்ணி விடலாம். அதற்கு உமா வீட்டில் இருந்தால் சங்கடம் என்று தான் பிறகு சம்மதம் கொடுத்திருந்தாள். போதாக்குறைக்கு, வித்யாவையும் அங்கிருந்து கிளப்பி விடும் நோக்கத்தில் தான் கடைசி நேரத்தில் அவளையும் உமாக்குத் துணையாகக் கூட்டிப் போகும்படி உமாவிடம் சொல்லிவிட்டாள். உமாக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. பிறகு வருவது வரட்டும் என்ற முடிவுடன் சேகருக்கு இரகசியமாக ஒரு துண்டுக் கடிதம் எழுதிக் கொடுத்து விட்டு வெளிக்கிட்டாள். இதொன்றும் வித்யாக்குத் தெரிந்திருக்க நியாயமில்லைதான். அவள் மனம் ஒரு நிலையிலிருந்தால் தானே அவள் தன்னைச் சுற்றி என்ன நடக்கிறதென்பதில் அக்கறை காண்பிக்க முடியும்.

"கொஞ்ச நேரம் தொணதொணக்காமல் வாயை மூடிக் கொண்டு வரமாட்டாயாக்கா, எனக்குத் தெரியும் எங்கே போவதென்று" என்ற பாடத்தையே மீண்டும் மீண்டும் படித்துக் கொண்டிருந்தாள் உமா. பஸ்ஸில் ஏறிய பின் கூட வித்யாக்கு மனம் ஏமாற்றத்தால் சாம்பிக் கொண்டிருந்தது.

போதாக்குறைக்கு சிவகாமி ஏதோ ஆத்திரத்தில் நறுக்கென்று குட்டியபோது, அப்போதுதான் கட்டவிழ்க்கப்பட்டிருந்த நெற்றி, எதிர்

பாராமல் சுவரில் முட்டியதால் இரத்தம் கசிந்திருந்த காயம், புதிய எரிச்சலை வேறு ஊட்டிக் கொண்டிருந்தது. ஏதோ ஒரு இடத்தில் உமா இறங்க முயல்வதைக் கண்டதும் மௌனமாகவே அவளும் இறங்கி னாள். இடத்தைச் சுற்றும் முற்றும் நோக்கியபோதுதான் பழைய ஞாப கம் வந்தது. உமாவின் ப்ரண்ட் கல்யாணிதான் அந்தத் தெருவில் குடி இருந்தவள். ஏதோ கல்யாணி வீட்டிற்குப் போக உமா இரண்டு நாட்க ளின் முன் அனுமதி கேட்டதும் தேவையில்லை என்று சிவகாமி கற புறத்ததும் ஞாபகம் வந்தது.

"கல்யாணி வீட்டிற்கு வர்றதற்கு ஏனாம் இவ்வளவு மூடு மந்தி ரம்" என்று வெடித்த வித்யாவைப் பார்க்கச் சிரிப்பு வந்து விட்டது உமாக்கு.

"ஐயோ பாவம், நான் கல்யாணியைப் பார்க்க வந்தால் தானே. நாளை வரப் போற கல்யாணியை இன்று எப்படிப் பார்க்கலாம்? நாம் சந்திக்கப் போறது. தவறு தவறு நீ சந்திக்கப் போறது, உன் ஜனனை ஒழியக் கல்யாணியை அல்ல" பேசிக் கொண்டே அந்த வீட்டின் கேற் றைத் திறந்து கொண்டு வெளியே வந்த கல்யாணியின் அம்மாவைப் பார்த்துச் சிரித்தாள் உமா.

"என்ன மாமி நீங்க எங்க புறப்படுறீங்க? ஓ..! திருவிழாப் பார்க் கவா" என்றவாறே வீட்டுக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்த கல்யாணியின் அம்மாவைப் பார்த்துச் சிரித்தாள் உமா.

"ஆமாண்டி உமாவா அது? நாளைக்குத் தானே வர்றதாக எழுதி யிருந்தாள் கல்யாணி, உனக்குத் தெரியாது போலிருக்கு" என்று நீட்டி யிழுத்தாள் பார்வதி.

"தெரியாது மாமி. கல்யாணி எனக்கு எழுதல்லையே, இன்று திரு விழா கடைசி நாளென்றபடியால் இன்று வந்திருப்பாள் என்றல்லவா நினைச்சன். அதனால் என்ன? நாளைக்கு நின்று அவளைப் பார்த்திட் டுப் போயிடலாம் தானே? எனக்கு உங்க வீடென்ன பழக்கமில்லாத இடமா? நீங்க உங்க வசதிப்படி திருவிழாப் பார்த்திட்டு வாங்க. எங்க ளிற்கென்ன பயம்? வந்ததும் கதவைத் தட்டி எழுப்பினால் போச்சு" என்றவாறே வீட்டினுள்ளே போனாள் உமா. பக்கத்து வீட்டுக்காரர் திருவிழாக்குப் போகப் புறப்பட்டதால் மாமியும் விடைபெற்று கொண்டு

புறப்பட்டாள். அப்போதுதான் வாசலில் தயங்கியபடி வீட்டு நம்ப ரைத் தேடிக் கொண்டு நின்ற அந்த வாலிபனைக் கண்டதும் ஒரு கணம் தயங்கினாள் பார்வதி.

"என்ன தம்பி யாரைத் தேடுகிறீங்க" என்றபடி வெளியே கேற்ற டிக்கு வந்தவள், அவன் தேடுவது தன் வீட்டு நம்பரைத் தான் என்று தெரிந்து கொண்டாள். எண்ணை திரளும் போது தாழி உடைந்த மாதிரி அந்த நேரம் பார்த்துத்தானா ஜனனும் அங்கு வரவேண்டும்.

கல்யாணியின் அம்மா, திருவிழாப் பார்க்கத் தவறமாட்டாள் என்று தெரியும் உமாக்கு. எப்படியும் ஜனன் அவள் புறப்பட்ட பின் தான் அங்கு வருவான் என்ற நம்பிக்கையை, அவன் வரவு உடைத்து விட்டது என்பதை அறியாமலேயே உள்ளே கூடத்தில் சென்று "அப் பாடா" என்றவாறே அமர்ந்தாள் உமா.

"ஒரு மாதிரி தொல்லை தீர்ந்து விட்டது. ஏன் அப்படி முறைக் கிறாய்? ஆரம்பத்திலிருந்தே உனக்கு விளக்கிச் சொல்கிறேன். பாபுப் பயல் ஆத்தடியில் விழுந்து காலை ஒடிச்சானோ இல்லையோ. ஜன னும் சேகரும் அடுத்த கிராமத்திற்கு ஆஸ்பிட்டலுக்கு அழைத்துப் போய்விட்டார்கள். அங்கிருந்து அப்புறம் நம்ம வீட்டிற்குப் போவார் கள் தானே? கல்யாணி வீட்டிற்கு இன்று வர்றதிற்கு எதேச்சையாகத் தான் முந்தாநாள் பிளான் போட்டன். அம்மா முதலில் விடமாட்டென் றிட்டா. அப்புறம்தான் சுந்தர் பயலுடன் அம்மா இரகசியமாய் பேசிக் கொண்டிருந்ததை, அதாவது கிருஷ்ணனை வீட்டுக்கு இன்று வரச் சொல்லிக் கொண்டிருந்ததைக் கேட்டிட்டன். காலையில் அதை வைச் சுட்டுத்தான், ஜனன் வரத் தாமதமாகினதும் யோசிச்சன். ஜனன் வீட் டிற்கு வந்தாலும் அங்கே நீ பேசிக்க முடியாது. இதற்கு முன்னே அம்மா உன்னையும் துணைக்கு அழைச்சிட்டுப் போகச் சொல்லிட்டா? உன் னையும் என்னோடு சேர்த்து அப்புறப்படுத்திற நோக்கத்துடன். அப் புறம் என்ன? அங்கு வர்ற ஜனனை இந்த விலாசத்திற்கு வரும்படி சேகருக்குக் கடிதம் எழுதி வசந்தா மன்னியிடம் கொடுத்து விட்டு இங்கு வந்திட்டன். அநேகமாக ஜனன் இந்த நேரம் வரலாம். இனி அவர் பாடு, உன் பாடு, மாமி விடியத்தான் வருவாள். அதுவரை பேசவேண் டியதையெல்லாம் பாக்கி வைக்காமல் பேசிடு சரியா?" மூச்சு விடா மல் பேசியவளை ஆச்சரியமும் திகிலுமாக நோக்கினாள் வித்யா.

"உனக்கு இவ்வளவு துணிச்சலாடி. எனக்கென்னவோ காலை தொட்டு மனம் சரியாயில்லை. ஏதோ விபரீதம் நடக்கப் போறதாய்த் தோணுதடி, பயம் பயமாயிருக்கடி உமா."

"சோர்வும் பயமுமெல்லாம் அன்பில் அழியுமடி, அன்புக்கழி வில்லை காண்! என்று பாரதியாரே சொன்னபின் அச்சமில்லை அச்ச மில்லை உச்சி மீது வானிடிந்து விழுகின்ற போதிலும் அச்சமென்ப தில்லையே" ராகம் பாடியவாறே உமா ஏதோ புத்தகத்தை எடுத்துக் கொண்டு அறைக்குள் படிக்கச் சென்றுவிட்டாள். அங்கிருந்த அலங் காரமாக அமைக்கப்பட்டிருந்த அந்த மீன் தொட்டியருகில் சென்று அமர்ந்தாள் வித்யா. அவள் உள்ளமும் உடலும் விளக்க முடியாத உணர்வில் சிக்கித் துடித்துக் கொண்டிருந்தது. இன்பமும் துன்பமும் கலந்து கனவுகளில் ஆழ்ந்து விட்டாள் வித்யா. அகன்ற தொட்டியில் வண்ணக் கலவைகளாகச் சின்னஞ்சிறு மீன்கள் துள்ளி விளையாடிக் கொண்டிருந்த அந்தக் காட்சியில் லயித்துப் போய் விட்டாள் வித்யா.

கூடிப் பிரியாமலே ஓரிராவெல்லாம்
கொஞ்சிக் குலாவியங்கே.... – பாரதி

திடீரென்று தன் கண்களை, இரு வலுவான கரங்கள் அழுத்தி மூடுவதை உணர்ந்தாள் வித்யா. அந்த ஸ்பரிசத்திற்கு உரியவனை யாரென்று ஒரு பெண்ணின் துல்லிய உணர்வுகளாலா புரிந்து கொள்ள முடியாது? அவன் விரல்கள் மேல் அவளது விரல்கள் நகர்ந்து நர்த் தனமாடின சில கணங்கள். அவளுடைய கரங்களை அப்படியே தாழ்த்தி அவள் கழுத்தைச் சுற்றி வளைத்தான் ஜனன். அவன் விரல் களிற்கிடையில் தனது விரல்களைப் பிணைத்தவாறே, தலையை நிமிர்த்தி ஜனனை ஆசையுடன் ஏறிட்டு நோக்கினாள் வித்யா.

"ஏன் வித்யா அப்படிப் பார்க்கிறாய்? என்ன தண்ணீருக்குள் ளேயே அப்படிப் பார்த்துக் கொண்டிருக்கிறாய்?"

"ம்... நீங்கள் இப்படிக் கேட்க என்ன ஞாபகம் வருகிறது தெரி யுமா பாரதியாரின் பாடல் ஒன்றுதான். நான் தண்ணிருக்குள்ளேயே பார்த்துக் கொண்டிருந்தாலும், உங்களை உங்களின் கைகளின் பிம் பங்களை ஏற்கனவே தண்ணீருக்குள் பார்த்து விட்டேன். ஆனால் அதற்குள்ளே உங்கள் கைகளிற்குத்தான் அதிக அவசரம் என் கண்

களைப் பொத்திவிட அதிருக்கட்டும்! இப்படித்தான் அந்தப்பாரதியின் கவிதையில் காதலன் கடலையும், விசும்பையும் பார்த்துக் கொண்டிருக்கையில் காதலி வந்து அவன் கண்களைப் பொத்திவிட்டு, கடலிலும் வானத்திலும் என்ன கண்டிட்டாய்?" என்று கேட்கிறாள். அதற்கு அவன்,

நெரித்த திரைத்த கடலில் நின் முகம் கண்டேன்,
நீல விசும்பிடை நின் முகம் கண்டேன்,
சின்னக் குமிழிகளில் நின் முகம் கண்டேன்,
பிரித்துப் பிரித்து நிதம் மேகம் அளந்தே
பெற்றதுன் முகமன்றிப் பிறிதொன்றுமில்லை!
சிரித்த ஒலியிலிலுன் கை விலக்கியே
திருமித் தழுவியதில் நின் முகங் கண்டேன்.

என்கிற பாடல்தான் நினைவு வந்தது ஜனன். ஆனால் இங்கோ ஒரு பெண்ணின் கண்ணை ஆணின்....

"ஆண் பெண் வேறுபாடுகளெல்லாம் உணர்வில் ஒரு எல்லையை எட்டும் வரைதான். உணர்வுகளின் நிறைவினிலே சங்கமமாகி விட்ட பிறகு அங்கு ஆண் என்றும் பெண் என்றும் பேதமில்லையே. கருத்தொருமித்துக் கட்டுண்ட காதலர்கள் என்பதைத் தவிர தனிப்பட்ட முறையில் காதலன் காதலி என்ற பிரிவுதானும் வேண்டாம் வித்யா" அன்புடன் அவளை மேலும் மேலும் அணைக்கலாம் போலிருந்தது அவனுக்கு. உமாவின் காலடி ஓசையால் திடுக்கிட்டு விலகினாள் வித்யா.

"ம்... ஆடி அடுத்த கிழமை பிறந்தால் அப்புறம் ஒண்ணும் ஆக முடியாதே என்று இப்பவே அவசரமா?"

சிரித்தவாறே காப்பித் தம்ளரை ஜனனிடம் நீட்டினாள் உமா. காப்பியை ஒரே முடக்கில் விழுங்கிய ஜனனும்,

"ம் அப்படித்தான் வைத்துக் கொள்ளேன்" என்றான் விளையாட்டாக.

"ஊருக்கு போய் வந்து கல்யாணம் வைப்பதென்றால் அடுத்த புதன் கிழமைதான் நல்லநாள். அதற்கு முதலோ பிறகோ நாளில்லை. அப்புறம் ஆடி பிறந்துவிட்டால், சம்சாரியானாலும், பிரம்மச்சாரியம்

தான், லண்டனால் திரும்பும் வரை. சீரியஸாகத்தான் சொல்கிறேன். அம்மாவிடம் இப்பவே கேட்டால் தான் நேரம் சரியாயிருக்கும்" பாதி கேலியாகவும், பாதி உண்மையாகவும் சொன்னாள் உமா.

"ம்.... அதெல்லாம் ஏற்கனவே கேட்டிட்டன் உமா. பாபுவிற்கு ஆக வேண்டியதைப் பண்ணிட்டு சேகர் வீட்டிற்குச் சென்றபோது உன் கடிதத்திலிருந்த செய்தி கிடைத்தது. சேகருடன் பேசிக் கொண்டு பேச்சுவாக்கில் உங்கள் வீட்டுக்கு எதிரே நின்றிட்டோம். உள்ளே போவம் என்று வெளிக்கிடும் போதுதான், கிருஷ்ணனாமே, அவன் உங்க வீட்டிலிருந்து வெளியே வர்றதைச் சேகர் சுட்டிக் காட்டினான். எடுத்த எடுப்பிலேயே விஷயத்திற்கு வந்திட்டா அத்தை. அவன் தான், அந்தக் கிருஷ்ணனை உனக்கு முடிவு பண்ணிட்டாளாம் வித்யா. என்னை உமாவைப் பண்ணிக்கச் சொல்லி கேட்டா. நான் தெளிவா என் முடிவைச் சொன்னதுதான் தாமதம், நீ என்னை மயக்கிட்டியாம், உன் அம்மா, தன் புருஷனை மயக்கின மாதிரி அம்மாவின் குலப் பெருமை உன்னையும் தொத்திட்டுதாம். என் அம்மா ஆசாரம் பார்க்கும் குடும்பமாதலால் இந்தக் கல்யாணம் நடக்காதாம் என்று நாக் கூசாமல் பேசவே, அடுத்த கிழமை அம்மாவுடன் வந்து கோயிலில் தாலி கட்டப்போவதாய்ச் சொல்லிட்டு வந்திட்டன். நீ போனால் உன்னை உண்டு இல்லை என்று ஆக்கி விடுவாளே" பெருமூச்சு விட்டான் ஜனன்.

"அதனாலென்ன, இதைப் பற்றி இப்போ பேசி என்ன பயன்? அம்மாவின் சம்மதம் கிடைக்காவிட்டாலும் பாதகமில்லை. உங்க அம்மா கூட வந்து கோயிலில் தாலியைக் கட்டிட்டு அக்காவை உடன் கூட்டிட்டுப் போய் விட்டால் பிரச்சனை முடிந்து விடும் சுபமாய். சரி எனக்கு அலுப்பாயிருக்கிறது. வித்யா அக்கா நான் உள்ளே படுத்துக் கப் போறன். நீங்கள் பேசிக் கொண்டிருங்கள்" என்றவாறே உள்ளே நழுவினாள் உமா.

மீண்டும் தனிமையில் விடப்பட்ட அவர்களிற்கு ஒரு கணம் என்ன பேசுவது என்று தெரியவில்லை. வித்யா எழுந்து கொல்லைப் புறத் தோட்டத்துப் பக்கம் வரவே ஜனனும் அவளைத் தொடர்ந்தான். வீட்டை ஒட்டினாற் போல், முல்லையையும் மல்லிகையையும் இணைத்து வளைவாகக் குடிசை போல் பந்தரொன்று அமைக்கப்பட்

டிருந்ததை வித்யா முன்பே பல தடவை உமாவுடன் அங்கு வந்தி ருந்த போது கவனித்திருக்கிறாள். கோடை காலத்தில் தங்குவதற்கா கத் திண்ணையாக அமைக்கப்பட்டிருந்த அந்தப் பந்தலை ஒட்டி னாற்போல, ஒரு மூலையில் குழலூதும் கண்ணன் சிலையும், மறுபக் கத்தில் துளசி மாடமும், முருகன் வள்ளி தெய்வானையுடன் மயில் மீதமர்ந்திருக்கும் சிலையுமாக அமைக்கப்பட்டிருந்த இடம் அவளிற்கு எப்பவுமே பிடித்த இடம். அதன் முன் சந்தனக் கும்பாவும், அகல் விளக்கும் இருந்தன. அதனுள்ளே சென்ற வித்யாவைத் தொடர்ந்தான் ஜனன்.

"ஏன் வித்யா நிற்கிறாய்? உட்காரேன். அடடே என்ன இது? திடீ ரென்று அழுகிறாய். என்ன வித்யா இது? என்ன நடந்தது இப்போ?" என்று ஆச்சரியத்துடன் கேட்டவாறே அவளமர்ந்த இடத்திற்கருகில் வந்தமர்ந்து, விசும்பிக் கொண்டிருந்த வித்யாவை மெல்லத் தேற்றப் பார்த்தான் ஜனன்.

"எனக்கென்னவோ பயமாயிருக்கிறது ஜனன். உங்கள் அம்மா இந்தக் கல்யாணத்திற்குச் சம்மதிப்பாங்களா? சம்மதிக்காவிட்டால், ஏதோ என்னை அறியாமலேயே எனக்குப் பயமாயிருக்கிறது" என்ற வாறே விம்மினாள் வித்யா.

"இதென்ன பயித்தியக்காரப் பேச்சு, அம்மா ஆசாரம் பார்ப்ப வள் தான். ஆனால் பக்குவமாய் எடுத்துச் சொன்னால் என் விருப்பத் திற்கு எதிராக மறுக்கமாட்டார்கள்" என்று எவ்வளவோ சமாதானம் கூறிப் பார்த்தான் ஜனன். ஆனால் வித்யாக்கோ, அவள் மனமே அவ ளிற்குப் புதிராக இருந்தது. ஏன் இந்த மனம் இப்படிப் படபடக்கிறது? என்று பொருமியவாறே உற்சாகமிழந்திருந்த அவளை எவ்வாறு சமா தானப் படுத்துவதென்றே ஜனனுக்குப் புரியவில்லை. காரணந் தெரிந் தாலாவது அவளை உற்சாகப்படுத்த முடியும். காரணமே தெரியாத இந்தப் படபடப்பினை மாற்ற அவனால் என்ன செய்ய முடியும்? இறுதியில் ஏதோ நினைவு வந்தவனாக,

"வித்யா வர்றபோது கோயிலுக்குப் போயிட்டு வந்தனான். பேச்சு சுவாரஸ்யத்தில் இதைத் தர மறந்திட்டன்" என்று? பாக்கட்டிலிருந்த பிரசாதப் பொட்டலத்தை எடுத்து நீட்டினான். என்றாவதொரு நாள் அவர் கையாலேயே குங்குமம் இட்டுப் பூச்சூட்டுவாரோ என்ற எண

ணத்துடன் கையை நீட்டியவளிற்குத் திடீரென்று ஏதோ தோன்றவே நீட்டிய கையைப் பின்னிற்கிழுத்தாள் வித்யா. அவரே இந்தப் பூவையும் பொட்டையும் இன்றே தன் கையாலேயே வைக்கட்டுமே என்ற எண்ணம் தோன்றியதால் தான். ஆனால் அவள் நீட்டிய கையைப் பின்னுக்கிழுத்து விடவே, அவள் கைகளில் வைக்கப் பட்ப்போன பிரசாதம் எதிர்பாராமல் கீழே விழுந்து விடவே, ஒரு கணம் இருவருமே திடுக்கிட்டு விட்டனர்.

'ஜனன்' என்று மீண்டும் விம்மத் தொடங்கி விட்டாள் வித்யா.

"பார்த்தீங்களா ஜனன். இன்று காலை தொட்டே நீங்கள் எனக்குரியவராகாமலே போய் விடுவீர்களென்று என்னையறியாமலேயே அச்சமாயிருக்கிறது. உங்க மனைவி என்கிற ஸ்தானம் எனக்குக் கிடைக்காமலேயே போய்விடுமோ? உங்க கையால் முதல் தடவையாஃப் பூவும் பொட்டும் சேர்த்துத் தர அதுவும் இப்படி ஆகிவிட்டதே"

ஜனனுக்கும் முதலில் இது ஏதோ உள்ளத்தை நெருடுவது போல் தானிருந்தது. இதென்ன அபசகுனம் போல் என்ற நினைவு அவனையறியாமலேயே அவனுள்ளத்தில் உறுத்தியது. பிறகு கீழே மெதுவாக குனிந்து விழுந்திருந்த பிரசாதப் பொட்டலத்தை எடுத்தான். நல்ல வேளையாகக் குங்குமம் மல்லிகைச் சரத்தின் மேலேயே கொட்டிண்டிருந்தது. திடீரென்று ஏதோ நினைத்தவனாக அதை எடுத்துக் கொண்டு, முருகன் சிலையிருந்த இடத்தை நோக்கி வித்யாவின் கைகளைப் பற்றி இழுத்துக் கொண்டு நடந்தான் ஜனன்.

"ஊரறிய உற்றாரறியக் கெட்டிமேளம் கொட்டித் தாலி கட்டினால் மட்டுமே தம்பதிகளாகி விட முடியாது. இதோ இந்த முருகனே நம் திருமணத்திற்குச் சாட்சியாக இருக்கட்டும். நித்திய சுமங்கலியாக, நிறைஞ்ச மனசோட என்றுமே நீ இருக்க வேண்டும் வித்யா. நிச்சயம் இருப்பாய் வித்யா" உணர்ச்சி பொங்கித் தேங்கிய குரலில் கூறியவாறே அவள் முகவாயை உயர்த்தி நெற்றியிலும் உச்சி வகிட்டிலும் குங்குமத்தை இட்டான் ஜனன்.

பின் அவள் பின்னால் வந்து, கையிலிருந்த மல்லிகைச் சரத்தைப் பின்னலில் செருகினான். அவள் கரத்தைக் கெட்டியாகத் தன்னுடையதில் பிணைத்துக் கொண்டு அங்கிருந்த துளசிச் செடியை மும்முறை வலம் வந்தான் ஜனன். பின் முருகன் சிலைக்கு முன்னால் எரிந்து



கொண்டிருந்த விளக்கின் முன் வந்து நின்ற அவன் கண்களில் நீர் கொஞ்சம் கொஞ்சகமா நிறைந்து கொண்டிருந்தது. வளையலணிந் திருந்த வித்யாவின் வலது கரம் விளக்குத் திரியைத் தூண்டிச் சுடர் விடச் செய்வதையும், விளக்கினருகிலிருந்த கிண்ணத்திலிருந்த சந்த னத்தை எடுத்து அவள் தன் நெற்றியில் திலகமிடுவதையும் ஜனனால் உணர முடிந்தது. இருவரும் நெஞ்சம் நிறைய, நினைவுகள் மறையத் தம்மை மறந்து அங்கேயே நின்று கொண்டிருந்தனர். அந்த நிலையில் இருந்த அவர்களைத் திடீரென்று சடசடவென்று கொட்டிய மழைச் சாரல் தான் இந்த உலகத்திற்கு இழுத்து வந்தது. ஜனன்தான் முதலில் உணர்வு பெற்றனவாக அவளையும் இழுத்துக் கொண்டு பந்தலை நோக்கி ஓடினான்.

அவனைத் தொடர்ந்த வித்யாவோ, 'ஜனன் இனி எனக்கு அந்நிய னில்லை. மிகமிக நெருங்கி விட்டார், நெருங்கியது மட்டுமல்ல, என் னுள்ளேயே கலந்து நிறைந்து விட்டார். அவரினுள்ளே நீக்கமறச் சங் கமித்து விட்டேன் நான்' என்று நினைத்தவறே நிறைந்த மனமும் முக முமாக, பூரித்த சிரிப்புடன் அவன் காலடியில் பூவாய் வீழ்ந்தாள். வீழ்ந்த அவளை வாரி எடுத்துக் கொண்டான் ஜனன். ஒருவரை யொருவரை நோக்கிக் கொண்டிருந்த அவர்கள் கண்களில் புதிய தோர் சாந்தி, புதியதோர் இன்பம், புத்தம் புதியதோர் உணர்ச்சி துளிர் விட்டுச் சிரித்தது. எல்லாமே புதுமையாக இருந்தது இருவருக்கும்.

"வித்யா" ஆசையுடன் எழுந்த அவள் குரலிற்கு 'ம்,' என்ற வாறே கடைக் கண்ணால் முறுவலித்து விட்டுத் தலையைத் தாழ்த்திக் கொண்டாள் வித்யா. வேறு என்னதான் அவளால் சொல்ல முடியும்? கொஞ்சம் கழித்து,

"ஜனன் எனக்கு வேண்டியது கிடைத்து விட்டது. இனி எனக்கு வேறென்ன வேண்டும் இப்போ? பயமும் படபடப்பும் போன இடம் தெரியவில்லையே" என்று மெல்லக் கள்ளமில்லாமல் சிரித்தாள் வித்யா.

"ம்... உனக்கு வேண்டியதை மருட்டி எடுத்துக்கொண்டுவிட்டாய் ஆனால் எனக்குத் தரவேண்டியதை மட்டும் தராமல் ஏமாற்றப் பார்க் கிறாயா? இன்னும் அதிகமாக என்னிடமிருந்து எடுத்துக் கொள்ள

லாம் என்ற நினைப்பு மட்டுமில்லாதிருந்தால் சரி" குறும்புடன் சிரித்தான் ஜனன்.

"என்ன வேண்டுமென்று சொல்லாமல் நான் எப்படி அதைத் தர முடியும். எனக்கு வேண்டியதெல்லாம் உங்கள் முழுமையான அன்பு தான். அதைத் தந்தப் பிறகு இனியும் எனக்கு என்ன இருக்கிறது உங்களிடம் கேட்க" எனச் சீரியசாகப் பதிலளித்தாள் வித்யா.

"சரி, சரி உனது கனவு நனவாகிவிட்டது. எனது கனவுகள் நனவாக வேண்டுமென்றால் நீ கேட்ட முழுமையான அன்பு உனக்கு என்றோ உரிய சொத்துத்தானே. இன்னும் உனக்குரியது ஒன்று உனக்கு வேண்டாமா வித்யா?" அவளை அர்த்தபுஷ்டியாகப் பார்த்த ஜனனைப் பார்க்கச் சங்கடப்பட்ட வித்யா, அவனிடமிருந்த எட்டி விலகினாள்.

வானத்தில் பொங்கி வழிந்து கொண்டிருந்த நிலவினையே பார்த்துக் கொண்டு, முல்லைக் கொடியோடு, கொடியாகச் சாய்த்து நின்று கொண்டிருந்த, வித்யாவின் பின்னழகு அவனை என்னவோ செய்தது. தலை நிறையப் பூவைச் சுமந்து கொண்டிருந்த அவள் பின்னல் தழையத் தழையத் தொங்கிக் கொண்டிருந்தது. மெல்லிய தென்றலில் சிலும்பிக் கொண்டிருந்த சிறு கேசங்கள் அவள் நெற்றியில் படபடத்துக் கொண்டிருந்தன. எடுப்பான இடையைச் சுற்றி, மழைத் தூறலில் நனைந்திருந்ததால் சற்றே ஈரமுடன் தழுவிக் கொண்டிருந்த அந்தச் சேலை அவளழகை மறைக்கவில்லை. இன்னும் அதிகமாக அவள் பின்னழகை எடுத்துக் காட்டிக் கொண்டிருந்தது.

மெதுவாக எழுந்த ஜனனின் கைகள் அவள் சந்தன இடையை ஆவலுடன் தழுவிய அந்த நெருக்கத்திலேயே.... நிலவும் மல்லிகை மலர்களும் கலந்து குலாவி ஒளியே மல்லிகையாய் மணத்த அந்த முன்னிரவில் அவர்கள் வெகுநேரம் தம்மை மறந்திருந்தனர்.

**ஒய்வு மொழிதலுமில்லாமல், அவன்**
**உறவை நினைத்திருக்கும் உள்ளம்.** – பாரதி

பல் துலக்கி விட்டுக் காபி தயாரிப்பதில் முனைந்திருந்தாள் கல்யாணியின் தாயார் பார்வதி. விடிய முன்னே வந்திட்டாளானாலும், உமாவைத் தட்டி ஏன் எழுப்புவான் என்று எண்ணியவளாய்ப் பக்கத்து வீட்டுக்காரர் வீட்டிலேயே படுத்துவிட்டுக் காலைதான் பின்புற

மாய் வந்து சமையற்கட்டில் காபி போட்டுக் கொண்டிருந்தாள் இந்தப் பெண்கள் இன்னமும் எழும்பக் காணமே என்று எண்ணியவாறு,

"உமா, உமா" என்று குரல் கொடுத்தாள். முதல் நாள் ஜனன் வந்த போது, தான் உமாவின் உறவுக்காரனென்றும் ஏதோ அந்தப் பக்கம் வந்ததால், உமாவிடம் ஏதோ மறந்திருந்த செய்தி சொல்லிவிடும்படி, சிவகாமி அனுப்பியதால் தான் வந்ததாகக் கூறியதால் கல்யாணியின் தயார் ஏதும் சந்தேகிக்கவில்லைதான். ஆனால் கோயில் விழா முடிந்து திரும்பும்போது சுந்தரை ஏதேச்சையாகக் கண்டவள்.

"ஜனன் தம்பி, உன் அக்காவிடம் வந்து செய்தி கொடுத்திட்டுப் போனார்" என்று அம்மாவிடம் சொல்லிவிடும்படி வஞ்சுகமின்றிச் சொன்னதில் விளைவையும் கூட அவள் எதிர்பார்க்கவில்லை தான். காப்பியைப் போட்டு வைத்துவிட்டு ஒரு குட்டித் தூக்கம் போட உள்ளே சென்றுவிட்டாள் பார்வதி.

படுக்கையில் துயில் கலைந்து எழுந்த உமா, தன் கண்முன் யன்னலைப் பிடித்தவாறே நின்றுகொண்டிருந்த வித்யாவைக் கண்டு விட்டு, எழுந்து அருகில் வந்து கூப்பிட்டாள். இரண்டு தடவை கூப்பிட்ட பின்பே திரும்பிய வித்யாவின் முகத்தைக் கண்டதும் உமாக்கு ஏனோ விசித்திரமாயிருந்தது.

"ராத்திரி புத்தகம் படித்துக் கொண்டே தூங்கிட்டன். இப்பத்தான் எழும்புறன், ஜனனைக் காணமே. போயிட்டாரா? என்ன சொன்னார்? என்ன பேசினீர்கள்" அடுக்கடுக்காகக் கேள்விகளைத் தொடர்ந்தாள் உமா.

"நாங்கள் அப்படி ஒன்றும் அதிகநேரம் பேசவில்லையாக்கும்"

"பேசாமல் என்ன மௌனவிரதமா பிடித்தீர்கள்" பேசாமல் உமாவையே நோக்கினாள் வித்யா.

"எங்கள் நிலை பேச்சைக் கடந்த நிலையாகி விட்டது. ஆமாம் உமா. உமா.... அது இருக்கட்டும். அப்புறம் பேசுவமே. பார்வதி மாமி வந்திட்டாளா?" சங்கடத்துடன் தடுமாறினாள் வித்யா.

பார்வதி மாமியை விட்டுத் தள்ளு. ஜனன் போய் விட்டாரா? என்ன? என்ன?" ஆர்வத்துடன் குறுக்கிட்டாள் உமா.

"ஆமாம் உமா. விடியமுன்னே, உன்னிடமும் சொல்லச் சொல லிட்டுப் போயிட்டார். சிறீதரன் வீட்டிற்கு முதல் பஸ்ஸில் போனால், பெட்டி படுக்கையை எடுத்துட்டு அப்படியே திரும்பி ஊருக்குப் போயிட்டு, இரண்டு நாளில் வருவார் அவர் அம்மாவுடன், அதாவது ஊரறிய ஒரு வாரத்தில் அவர் மனைவியாகிடுவேன் நான். ஆனால்... அதற்கு... முன்னே.... சித்தி என்ன சொல்வாளோ" தடுமாறினாள் வித்யா. வித்யாவின் தயக்கம்.... அதை அப்போதைக்கு உமா பெரிசாக எடுத் துக் கொள்ளவில்லை. அவளிற்கு மகிழ்ச்சி ஒருபுறம், கவலை மறு புறம். இறுதியில் தன்னைத் திருப்திப்படுத்திக் கொண்டவளாக,

"அம்மா, என்னமோ சொல்லட்டுமே... ம்... ஏதோ, எப்படியோ, எங்கோ நீ நிறைஞ்ச வாழ்வு வாழ்ந்தால் சரிதான். அவ்வளவுதான் எனக்கு வேண்டியது. ஆனால் நீ வெகுவிரைவில் என்னை விட்டுப் போயிடப் போகிறாயென்று நினைக்......" என்றவள் கல்யாணியின் தாயின் குரலுடன் சேர்ந்து கல்யாணியின் குரலும் கேட்கவே எழுந்து வெளியே வந்தார்கள் என்று மத்தியானம் வரை மூவரும் முல்லைப் பந்தரின் கீழேயே அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

முதலில் அதனுள் நுழைந்த வித்யாவின் முகம் மந்தகாசமாய் விகசித்தது. உமாவோ மல்லிகையின் ரம்மியமான மணத்தையும், வித்யாவின் முகத்தையும் சேர்த்து ரசித்தாள். சாதாரணமாகவே இரண்டு மூன்று பெண்கள் சேர்ந்துவிட்டால் மௌனம் நீடிக்காது. புதுமண நாளை எதிர்நோக்கி அந்தத் துடிப்பினில் திளைத்துக் கொண்டிருக்கும் பெண்ணொருத்தியும், அவள் துடிப்பைப் புரிந்துகொண்டு, மேலும் அவளைச் சீண்டுவதிலேயே இன்பம் காண விழைந்த இன்னொரு பெண்ணும், அப்போதுதான் புதுமணமாகித் தாய் வீடு திரும்பியிருந்த கல்யாணியும் சேர்ந்திருந்தால் ஒரு கணத்திற்காவது மௌனம் நீடிக் குமா? உமாவும் வித்யாவும் கல்யாணியும் அதற்கு விதிவிலக்கில் லையே. மத்தியானம் வரை பேச்சிலேயே பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தார்கள். இருள் கவியமுன்னே மாலை பஸ்சையாவது பிடிப்பம் என்ற நினைப்பு வந்தபின்தான் கல்யாணி எவ்வளவு தடுத் தும் கேளாமல் புறப்படத் தயாரானார்கள். அன்று அவர்கள் நேரத்திற் குப் புறப்படக் கூடாது என்ற விதி விளையாட நினைத்திருந்தால் அதை மற்ற யாரால் முடியும்?

## 6

எண்ணற்ற நல்லோர் இதயம் புழுங்கியிரு
கண்ணற்ற சேய்போற் கலங்குவதும்
காண்கிலையோ? – பாரதி

ஓடும் வண்டியில், யன்னலோரத்தில் அமர்ந்திருந்தாள் வித்யா. யன்னலில் தலையைச் சாய்த்தவாறு அமர்ந்திருந்த வித்யாவின் கண்களில் நீர் வழிந்தோடிக் கொண்டிருந்தது. அவளெதிரே யன்னலூடே வெளியே பார்த்தவாறு அமர்ந்திருந்தான் சேகர். நெஞ்சை மீறிக் கொண்டு எழுந்த வித்யாவின் விம்மல் ஒலியில் அவன் நினைவு கலைந்தது. உலைவாயைத் திறந்தாற்போல் பெருமுச்சு விட்டான் சேகர். எதிரே அமர்ந்திருந்த வித்யாவின் விம்மல் மெதுவாகக் குறைந்திருந்தாலும், அவள் பழைய நினைவுகளில் ஆழ்ந்து கிடக்கிறாள் என்பதை அவள் வெறித்த பார்வை காட்டியது.

அன்று கல்யாணி வீட்டிலிருந்து திரும்பி, வீட்டு வாசலை அடைந்த உமாவும், வித்யாவும், சிவகாமி அம்மாளின் பத்திரக்காளித் தோற்றத்தைக் கண்டதுமே திகைத்து விட்டனர். ஏற்கனவே குறுகுறுப்புடன் உள்ளே முதலில் நுழைந்துவிட்டாள் உமா. பேசாமல் அவளை தொடர்ந்து படியேறப்போன வித்யாவின் கன்னத்தில் பளாரென்று அறைந்தாள் சிவகாமி அம்மாள்.

“எங்கேடி வைக்கக் கால் எடுக்கிறாய்? வெட்கங்கெட்ட நாயே, தாயின் குணம் இரத்தத்தில் ஊறாமல் போய் விடுமோ? வெளியே நடவடி உடனே” என்று வெடித்தாள் ஊரே கூடுமளவிற்கு. அவள் போட்ட கூச்சலில் காமாட்சி வீடு, அக்கம் பக்கத்து வீடுகள் எல்லாமே திரண்டு விட்டது. ஒவ்வொரு வீட்டு யன்னல்களிலும், கதவிடுக்குகளிலும் தலைகள் எட்டிப் பார்த்தன. வெளியே நின்று ஊரார்முன் திட்டை வாங்காமல் உள்ளே சென்று வாங்குவோமே என்று எண்ணியவாறு மௌனமாக உள்ளே செல்ல முயன்ற வித்யாவை நெட்டித் தள்ளினாள் சிவகாமி. அதற்கு மேலும் பொறுக்க இயலாத காமாட்சிதான் ஓடி வந்து,

"ஏன், சிவகாமி வெளியே நின்று கூச்சல் போடுகிறாய் அனாவசியமாய்? உள்ளே போய்ப் பார்த்துக்கோயேன். வயது வந்த பெண்ணை நடுத்தெருவில் வைத்தா..." என்று ஏதோ சமாதானம் கூற முன்வந்தாள்.

"வக்காலத்து வாங்க வந்திட்டியா, வேலையில்லாத வெட்டிப் பயலுக்கு என் வீட்டில் சம்பந்தம் பேசத் துணிவில்லாமல், அவனை இரகசியமாய் என் வீட்டிற்கு அனுப்பி மருட்டிப் பார்த்தது போதாதென்று, நடுத்தெருவில் வைத்துப் பேசுவதற்காக உனக்குக் கொதிக்குது. நடுத்தெருவில் நின்றிருக்க வேண்டியவள்தானே. துப்புக்கெட்ட மானங்கெட்ட ஜென்மம். என்ன துணிச்சலடி உனக்கு, அந்த ஜனன் பயலோடு கூடிக் குலாவிறதற்கு. இதற்குத்தானே கல்யாணி வீட்டுக்குப் போறன் என்னுட்டு இரவிரவாக அவன் கூடத் திருவிழா நடத்திட்டு வாறயா?" என்று கூச்சலிட்டதும் காமாட்சி கொதித்து விட்டாள்.

"சனிதான் உன் நாக்கில் தாண்டவமாடுகிறது. சிவகாமி, வித்யாவைப் பற்றி அப்பட்டமாகச் சொன்னியோ, சொன்ன வாய்க்கு ஒரு சொட்டுத் தண்ணிகூட மிஞ்சாது" என்று தொடங்கியவளை விட்டால் தானே சிவகாமி.

"சித்தி" என்று மிரட்சியுடன் ஏதோ தொடங்கினாள் வித்யா. பளாரென்று ஒரு அறை மறுபடி அவள் கன்னத்தைப் பதம் பார்த்தது.

"சித்தி என்னடி சித்தி. மானங்கெட்ட உனக்குச் சித்தி என்னடி உறவு? சித்தியாம் சித்தி, கல்யாணியின் தாய் தெருவில் சுந்தரைக் கண்டு சொல்லியிருக்காவிட்டால் உன் அமர்த்தல் நாடகம் வெளி வந்திருக்குமா? அந்தக் கிழவிக்குத் தான் மதியில்லை. அந்த ஜனன் சொன்னதை அப்படியே நம்பிட்டாள். அதனாலே எனக்கும் புத்தி பிசகிட்டதென்று நினைக்கிறாயா? அவன் கூட கூடிக்குலாவிட்டு வாற வளிற்கு வக்காலத்திற்கு வாறியே காமாட்சி. எங்கே அவள் சொல்லட்டும் பார்க்கலாம் நான் சொன்னது தப்பென்று" என்று கத்தியவளை மௌனமாக வித்யா ஒரு கணம் ஏறிட்டுப் பார்த்தவள், பிறகு தலையைக் குனிந்து கொண்டாள். ஜனனுக்கும் தனக்குமேற்பட்ட உறவை இந்தளவு கீழ்த்தரமாகப் பார்க்கும் சித்திக்கு என்ன பதில் சொன்னாலும், தப்புத் தன்மேல் தான் வரும் என்ற எண்ணம் தான் மேலிட்டது அவளிற்கு. திடீரென்று உமாதான் மெல்லக் குறுக்கிட்டு வாதாடினாள். "பரவாயில்லை அம்மா. முடிந்தது முடிந்துவிட்டது. இனிக் கத்தி



என்ன பயன். பேசாமல் உள்ளே விடேன். எனக்கும் சேகருக்கும் காதலென்றால் ஒரு நியாயம், அக்காக்கும் ஜனன் அத்தானுக்கும் காதலென்றால் இன்னொரு நியாயமா?" என்றவளை உள்ளே தள்ளிக் கதவைச் சாத்தப் பார்த்தாள் சிவகாமி.

"இன்னும் ஏனடி என் கண் முன்னே நின்று தொலைக்கிறாய்? ஏங்கேயாவது போய்த் தொலையேண்டி" என்று வித்யாவைத் தள்ளி விழுத்தியது தான் தாமதம், விருட்டென்று எழும்பிய வித்யா, விடுவிடு என்று வந்த வழியிலேயே திரும்பி நடந்தாள். காமாட்சியும், வசந்தாவும் அதிர்ச்சியில் வாயடைத்து நிற்க, அவர்களுடன் பாய்ந்தாள் சிவகாமி. வித்யா என்ன, ஆற்றங்கரைக்குப் போயிருந்து விட்டு மறுபடி வருவாள் தானே என்ற நினைப்புடன், வெளியே நிற்க நிற்கப் பொல்லாப்புக் கூடுமே யொழியக் குறையாதென்ற நினைப்புடன் காமாட்சியை உள்ளே அழைத்துப் போனாள் வசந்தா.

தூரத்தே சாலை முடிவில் வித்யாவின் நிழல் விரைவது தெரிந்தது. அவளது செவியில், பூட்டிய கதவிடுக்கூடே கேட்ட "வித்யாக்கா வித்யாக்கா" என்ற அழுகையும் கதறலுமாக ஒலித்த உமாவின் குரல் மெல்ல மெல்லத் தேய்ந்து கொண்டிருந்தது.

நல்ல வேளையாக அவள் சேகரை வழியில் சந்தித்தாள். சந்தித்திருக்காவிடில்? எங்கே நடக்கிறோம் என்ற யோசனையில்லாமல் நடந்த அவள் கால்கள் அவளையறியாமலே ஆற்றங்கரையோரமாக நடந்தன. ஆற்றையே வெறிக்கப் பார்த்துக் கொண்டு எவ்வளவு மணி நேரம்தான் அமர்ந்திருந்தாளோ அவளிற்கே தெரியாது. சேகர் வந்து உலுப்பியபோது தான் அவள் திடுக்கிட்டாள். அவன் அவளை அழைத்துக் கொண்டு ஸ்டேசனிற்கு வந்தபோது மெயில் புறப்பட்டு அரை மணியாகிவிடவே அவனிற்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. அவளை அங்கே இருத்திவிட்டுப் போனவன், ஏதோ பையுடன் அரை மணி நேரம் கழித்து வந்தான். வித்யாவின் விதியை நினனத்து அழுவதா, சிரிப்பதா என்றே அவனுக்குப் புரியவில்லை. இருக்காதா பின்னே, விதிக்கும் வித்யாவுடன் விளையாடுவதில் தான் எத்தனை அவசரம்?

ஏதோ அலுவலாக டவுன் பக்கம் போன சேகர் அப்போதுதான் அடுத்த ஸ்டாண்டில் வந்து இறங்கிக் கொண்டிருந்த ஜனனையும் சிறீதரனையும் கண்டு விட்டு ஆவலுடன் அவர்களை நெருங்கினான்.

"சேகர்" என்றவாறே அவன் கைகளைப் பற்றிக் கொண்ட ஜன னின் குரல் ஏதோ போலிருந்தது.

"சேகர், இப்போதுதான் எனக்குச் செய்தி தெரிந்தது. காலை கல் யாணி வீட்டிலிருந்து சிறீதரன் வீட்டிற்கு போனப் புறம் தான் தெரி யும். டாக்டர் வேதகிரி தந்தியடித்திருக்கிறார். என் போதாத காலம் போன கிழமையே காலேஜ் திடீரென்று திறக்கப்பட்டுவிட்டதை ஒட்டி ஏற்கனவே கடிதம் போட்டிருக்கிறார்கள். அதற்கு என்னிடமிருந்து பதில் இல்லாததால் மீண்டும் இரண்டாம் தடவையாய்க் கேபிள் அடித் திருக்கிறார்கள். இன்னும் மூன்று நாளில் அங்கு ரெஜிஸ்ரர் பண்ண வில்லை என்றால் என் அட்மிஷன் ரத்தாகி விடுமென. எனவே நாளை மறு நாள் இருக்கிற பிளேனில் சீற்புக் பண்ணிவிட்டதாகவும், உடனே புறப்படும் படியும் நேற்றுத் தந்தி வந்திருக்கிறது. சிறீதரன் சிவகாமி அத்தை வீட்டிற்குப் போய், நேற்று மாலையே செய்தி சொல்லிட்டு வந்திருக்கிறான். நேற்று நான்தான் அங்கு இல்லையே. அதனால் காலையில் தான் சிறீதரன் வீட்டுக்குப் போனதும் எனக்குத் தெரிய வந் தது. எனவே உடனேயே புறப்பட்டு இங்கு வந்திட்டன் உன்னைச் சந்திக்க. இப்போ உடனேயே புறப்பட்டால் மெயிலைப் பிடித்துவிடு வேன்" மூச்சுவிடாமல் பேசிய ஜனன் ஒரு கணம் தயங்கினான். சிறிது தள்ளி யாருடனோ பேசிக் கொண்டிருந்த சிறீதரன் தன்னை நெருங் குவதைக் கண்டதும் அவசரவசரமாக,

"சேகர், உனக்கு உண்மை தெரியணும் வந்து.. வித்யா, வித்யா, எனக்கு, எனக்கு..." என்று தொடங்கியவன், சிறீதரன் அருகில் வந்து விடவே, பேச்சை முடிக்காமலே மென்று விழுங்கினான்,

"ம்... சேகர், சிறீதரன்... சேகர் இன்று காலை சிறீதரன் வீட்டில் நியூஸ் தெரிந்ததும் உடனே போய், வித்யாவை முறையாகக் கோயி லில் கட்டி அழைத்துக் கொண்டுபோய் விடவேண்டுமென்ற நினைப் புடன் இதை வாங்கிட்டு வாறன். சிவகாமி அத்தை வீட்டிற்கு இப்போ போயிட்டுத்தான் வாறன். வித்யாவும், உமாவும் இன்னும் கல்யாணி வீட்டிலிருந்து வரல்லையாம். பஸ் பிடித்து இங்கு வாறன். றெயிலைப் பிடிக்க இன்னும் பத்து நிமிஷம் தானிருக்கு. நீ எப்படியும் அவளை அழைத்துக் கொண்டு ஸ்டேசனிற்கு வந்திடு. தற்சமயம் இந்த வண்டி யைப் பிடிக்க முடியாவிட்டால் நாளை காலை றெயிலில் எப்படியும்

வந்திடு. நாளை மறுநாள் மாலை நான் பயணமாக வேண்டும். இது தான் விலாசம். சேகர்! எப்படியும் போகுமுன் அவளைக் கட்டாயம் சந்திப்பேனென்றாலும் ஏதோ மனம் தடுமாறுகிறது. இதை என் கையாலையே அவளிற்கு கட்டணுமென்று நினைச்சேன். ஒருவேளை அவளை சந்திக்காவிடினும்... போய் உடன் கடிதம் எழுதுவேன். சிவகாமி அத்தை வீட்டிலிருக்கப் பிரச்சனையானால் டாக்டர் வேதகிரி மூலம் ஒரு நல்ல இடத்தில் அவளைச் சேர்த்திடு. அவர் எல்லா உதவியும் செய்வார். நான் போனதுமே மறக்காமல் எல்லாவற்றையும் அவரிடம் சொல்வேன். எதற்கும் இது அவளிடமே இருக்கட்டும். மறந்திடாதே. எல்லாத்திற்கும் நன்றி சேகர். தாங்யூ சோ மச் ப்வோர் வட் யு காவ்டன் ஆல் தீஸ் டேய்ஸ். நாளை மாலை சந்திப்போம். கட்டாயம்"

கையில் வைத்திருந்த அட்டைப் பெட்டியைச் சேகரின் கையில் திணித்துவிட்டு, சிறீதரன் மறித்த டாக்சியில் ஏறினான் ஜனன். அவசரமவசரமாக. செதுக்கி வைத்த சிலைபோல் நின்ற சேகர், சுயநினைவை அடைந்தவனாய் வீட்டுப்பக்கம் விரைந்ததெற்கென்ன? விதி அவனை விட வேகமாக விரைந்தால் யாரால் என்ன செய்யமுடியும்? வீட்டிற்குப் போய்ச் செய்தி தெரிந்து வித்யாவைத் தேடிக் கண்டுபிடிக்கு மட்டும் விதிக்கோ, றெயில் வண்டிக்கோ பொறுமை இருக்கவில்லை. வித்யா நடந்ததைக் கேட்டதும் விக்கித்துப் போய் விட்டாள்.

"என்ன, ஜனன் போய் விட்டாரா? ஜனன் போயே விட்டாரா?" அழக் கூடத் திராணியின்றி மரத்துப் போய் விட்டாள் அவள். மெல்ல அவளை ஆசுவாசப்படுத்தி, நடந்ததை அறிந்தான் சேகர்.

"பரவாயில்லை வித்யா. இந்த ஆத்துப்படியிலே நீ தனியே நிற்க முடியாது. மெயில் வண்டியும் போய்விட்டது. உன்னை ஸ்டேசனில் விட்டிட்டு, வீட்டுக்குப் போய் ஆக வேண்டியதைப் பார்த்துக் கொண்டு வரும் வரை அங்கேயே இரு" என்று சமாதானம் சொல்லி அதன்படி செய்தான்.

மாலை மெயில் புறப்பட்டு விட்டதென்று நிச்சயமாக அவனுக்குத் தெரிந்துவிட்டதால், இனி விடிந்ததற்கப்புறம் தான் மற்ற வண்டி என்று எண்ணியவாறே, வீட்டிற்கு நடையைக் கட்டியவன், உமாவை இரகசியமாகச் சந்தித்து, நாலைந்து புடவைகளையும், வேறு ஏதோ உமா கொடுத்திருந்த அத்தியாவசியமான பொருட்களையும், கைச்

செலவிற்குப் பணத்தையும் எடுத்துக் கொண்டு ஸ்டேசனிற்கு திரும்பி வந்தான். பாவம் அவன். அவ்வளவு சிரமப்பட்டதற்கென்று விடிய விடிய ஸ்டேசனில் தூங்கி வழிந்துவிட்டு, காலை வண்டியைப் பிடித்த தற்கென்ன, இரண்டாவது ஸ்டேசனிலேயே வண்டி நிற்பாட்டப்பட்டு விட்டது. ஏற்கனவே ஏற்பட்ட மண் சரிவு மீண்டும் பெய்த மழையால் மோசமாகிவிடவே, வண்டி மறுநாள் காலை வரை புறப்படாது என்று அறிவித்து விட்டார் ஸ்டேசன் மாஸ்டர். ரெயிலை நம்பிப் பிரயோ சனமில்லையே. பஸ்சைப் பிடித்து அடுத்த ஸ்டேசனை எவ்வளவோ சிரமப்பட்டு, மாலையில் அவர்கள் அடையவும், வண்டி அப்போது தான் அந்த ஸ்டேசனை விட்டுப் புறப்பட்டுப் போகவும் சரியாயிருந் தது. முடிவு.... மறுநாள் காலை வண்டியைத்தான் பிடிக்க முடிந்தது. பட டணத்தை வண்டி அடையும் போதே மணி மூன்றாகிவிட்டது. நாலே காலிற்குப் ப்ளேன் புறப்பட்டு விடுமென்று, ஜனன் சொல்லியிருந்த தால், உடனே டாக்ஸியை அமர்த்திக்கொண்டு விமான நிலையத்திற் குப் பறந்தான். விடிய விடிய இரண்டு நாள் வழியில் சேகர் தனக்கா கப் பட்டபாட்டிற்காவது பலன் கிடைக்கும்;.தன் அதிர்ஷடத்திற்கு பலன் கிடைக்காவிட்டாலும் என்று குருட்டு நம்பிக்கையுடன் தான் வித்யா கடைசிவரை நம்பினாள். ஆனால்... ஆனால்...

மாதரையும், மக்களையும் வன்கண்மையாற் பிரிந்து
காதலிளைஞர் கருத்தழிதல் காணாயோ? – பாரதி

விமானத்தில் தனக்கென ஒதுக்கப்பட்டிருந்த சீற்றில் அமர்ந் திருந்தான் ஜனன். அவனருகிலிருந்த சக மாணவன் ஏதோ புத்தகத் தில் ஆழ்ந்து போயிருந்தான். யன்னலினூடாகக் கீழே நோக்கிக் கொண்டிருந்த ஜனனில் மனம் கனத்தது. அவன் அடைந்த ஏமாற்றம் அவன் மனத்திற்கு மட்டும்தான் தெரியும்.

அன்று கிராமத்திலிருந்து புறப்பட்டு மறுநாட்காலை பட்டணத்தை அடைந்த ஜனனுக்கு நெருங்கிய நண்பர்களைச் சந்திக்கவும், தன் வேலைகளைக் கவனிக்கவுமே பொழுது சரியாயிருந்தது. மாலை ஸ்டேசனிற்குப் போய்ப் ப்ளாட்பாரத்தை மாறிமாறி அளந்ததுதான் மிச்சம். வண்டி தாமதமாகியது. டிரெயில் தாமதம் என்றதும் இடி விழுந்து விட்டாலும், எப்படியும் பஸ்ஸிலாவது வந்து விடுவார்கள் என்று அங்கும் போய்த் தேடினான். அது மட்டுமல்ல. அடுத்த நாள்

காலை வந்தும், அவள் வரவில்லையென்றதும் சப்த நாடியும் ஒடுங்கி விட்டது ஜனனிற்கு. இனி என்ன செய்யலாம்? டாக்டர் வேதகிரியுடன் பேசிக்கொண்டிருந்த தாயைத்தேடி, எப்படியோ விஷயத்தைச் சொல் லிப் பயணத்தைப் பிற்போடப் பார்த்தான். ஆனால் மலர்வதியம்மா ளுக்கோ அது சரியாகத் தோன்றவில்லை. எவ்வளவு கஷ்டப்பட்டுக் கிடைத்த ஸ்கொலசிப்பை விடுவதா? போயும் போயும் கலப்பு மணத் தில் பிறந்த பெண்ணை ஏன் தான் விரும்பினானோ என்ற அங்க லாய்ப்பு அவளிற்கு. ஆனால் அவன் விருப்பத்திற்கு மறுப்பு சொல் லவும் முடியவில்லை. இரண்டாண்டு படிப்பின் பின் மீண்டும் திரும்பி வருகையில் ஒருவேளை ஜனனின் மனம் மாறிவிடாதா? என்ற எண் ணத்துடன் படிப்பை முடித்ததும் பார்க்கலாம், இப்போ பயணத்தை நிற்பாட்டாதே, படித்துத் தேர்ச்சியடைந்தால் படிப்பு சங்கீத்தின் நிலைக்கும் உதவும் தானே என்று படித்துப் படித்துச் சொல்லியும் ஜனன் தயங்கினான். டாக்டர் வேதகிரிதான், அவன் திரும்பி வரும் வரை வித்யாவைத் தானே ஊருக்குப் போய்ப் பார்த்துத் தக்க வழி செய்வன் என்று அடித்துச் சொன்ன பிறகுதான் வயதான அவன் தாயின் கண்ணீர் அவனைக் கொஞ்சம் இளக்கியது. அதன் பயன். அன்று மாலை வண்டியில் அவளைக் காணாமல் விட்டாலும் மண் சரிவால் முற்றாகத் தடைப்பட்டுப் போன போக்குவரத்தை மனதாரத் திட்டித் தீர்ப்பதைத் தவிரவும் அவனால் பயணத்தை ரத்து செய்ய முடியவில்லை.

ஏற்கனவே சங்கீத்தின் பிரச்சனையால் ஒருபடி இளைத்துக் களைத்துவிட்ட தாய் உடனடியாகத் தான் வித்யாவைத் திருமணம் செய்யச் சம்மதிக்க மாட்டாள், மெல்லமெல்லப் பக்குவமாய் அவள் மனதை மாற்ற வேண்டும். எப்படியும் காலம் செல்லும். அதுவரை பொறுமையைக் கடைப்பிடிக்கவும் தானே வேண்டும் என்று தனக்குத் தானே சமாதானம் சொல்லிக் கொண்டான்.

அடுத்த நாள் காலை வண்டியிலாவது வித்யா வந்து விடமாட் டாளா என்று தவித்தான். மலர்வதி அம்மாளிற்கும் ஜனனின் தவிப் புப் புரிந்திருந்தாலும் அவள் முக்கியமான சங்கீத்தின் மனநோய்க்கு மாற்றுக் காண ஜனனின் படிப்பு உதவும். பிற்காலத்திலும் என்ற எண் ணத்தினால் அவளும் மௌனமாக இருந்தாள். சங்கீத்திற்கு இது பற்றி

தெரியாததால் ஏதோ வெளிநாடு போவதையிட்டுத்தான் ஜனன் முகம் வாடியிருக்கிறதென்று நினைத்தான். டாக்டர் வேதகிரி ஒருவர்தான் மீண்டும் மீண்டும் வித்யா தன் பொறுப்பு என்று ஜனனை உற்சாகப் படுத்தி ஆக வேண்டியவற்றைக் கவனித்துக் கொண்டிருந்தார். நேர மாகி விடவே கலங்கிய உள்ளமும் மனமுமாகப் புறப்பட்ட மகனைப் பார்க்கக் கவலையாகத்தான் இருந்தது மலர்வதி அம்மாளிற்கு. காலை வண்டியும் தாமதமாக வருகிறது என்று அறிந்தும் கூட, எப்படியும் விமான நிலையத்திலாவது வித்யாவைச் சந்தித்து ஒரு வார்த்தை பேசி விடலாமென்று நம்பிக் கொண்டிருந்தான் ஜனன். தன்னை வழியனுப்ப வந்திருந்த சக டாக்டர்களும் நண்பர்களும், உறவினர் பட்டாளமும் ஒரு பொருட்டாகப்படவில்லை அவனிற்கு. மேலோட்டமாக எல்லோ ரிடமும் பேசிக் கொண்டிருந்தாலும் அவன் கண்ணும் மனமும் வித்யாவைத் தேடித் தேடி அலைந்தது. விமானம் வந்து விட்டது இன் னும் பதினைந்து நிமிடங்களில் போடிங் முடிந்து விடுமே, வித்யா வரவே மாட்டாளா என்று ஏங்கித் துடித்த அவன் மனதிற்குத்தான் தெரி யும் அதன் தாக்கம். வித்யா வருவாள். கட்டாயம் வந்துவிடுவாள் என்ற நம்பிக்கை மறைந்து அவள் வரமாட்டாளா, வரவே மாட்டாளா என்று ஏங்கி ஏங்கி அழுதது அவன் மனம். பிரயாணிகளின் போடிங்கிற் கான கடைசி அறிவிப்பும் ஒலிபரப்பாகி விடவே அவன் ஆசை அத் தனையும் அடியோடு நொறுங்கிவிட்டது. அடுத்த நிமிடம் தாயையும் கூடப் பிறந்தவர்களையும் அன்புடன் அணைத்து முத்தமிட்டு விட்டு மற்றவர்களிடம் கை குலுக்கிய அவன் விமானத்தை நோக்கிச் செல் லும் பிரயாணிகளில் ஒருவனாகக் கடைசியாக நடந்து கொண்டிருந் தான். விமானப் படிக்கட்டில் ஏறியதும், திரும்பிப் பார்த்து கையைக் காட்டிய அவன் கண்கள் அப்போதும் அவளைத் தேடத்தான் செய்தது.

"குட் ஈவினிங்" ஏர் கொஸ்டஸ்ஸிற்கு பதில் வணக்கம் கூறிய வாறே தனக்கென ஒதுக்கப்பட்டிருந்த ஆசனத்தில் சென்று அமர்ந் தான் ஜனன்.

எவ்வளவு அடக்க முயன்றும் அடக்கமுடியாது மணிக்கூட்டில் விழுந்து தெறித்த கண்ணீரை அருகிலிருந்த சக மாணவன் அறியாத வாறு அழுந்தத் துடைத்துக்கொண்டான். அவன் நினைவிலே தாயும் சங்கீத்தும், வித்யாவும் ஆரம்பத்தில் மாறி மாறித் தோன்றினர். இறுதி

யில் வித்யாதான் நிறைந்தாள். அந்த நினைவின் நிறைவிலேயே அவன் பிரயாணமும் ஆரம்பமானது. அவன் பிராயணம் ஆரம்பித்த அதே கணத்தில் வித்யாவின் வாழ்க்கைப் பயணத்திலும் ஒரு திருப்பம் ஏற்படத்தான் செய்தது.

ஆமாம். விமான நிலையத்தையடைந்து, ஜனன் பறந்து விட்டதை உணர்ந்ததுமே, வித்யா தன்னை மறந்து விம்மி வெடித்து விட்டாள் பெரிதாய். ஆமாம். சேகர் தொடர அவள் உள்ளே ஓடி வரவும், ஜனன் சென்ற விமானம், ரன்வேயிலிருந்து பேரிரைச்சலுடன் மேலெழும்ப வும் சரியாகிவிருந்தது. ஜனன் சென்ற விமானத்தைப் பார்க்க கிடைத்த அவளிற்கு ஜனனைப் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லை. மகனின் பிரிவிலேயே ஆழ்ந்திருந்த மலர்வதி அம்மாளின் செவியில் வித்யா வின் அழுகை எட்டவில்லைதான். ஆனால் சற்றே தள்ளி நின்று கொண்டிருந்த டாக்டர் வேதகிரிக்கு அவள் குரலும் நிலையும் ஏதோ சந்தேகத்தை எழுப்பி விடவே மெல்ல நோட்டமிட்டார். அவர் தங் களை அவதானிப்பதைக் கூடக் கவனிக்காமல், வித்யாவுக்கு என்ன சொல்லித் தேற்றுவது என்று கூடத் தெரியாமல் நின்று கொண்டிருந் தான் சேகர்.

“ஜனன் ஜனன்” என்று விசித்து விசித்து அழுது கொண்டிருந்த வித்யாவின் விசும்பல் டாக்டர் வேதகிரியினது ஐயத்தைப் போக் கிடவே, மெல்லப் பக்குவமாக மலர்வதி அம்மாள் கூட்டத்தை வீட் டிற்குப் புறப்பட வைத்து விட்டு வித்யாவையும் சேகரையும் அணு கித் தம்மை தாமே அறிமுகம் செய்து கொண்டார்.

அதன் பயன். ஜனனுடன் நேரடியாக இணைய முடியாத வித்யா அவன் குடும்பத்தாருடன் இணைந்து விட்டாள். சேகர் அன்றிரவே ஊரிற்குப் போவதற்குப் புறப்பட்டு விட்டான். டாக்டர் வேதகிரியின் பொறுப்பில் விட்டுவிட்டு கொஞ்ச நிம்மதியுடன் புறப்பட்ட அவன், மறக்காமல் அவள் விலாசத்தையும் எழுதிக் கொண்டான்.

“வித்யா சொன்னால் தப்பாகப் புரிந்து கொள்ளாதே. ஜனனிற்கு வேண்டிய வித்யா நீதான் என்பதை இப்போதைக்கு யாருக்கும் வெளி யிட்டு விடாதே. மலர்வதியம்மாள் ஆசாரம் பார்ப்பவளாதலால் இப்ப டியே நீ போய் நின்றால் அவளிற்கு மட்டுமல்ல உனக்குமே சங்கடந்

தான். கொஞ்சக்காலம் நீ அங்கிருந்தால் உன்னில் பிடிப்பேற்பட்டு விடும். அப்புறம் அவள் மனதை மாற்றுவது கஸ்டமாக இருக்காது. சங்கீத்திற்கு ஆகவேண்டியதை பார்த்துக் குழந்தைகளையும் பார்த்துக் கொள்ள தன்னந்தனியே மலர்வதியம்மாள் கொஞ்சம் கஸ்டப்படுவதால் தனக்கு உதவிக்கு ஆள் தேவைப்படுவதாக என்னிடம் சொல்லி இருந்தாள். எனக்குத் தூரத்து உறவு. ஆனாதையாக என் ஆஸ்பிட்டலிற்கு வந்து வேலை கேட்டதால், உன்னை உதவிக்கு அவர்களிற்கு அனுப்பி வைப்பதாய்ச் சொல்லப் போகின்றேன். உன்னை அவர்கள் நல்லதாக நடத்துவார்களென்ற நம்பிக்கையில்தான் சொல்கிறேன். நீ தான் வித்யா என்று மட்டும் சொல்லிவிடாதே" என்று படித்துப் படித்துச் சொல்லி மலர்வதி அம்மாளிடம் கூட்டிப் போனார். சேகருக்கும் அது சரியாகவே பட்டது.

வித்யா பிறக்க முன்னமே, அவள் தாய் காந்திமதி, தனக்குப் பெண் குழந்தை பிறந்தால், வித்யா என்று பெயர் வைக்க வேண்டும் என்று விரும்பினாள். சிவராமனோ கவிதா என்ற பெயரை விரும்பினார். கடைசியில் இரண்டு பெயரையும் வைத்து விடலாம் என்று பேசிக் கொண்டதுதான், தான் தன் மனைவியுடன் பேசிய கடைசிப் பேச்சு." என்று தான் குழந்தையாயிருந்த போது, தனக்கு அடிக்கடி சொன்னது அவளிற்கு ஜாடையாக ஞாபகம் வந்தது. ஆனால் குழந்தை பிறந்ததும் அவள் அப்பா மனைவிக்குப் பிடித்த பெயரை மட்டும் வைத்துவிட்டுக் கவிதா என்ற பெயரை மறந்துவிட்டார். அதன் முடிவு, டாக்டர் வேதகிரி கவிதா என்ற பெயரில் அவளை அழைத்துச் சென்று மலர்வதி அம்மாளிற்கு அறிமுகப்படுத்தினார். கவிதா என்ற பெயர் புதிதாக இருந்ததற்கென்ன போகப் போகப் பழகிவிடுமென நினைத்துக் கொண்டாள் வித்யா.

புதிய சூழல், புதிய மனிதர்கள், புதிய வாழ்க்கை என்று புதிய திருப்பத்தில் அவள் வாழ்வு அன்று திசை திரும்பியது. அன்றிரவு அடக்க முடியாத தனிமை உணர்வின் தாக்கமோ என்னவோ, ஜனன் சேகரிடம் கொடுத்தனுப்பிய அந்த அட்டைப் பெட்டி ஒன்றுதான் அவளிற்கிருந்த ஒரேயொரு துணை போல் தோன்றியது. இரவின் தனிமையில் தன் பெட்டியின் அடியிலிருந்து அந்த அட்டைப் பெட்டியை எடுத்துத் திறந்தாள். அதனுள்ளே மெல்லிய இளஞ்சிவப்புக்

காகிதத்தினால் சுற்றப்பட்டிருந்த அந்த மெல்லிய தங்கக் கொடியில் திருமாங்கல்யமொன்று பிணைந்து மின்னிக் கொண்டிருந்தது.

ஆமாம், ஜனன் ஆசையாசையாய் வித்யாவிற்கென்று வாங்கியதுதான் அந்தத் திருமாங்கல்யம். நிலவினொளியில் பளபளத்துக் கொண்டிருந்த அந்தத் தாலியை அவர் கையாலேயே என் கழுத்தில் பிணைத்திருந்தால் நினைவின் குரல் மெல்லமெல்ல மீட்டிய அந்த நாள், அவள் வாழ்விலேயே மறக்க முடியாத அந்த மங்கல நாளின் இனிய கனவுகளின் காதல் கீதம் அவளை நிலைமறக்கச் செய்தது. வெகு நேரம் அதையே நோக்கிக் கொண்டிருந்தாள். தாலி என்பது ஒரு பெண்ணிற்கு, ஒரு ஆணின் கைகளால் மனநிறைவுடன் கட்டப்பட்டு இருவரையும் அன்பின் கட்டுப்பாட்டுக்குள் வைக்கும் மங்கலச் சக்தியின் சின்னமாகும். எந்தப் பெண்ணிற்கும் கிடைக்கும் அந்தப் பாக்கியம், எனக்கு என் கையாலே கிடைப்பதை விட, அவர் கையாலேயே என்றாவது ஒரு நாள் கிடைக்கட்டும். ஊரும் உலகும் அறிய அம்மி மிதித்து, அருந்ததி பார்த்து, குங்குமம் தீட்டி மலர் சூடி, மங்கல நாண் பூட்டாதிருக்கலாம். ஆனால் ஊருக்கும் உலகத்துக்கும் புரியவே புரிய முடியாத நெஞ்ச நிறைவை, மனைவி என்ற உணர்வை, உரிமையை எனக்குத் தந்துவிட்டார் அவர். என் நினைவினிலே நிறைந்து துலங்க வேண்டிய அன்பின் சக்தியை, அந்த சத்தியமான அன்பை எனக்குத் தந்துவிட்டார். அந்த நினைவே எனக்கு நிறைஞ்ச பரிசாக என்னுள் நிறைந்திருக்கும். என்றாவது ஒருநாள் அவரே என் கழுத்தில் தாலியைக் கட்டும் வரை காத்திருக்க என்னால் நிச்சயம் முடியும் என்ற நினைவோடு அந்த மங்கல நாணை மறுபடி அட்டைப் பெட்டியுள் வைத்து சூட்கேசின் அடியில் ஒளித்து வைத்தாள். மறுபடி யன்னலோரத் திரைச் சீலையை இழுத்துவிட்டு, எரித்துக் கொண்டிருந்த நிலவையே வெகுநேரம் பார்த்துக் கொண்டிருந்தாள் வித்யா. பக்கத்து அறையில் படுத்திருந்த வாணியின் அறையிலிருந்து ஏதாவது சத்தம் வருகிறதா என்று உற்றுக்கேட்டாள். ம்.. ம்.. இரவின் நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு எங்கோ பறந்த விமானத்தின் ஒலிதான் அவள் காதிற்கெட்டியது. அடக்கி வைத்திருந்த குமுறலெல்லாம் பெருமூச்சாக வெளிக்கிட்டது. அதைத் தவிர வெறென்னதான் செய்ய முடியும் அவளால்?

# 7

எண்ணியெண்ணிப் பார்த்திடிலோர்
எண்ணமில்லை நின் சுவைக்கே. – பாரதி

காலைப் பனியில் குளித்துச் சிரித்துக் கொண்டிருந்த அந்தச் சாமந்திச் செடியிலிருந்து இன்னொரு பூங்கொத்தையும் பக்குவமாகக் கத்தரித்து, கையிலிருந்த பூக்கூடையுள் போட்டாள் வித்யா. குவிந்து கிடந்த அந்தப் பூக்களின் கனம் தாளாமல் கூடை மெல்ல அவள் கைகளில் துவண்டது. தோட்டத்திலிருந்த அத்தனை ஜாதிப் பூக்களையும் எவ்வளவு நேரம்தான், மாறி மாறிப் பார்த்துக்கொண்டு நின்றிருந்தாளோ, அது அவளுக்கே தெரியாது. ஆனால் அவளுக்காகப் படிக்கட்டில், காத்துக் கொண்டு இருந்த லதாக் குட்டியின் முகத்தில் ஒரே ஆச்சரியம்.

“இதென்னடா, இந்தப் புது அக்கா, அதிகாலையில் வந்து பறித்த அத்தனை முல்லைப் பூக்களையும் மல்லிகைப் பூக்களையும் மாலைகளாகக் கட்டிவிட்டாள். அது போதாதென்று, இதோ திரும்பவும் வந்து அத்தனை மஞ்சள் சாமந்திப் பூக்களை, ஆசை ஆசையாய்ப் பறித்துக் கூடையை நிரப்புகிறாளே” என்று. ரோஜா, ஒக்கிட்ஸ், அந்தூரியம் என்று வரிசை வரிசையாய்ப் பூத்துக்கிடந்த எத்தனையோ உயர்ந்த ரகப் பூக்களைப் பறிக்க ஆசைப்படாமல் மல்லிகை, முல்லை, பன்னீர், பவளமல்லி என்று சாதாரண பூக்கள் மேல் ஏன் இவ்வளவு ஆசை இந்த அக்காக்கு? அது ஏன் என்று அந்த சின்னஞ் சிறுசிற்குப் புரியவில்லை.

பறித்த பூக்களைச் சேர்த்த வண்ணம் படிக்கட்டை நோக்கி வந்த வித்யா லதாவைப் பார்த்து, மென்மையாகச் சிரித்தாள்.

“வந்த சில நாட்களிலேயே என்னமாய் இந்தக் குழந்தை என்னோடு ஒட்டிக் கொண்டாள். அவருக்கு என்னைப் பிடிச்ச மாதிரி அவர் செல்லத் தங்கைக்குக் கூட, என்னை நிரம்பப் பிடிச்சு விட்டதா என்ன?” என்று நினைத்தவாறே, லதாவின் கைகளைப் பற்றியவாறு கதவைத் திறந்து கொண்டு வீட்டினுள்ளே நுழைந்தாள். மேற்குப் புறமாயிருந்த சங்கீத்தின் அறையை நோக்கி நடக்கவே... அவளுக்குத் தயக்கமாகத்

தான் இருந்தது. ஆனால் என்ன செய்வது? டாக்டர் வேதகிரி தன் ரூட்டின் செக் அப்பிற்காக அன்று அங்கு வருவதாக இருந்ததால், சங்கீத்தின் அறையைச் சற்று ஒழுங்குபடுத்தி விடச் சொன்னாள் மலர்வதி அம்மாள்.

"போம்மா, எனக்குப் படிக்க வேணும்" என்று வாணி முணுமுணுக்கவே தானே அதைச் செய்து விடுவதாகக் கூறிவிட்டாள் வித்யா. இனித் தயங்கி என்ன ஆகப் போகிறது? ஒதுக்குப் புறமாக இருந்த அவன் அறையை நெருங்கியவள், ஒருக்களித்தாற் போல் சாத்தியிருந்த அவன் அறைக் கதவை மெல்லத் தட்டினாள். ம்... க்கும்.. பதில் இல்லை. மறுபடியும் இருதடவை தட்டினாள். பதிலில்லையே என்ற பாவத்துடன் லதாவை பார்த்தாள் வித்யா. லதா தான் அறைக்குள் எட்டிப் பார்த்துவிட்டு, அவன் அறைக்குள் இல்லை என்று மெல்லக் கிசுகிசுத்தாள். வித்யா இன்னமும் அறைக்குள்ளே நுழையத் தயங்குவதைக் கண்டதும், அவள் கைகளை பற்றி, உள்ளே வரும்படி இழுத்தாள் லதா.

அறையினுள் தயக்கத்துடன் நுழைந்த வித்யாவை. அந்த அறையின் அலங்கோலம்தான் வரவேற்றது. யன்னலை ஒட்டினாற் போலிருந்த ரேடியோகிராமின் அருகிலிருந்த வெள்ளைப் பூச்சாடியில், ஏதோ வாடிய மலர்கள் காய்ந்து சருகாகக் கிடந்தன. அதன் அருகே புத்தக செல்பின் முதறத்தட்டில் இருந்த நடராஜர், ராதாகிருஷ்ணன், சிவசக்தி, மீரா சிலைகளிலெல்லாம் தூசி தன் செல்வாக்கைத் தாராளமாகக் காட்டிக் கொண்டிருந்தது. சுவரில் தாஜ்மகால், இயற்கை வண்ணப்பட காட்சிகள் இன்னும் சில ஆயில் படங்கள் அங்குமிங்குமாகத் தொங்கிக் கொண்டிருந்தன. மூலையிலிருந்த வீணை ஒன்று தான் அவளுக்குத் தூய்மையான உணர்வைத் தோற்றுவித்தது. சங்கீத் தன் அறையை ஒட்டினாற் போலிருந்த பாத்றூமுள் சென்றிருப்பதை ஊகித்தவளாய் அலங்கோலமாயிருந்த அறையின் அமைப்பை, அலங்காரமாக மாற்றித் துடைத்து ஒழுங்குபடுத்தினாள் விறுவிறு என்று.

"சங்கீத் அண்ணா, பாத்றூமிற்கு ஸ்நானம் பண்ணப் போவதில்லை, சயனம் தான் பண்ணப் போவார்" என்ற வாணியின் நேற்றைய கேலிப் பேச்சு ஞாபகத்தில் வரவே, சங்கீத் இப்போதைக்கு பாத்றூமிலிருந்து வெளியில் வரமாட்டான் என்ற நினைப்புடன், அறையைத் தட்டி துப்

புரவாக்கிப் பெருக்கினாள். ராஜூவின் உதவியோடு புக்செல்பைக் கட்டிலருகில் நகர்த்தி அழகாகப் புத்தகங்களை அடுக்கினாள்.

பாரதியார் பாடல், நவநீதகவியின் கவிதைத் தொகுப்பு, சத்திய சோதனை, திருக்குறள், பாரதிதாசன் கவிதைகள் என்றிருந்த பலரகப் புத்தங்களையும் அவன் கட்டிலிலிருந்தபடியே எடுத்துப் படிக்க வசதியாக அடுக்கினாள். சாளரத்திற்கு எதிராகக் கட்டிலைத் தான் நகர்த்தியது, சங்கீத் படுத்திருந்தபடியே தோட்டத்தைப் பார்க்கக் கூடியதாயிருக்கும்" என்ற எண்ணம் சரியாகத்தான் பட்டது அவளுக்கு. சாடிக்கு நீரைமாற்றி மஞ்சள், சாமந்திப் பூக்களை அலங்காரமாக மாற்றி வைத்து விட்டு, வெளியே சென்று மீண்டும் திரும்பியவளின் கைகளில் அன்று காலையில் அவள் கட்டி வைத்திருந்த மல்லிகை மலர் மாலையும், குத்துவிளக்கும், திரியும், எண்ணெய்யும் இருந்தன. உள்ளே நுழைந்த வித்யா கட்டிலில் கண் மூடியவாறே கிடந்த சங்கீத்தைக் கண்டதும் ஒரு கணம் தயங்கினாள்.

வேலையாளின் உதவியுடன் குளித்துவிட்டு, அலுப்பு மிகுதியால், அறையினுள் வந்த சங்கீத்தின் கண்களை, மாற்றப்பட்டிருந்த அறையின் அமைப்பு பட்டென்று கவர்ந்தது.

"அட, வாணிகூட, அறையின் தோற்றத்தை மாற்றி வைத்திருக்கிறாளே. இவளுக்குக் கூடவா இதெல்லாம் செய்யத் தெரியும்? அதுவும் என் வசதிக்கேற்ப, அழகாக நான் அன்று நினைச்சமாதிரியே, கைக்கெட்டிய தூரத்தில் செல்பையும், ரேடியோ கிராமையும் வைத்திருக்கிறாளே" என்று எண்ணமிட்டவாறே கட்டிலில் சாய்ந்தான். சாளரத்தின் ஒரு பக்கத்திற்கு ஒதுங்கிக் காற்றில் படபடத்துக் கொண்டிருந்த நீல நிறத் திரைச் சீலை அழகாக இடையில் முடிச்சிடப் பட்டிருந்ததால், படுத்துக் கிடந்தவாறே, தோட்டத்தை ஒரு கணம் ரசித்துவிட்டுக் கண்களை மூடிக் கொண்டான்.

உள்ளே தயக்கத்துடன் நுழைந்த வித்யா, லதாவைச் சத்தம் போடாதிருக்கும்படி கையைக் காட்டி விட்டுப் பளபளவென்று மின்னிய சிலைகளிற்கு முன் குத்துவிளக்கை வைத்து, எண்ணெயை ஊற்றித் திரியைப் பொருத்தினாள். மல்லிகை மாலையைச் சுவாமி படத்திற்குச் சாத்திவிட்டுக் குத்துவிளக்கை ஏற்றினாள். சந்தடி செய்யாமல் வெளியே போகத் திரும்பியவளை.

"வாணி அந்த வீணையைக் கொஞ்சம் எடுத்து மீட்டி ஒரு பாட்டுப் பாடேன்" என்ற சங்கீத்தின் குரல் திடுக்கிட வைத்தது. கண்களை மூடியவாறு கிடந்த சங்கீத், அறையில் கேட்ட நடமாட்ட ஓசையில் இருந்து வாணிதான் அங்கு வந்திருக்கிறாளென்று எண்ணிக் கொண்டான். தன் வீணையை ஒருவருமே தொட விடமாட்டான் சங்கீத் அண்ணா என்று ஏதோ பேச்சுவாக்கில் முதல் நாள் வாணி சொல்லியிருந்தது வேறு வித்யாவின் ஞாபகத்தில் வந்தது.



"ஏன் வாணி, பேசாமல் இருக்கிறாய். ஓ உனக்கு ஆச்சரியமாக இருக்கிறதா? பரவாயில்லை. ஒரேயொரு பாட்டுடன் மீட்டிவிடேன். என் மனதைப் படிச்சமாதிரி ஜெயாவால் கூட இப்படி அறையை அலங்கரிக்க முடியவில்லை. என் விருப்பத்தைப் படிச்ச மாதிரி, இவ்வளவு துல்லியமாக ஏனோ நீ இன்று மாற்றிவிட்டாய். சாம்பிராணி மணம், ம்.. ம்... அது என்ன ஊதுவத்தி மணமா? மல்லிகை மணத்தோடு சேர்ந்து... சரி... சரி பரவாயில்லை. ஒரேயொரு பாட்டைப் பாடேன்." ஆழ்ந்த கனவில் பேசுபவன் போல், இன்னமும் கண்களைத் திறந்தால் மோன நிலை கலைந்துவிடுமோ என்று தயங்குபவன் போல், கண்களை மூடியவாறே, பேசிய அவன் குரலே, வீணையின் நாதம் போல் கெஞ்சி

யது. ஒரு விநாடி திகைத்து நின்ற வித்யா இதை எதிர்பாராது ஒரு கணம் தடுமாறினாலும், மறுவிநாடி சட்டென்று வீணையுடன் அமர்ந்து சுருதி கூட்டினாள். அடுத்த கணம்....

"நல்லதோர் வீணை செய்தே, அதை நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ? சொல்லடி சிவசக்தி எனைச் சுடர்மிகு அறிவுடன் படைத்து விட்டாய்." பாரதியின் கவிதையும், வீணையின் நாதமும், வித்யாவின் குரலுமாக இணைந்து, இனிமையாக எழுந்து, அந்த வீட்டின் மூலை முடுக்களிலெல்லாம் தவழ்ந்தது.

திடுக்கிட்டுக் கண்களைத் திறந்த சங்கீத் ஒரு கணம் குழம்பினாலும், மறுகணம்... தன்னை மறந்து மறுபடியும் கண்களை மூடிக் கொண்டான். ஒரு நிமிஷம்கூட அந்த கானத்தைக் கேட்காது இழக்க விரும்பவில்லைப் போலும்.

"வல்லமை தாராயோ. இந்த மாநிலம் பயனுற மேலும் வாழ்வதற்கே சொல்லடி சிவசக்தி! நிலச் சுமையென வாழ்ந்திடப் புரிகுவையோ" ஏக்கம் தோய வீணையுடன் சேர்ந்து அவள் குரல் ஒலித்தபோது, தன் கண்களிலிருந்து வழிந்த கண்ணீரைக் கூடத் துடைக்க மறந்து விட்டான் சங்கீத்.

விசையுறு பந்தினைப் போல் உள்ளம்
வேண்டிய படிசெலும் உயிர் கேட்டேன்
நசையறு மனங்கேட்டேன் நித்தம்
நவமெனச் சுடர்தரும் உயிர் கேட்டேன்

தசையினைத் தீச் சுடினும் சிவ
சக்தியைப் பாடும்நல் லகங் கேட்டேன்
அசைவறு மதி கேட்டேன் இவை
அருள்வதில் உனக்கேதுந் தடையுள்ளதோ?

திரும்பத் திரும்பக் கடைசி இரு அடிகளையும் தன்னை மறந்து அனுபவித்துப் பாடினாள் வித்யா. சங்கீதத்தின் நிலையில் வித்யாவே மாறிவிட்டது போல் வீணையுடன் சேர்ந்து அவள் குரலே சோகக் குயிலாக எழுந்தது. பாடி முடிந்ததும் கண்களைத் திறந்த வித்யா வாசலில் கண்கள் குளமாக மலர்வதி அம்மாளும் வாணியும் நிற்பதையும் சங்கீத் இன்னும் அதே நிலையிலேயே இருப்பதையும் கண்டவள்

தயங்கினாள். மெல்லக் கண்களைத் திறந்த சங்கீத் எதிரில் சாட்சாத் கலைவாணியே அமர்ந்திருப்பது போலிருந்த வித்யாவையே கண் கொட்டாமல் நோக்கினான். அவன் நிலையை உணர்ந்த மலர்வதி அம்மாள் தான்,

"சங்கீத்..., சங்கீத்..., இவளை நீ வாணி தான் அறைக்குள் வந்திட்டாள் என்று நினைத்திட்டியாக்கும். டாக்டர் வேதகிரிதான் எங்களுக்கொத்தாசையாய்க் கொஞ்ச காலம் எங்ககூட இருக்க கேட்டார். அவரிற்குத் தெரிந்த தூரத்து உறவுக்காரர் பெண்ணாம். பெயர் கவிதா" என்று விளக்கினாள்.

"கவிதாவா, கவிதா... ம் அர்த்தமும் பொருத்தமும் நிறைஞ்ச பேர் தான். ரெம்ப சந்தோசம். நான் கண்ணை மூடிக் கொண்டிருந்ததால் அரவங் கேட்டதும் வாணியென்று நினைத்திட்டேன். அபாரம் உங்க வீணை வாசிப்பும் பாட்டும். எப்படி உங்களால் இவ்வளவு தூரத்திற்கு அனுபவித்துப் பாட முடிகிறது?" தன்னை மறந்து அதிகம் அவன் பேசிவிட்டான். அவன் ஒளி நிறைந்த கணகள் வித்யாவை ஊடுருவின. தயக்கத்துடன் அமர்ந்திருந்த வித்யா மெல்லத் தலையை நிமிர்த்தினாள். சங்கீத் உணர்ச்சி வசப்பட்டிருக்கிறான் என்பதை அவன் குரலும் கண்ணும் தெளிவாகக் காட்டியது.

"தயவு செய்து இன்னும் ஒரு வேண்டுகோள், ஒரேயொரு பாடல் வீணையுடன் சேர்ந்து பாடுவீர்களா?" தயக்கத்துடன் சங்கீத்தின் குரல் கெஞ்சியது.

அவனை விட அதிக தயக்கத்துடன் மலர்வதி அம்மாளைத் திரும்பி நோக்கினாள் வித்யா.

"பாடம்மா நீண்ட நாளைக்கு பின், ஏன் நீண்ட மாதங்களிற்குப் பின், இந்த வீட்டில்... சரி... சரி பழைய கதைகளெல்லாம் ஏன் இப் போது. ஒரு பாட்டைப் படியனம்மா" என்று மலர்வதி அம்மாளும் சங்கீத்துடன் சேர்ந்து கொண்டாள். மீண்டும் என்ன பாடலைப் படிப் பது? ஏற்கனவே சங்கீத்தின் குறையை முதல் பாடல் நினைவூட்டி விட்டதால், உணர்ச்சி வசப்பட்டிருந்த அவன் நிலைக்கு அமைதி அளிக்கக் கூடியதாக என்ன பாடல் பாடுவது? அடுத்த கணம்.

மனதிலுறுதி வேண்டும், வாக்கினிலே இனிமை வேண்டும், நினைவு நல்லது வேண்டும், நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்,

கனவு மெய்ப்பட வேண்டும், கைவசமாவது விரைவில் வேண்டும், தனமும் இன்பமும் வேண்டும், தரணியிலே இன்பம் வேண்டும்” என்று அவள் ஆரம்பித்ததுமே தன்னை மறந்து விட்டான் சங்கீத். ஆலய மணியின் கீதமாய் அவள் குரலின் இனிமையும், வீணையின் நாத மும் இணைந்து அவனை... அவனை

டக்டக்... ஷூஸின் ஒலி எதிரொலிக்க உள்ளே வந்த டாக்டர் வேத கிரியைக் கண்டதும் மலர்வதி அம்மாளும் வாணியும் வழிவிட்டு விலகினர்.

“ஐயையோ அத்தை அவரைப் பாருங்களேன்” என்ற வித்தியா வின் பதட்டமான குரலும் மயங்கிக் கிடந்த சங்கீத்தின் நிலையும் டாக் டர் வேதகிரியை அவன் அறைக்குள்ளே இடித்துத் தள்ளியது. சில வினாடிகளில் கண்களை மெல்லத் திறந்த சங்கீத்தைச் செக்கப் செய்து கொண்டிருந்த டாக்டர்,

“கி ஸ் ஒல் ரைட சற்று ஓய்வெடுத்துக் கொண்டால் சரி. நாங்கள் வெளியே போனால் சங்கீத்திற்கு ஓய்வாயிருக்கும் தானே” என்ற வாறே அறைக்கு வெளியே வந்தார். அவரைத் தொடர்ந்து வெளியே வந்த வித்யாவை ஒரு கணம் பார்த்த அவர்,

“வித்யா, ஐ மீன் கவிதா, கவிதா நீ இங்கு தொடர்ந்து இருந்தால் சங்கீத்தின் நிலை சீக்கிரமே நார்மலாகிவிடும். வெகு காலத்தின் பின் சுமார் இரண்டரை வருடஷங்களிற்குப் பிறகு இசை அவனுக்கு எதிர் பாராது தந்த நிறைவிலே, அவன் அதிகம் உணர்ச்சி வசப்பட்டு விட்ட தால் தான் அவன் மயங்கி விட்டான். அவனுடைய கலை உணர்வு களிற்கு நிறைவு தர, அவனுடைய கலை உணர்வின் வளர்ச்சிக்கு மிக மிக அவசியம் ஒருத்தி. அந்த இடத்தைப் பூர்த்தி செய்ய நிச்சயமாக உன்னால் முடியும். ஒருவரையும் தொடவிடாத வீணையை அவன் தொட விட்டதே ஆச்சரியமென்றால் அதைவிட அதி ஆச்சரியம் அவன் உன்னைப் பாராட்டியது தான். இதுவரை அவன் சிட்டிபாபு வின் இசையை மட்டும் பாராட்டத்தான் கேட்டிருக்கிறேன். உனக்கு அப்படிப்பட்டவன் பாராட்டுக் கிடைத்ததென்றால்... அவனிற்கு மகிழ்ச்சி தரக் கூடியது இந்த உலகில் ஒன்றே ஒன்றுதான். அதுதான் கலை. அதைத் தர உன்னால் முடியும். அதைத் தந்து அவனைப் பழைய நிலைக்கு மாற்றுவது உன் பொறுப்பு” என்றவர் அக்கம் பக்கம் யாரு

மில்லாததைக் கவனித்தவராய், "அதுதான் உன் ஜனனுக்கும் நீ செய்யக் கூடிய பேருதவி" என்று விட்டுக் காப்பித் தட்டுடன் தன்னை நோக்கி வந்த வாணியைப் பார்த்துப் பேச்சை மாற்றினார்.

அவர் பேச்சு... அதுவும் அந்தக் கடைசி வரிகளை, வேதவாக்காகக் தான் எடுத்துக் கொண்டாள் வித்யா. அதன் படி நடந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம், வலுப்பட்டதில் என்ன தவறு? அவள் ஜனனுக்காக உதவி செய்ய ஒரு சந்தர்ப்பம் அல்லவா? ஆரம்பத்தில் யாராவது கவிதா என்று கூப்பிடும் போதெல்லாம் திடுக்கிட்டவள், பிறகு போகப் போகப் பழகிக்கொண்டாள். மலர்வதி அம்மாள், டாக்டர் வேதகிரியின் தூரத்து உறவுக்காரப்பெண் என்ற அளவில், வித்யாவை வாணியைப் போலவே பாவித்து அன்பு காட்டினாள். சங்கீத்தின் முன்னேற்றத்திற்கும் மகிழ்ச்சிக்கும் காரணமாகக் கூடியவள் என்ற அளவில் அவள் இன்னும் அன்பாயிருந்தாள். வாணிக்கென்னவோ ஆரம்பத்தில் வித்யாவைப் பிடித்ததென்றும் சொல்லமுடியாது; பிடிக்கவில்லை என்றும் ஒதுக்க முடியாது. தன்னுடைய பட்டணத்து நாகரீக வாடை வீசும் நண்பியர் பட்டியலில் வித்யாவைச் சேர்க்க முடியவில்லை. ஆனால் நாளடைவில் வித்யாவின் குழந்தைத்தனமான பேச்சும், அவளது கள்ளமில்லாத முகமும் மெல்ல அவள் பால் ஈர்த்தது. ரமேஷிற்கும், மீனாவிற்கும் படிப்பிலும் சரி, விளையாட்டிலும் சரி நன்றாக ஈடு கொடுத்தாள் வித்யா. லதா பாடுதான் கொண்டாட்டமாயிருந்தது. கவிதா அக்கா, கவிதா அக்கா என்று அவளையே சுற்றிச் சுற்றி வந்தாள்.

சங்கீத் ஒருவனுடன்தான் அதிகம் நெருங்காமலும், அதிகம் பழகாமலும் இருந்தாள் வித்யா. ஆனால் அவனே வலிய வலிய வந்து வீணையைப் பற்றியோ, தான் படித்த புத்தகங்களைப் பற்றியோ, அல்லது சித்திரங்களைப் பற்றியோ சர்ச்சை செய்யுபோது வித்யாவால் முற்றாகச் சங்கீத்திடமிருந்து விலகி நிற்க முடியவில்லை. போகப் போக அதுவும் பழகி விட்டது. விபத்தின் போது ஏற்பட்ட சிறு முறிவினால், கால் பூரணமாகக் குணமடையாததால் பெரும்பாலும் அவன் பொழுதத்தனையும் அவனது அறையுள்ளேயே கழிந்தது. ஆப்ரேஷன் முடிந்து இரண்டு மாதங்களாக அவன் போக்கு மற்றவர்களிற்கு, ஏன் அவனிற்கே எரிச்சலூட்டுவதாகத்தானிருந்தது. எந்த நேரமும் வெடுவெடுத்துக் கொண்டிருந்தவன், வித்யாவின் இனிய பேச்சினாலும்,

போக்கினாலும் மெல்ல மெல்ல மாறிக் கொண்டு வந்தான். எல்லோரும் தன்னைப் பரிதாபமாய் நோக்கிக் கொண்டிருந்ததிலிருந்து, பிறம்பாக வித்யா ஏதோ தன்னை உசத்தியாகப் பார்த்து, அந்த உசத்தியான நிலைக்கு அவன் கலைச்சிறப்புகளே காரணம் என்பது போல், அவனது போக்குகளிற்கு ஈடு கொடுக்கிறாள் என்று அவள் மேல் அவனிற்கும் ஆரம்பத்தில் ஒரு மதிப்பை ஏற்படுத்தின. அவளது குழந்தைத்தனமான மனம், குறுகுறுப்பான பேச்சு, போலித்தனமான கோபம் எல்லவாவற்றையும் விட, அவன் கலை உணர்வுகளில், திறமைகளில் காட்டிய ஈடுபாடும், அவளிடத்தே அவனை ஈடுபாடுடையச் செய்தன.

> இன்பக் கதைகளெல்லாம் உன்னைப்போல்
> ஏடுகள் சொல்வதுண்டோ? — பாரதி

ஜனன் லண்டன் போய் இரண்டு வாராமாகிவிட்டது. அன்று மத்தியானம். தபாற்காரன் கொணர்ந்திருந்த கடிதங்களை எடுத்துக் கொண்டு மலர்வதி அம்மாளிடம் ஓடினாள் வித்யா. அதிலொரு நீலக் கவரை மட்டும் பார்த்துவிட்டு,

"அட ஜனனின் கடிதமல்லவா" என்று மகிழ்ச்சியுடன் கூவியவாறு சங்கீத்தின் அறையை நோக்கி, மலர்வதி அம்மாள் நடக்கவும் வித்யா ஏமாற்றத்தால் சாம்பிப் போனாள்.

எதுவுமே தோன்றாமல் அப்படியே சில கணம் நின்றவள், ஏதோ ஒரு சாக்குடன் தயங்கித் தயங்கி சங்கீத்தின் அறைக்குள் செல்லவும் அவன் ஜனனின் கடிதத்தை மூடி வைக்கவும் சரியாயிருந்தது. ஏமாற்றத்தை வெளியில் காட்டிக் கொள்ளாமல், அன்று மாலைவரை ஆவலைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டியதாயிற்று. மாலையில் கல்லூரியிலிருந்து வாணி வரும் வரை நிலைகொள்ளாமல் தவித்தவளிற்கு வாணியின் வழக்கமான அரட்டையடிக்கும் சுபாவம் தான் வழிகாட்டியது. ஆமாம்! தான் நலமாயுள்ளதாயும், சகமாணவனுடன் தான் ஒரு அறையில் தங்கியிருப்பதாயும், மற்றும் தன் புதிய அனுபவங்களையும், இடங்களையும் பற்றிக் குறிப்பிட்டு எழுதி, சங்கீத்தின் நிலையைத் தான் குறிப்பாக அதிகம் கேட்டு எழுதியிருந்தான் ஜனன்.

"எனக்கென்று ஒருவரி எழுத முடியாதோ" தனக்குள் முணுமுணுத்த வித்யா, தன்னை மறந்து சிரித்தாள். தான் இங்கே இருக்

கிறேன் என்று ஜனனிற்குத் தெரியாதபோது, தனக்கொரு வரி எழத வில்லை என்று முணுமுணுத்தால் முடியுமா? டாக்டர் மாமாவிடம் எப்படியாவது கேட்டு அட்ரஸ் வாங்கிவிட வேண்டும் என்று முடிவு செய்தவள், அன்றிரவு மெள்ளக் கதை விட்டபோதுதான் தெரியவந்தது வாணி மூலம். தான் நிலையான இடம் பார்த்துப் போய் ஒரு மாதத் துள் கடிதம் எழுதுவதாயும், அதன்பின் அவர்களை எழுதும் படியும் வாணி சொன்னபோது வித்யாக்கு என்ன சொல்வதென்றே தெரிய வில்லை. ஏமாற்றத்தை மறைத்துக் கொள்ளத் தன்னறையை நாடித் தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொள்வது ஒன்றுதான் அப் போதைக்கு அவளால் முடிந்தது. அன்றிரவு விடியும் வரை பழைய நினைவுகளிலேயே தோய்ந்து கிடந்தாள் வித்யா. திடீரென்று காற்றில் மிதந்து வந்த் அந்த நாதஸ்வர இசையில் ஒரு கணம் திடுக்கிட்டுத் தன்னை மறந்து லயித்தாள் வித்யா.

கீழே, அவன் அறையில், ரேடியோகிராமிலிருந்து வெளிவந்த நாதஸ்வர இசையை ஆழ்ந்து அனுபவித்துக் கொண்டிருந்தான் சங்கீத். இசையிலே, ஏன் எதிலுமே வெறியைக் கண்டு தாவிய காலம் கரைந்து, நிறைவைத் தேடிக் கண்டு கொள்ள முயன்று கொண்டிருந்த காலம் அது. இப்போதெல்லாம் விடிந்தும் விடியாமலிருக்கையிலேயே எழுந்து விடுவான் சங்கீத். முதல் நாளிரவு படுக்கைக்குப் போகு முன்னமேயே விளக்குக்குத் திரியும், நெய்யுமிட்டு வித்யா முன்னேற்பாடாக எல் லாம் செய்து விடுவாளாகையால், குத்துவிளக்கை ஏற்றிச், சுடர் ஏத்தி விட்டுத், தரையிலமர்ந்து வீணை வாசிப்பிலேயே ஆழ்ந்திருப்பான் சங்கீத். வித்யாவும் அதிகாலையிலேயே கண்விழித்து விடுவாளென் றாலும், சாதாரணமாக ஆறு மணிக்கு முன் வீட்டில் யாரும் எழும்புவ தில்லை. ஆகையால், படுக்கையில் கிடந்தவாறே சங்கீத்தின் வீணை வாசிப்பின் மோகன கீதத்திலேயே ஆழ்ந்து அனுபவித்துக் கொண்டி ருப்பாள்.

வாணியும், மற்றவர்களும் காலேஜ்ஜுக்கும், ஸ்கூலுக்கும் போன பின், மலர்வதி அம்மாளுடன் சேர்ந்து ஒத்தாசையாய்ச் சமையலை முடித்து விட்டுப், பக்கத்துத் தெருவிலுள்ள சித்திரப் பயிற்சிக் கழகத் திற்குப் பத்து மணி மட்டில் போனால் பகல் சாப்பாட்டுக்குத் தான் திரும்புவாள். பிறகு நாலு மணிவரை ஓய்வுதான். பிறகு குழந்தைகள்

ஸ்கூலால் வந்துவிட்டால், அவர்களை வெளியே அழைத்துச் செல்வதிலோ, அல்லது அவர்களுக்குப் பள்ளிப் பாடங்களைச் சொல்லிக் கொடுப்பதிலோ, பொழுது கழிந்துவிடும். கழிந்து சென்ற பொழுதும், மெல்ல மெல்ல மாதங்களாக உருண்டோடின. காலத்தின் ஓட்டத்தை யார் தான் நிறுத்த முடியும்?

## 8

காலமுற்றுந் தொழுதிடல் வேண்டும்
காதலென்பதோர் கோயிலின் கண்ணே. – பாரதி

சங்கீத் அன்றும் ரேடியோகிராமில் நாதஸ்வர இசை கேட்டுக் கொண்டிருந்த போது, தடதடவென்று ஓடிவந்தாள் வாணி.

"புறப்பட நேரமாச்சு, இன்னுமா ரெடியாகல்லே, என்ன அண்ணா இது" செல்லமாகச் சிணுங்கினாள் வாணி.

"இதோ ஒரு நிமிஷம் வந்திடுறன்" என்றவாறே தன் கமராவை எடுத்துக் கொண்டு வெளியே வந்தான்.

போர்ட்டிகோவில் நின்றிருந்த கார் புறப்படுவதற்கு ஆயத்தமாக நின்றது. வித்யாவும், ராஜூவும் தான் பிக்னிக் பாஸ்கற்றுகள் எல்லாம் சரியா என்று கணக்குப் பார்ப்பதும், வண்டியில் அதை ஏற்றுவதுமாக இருந்தனர். வாணிக்குக் காலேஜ் விடுமுறை ஆரம்பமாகி விட்டதால், இரண்டு நாளைக்காவது எங்காவது வெளியே பிக்னிக் போய்வர வேண்டுமென்று துளைத்தாள். சங்கீத்திற்குச் சிரமமாதலால் போக முடியாததென்று முதலில் மலர்வதி அம்மாள் தடுத்தாலும், டாக்டரும் காரிலே போய் வருவது தானே, சங்கீத்திற்கும் ஒரு இடமாறுதலாயிருக்கும் என்று அனுமதி கொடுத்து விட்டதால் பேராதனைக்குப் போய் வரலாம் என்று கிளம்பினார்கள். டாக்டர் வேதகிரியின் குடும்பமும் அவர்களுடன் சேர்ந்தனர். முதல் காரில் ட்ரைவர் அருகில் சங்கீத், பின்னிற்கு டாக்டரின் மகள் விஜிதா, வாணி, லதா, வித்யா இருந்தனர். அடுத்த காரை டாக்டரே ஓட்டினார். அவர் மனைவி, மலர்மதி அம்மாள், ராஜூ, மீனா, ரமேஷ் அந்தக் காரில். கார் புறப்பட்டதுமே, வாணியும், விஜிதாவும் தம் கல்லூரியைப் பற்றி அரட்டை அடிக்கத் தொடங்கி

விட்டார்கள். அவர்கள் பேச்சிலேயே கலந்து கொள்ளாமல், வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த வித்யாவைக் கிண்டினாள் வாணி.

"அடி விஜி, இந்தப் பக்கத்துப் புல்லையும், புதரையும் சங்கீத் அண்ணா பார்த்துக் கொண்டிருக்கிறானென்றால், அந்தப் பக்கத்துக் கல்லையும், மண்ணையும் அண்ணாக்குப் போட்டியாய்ப் பார்க்கிறாள் கவிதா. அண்ணா அரைப் பயித்தியம் என்றால் கவிதா ஒரு முழுப் பயித்தியம்தான். பூவையும் இலையையும் எவ்வளவு நேரத்திற்குத் தான் பார்க்க முடியும்? அண்ணாதான் வீணை, பாட்டு, ஏதோ படம் என்ற பெயரில் ஏதோ கிறுக்குவதையும் தலைமேல் தூக்கி வைக்கிறான் என்றால், இவள் அவனை விடப் படுமோசம். போதாக்குறைக்கு, அவன் இதுவரை விட்டிருந்த கவிதை, கதை எழுதுற பைத்தியத்தை கவிதா போட்ட தூண்டிலில் சிக்கி, மறுபடி பத்திரிகைகளுக்கு எழுதித் தள்ளறான் அண்ணா. அசல் ஜோடிதான் இரண்டும்" என்றதும்,

"ஆமாண்டி சரியாய்ச் சொன்னாய்" என்று விஜிதாவும் சேர்ந்து பாடினாள்.

இவர்கள் பேச்சின் இறுதிவரிகள் மட்டும், ஏனோ சங்கீத்தை அறியாமலேயே, அவன் மனதில் நிழலாடிக் கொண்டிருந்தன. அதென்ன அது? சரியான ஜோடிகள் என்ற சொற்களிற்கு அவ்வளவு அர்த்தமா என்ற ஆத்ம சங்கீதத்திலேயே மூழ்கிப்போனான் அவன்.

பேராதனையை அடைந்ததும் ஒவ்வொருவராய் தோட்டத்தைச் சுற்றிப்பார்க்கப் புறப்பட்டு விட்டார்கள். கால் வலிக்கிறது என்று மலர்வதி அம்மாளும், வேதகிரியின் மனைவியும் ஒருபுறமாக அமர்ந்து விட்டார்கள். விஜிதாவும் வாணியும் ஒரு பக்கம், டாக்டரும், குழந்தைகளும், சங்கீத்தும் வித்யாவுமாகக் கிளம்பினார்கள். சுற்றிப் பார்த்துக் கொண்டு வந்த வித்யா, கங்கை நதிப் பாலம் அருகே வந்ததும், அதிலேயே லயித்து விட்டாள். மெல்லக் கால் வலிக்கிறதென்று அங்கேயே தங்கிவிட்டாள். தான் பிறந்து வளர்ந்த கிராமத்து ஆற்றோரம் தான் அவள் கண்முன் எழுந்தது. அந்தச் சூழல்... நிழல் காய்ந்து கொண்டிருந்த பசும்புல்லில் சாய்ந்த வண்ணம் பையில் வைத்திருந்த தாளை எடுத்து ஏதோ வரைய ஆரம்பித்தாள். ஆற்றின் பின்னணியில், ஆடு பாலமும் அக்கம் பக்கத்து மூங்கில் மரம் நிறைந்த சூழலும், அழகாக

தாளில் மலர்ந்து கொண்டிருந்தது. சுமார் அரை மணி நேரம் தன்னை மறந்து அதில் ஈடுபட்டிருந்தாள் வித்யா.

"சித்திரம் பேசுதடி என் சிந்தை மயங்குதடி" சங்கீத்தின் இனிமையான பாடலொலி அவள் தோளருகே எழுந்ததும் திடுக்கிட்டுத் தலையை நிமிர்த்தினாள் வித்யா.

"ஏன் கவிதா, நானதைப் பார்க்கலாமா?" என்றவன் தொடர்ந்து,

"ஐயையோ, சும்மா ஏதோ கிறுக்கிக் கொண்டிருந்தேன் என்று சாக்குப் போக்குச் சொல்ல மாட்டாய் தானே?" என்று முடித்தான். அவன் கூறுவது போல் "ஐயையோ" என்று சொல்ல வாயெடுத்த வித்யா சங்கீத்தின் பேச்சில் கட்டுண்டு அவனுடன் சேர்ந்து சிரித்தவாறே தாளை அவன் பக்கமாக நீட்டினாள்.

" அழகாக அதே மாதிரியாக இருக்கிறது கவிதா, இதோ இந்தப் பக்கத்தில் இன்னும் முடிக்கல்லையே. நுங்கும் நுரையுமாக மகாவலி ஓடுவதுதான் எனக்கும் பிடிக்கிறது" பாராட்டியவாறே அவளருகே அமர்ந்து கொண்டான் சங்கீத்.

"நீ எங்க வீட்டிற்கு வந்து எவ்வளவு மாதங்கள்? ம்... ம்... ஏறக் குறைய ஒரு வருடமாகி விட்டது. இவ்வளவு நாளும் ஓவியப் பயிற்சியிலேயே உன் பொழுது கழிந்து விட்டது. இரண்டு வருஷப் பயிற்சியை இவ்வளவு வேகமாக முடித்து விட்டாய். பலே ஆள்தான். இனி என்ன செய்வதாய் உத்தேசம்? சங்கீதம் பழக விருப்பமென்றால் அதை ஆரம்பிக்கட்டுமா அம்மாவிடம் சொல்லி? வீணையும் உனக்கு நன்றாக வருவதால் வீணையையும் பாட்டையும் சேர்த்தே கற்றுக் கொள்வதுதான் நல்லது. ஏற்கனவே உனக்கு வீணையிலும் பாட்டிலும் பயிற்சி இருப்பதால், இது அதிக காலம் பிடிக்காது. சித்திரம், வீணை, பாட்டு, இந்த மூன்றிலும் தேர்ச்சியடைந்து பூரணியாய் இருக்க வேண்டும் கவிதா. கவிதைகள் எழுதுவதற்கு உனக்குப் பயிற்சி தேவையில்லை. வழக்கம் போல் என் பத்திரிகைக்கே எழுதிக் கொள்ளலாம். இப்படி எல்லாக் கலைகளும் ஒன்றாய்ச் சேர்வது அபூர்வம். ஆர்வம் இருக்கிற இடத்தில் திறமை இராது. திறமை இருக்கிற இடத்தில் ஆர்வமோ வசதியோ இராது. அப்படி இரண்டுமே உனக்கு இருக்கிறதால் இந்த மூன்று கலைகளிலும் நீ நிறைந்தவளாயிருக்க வேண்டும் என்

பதுதான் என் ஆசை கவிதா" என்று ஏதேதோ பேசிக் கொண்டே போனவனை இடைமறித்தாள் வித்யா.

"ஏன், சங்கீத் உங்கள் புதுக்கதை எப்போது முதல் வெளிவருகிறது? சித்திரங்கள் எல்லாம் அதற்கேற்ப வரைஞ்சு முடிச்சு, உங்க மேசையில் நேற்றே வைச்சேனே? அது உங்களுக்குத் திருப்தியா சங்கீத்?" ஆர்வத்துடன் கேட்ட அவளிற்கு ஏதோ பதிலளித்தாலும், சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் வெகுநேரம் சுற்றி வளைத்துப் பேசிக் கொண்டிருந்தான் சங்கீத். எதையோ கேட்கத் தயங்கிக் கொண்டிருக்கிறான் சங்கீத் என்பதை உணர்ந்து கொண்ட வித்யா இறுதியில் நேரடியாக அவனைத் துளைத்தெடுத்தாள்.

"ஏன் சங்கீத், நேரடியாகத் தொடுறத்துக்குச் சுற்றி வளைத்து வளைத்து மூக்கைத் தொடப் பார்க்கிறீங்க. ஏன்? என்ன சொல்ல வந்தீங்க? என்னிடம் கேட்கக் கூடவா இவ்வளவு தயக்கம்?"

"இல்லை, இல்லை உன்னிடம் கேட்கத் தயக்கமும் இல்லை. கேட்கத்தானும்.. ம்.. ம்.. ஒன்றுமில்லை. ஆமாம், உனக்கு ஜெயாவைப் பற்றித் தெரியுமா? எதற்குச் சொல்கிறேனென்றால், எதற்குக் கேட்கிறேனென்றால்..."

"எதற்குச் சொல்கிறேனென்றால், எதற்குக் கேட்கிறேனென்னறால்... என்றால்..." குறும்புடன் குமிழ்ச் சிரிப்புச் சிரித்தாள் வித்யா.

"உனக்கு எப்பவுமே கேலிதான். உன்னை மாதிரி எங்க வீட்டில் ஜனன் ஒருத்தனால் தான் அழகாகப் பேச முடியும். அவன் படிக்கும் போதே, பேச்சுப் போட்டி என்றால் அவனிற்குத் தான் எப்பவுமே முதல் பரிசு. அதுவும் ஆங்கிலத்தில் என்றால் அவனிற்கு ஈடு அவனே தான்."

"ஆமாம், ஆமாம், நூற்றுக்கு நூறு போடலாம், ஆனால் நூறிற்கு முன்னல் இருக்கிற ஒன்றை மட்டும் வெட்டிவிடலாம்" என்று விளையாட்டாகச் சிரித்தவளின் உள்ளம் சிறகடித்துப் பறந்தது.

நேற்றுத் தான் டாக்டர் வேதகிரி, இன்னும் ஆறு மாதங்களிலேயே, பயிற்சியை முடித்துக் கொண்டு ஜனன் வந்து விடுவானாகையால், சங்கீத்திடம் அவர்கள் காதலைப் பற்றிப் பேசினால், பின் அவனைக் கொண்டே மலர்வதி அம்மாவிடம் பக்குவமாகப் பேசி சமா

தானப் படுத்திவிடலாம் என்று கூறியிருந்தார். ஒரு மாசமாகிறதே ஜனன் கடிதம் கண்டு, ஏன் எழுதவில்லையோ... ஜனனின் நினைவு அவளை மெல்ல வாட்டியது.

"என்ன கவிதா இது, அடிக்கடி யாருடைய கனவில் ஆழ்ந்து விடுகிறாய். உன்னையடையப் போகிற, நீ கனவு காணும் அந்த அபாக்கியசாலி யாராம்?"

"நான் ஒருவரைப் பற்றியும் கனவு காணவில்லை. உங்களிற்குத் தான் கனவுப் பைத்தியம். அதுதான் 'கனவில் வந்தவள்' என்று உங்க கதைக்குத் தலைப்புக் கொடுத்திருக்கிறீர்களே."

"சரி, சரி பேச்சை மாற்றாதே. உனக்கு ஊர் ஞாபகம் வந்திட்டுதோ... என்னதான் சித்தி மோசமென்றாலும், நீ போய்ப் பழகினவங்களை, என்ன பெயர் சொன்னாய் அன்று? ஆ... அத்தை, சேகரண்ணா, உமா என்று அவங்களை எல்லாம் பார்க்கணும் போல் இருந்தால் போய்ப் பார்த்து வரலாம். எந்த ஊர், என்ன பெயர் என்று விபரம் போன தடவை நான் கேட்க, நீ சொல்ல விரும்பாததால், நான் மேலும் கேட்க விரும்ப வில்லை. கவிதா" ஆதரவான அவன் பேச்சில் ஒரு கணம் நெகிழ்ந்து போனாள் வித்யா. ஒரு நிமிஷம், தன்னை உற்ற நண்பியாகப் பார்க் கும் இவனிடம் உண்மையைச் சொன்னால் தான் என்ன என்று தயங் கினாள்.

"இல்லை சங்கீத், இப்போ அதெல்லாம் தெரிய வேண்டாம். கூடிய கெதியில் நானே உங்களிற்குச் சொல்றேனே... உங்களிற்குச் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்ல முடியும் சங்கீத்"

"சரி கவிதா, எப்போ வேணுமானாலும் நான் என்ன செய்ய வேணுமானாலும் செய்யத் தயார். அது வரைக்கும் அந்தப் பேச்சே வேண்டாம். அது சரி, நாளைக்கு பெரதேனியாவில் எங்கு போவதாக உத்தேசம்?" என்று பேச்சை மாற்றினான் சங்கீத்.

"கவிதா அக்கா, அக்கா இதோ இந்தப் படத்தை எப்போ வரைஞ் சீங்க? உங்களை மாதிரியே இருக்கிறதே" என்றவாறே ஓடி வந்தார் கள் ராஜூவும், ரமேசும். ராஜூ கையிலிருந்த அந்தக் காகிதச் சுருளை எம்பிப் பறிக்க முயன்றான் சங்கீத். ஆனால் அதற்கிடையில் வித்யா வெடுக்கெனப் பறித்து விட்டாள் அதை.

"பிரிக்காதே, அதைப் பிரிக்காதே! கவிதா அதைப் பிரிக்காதே, பிளீஸ் கவிதா, ஏன்டா கழுதை என் பாக்கிலிருந்து எடுத்தாய் அதை? கவிதா, கவிதா" என்று தடுத்தவனை விலக்கிவிட்டு துள்ளி விலகி னாள் வித்யா. அவளுடைய மான்குட்டி வேகத்திற்கு ஈடு கொடுக்க அவனால் முடிய வில்லை.

"ஏன் கவிதா, உன்னை மாதிரி வேகமாய் ஓடிப் பறிக்க முடியாத நொண்டிப் பயலென்று தானே அதை எடுத்துக் கொண்டு ஓடுகிறாய்?" என்றான் சங்கீத். தோற்றுவிட்டோம் தன் முயற்சியில் என்ற எண்ணம் அவன் சொற்களில் பிரதிபலித்தது. பிரித்து விட்ட படத்தைப் பார்க்கா மல், சங்கீத்தையே இரக்கத்துடன் பார்த்தவாறு, அவனருகே மீண்டும் வந்து அமர்ந்தாள் வித்யா.



"சத்தியமா சங்கீத். நான் அப்படி நினைக்கவேயில்லை" கண் கள் நனையக் கேட்டவளைப் பொருட்படுத்தாமல் எழும்ப முயன் றான் சங்கீத்.

"சங்கீத், சங்கீத். ப்ளீஸ் சங்கீத் என் மீது கோபமா? நான் தான் படத்தைப் பார்க்கல்லையே? இந்தாங்க உங்க படம்" கெஞ்சினாள்

வித்யா. ஏதோ போராட்டத்தில் அகப்பட்டவன் போல் சிறிது நேரம் தத்தளித்து விட்டு,

"ம்.. பரவாயில்லை கவிதா. நீயே பார்த்துவிடு. என்றோ ஒரு நாள் தெரிய.. ஐ.. மீன் காண வேண்டியது தானே". கையில் இருந்த காகிதச் சுருளை எடுத்து மெல்ல விரித்த வித்யா, ஆச்சரியத்தில் தடுமாறி னாள். காரணம் தாளில் அவள்தான் பென்சிலும், கையுமாகப் படுத்த படிபடம் வரைந்து கொண்டிருந்தாள்.

"இது இது, நானல்லவா? நான் வரைஞ்சு கொண்டிருந்த போதா இதை, இதை... இப்போ.... நீங்கள்" தடுமாறினாள் வித்யா.

"அப்படியானால் சங்கீத் அண்ணா, நீங்களா இதை வரைஞ் சீங்க?" ஆர்வத்துடன் குறுக்கிட்டான் ராஜு, அதுவரை பேசாமல் இருந்து விட்டு. ராஜுவை ஒரு முறை ஓங்கி அறையலாம் போலிருந் தது சங்கீத்திற்கு. என்றாலும் பேச்சை மாற்ற வேண்டுமே,

"ஆமாண்டா நான்தான் கீறினேன். அடுத்த வாரம் கவிதாவின் பிறந்த நாள் வருகிறதல்லா? அதற்குப் ப்ரசண்ட் பண்ணத்தான் கீறி னேன். அதற்கிடையில் நீதான் சப்ரைஸ் பரிசை, உடைத்து விட் டாயே" என்று போலியாகச் சிரித்தான் சங்கீத்.

"அடடே என் பிறந்த நாள் திகதியை இவ்வளவிற்கு ஞாபக மாக வைத்திருக்கிறீர்களே. ரெம்பத் தாங்ஸ். நான் பிறந்ததற்கு இந்த முறைதான் என் பிறந்த நாளிற்கு அபூர்வமான, அருமையான பரிசு கிடைத்திருக்கிறது. சங்கீத் ரெம்பத் தாங்ஸ். ஆனால் ஒரு சந்தேகம். படம் ரொம்ப அழகாக இருக்கிறது என்று சொல்ல வேணும் போலி ருக்கிறது. ஆனால் அப்படிச் சொன்னால் படத்தில் இருக்கிற நான் அழகில்லையே என்று நீங்கள் நிச்சயம் கேலி செய்வீர்கள். அதெப் படி நான் அழகில்லாமலும், என் படம் அழகாக இருக்கவும் முடி யும்" கலகலவென்று சிரித்தாள் வித்யா.

எல்லாமே விளையாட்டுத் தானா இவளிற்கு என்று கேட்க வாய் எடுத்தவனை டாக்டர் வேதகிரியின்,

"அட்டா, நீங்கள் இங்கேயா இருக்கிறீர்கள். உங்களை எங்கெல் லாம் தேடுவது. ஆற்றில் குளிக்க வரவில்லையா" என்ற குரல் இடை மறித்தது.

அவர் பின்னால் சிறிது தூரத்தில் வாணியும் விஜிதாவும் வந்து கொண்டிருந்தனர். விரித்தபடி வித்யாவின் கையிலிருந்த படத்தைக் கண்டதும் அவர் விழிகள் வியப்பால் விரிந்தது.

“டாக்டர் மாமா, அதைப் பார்க்கிறீங்களா? ஓ...! சங்கீத் தான் வரைஞ்சார் அழகாக இருக்கிறதல்லவா” விகல்பமில்லாமல் பேசிய வித்யாவையும், சங்கீத்தையும் மாறிமாறிப் பார்த்த அவர், ஏதோ சொல்லத் துடித்த தம் வாயைக் கட்டுப்படுத்திக் கொண்டார்.

“அப்படியே அச்சாகக் கவிதா மாதிரியே இருக்கு. இப்படியே என்றைக்கும் குட் ப்ரண்ட்சாக இருந்தால் நல்லது தான். சரி. இதோ விஜி வந்து விட்டாள். உன்னை ஒரு பாட்டுப் பாடிக் காட்டட்டாம்’, என்று அப்போ தொட்டுத் துளைத்தெடுக்கிறாள்” என்றவாறே வித்யாவின் கையிலிருந்த தாளை வாங்கிச் சுற்றித், தம் கையிலிருந்த பத்திரிகையுடன் கவனமாக வைத்தார்.

“ஆமாம் கவிதா. வாணி சொல்றாள் நீ ரொம்ப நல்லாப் பாடுவியாம் என்று. சுத்த சங்கீதப் பாடல் வேண்டாம். ஏதாவது பழைய பாடல் ஒன்று பாடேன்” என்று தகப்பனைத் தொடர்ந்தாள் விஜிதா.

தயக்கத்துடன் மறுத்த வித்யாவை விட்டால் தானே அவள்.

“ஏதாவது பாட்டுப் பாடேன் கவிதா. அடேயப்பா இதென்ன படம்? சங்கீத் நீங்கள் இப்படிப் பெரிய ஆர்ட்டிஸ்ற் என்று தெரியாதே. எப்படி இந்த ஆடு பாலமும் ஆற்றோரமும் கீற முடிந்தது. அதே மாதிரி நான் கீற எடுத்தேனானால்..... கழுதை கீறப் போனால் குரங்காகிடும். குரங்கு கீறப் போனால் என்னை மாதிரியாய்ப் போய் விடும்” விஜி ஆச்சரியப்பட்டாள். அதுவரை தன் கையிலிருந்த படத்தைப் பற்றியே மறந்திருந்த சங்கீத்

“இதை நான் வரையல்லை விஜி, கவிதாவின் கை வண்ணம் இது.” என்று சிரித்தவாறே அவளிடம் படத்தை நீட்டினாலும், ‘நல்ல வேளை டாக்டர் கையிலிருந்ததால் நான் வரைஞ்ச படம் தப்பிச்சுது’ என்று ஆறுதல் அடைந்தான் சங்கீத்.

“அப்பா, நீங்க அடிக்கடி பாடுவீங்களே உங்க கட்டைக்குரலில், இந்தச் சித்திரத்தைப் பார்த்ததும் தான் நினைவுக்கு வருகிறது அந்தப் பாட்டு. அதுதான் அந்தச் “சித்திரம் பேசுதடி, என் சிந்தை மயங்கு

தடி" என்று விஜிதா சொன்னதும் தான் தாமதம், எதிர்பாராத இந்த வேண்டுகோளால் திடுக்கிட்ட சங்கீத்தின் விழிகள் வித்யாவின் விழி களில் எதை எதையோ தேடின. அவன் தேடியதற்குப் பதில் கிடைக் காததாலோ என்னவோ, மறுகணம் வானத்தில் பறந்து கொண்டிருந்த சிட்டுக்குருவி ஜோடியை அண்ணாந்து பார்த்தான்.

"ஆமாம் கவிதா, அது உனக்குத் தெரியுமல்லவா" என்று டாக் டரும் ஆமோதித்து விடவே வித்யாவாலும் மறுக்க முடியவில்லை.

மௌனமான மோகன நிலையில் பாடலிலேயே ஆழ்ந்திருந்த சங்கீத்தின் சிந்தையிலே "என் மனம் நீ அறிவாய், உந்தன் எண்ண மும் நானறிவேன்" என்ற வரிகள் கலந்துறவாடிய போது அவன் உணர் வுகள் சிலிர்த்தன. அந்தச் சிலுசிலுப்பிலே ஆழ்ந்து விட்ட சங்கீத், வித்யா மிகுதியைப் பாடி முடித்ததையே அறியாதவனாய் உணர் விழந்திருந்தான்.

"சங்கீத், நீங்களும் ஏதாவது ஒரு பாட்டுப் பாடுங்களேன்" என்ற விஜியுடன் சேர்ந்து வாணியும் தொணதொணத்தாள்.

"சாரி, விஜி, நான் பாடுவதை நிறுத்தி எவ்வளவோ காலமாகி விட்டதே" என்ற சங்கீத்தை வித்யாவும் விட்டால் தானே.

"அதெப்படி? உங்களிற்குப் பாட்டு வருமென்று இத்தனை நாளும் எனக்குத் தெரியாதே. ஒரே ஒரு பாட்டு ம்.... ம்.." என்று வித்யா வேறு ஆரம்பித்து விடவே,

"சரி சரி. சத்தம் போடாதே. என்னுடன் சேர்ந்து கவிதாவும் பாடி னால், என் பாட்டுத் தொடரக் கூடியதாக மட்டுமல்ல, நீங்கள் கேட்கச் சகிக்காமல் போய் விடாமலும் இருக்கும். எப்படி கவிதா?" என்றான் சங்கீத்.

"இதேதடா புது வம்பு" என்று அவள் தட்டிக் கழித்தாலும், இறுதி யில் இணங்கியவள், அவன் தொடங்கிய பாடலைக் கேட்டதும் வித்யா ஒருகணம் தயங்கினாள்.

"மலரும் கொடியும் பெண் என்பார், மதியும் நதியும் பெண் ணென்பார்" என்று அவன் தொடங்கியது ஏனோ அவளை ஒரு கணம் நெருடியது. கால் ஊனமான பெண் ஒருத்தியுடன் இணைந்து, அவன்

காதற் கணவன், "எல்லாம் உனக்காக" படத்தில் வரும் பாட்டு அது என்று அவளிற்குத் தெரியும்.

சங்கீத் பாட்டைத் தொடக்கி விடவே, வேறு வழியில்லாமல் அவளும் தொடர்ந்து பாடினாள். அவனுடன் சேர்ந்து அவளும் சாதாரணமாய்ப் பாடுவதை, டாக்டர் வேதகிரி மட்டுமல்ல, மலர்வதி அம்மாளும் தான் கவனித்துக் கொண்டிருந்தாள். பாட்டின் போக்கில் பெண்ணிற்கே கால் ஊனமானதால், ஆண் அவள் குறையை நிறைவாக்கப் பாடுவது போல் அமைந்திருந்தது. ஆனால் சங்கீத் ஏதோ ஒரு வரியில் தடுமாறவே, பாட்டை அரைகுறையாய் நிற்பாட்டக் கூடாது என்ற எண்ணமுடன், வித்யா தொடர்ந்து பாட்டைப் பாட வேண்டியதாயிற்று. எனவே சங்கீத்தே கால் ஊனமான தன் குறைகளைச் சுட்டிக் காட்டுவது போலும், அதை வித்யா பொருட்படுத்தாது நிறைவாக்கிப் பாடுவது போலும் இருந்தது, அப்போ பாட்டு சங்கீத்திற்குத் திருப்தியைத் தராமல் இருக்க முடியுமா, என்ன? இறுதியில்,

"நெஞ்சினில் ஒன்றாய் நிறைந்து விட்டோம், நினைவினில் குறைகள் தெரிவதில்லை" என்று வித்யா பாடியபோது, சங்கீத் தன் காதல் கனவுகள் நிறைந்த மனம் மகிழ,

"கண்களில் ஒன்றாய்க் கலந்து விட்டோம். இனிக் காட்சிகள் வேறாய்த் தெரிவதில்லை" என்று தொடர்ந்து பாடினான். சங்கீத்தின் கம்பீரமும் வித்யாவின் நளினமும் நிறைந்த குரலும் இணைந்து குலாவி நின்றது தான் தாமதம்,

"உங்க இரண்டு பேருக்குமே பாட்டு நல்லா வருதே. சித்திரத்திலும் வீணை வாசிப்பதிலும் மட்டுமல்ல பொருத்தம் கவிதா, உனக்கு நல்லாக் கவிதை எழுத வருதென்றால், சங்கீத் உங்களுக்கு நல்லாக் கதை எழுத வருது. போதாக் குறைக்குப் பெயரையும் பாருங்களேன் அப்பா. சங்கீதத்தில் பிறந்த சங்கீத். கவிதையில் பிறந்த கவிதா. அடேயப்பா, கவிதைக்கு இசை கூட்டினால் சங்கீதம். சங்கீதத்திற்குக் கவிதை இன்றி உயிரில்லை. பெயர் கூடவா இப்படிப் பொருந்தும்?" என்று ஆச்சரியக் குறுகுறுப்பில் விஜிதா பட்டென்று வெடித்தபோது, வித்யாவுக்குத் திடீரென்று அவள் மேல் எழுந்த ஆத்திரத்தை எப்படிக் காட்டுவதென்றே தெரியவில்லை. டாக்டர் வேதகிரி தான் வழக்கம் போல்,

"சரி, சரி போதும் உன் தொணதொணப்பு விஜிதா. போய்க் குளிப் பதற்குப் புறப்பட வேண்டாமா?" என்று பேச்சை மாற்றினாலும் அவர் மனம் ஏனோ சங்கீத்திற்காக வேதனைப்பட்டது.

ஆனால் வித்யாவோ, தான் மற்றவர்கள் மனதில் தோற்றுவித்த எண்ணங்களை உணராதவளாய் அவர்கள் கலைந்ததும், சங்கீத்திடம் சொல்லிட வேண்டும். விஜியின் பைத்தியக்காரப் பேச்சினால் சங்கீத் தன்னுடன் தொடர்ந்து பேசத் தயங்கினாலும் தயங்குவான் என்ற எண்ணமிட்டவாறே எழுந்து லதாவுடன் சேர்ந்து கொண்டாள். அவள் அவ்வாறு எண்ணமிட்டதற்கென்ன, மலர்வதி அம்மாளோ வேறுவித மாகத் தன் மனதிற்குள்ளேயே ஒரு தீர்க்கமான முடிவை எடுத்துக் கொண்டாள். அப்படி எடுத்ததில் தான் என்ன தவறு? அவளது பெற்ற வயிறு பட்டபாடு அவளுக்குத்தான் தெரியும் சங்கீத்திற்காக. தான் பேசி முடிச்ச பெண்ணால் அவனது வாழ்வு இருண்டு விட்டதே. இனி யாவது அவனுக்கொரு நல்ல வாழ்க்கை அமைய வேண்டாமா? ஜன னாவது தானாகவே குடும்பத்திற்கு ஏற்ற பெண்ணாகக் கொண்டு வந் தால் போதும் என்று எத்தனை தரம் தான் அடித்துக் கொண்டிருப் பாள். அவள் அப்படி தலைதலையாய் அடித்துக் கொண்டதற்கென்ன? ஜனனோ... ஆண்டவன் அவனுக்காக எழுதி வைச்சதை அவளால் மாற்ற முடியுமா என்ன? அவள் விருப்பப்படி எதுவுமே நடந்திருக்க வில்லையென்று அவளுக்கு அப்போ தெரிந்திருக்க நியாயமில்லை தான். ஆனால் அந்த ஆண்டவன் ஏற்கனவே நடத்தி விட்டிருந்த விளையாட்டோ...

காலமென்றே ஒரு நினைவும்
காட்சியென்றே பல நினைவும். – பாரதி

ஜனன் லண்டனுக்குப் போய் மாதங்கள் மெல்ல மெல்ல ஊர்ந்து மறைந்து கொண்டிருந்தது. ஆக ஒரு வருஷம் மட்டும் தானா போயி ருக்கிறது என்று எத்தனை தரம்தான் சலித்துக் கொண்டால் மட்டும், காலமென்ற சக்கரம் அவளிற்காக இறக்கை கட்டிக்கொண்டா பறந்து விடப்போகிறது? ஆரம்பத்தில் ஜனனின் பிரிவு அவளை வாட்டிய தற்கென்ன, அடிக்கடி அவனிடமிருந்து வந்த கடிதங்கள், அவளை ஓரளவிற்காவது அந்தப் புதிய சூழலை மறக்கச் செய்தது. ஆனால் கொஞ்சக் காலமாக ஜனனின் கடிதங்கள் வருவதில் ஏனோ கால

தாமதம். என்னவாக இருக்கலாம். வித்யாவும் எத்தனை தரம்தான் தனக்குள்ளே இந்தக் கேள்வியைக் கேட்டுக் கொள்வது?

இனிய நினைவுகளையே இழந்தாற்போல் வித்யா சோர்வடைந் திருந்தாள். காரணம் ஜனனின் கடிதம் கடந்த இரண்டு மாதங்களாகியும் வராததால் அவள் உள்ளம் எண்ணாத எண்ணமெல்லாம் ஏங்கி ஏங்கிக் கரைந்தது. கடிதம் அவளுக்கு எழுதப் பொழுது இல்லையென்ற கார ணம் கூறமுடியாத வண்ணம் மலர்வதியம்மாளிற்கும் சங்கீத்திற்கும் அடிக்கடி என்றில்லாவிட்டாலும் மாதத்திற்கு இருதடவையாவது ஜன னிடமிருந்து கடிதம் வந்து கொண்டிருந்தது. ஏன் நேற்றுக் கூட சங்கீத் திற்கு எழுதியிருந்தாரே? எனக்குப் பக்கம் பக்கமாக எழுதத் தேவை யில்லை. ஆனால் இரண்டு வரி கூடவா எழுத முடியாமற்போய் விட்டது? இன்றாவது கடிதம் வருமா வருமா என்று எண்ணி எண்ணிச் சோர்ந்தே போய்விட்டாள் வித்யா. டாக்டர் வேதகிரியிடம் கேட்ட போது ஜனன் தனக்கெழுதும் கடிதங்களிற் கூட, வித்யாவைப் பற்றி ஏனோ இரண்டு மூன்று மாதங்களாகக் குறிப்பிட்டு எழுதவில்லை. அதற்குக் காரணம் கேட்டு அவர் எழுதியபோது, ஜனன் தன்னுடைய காதலே ஒரு கனவென்றும், வித்யாவைத் தன்னை மறந்து விடும்படி யும், தான் வித்யாக்கு ஒரு நாளுமே உரியவனாக முடியாதென்றும் எழுதியிருந்ததைத் தயங்கித் தயங்கிக் கூறியதை நினைத்துக் கண்ணீர் வடிப்பதைத் தவிர வேறென்னதான் செய்ய முடியும் வித்யாவால்?

என்னை அடைய முடியாத நிரந்தர நிலை ஏற்பட்டதென்றால் அதற்கு என் பக்கத்தில் காரணமேயில்லை. அப்படியென்றால் நீங்கள் தான் ஒருவேளை எனக்குரிமையாக முடியாதபடிக்கு, வேறு யாரிற்கா வது உரிமையாகிவிட்டீர்களா ஜனன் என்று கூடக் கண்ணீரால் எழுதி வடித்த நான்கைந்து கடிதங்களிற்கும் பதில் இல்லாததால் கடிதம் எழு தவே தயங்கினாள் வித்யா. போதாக்குறைக்கு டாக்டர் வேதகிரியும் அவளை ஜனனுக்கு எழுதித் தொந்தரவு பண்ணவேண்டாமென்று ஜனன் கேட்டுத் தனக்குக் கடிதம் எழுதியிருக்கிறான் என்று சொன்ன பிறகு அவள் எழுதுவதையே நிற்பாட்டிக் கொண்டாள்.

அன்றிரவு எல்லோரும் தூங்கப் போய்விட்டனர். பக்கத்து அறை யில் படுத்திருந்த வாணியும் தூங்கிவிட்டாள். எனவே திடீரென்று அறை யுள் வந்து விடமாட்டாள் என்றுணர்ந்தவளாகத் தன் பெட்டியின் அடி

யிலிருந்த சில ஏரோகிராம் கவர்களை எடுத்தாள். தேதி வாரியாக ஒழுங்காக அவளிற்கு வரையப்பட்டிருந்த ஜனனின் ஆசைக் கனவு களின் கடிதங்கள் அவை. முதலாவதாக ஒன்றை எடுத்துப் பிரித்தாள் வித்யா. அது அவளிற்கு அவன் எழுதிய முதல் கடிதம்.

"நெஞ்சம் நிறைந்த வித்யா...." என்ற ஆரம்ப வரிகளைப் படிக் கையிலே ஏக்கம் மேலிட்டோடியது அவள் நெஞ்சத்தில். ஜனன் லண் டனை அடைந்த ஒரு மாதத்தின் பின் டாக்டர் வேதகிரி விபரம் தெரி வித்து எழுதியதற்கு மகிழ்ச்சியுடன், தன் ஆசைக் கனவுகளையும் பிரி வின் துயரையும் கொட்டி வடித்திருந்த கடிதம் அது. ஒவ்வொரு எழுத் திலும் ஒவ்வொரு சொல்லிலும் அவன் அன்பே உருக்கொள்வது போன்ற ஒரு பிரமை அவள் மனதில். அடுத்த கடிதத்தில்,

"வித்யா உனக்குக் கடிதம் எழுதிப் பழக்கமில்லை போலும், ஒரே காவியமாக அல்லவா வடித்திருக்கிறாய். காதலே ஒரு காவியம் தானே. இன்னும் இரண்டு நீண்ட ஆண்டுகளிற்கு என் நினைவே உனக்குத் துணை என்றெழுதியிருக்கிறாயே. அதன் பின்னர்தான் என் நினைவின் பரிசை உன் கழுத்தில் உனக்குரியதாக்க வேண்டும். உங்கள் கைகளா லேயே என்ற அடிகளைப் படித்தபோது அந்த நன்னாள் வர இன்னும் இரண்டு ஆண்டுகள் காத்திருக்க வேண்டுமேயென்று தவிப்பாக இருக் கிறதே வித்யா" என்று எழுதியிருந்தான். அடுத்த கடிதத்திலோ,

"ஏன் வித்யா நீ எழுதியிருந்ததைப் பார்த்தால் ஏன் நம்முடைய காதலை ஒரு காவியம் என்றெழுதினேனோ தெரியாது. காவியக் காத லின் முடிவு சோகந்தான் என்று குறிப்பிட்டது நம்முடைய காதலில் பொய்யாகி விடும். நீ வேணுமானால் பாரேன். நம்முடைய காதலில் வெற்றி பெற்ற பிறகு, காதலின் சின்னமான தாஜ்மகாலிற்கே உன்னை நம் தேன்நிலவிற்கு அழைத்துப்போய் எப்படி நம்முடைய காதல் வெற்றி பெற்று விட்டதே என்று உனக்குக் குட்டிக் குட்டிச் சொல்லா விட்டால் பாரேன்" என்றெல்லாம் ஏதேதோ எழுதியிருந்தான்.

அடுத்த கடிதத்தில் குறிப்பிட்டிருந்ததைக் கண்ணீர் மின்ன எடுத் துப் பிரித்தாள் வித்யா.

"வித்யா என்னால் இந்தப் பிரிவைச் சகிக்கவே முடியவில்லை. ஓடிவந்து உன்னை அணைத்துக்கொண்டு அந்த அணைப்பிலேயே இந்தப் பிரிவின் தாகத்தை எல்லாம் துடைச்செறிந்திட வேண்டும்

போல் ஒரே ஏக்கம். தனிமையின் கொடுமை என்னை நிரம்பத்தான் வாட்டுகிறது. வித்யா இன்னும் எத்தனை நாட்கள் என்று, ஒவ்வொரு இரவும் கலண்டரில் நாளைக் கிழிக்கையில், கலண்டரிலேயே காலத்தை மாற்றி அழித்து விடும் சக்தி எனக்குக் கிடைக்கக் கூடாதா என்றுதான் தவிக்கிறேன்'' என்றெல்லாம் காதல் மழை பொழிந்திருந்தான் ஜனன்.

“வித்யா நீ கவிதாவாக எங்கள் வீட்டில் வளைய வருவதை நினைத்தால் வேடிக்கையாயிருக்கிறது. அம்மா, அண்ணா, வாணி, மீனா எல்லோர்க்குமே உன்னை நிரம்பப் பிடிச்சிருக்கு. உன்மேல் ரொம்பப் பிரியம் என்று அவங்க எழுதியிருக்கிறதைப் படிக்கிறபோது, அவங்களையெல்லாம் அழகாக மருட்டுகிற உன்னை நினைச்சால், மருளும் பார்வையுடன் முதல் பார்வையின் சுழற்சியிலேயே என்னை மருட்டியெடுத்த பழைய ஞாபகங்கள்தான் அலை மோதுது. பழைய ஞாபகங்கள் என்றதும், நாம் கண்ட புதுமையான அனுபவங்கள் ஞாபகத்திற்கு வராமல் இருக்க முடியுமா என்ன? எப்படியோ எட்டு மாதங்கள் கழிந்து விட்டது. இன்னும் ஏறக்குறையப் பன்னிரண்டு மாதங்கள் இருக்கின்றதென்ற நினைப்பே கசக்கிறது எனக்கு. வித்யா என் பிரிவின் தவிப்பின் பலனோ என்னவோ முதல் பரீட்சையிலேயே விஷேசமாகச் சித்தியடைந்து விட்டதால் ஆறு மாதப் பயிற்சியுடனேயே அதாவது இன்னும் எட்டு மாதங்களில் உன்னிடம் ஓடி வந்த விடுவேன். பிறகு என்ன என்னவென்பதை நானெழுதியா நீ புரிந்து கொள்ள வேண்டும். அன்பு நிறைந்த வித்யா அடிக்கடி சங்கீத் அண்ணா உன் னைப் பற்றி மெச்சி எழுதியிருந்ததைப் படிக்கையிலே எனக்கு மிகவும் பெருமையாயிருக்கிறது. அண்ணாவின் உணர்வுகளிற்கு உன்னால் துணையாக இருக்க முடியும் என்றெழுதியது உனக்குப் பிடிக்கவில் லையா? ஆரம்பத்திலேயே எழுதியிருக்கிறேன், அண்ணாவுடன் சங் கோஜமின்றிப் பழகு. அவனிற்கு நண்பர்கள் வாய்ப்பது அபூர்வம். அப்படி அபூர்வமாக மாட்டுப்பட்ட ஓரிரண்டு பேர்களையும், ஜெயா வின் பிரச்சனைகளின் பின் ஒதுக்கி விட்டான். இப்போ அவன் தேடும் ஒரு உற்ற நண்பி நீதான். எனவே தயங்காது தாராளமாகப் பழகு. அண்ணா கால் ஊனமான குறையை மறந்து மகிழ்ச்சியாயிருக்க, அவன் கூட அன்பாகப் பழகி, அவனைப் பழைய நிலைக்கு மாற்றினாயா யின் எனக்கு மிகவும் மகிழ்ச்சியாயிருக்கும் வித்யா. இன்றுடன் நான்

வந்து ஒரு வருடமும் இரண்டு மாதங்களும் ஏழு நாட்களும் ஆகிறது உன்னைப் பிரிந்து வந்து. இன்னும் சில மாதங்களில் என் அன்புக் கண்மணியுடன் கலந்திட, என் அன்பு மனைவியுடன் பிணைந்திட ஓடி வந்திடுவேன்."

ஜனனின் மடல்களிலேயே மனதைத் தோய விட்டிருந்த வித்யா வின் கண்களிலே வடிந்திருந்த ஈரம் காய்ந்து விட்டிருந்தது. அதன் பிறகும் இரண்டொரு கடிதங்களில் காதல் மழை பொழிந்திருந்தான் ஜனன். அதன் பிறகுதான் திடீரெனக் கடிதங்களின் வருகை நின்றது. கோடை மழைபோல் துன்பமும் இன்பமும் கலந்த நினைவுகளில் திக்கு முக்காடினாள் அவள். அவளிற்கு ஜனனுக்குத் தான் முதற் தடவையாக் கடிதம் பக்கம் பக்கமாக எழுதியது இன்னும் நன்றாக ஞாபகத்தில் இருக்கிறது. ஜனனின் முதற் கடிதத்தை டாக்டர் வேதகிரி கொணர்ந்து தந்தபோது அவளடைந்த தவிப்பு, இரவுவரை நிலை கொள்ளாமல் தவித்தது. அன்றிரவு, அந்த ஏகாந்த இனிமையிலே ஆனந்தமும் சோக மும் கலந்தோடிய அவன் கடிதத்தைப் படித்த பின்னர் அவனிற்குத் தன் ஆசையெல்லாம் கொட்டிக் கடிதம் எழுதித் தீர்த்ததும் அவள் நினை விலே நிழலாடின. ஏன் ஜனன், ஏன்? ஏன்? எனக்கெழுதாத காரண மென்ன? என்று எண்ணிக்கைக்கு அடங்காத ஏன்களைத் தொடுத்தாள். அதில் ஒரு ஏனிற்காவது விடை கிடைக்கவில்லை. விடை கிடைக் காமலேயே அதை எதிர்பார்த்து எதிர்பார்த்து மாதங்கள் உருண்டோ டின. ஏமாற்றத்திலேயே அவள் மனம் சாம்பிக் கொண்டிருந்தாலும் அவள் முகத்தில் மட்டும் போலி முறுவலும் பொங்கிவரும் குறும்புப் பேச்சுகளுமாக நிறைந்து கிடந்தது.

## 9

களிபடைத்த மொழியினாய் வா வா வா
களை சிறக்க வந்தனை வா வா வா. – பாரதி

சங்கீத் அன்று தன் ரவலிங் காக்கில் தன் உடுப்புகளையும், புத்த கங்களையும் திணித்துக் கொண்டிருந்தான். ஏதோ பத்திரிகை ஆசிரி யர்கள் நடத்தும் கூட்டமொன்றில் பங்குபற்றுவதற்காக நான்கு நாட்

கள் கொழும்பிற்குச் செல்ல வேண்டியிருந்ததால், வைத்த உடுப்புக் களை ஒழுங்காக வைக்காததனால், ரவலிங் பாக்கின் பூட்டைப்பூட்ட முடியாது போராடிக் கொண்டிருந்தான் சங்கீத்.

"ஐயோ இந்தக் கிழட்டுப் பாப்பாவிற்குத் துணி அடுக்கக் கூடவா தெரியவில்லை. இதுக்குத்தான் சொல்றன், பெண்கள் செய்யிற வேலையை நீங்க செய்யப் பார்க்கக் கூடாது" நொடித்தவாறே உள்ளே புத்தகமும் கையுமாக வந்தாள் வித்யா. அவனை விலக்கிவிட்டு விடு விடென்று உடுப்புக்களை வெளியே எடுத்துக் கட்டிலில் பரப்பினாள் வித்யா.

"ஏன் இதெல்லாம் பெண்கள்தான் கட்டாயம் செய்யணும் என்ற எழுத்தோ" கட்டிலில் வசதியாய்ச் சாய்ந்தவாறே கேட்டான் சங்கீத்.

"பெண்கள் செய்யணுமென்ற எழுத்தை ஆண்கள் மாற்றப் பார்த் தால் இது மாதிரித்தான் முடிவு."

"எனக்கு இதெல்லாம் செய்ய யார் இருக்கிறாங்க கவிதா, இருந்த ஒருத்தியும் தான் போடா முடப்பயலே என்னால இதெல்லாம் செய்ய முடியாதென்றோ என்னவோ அவளும் பறந்திட்டாளே" சுருக்கென்று விட்டது வித்யாவிற்கு.

"சங்கீத் என்ன பேச்சு இதெல்லாம். வளவளவெண்ணாமல் வாயை மூடமாட்டீங்க. ஏன், அம்மா இல்லை, வாணி இல்லை, ஏன் நான் தானும் இல்லையா?" கண்கள் கலங்கக் கேட்டாள் வித்யா.

"ஏய்.. ஏய்... இதென்ன அசட்டுத்தனமாய்க் கோவிக்கிறாய். என் கால் குறைபாட்டைச் சொன்னால் விளையாட்டாக எடுக்க எனக்குப் பழக்கியவளே, வினையாக எடுக்கிறாயே? அது இருக்கட்டும்! நீ இருக் கிறாய் தான் எனக்கு... ம்... இதெல்லாம் செய்ய. அதற்காக, ஏன் ஒவ் வொருத்தர் காலையும் பிடிக்கணும் இந்தச் சின்னச் சின்ன வேலை யெல்லாம் செய்ய. வேறு வினையே வேண்டாம்" என்றான் சங்கீத்.

"ஏனாம் உங்களிற்கு அந்த வினை. நீங்களே உங்களிற்கொரு கால்கட்டை போட்டிட்டால், அடுத்த பெண்கள் ஒருத்தர் காலையும் பிடிக்கவோ கெஞ்சவோ தேவையில்லையே."

குறுகுறு என்று வித்யாவையே நோக்கினான் சங்கீத்.

“ஏன் எனக்கு நீயும் அடுத்த பெண்ணா? நீ இதை அடுக்கித் தான் விட்டா தேய்ஞ்சா போய்விடுவே?”

“ஆமாம், ஆமாம்! தன்னுடைய வேலைக்கென்றால் வளைய வளைய பேசுறதற்கு மட்டும் ஒண்ணும் குறைச்சலில்லை” என்று வெடுக் வெடுக்கென்று பதிலளித்தவாறே புத்தங்களை ஒழுங்காக அடுக்கினாள் வித்யா.

“அடடே, இதென்ன டைரி, உங்களிற்கிருக்கிற கிறுக்குப் பழக் கங்களில் இதுவும் ஒன்றா?.. ம்.. எந்தக் கனவுலகக் கன்னியைப் பற்றி என்னென்ன கண்றாவியெல்லாம் கிறுக்கியிருக்கீங்களோ?” முன்னால் வந்து விழுந்த பின்னலைப் பின்னால் பிடித்துத் தள்ளினாள் வித்யா.

“உன் பின்னல் நீளுதோ இல்லையோ, உன் வாய்மட்டும் நல்லா நீளுது. வால் இல்லாத குறைச்சல் தான் உனக்கு. குறுக்குப் புத்திக் காரங்களிற்குத் தான் எல்லாமே கிறுக்கலாயிருக்கும்” என்று சொல்லி முடிக்க முன்னமேயே அவனை இடைவெட்டினாள் வித்யா.

“ம், ம், காமாலைக் கண்ணுக்குத்தான் காண்பதெல்லாம் மஞ்சள். அதாவது கிறுக்குப் புத்தி எனக்கில்லை. சரி, சரி. பேச்சை மாத்தா தீங்க. எத்தனை கவிதை அதிலே எழுதி, அதாவது எனக்குத் தெரியா மல், அதாவது காதல், கவிதை. அதாவது உங்க இதயராணிக்கு எத்தனை எழுதி வைத்திருக்கிறீங்க சங்கீத்” எப்படியாவது மலர்வதி அம்மா ளின் அங்கலாய்ப்புக்கு ஒரு முடிவு கட்டுகிற நோக்கில் அவனை வம்புக்கிழுத்து எப்படியாவது அவனை மீண்டும் திருமணம் செய்யச் சம்மதிக்க வைக்க வேண்டுமென்ற நினைப்பு அவளிற்கு.

“அதுவா, உன்கிட்ட எப்படிச் சொல்ல முடியும்? அதை என் இதயத்துக்குள்ளே மலர்ந்திருக்கும் இன்ப ராணிக்கல்லவா சொல்ல முடியும்?”

“உங்க இதயமும் வேண்டாம். ராணியும் வேண்டாம். சொல்லப் போனா, இந்த மூடு மந்திரப் பேச்சும் வேண்டாம். எப்ப பார்த்தாலும் தட்டிக் கழிக்கத்தான் தெரியும். இந்த வீட்டிற்கு விளக்கேத்த மருமகள் மீண்டும் எப்ப வருவாளோ என்று அத்தை அலுத்துக்கிறா” என்றவ ளைக் குறுக்கே மறித்தான் சங்கீத்.

"ஏன் - அம்மா அலுத்துக்கிறா என்றால், நீயே மனம் வைச்சால் அதைத் தீர்த்திடலாமே" சொல்லத் தெரியாமல் தயங்கினான் சங்கீத்.

"நானா, நானா, நான் மாட்டேன்னு சொன்னேனா எப்பவாவது" ஜனனின் நினைப்புடன் தொடங்கிய வித்யாவிற்குப் பேச்சு தன்னைப் பற்றித் திரும்புவதை நிறுத்திவிட வேண்டும். சங்கீத்தை, அவன் திருமணத்தைப் பற்றிப் பேச்செடுத்ததால் அவன் தட்டிக்கழிக்கிறான் என்ற நினைப்பு. ஆனால் சங்கீத்திற்கோ, அவள், வித்யா இந்த வீட்டிற்கு மருமகளாக வருவதை மறுக்கவில்லையே. அப்படியானால் அவளும் என்னை... என்னை...

"சரி, சரி என்னைப் பற்றிய பேச்சு எதற்கு? உங்க கதையெப் படி? நீங்க என்ன இன்னும் இன்ப ராணி, இதய ராணி என்று ஆலோலம் பாடியே காலத்தைக் கடத்துறீங்க. ஆள் எனக்கு மட்டும் யாரென்று சொல்லுங்களேன். அடுத்த முகூர்த்தத்திலேயே முடித்து விடுவேன்."

"கொஞ்சம் மூச்சு விட்டுத்தான் பேசேன். உனக்குத் தெரியாதா என்னுடைய காதலி யாரென்று?"

"ஓ நல்லாத் தெரியுமே. இந்த ஒற்றைப்புத்தி முற்கோபக்காரக்கு, மூக்கணாங்கயிறு போட, மூக்கும் முழியுமாக முழு முட்டாளொருத்தி வர்றபோது நிச்சயமாகத் தெரியுமே" படபடவென்று பொரிந்தாள் வித்யா.

"சரி சரி பழையபடி தொணதொணக்காதே. உன் கூடச் சேர்ந்து நானும் வழவழவென்று பேச ஆரம்பிச்சிட்டேன். எனவே மூச். சத்தம் போடாமல் வேலையைப் பார். இல்லை, வழியை விடு. ஏன் முகத் தைத் தூக்குகிறாய் இப்போ? நான் ஏற்கெனவே இஞ்சி தின்ற உன் மூஞ்சியின் கூட்டத்தைப் பார்த்திருக்கிறேன். வேண்டுமானால் இந்த முறையும் மிருகக் காட்சிச் சாலைக்குப் போய்ப் பார்த்துடறனே. உன்னை நினைவில் வைச்சிருக்க... உம். ம்... உன் ஆசையைக் கெடுப்பானேன். இந்தா இருக்கு டைரி. படித்துப் பார்க்க..." என்று முடிக்க முன்பே அவன் கையிலிருந்த டைரியைப் பறித்தாள் வித்யா.

"எப்ப பார்த்தாலும் அவசரப்புத்தி, அசல் அவசரக்குடுக்கு. இந்தா இருக்கு டைரி. படித்துப் பார்க்க விடமாட்டேன் என்று சொல்லி

முடிய முன்னேயே பறித்து விட்டாயே" என்றவாறே மீண்டும் அவளிடமிருந்து டைரியை பறித்து தன் சூட்கேசினுள் போட்டான் சங்கீத்.

"ஐயையோ, வாணி வீணையைக் காலால் தட்டி விட்டாயே" என்ற வித்யாவின் திடுக்கிட்ட குரலைக் கேட்டதும் வெகுண்டு திரும்பினான் சங்கீத். அங்கே வாணி இருந்தால் தானே. வீணையும் வைத்த இடத்திலே அசையாமல் இருந்தது.

"என்ன கவிதா இது? எப்பவும் விளையாட்டுத் தானா உனக்கு?" என்றவாறே திரும்பியவன் அருகில் அவள் இருந்தாள் தானே. வாசலில் டைரியும் கையுமாக நின்றாள் வித்யா.

"வாணியுமில்லை, ஒரு கோணியுமில்லை. என் கையிலிருப்பதைப் பார்த்தீங்களல்லவா? நான் ஆறுதலாக ஒருவரி தப்பாது படித்து விட்டுத் தர்றன். எப்படி ஏமாற்றி விட்டேன் பார்த்தீங்களா? இந்தமுறை மறக்காமல் அந்தக் காட்சிச்சாலைக்குப் போய் உங்களேயே, அதாவது அந்த இஞ்சி தின்ற குரங்குச் சாதியைப் பார்த்து விட்டு வர்றீங்களா? குட்பை" என்றவள், மறுகணம் சிட்டாகப் பறந்து விட்டாள். அவளைத் துரத்த நினைத்தவனாக வெளியே வந்த சங்கீத், தாயைக் கண்டதும், பிறகு பார்க்கலாம் என்ற எண்ணமுடன் பேசாது தன் அறைக்குள்ளே திரும்பிப் போனான்.

**பேசாப் பொருளைப் பேச யான் துணிந்தேன்**
**கேட்கா வரத்தைக் கேட்க யான் துணிந்தேன்.** – பாரதி

சங்கீத் போய் நான்கு நாட்களாகி விட்டன. ஹோலில் போன் மணி கிணுகிணுக்கவே ஓடிச் சென்று எடுத்தாள் வித்யா.

"நான் சங்கீத்... அங்கே யாரு பேசுறது" சங்கீத்தின் குரல் டெலிபோனில் கேட்டதுதான் தாமதம், மறைந்திருந்த வாய்த்துடுக்கு மீண்டும் எட்டிப் பார்த்தது.

"உங்க இரட்டை வால் தான் பேசுறன். வீட்டில் எல்லோருமே டாக்டர் மாமா வீட்டுக்குப் போயிட்டாங்க. ஏதாவது அவசரமோ இல்லை அவசியமோ?"

"ஒரு அவசியமுமில்லை. சும்மாதான் போன் பண்ணினன். ஆமா அதைப் படிச்சிட்டியா கவி?"



“கவியா, அதென்ன புதுநாமகர்ணம். ஆமா எதைப் படிச்சிட்டியா என்றீங்க? உங்க மூளையையா சங்கீத?”

"உன் தலையை. என் தலைக்குள் மூளையே இல்லையென் பதை உணர உனக்குத் தலைக்குள் மூளை இருந்தால்தானே. அந்த... அந்த... டைரியைப் பற்றித் தான் கேட்கிறன்."

"சீ.. சீ.. அன்று விளையாட்டாய்த்தான் டைரியை எடுத்தேனே ஒழியப் படிக்கிறததுக்கல்ல. அவ்வளவுக்கு இங்கிதம் தெரியாத முட் டாளா நான் உங்கள் இரகசியங்களைப் பற்றி அறிய"

"அதில் இரகசியம் என்று உனக்கு ஒன்றுமே இல்லை கவி" ஆழமாக ஒலித்தது சங்கீத்தின் குரல்.

"எனக்கு ஒன்றுமில்லையா? அதனால் தான் அதை மூடி மூடி வைத்தீங்களாக்கும்"

"கொஞ்சம் அமைதியாய்த்தான் பேச மாட்டியா எதற்கெடுத்தா லும் ரெடிமேட் ஆன்ஸ்சர் தானா உனக்கு. உன் பேச்சே நீ இன்னும் டைரியைப் படிக்கல்லை என்று காட்டுது. அது கிடக்கட்டும். எனக் குள்ளேயே நீ மூடுபட்டுக் கிடக்கையில் உனக்குத் தெரியாத இரக சியம் அப்படி என்ன அதில் இருக்கப் போகிறது."

"ஒரே மூடுமந்திரமாக இதென்ன பேச்சு சங்கீத்" படபடப்புடன் வித்யாவின் குரல் ஒலித்தது.

"மந்திரமுமில்லை, தந்திரமுமில்லை. எனக்குள்ளே நீதான் மந் திரக் கண்ணாலே சந்திர ஒளி வீசும், சுந்தர வடிவே, உன் துணை நாடாவா?"

"சங்கீத். இதென்ன பாட்டும் கூத்தும் ரெலிபோனில். சுத்தப் பயித்தியக்காரத்தனமான....."

"அட்டா. ஏன் இப்படிப் படபடக்கிறாய் கவிதா. டைரியைப் பிரித்துப்படி. அப்ப என் பாட்டும் கூத்தும் பயித்தியக்காரத்தனமானதா இல்லையா என்று புரியும். பை! பை!" என்று சிரித்தவாறே போனை வைத்து விட்டான் சங்கீத். அவன் பேச்சும், போக்கும்.. புதிரா.. சந்தே கமா. எதற்கும் டைரியைப் பார்ப்போம் என்ற எண்ணமுடன் மாடியி லுள்ள தன் அறைக்குச் சென்று உள்ளம் படபடக்க அதைப் பிரித்தாள் வித்யா. அடுத்த நாழிகை.. எங்கோ ஓர் ஏகாந்தச் சூழலில் சிக்கிவிட் டாள். முதல் பக்கங்களில் எதுமே எழுதப்பட்டிருக்கவில்லை. மார்ச்

பதினொன்று. டைரியை அன்றிலிருந்துதான் ஆரம்பித்திருந்தான் அவன். காரணம்...

**நினையாத நினைவெல்லாம் விளைந்து கூடி**
**நினைத்த பயன் காண்பதவன் செய்கையன்றோ.**
– பாரதி

"இருண்ட என் வாழ்வில் ஒளிச்சுடர் தோன்றிய நன்னாள் இன்று தான். ஆமாம். என் இதயவானில் மீண்டும் கவிதை பிறந்த நாள். எவ்வளவோ மாதங்களின். பின், என் சுய உணர்வு மெல்ல மெல்ல மீண்டு கொண்டிருந்த பின்னும், டைரியைத் தொட்டுப் பார்க்கவில்லை. ஆனால் இன்று, மீண்டும் டைரியைப் பிரித்து, மீண்டும் பேனாவை ஓட வைத்த நல்ல நாள். சுய உணர்வுகள் திரும்பியபின் என் உணர்ச்சி களை மீட்டி, எழுதத் தூண்டி விட்டாள் அவள். சுடர் விட்ட குத்து விளக்கெதிரில் கலைவாணியாக அமர்ந்து, என் வீணையை மட்டும் மீட்டவில்லை. அவள் என் இதய வீணையின் நரம்புகளையும் சுண்டி இழுத்து, அதிலே எவருக்குமே கேட்காத மெல்லிய கானமொன்றை மீட்டி விட்டாள் அவள். நினைவு நல்லது வேண்டும். நெருங்கின பொருள் கைப்பட வேண்டும் என்ற இறுதி வரிகளை அவள் பாடியே. மங்கள நினைவுகளை வீணையில் மீட்டினாள். அவளை முதன் முதல் கண்டபோது, கொள்ளை அழகுடன் கலைவாணியே என்கண் முன் தரிசனம் தர அமர்ந்துவிட்டாள் போல் பரவசமுற்று விட்டேன்."

**தீஞ்சொற் கவிதையஞ் சோலை**
**தனில் தெய்வீக நன் மணம் வீசும்.** – பாரதி

இன்றுடன் அவள் வந்து இரண்டு இனிய நாட்களாகி விட்டன. ஏன்தான் இவளுருவம் அடிக்கடி நினைவில் நிழலாடுகிறதோ? என் அறைக்கும் வரும்போது, வெறுமையாக வராள். மங்கலப் பொரு ளாக மங்களமாகவே வருவாள். அன்று வீணையுடன் குலாவிய அவள் விரல்களில் இன்று மலர்கள் கொஞ்சியது. அதுவும் ஜெயா மாதிரி ரோஜா, ஒக்கிட்ஸ் என்று பகட்டுப் பூக்களை அவள் நாடாமல் மல் லிகை, சாமந்தி, பவளம், பன்னீர் என்று மணக்க மணக்க, இதமான சுகம் தரும் மலர்களையே கொண்டு வந்து அடுக்குவாள்.

**யாழும் குழலும் உன் மொழிதானா?** – பாரதி

கவிதா என்னுடன் கலகலப்பாகப் பேசத் தொடங்கி விட்டாள். அடேயப்பா, குழந்தை உள்ளமே அவளுக்குச் சொந்தமானதோ? அழகும், அன்பும் குறுகுறுக்கத் துடிப்புடன் வெடுக்கெடுக்கென்று பேசும் கலையே அவளிற்குக் கைவந்ததுதான். எப்படித்தான் அவளுக்கு அவ்வளவு அழகாகப் பதில் சொல்லத் தெரிகிறதோ?

**ஆடுதல், பாடுதல், சித்திரம், கவி,**

**ஆதியவைகளில் உள்ளம் ஈடுபட்டென்றும் நிற்பவள்**

– பாரதி

இப்போதெல்லாம் அடிக்கடி வருவாள் கவிதா. அந்த வருகைகளே, அவளது கலை உணர்வுகளை எனக்கு மெல்ல மெல்ல எடுத்துக் காட்டின. அழகான இதழையும், விழியையும் விரித்து முகிழ்த்து இனிமையாகப் பாடுவாள். தூரிகை கொண்டு சித்திரம் தீட்டும்போது, அவள் வரைவது அஜந்தாவா. அல்லது அவள்தான் அந்த அழகு அஜந்தா ஓவியமா? வீணையின் நரம்புடன். கலந்துறவாடும் விரல்கள் பேசும் கவிதையின் அழகே தனிதான். அவளே அழகின் கொள்ளை ரூபம் அல்லவா! அற்புதமான கலைராணிதான் அந்தக் கவிதா.

**பிள்ளைக் கனியமுதே,**

**பேசும் பொற்சித்திரமே...** – பாரதி

இன்றுதான் அவள் சம்மதித்து விட்டாள் சித்திரம் பயில. சித்திரப் பயிற்சிக் கழகத்திலிருந்து திரும்பி வரும்போது. அவள் கண்களில் நான் கண்ட நிறைவு... என் நெஞ்சில் நிறைந்தது. அவள் சித்திரங்களைத் திருத்தும் சாக்கில் அவளையே சித்திரமாய்க் கண்டேன். அவளை எப்படியாவது சித்திரமாய்த் தீட்டிவிட விழைந்தேன். அதன் பயன்... அவளறியாமலே அவள் வீணையை ஆழ்ந்து வாசிக்கும் போது முன் கூடத்திலிருந்த கண்ணாடியின் பிரதிபலிப்பினால் ஒவ்வொரு நாளும் என் தாளில் மட்டுமல்ல, என் நெஞ்சிலும் பதியத் தொடங்கி நீக்கமற நிறைந்து விட்டாள். நெஞ்சில் நிறைந்தவள் என்று தலைப்பை அந்தச் சித்திரத்திற்கு கொடுத்தது மட்டுமல்ல, என்னையே அவளிற்குக் கொடுத்து விட்டேன். அவள் அருகில் இல்லாத பொழுதினிலே அவள் நினைவே துணை. அவளின் நினைவின் பிரதிபலிப்புத்தான்

இந்தப் பேசாத பொற்சித்திரம். கவிதா! கவிதா! நீ ஓர் அற்புதமான பேசும் பொற்சித்திரம்.

பொங்கி வரும் பெரு நிலவு
போன்றவொரு மதிமுகமும். – பாரதி

வானில் உலாவும் மதிக்குத்தான் தேயும் காலம் வந்து போகும். ஆனால் என் இதய வானில் கவிதாவின் நினைவு ஓர் வளர்பிறைக் கனவு. அந்த வளர்பிறை என் நெஞ்சிலே வளர்ந்து முழுமையாகி ஒளிவீசும் பூரணியாகி விட்டாள். அவள் முகமே பூரண மதி. அந்தப் பூரண மதியினுள்ளே அவள் நுதலோ அழகான பிறை. விழியோ ஒளி வீசும் சுடர் தான். இதழ்களிலிருந்து பிறக்கும் சொல், அவை என் வாழ்க்கைக்கு ஒளி கூட்ட வந்த ஒவ்வொரு கவிதைகள். இவள் என்ன? இப்படிச் செய்து விட்டாள்? இவளைத் தவிர வேறு எதையுமே பற்றிக் கவிபாட முடியாதபடி கவிஞனாக ஆக்கிவிட்ட கவிதைச் சுரங்கம் தான் அவள். அது தான், அவள் பெயரே கவிதா தானே!

ஒவ்வோர் சின்னஞ்சிறு நிகழ்ச்சிகளும் அந்த டையிரில் ஒவ்வோர் அற்புதக் கவிதை மலர்களாய் மணந்தன. ஒன்றரை ஆண்டுகளிற்கான அவன் உணர்வும் நினைவும் அதில் பொங்கித் தழும்பி வழிந்தது. ஒவ்வொரு நிகழ்ச்சியிலும், அவனது உணர்வுகளுடன் உறவாடினாள் கவிதா. அவன் உயிரில் கலந்து ஒவ்வோர் கணமும் குலாவினாள் கவிதா. வித்யாவின் நினைவிலேயே நிலைக்காத சின்னஞ்சிறு நிகழ்ச்சிகள், அவன் கனவில் விஸ்வரூபமெடுத்து ஆயிரமாயிரம் இன்பக் கதைகள் பேசின. டைரியின் ஒவ்வொரு தாளிலும் அவன் உணர்வுகள் கவிதைகளாக மட்டுமா உருமாறியிருந்தது? ஆங்காங்கே சிலசில இடங்களில் சில படங்கள் வரையப்பட்டிருந்தன. எல்லாச் சித்திரங்களிலும் அவள் தான் சிரித்தாள். உறைந்தே போய் விட்டாள் வித்யா.... மறுபடி மெல்ல டைரியின் தாழ்களைப் புரட்டினாள் தொடர்ந்து.

பண்ணுசுதி நீ யெனக்கு
பாட்டினிமை நானுனக்கு. – பாரதி

இதுவரை என் உணர்வுகள் எனக்கு மட்டும் தான் சொந்தமாக இருந்தது. இன்றோ பாடல்களாலேயே நாங்கள் எங்கள் எண்ணங்களைப் பரிமாறிக் கொண்டோம். கவிதா தன்னை மறந்து, பேராதனை

மலர்க் காட்டில், வெற்றுத்தாளில், கங்கையின் வெள்ளத்தை வடித்துக் கொண்டிருந்த அதே வேளையில் அவளை நான் வரைந்து கொண்டிருந்தேன். அவள் அறியாமல் அவளை ஆசை ஆசையாக நான் வடித்த இரண்டாவது சித்திரம். இந்தச் சித்திரம்தான் என் மனதை அவளிற்குத் திறந்து காட்ட வழிவகுத்தது. சித்திரம் பேசுதடி, என்ற பாடலை அவள் பாடுகையில் 'என் மனம் நீயறிவாய் உந்தன் எண்ணமும் நான் அறிவேன்' என்ற வரிகளை ஏன் அவ்வளவு அர்த்தமுடன் அவள் பாட வேண்டும்? இதுவரை நான் தயங்கிக் கொண்டிருந்தேன், நான் ஏற்கனவே மணமானவன், காலும் ஓரளவு ஊனமுற்றவன், அவளிற்குத் தகுதியானவனா நான் என்று. ஆனால் அந்தக் குறைகளைத் தன் நிறைஞ்ச மனசால் நிறைவாக்கிக் கொண்டவள் தான் அவள். இல்லாவிட்டால், நான் 'மலரும் கொடியும் பெண்ணென்பார், மதியும் நதியும் பெண்ணென்பார்' என்ற பாடலைப் படிக்கும்போது, ஆண் படிக்கும் வரிகளை அவள் படிக்க வேண்டும் போல எனக்குத் தோன்றியதால், நான் ஓரிடத்தில் வேண்டுமென்றே நிறபாட்டியதைப் புரியாமலா அவள் தொடர்ந்து பாடியிருப்பாள். இறுதியாக, 'நெஞ்சினில் ஒன்றாய் நிறைந்து விட்டோம், நினைவினில் குறைகள் தெரிவதில்லை' என்று இணைந்து படித்தபோது அவள் இணைந்த உள்ளத்தைப் புரிந்து கொண்டபோது நான் அடைந்த பரவசம்... எழுத்தில் வடிக்கவே இயலாத அற்புதமான அந்நியோன்யமான உணர்வு அது. அடடா... அதே குரலில் அவளைக் கொண்டு 'பாகப் பிரிவினை' படத்தில் வரும் "தங்கத்திலே ஒரு குறையிருந்தாலும், தரத்தினில் குறைவதில்லை" என்ற பாடலையும் படிக்கக் கேட்டிருக்கலாமே என்ற நினைவு வந்தது. அதற்கென்ன? அவளைக் கொண்டு எனக்கு மட்டுமே, எனக்காக மட்டுமே படிக்கச் சொல்லிக் கேட்டால் மறுக்கவா போகிறாள் என் கவிதா...

போயின, போயின துன்பங்கள் – நினைப்
பொன்னெனக் கொண்ட பொழுதிலே – பாரதி

கவிதா என்னை விரும்புகிறாளென்ற எண்ணமே என் கடந்த கால வாழ்வை வெறும் கனவாக மாற்றிவிட்டது. என்னுடைய மனைவி ஸ்தானத்தை அடைய அவள் உளமாரச் சம்மதித்து விட்டாளென்பதை உணர இவ்வளவு மாதங்களாகி விட்டதே. ஆனால் அவள் வாய் திறந்து சம்மதமென்று ஒரு சொல் சொல்லவில்லையே. ஆணாக இருந்தும்

என் கடந்த கால வாழ்வு காரணமாக நான் தயங்குகிறேன். தன் அந்தஸ்து எங்களிற்கு ஒவ்வாததால் அவள் தயங்குகிறாள். அதுமட்டுமா. அவள் ஒரு பெண். தயக்கம் பெண்ணின் சொத்து. அதை வெல்ல அவளால் முடியுமா?...

முல்லைச் சிரிப்பாலே – எனது
மூர்க்கந் தவிர்த்திடுவாய். – பாரதி

கவிதா ஒரு கலை உணர்வுகளின் புதையல் நிறைஞ்ச பொக்கிஷம். ஆமாம், அவள் எப்படித்தான் என் கலை வெறியைக், கலைப்பித்தைக் கலை நிறைவாக மாற்றி மலர்ச்சியடையச் செய்து, என் வாழ்வை மறுமலர்ச்சி அடையச் செய்து விட்டாள். என்னையறியாமலே என் அவசரமும், பதட்டமுமான நினைவுகளைக் கூட பக்குவம் அடையச் செய்து விட்டளே. வாக்கு வன்மையே இல்லாமல் ஏகாந்தத்திலேயே சொந்தம் கொண்டாடும் நான், எப்படி அவளுடன் வார்த்தையாடும் அளவிற்கு. ஏன் வாதாடுமளவிற்கே மாற்றி விட்டாளே! விழியாலும் மொழியாலும் கதை பேசிப் பேசியே என் போக்கை மாற்றி விட்டாளே.....

கனவு மெய்ப்பட வேண்டும்
கைவசமாவது விரைவில் வரவேண்டும்... – பாரதி

கவிதாவைப் பற்றி அம்மாவிடம் பேச்சை எடுக்கத் தயக்கமாக இருக்கிறது. யார் கூட இதுப்பற்றிப் பேசலாம் என்று நீண்ட நாட்களாகவே எனக்குள்ளேயே சிந்தித்துக் கொண்டிருந்தேன். அப்போது தான் ஜனனின் கடிதம் வந்தது. அவன் எனக்கு வயதால் தான் தம்பி. மற்றபடி ஒரு உற்ற நண்பன் தான். அவனிடம் சொன்னால் என்ன என்று தயங்கிக் கொண்டேயிருந்தேன், இறுதியில் எழுத முடிவு செய்து விட்டேன். முடிவைச் செயலாற்றியும் விட்டேன். கவிதாமேல் எனக்குள்ள ஆழமான அன்பை மடல் முழுவதும் மணக்க எழுதிப் பொழிந்தேன். அவன் வந்ததும் அவளை என் மனைவியாக்கி விட முடிவு செய்ததையும் ஆழமாய்த் தெரிவித்து விட்டேன். இன்று வந்த ஜனனின் அன்பு மடலை வாசிக்கையில் ஒரே மகிழ்ச்சியாயிருந்தது. தன்னுடைய மகிழ்ச்சி வெள்ளத்திலே மூழ்கி அன்பான வாழ்த்துக்களை நிறைவாகக் கொட்டியிருந்தான் கடிதம் பூராக. இறுதியில்,

“ஏனண்ணா, உனக்கிருந்த உற்சாகத்தில் அண்ணியைப் பற்றி பக்கம் பக்கமாக எழுதியிருக்கிறாய். ஆனால் உன் கருத்தைக் கொள்ளை கொண்ட என் அண்ணியின் பெயரை மட்டும் எழுதவில்லையே. நான் எவ்வளவோ கற்பனைப் பெயர்களுடன் என் அண்ணியை மானசீக மாகப் பார்க்கிறேன். அவளை எப்படி எங்கு சந்தித்தாய், என்ன செய் கிறா தற்போது என்ற எந்தவிதமான விபரமுமே எழுதவில்லை” என்று உற்சாகமாகக் கேட்டு எழுதியிருந்தான். எனவே உடனே இன்னொரு மடல் முழுக்க முழுக்க கவிதா எங்கள் வீட்டிற்கு வந்த நாள் தொட்டு, நடந்ததெல்லாம் விளக்கமாக வரைந்து அனுப்பினேன்.

காலமென்றே ஒரு நினைவும், காட்சியென்றே
பல நினைவும் கோலமும்.... – பாரதி

இன்றும் ஒரு கடிதம் ஜனனிடமிருந்து வந்தது. அதைப் படிக் கையில் எனக்கு ஒரே விசித்திரமாக இருந்தது. அவன்,

“இது நிலைக்குமா அண்ணா? கவிதாவிடம் சம்மதத்தை நேரடி யாகப் பெற்றுவிட்டாயா? உனக்கு நிச்சயமாகக் தெரியுமா கவிதாவும் உன்னை விரும்புகிறாளென்று” என்று திருப்பித் திருப்பி எழுதியிருந் ததைப் படிக்க என்னவோ போலிருந்தது எனக்கு. போதாக்குறைக்கு, கடிதத்தின் தாளில் மட்டும், சில சில இடங்களில் ஈரம் பட்ட மாதிரித் திட்டுத்திட்டாய் ஏன் அழிந்திருக்கிறதென்று எனக்குப் புரியவில்லை. வேகமும் துடிப்பும் அலைமோதக் கவிதா வெளிப்படையாக ஒரு சொல் சொல்லாவிட்டாலும், அவளும் நிச்சயமாக என்னை விரும்பு கிறாள். நான் ஏற்கனவே அனுபவப்பட்டதால் சொல்கிறேன். ஒரு கலைஞனிற்கு முழு மனைவியாக கலை உணர்வுகளால் நிறைந்த பெண்ணொருத்தியால் தான் முடியும். அதுபோல்தான் கலை உள்ளம் படைத்த ஒரு பெண்ணின் நிலையுமிருக்கும் என்று அறுத்துறுத்தி எழுதினேன். அத்துடன் ஏன் அவன் எனக்கெழுதும் போது கண் கலங்கியிருக்க வேண்டும். மீண்டும் வாழ்க்கையில் தோற்றுவிடுவேன் என்று அவன் கலங்கியதுதான் காரணம் என்றால் கவலையே படாதே யடா என்றும் எழுதினேன். ஆனால், அவன் அதற்குக் கலக்கமல்ல, ஆனந்தக் கண்ணீரே காரணம் என்பது போல் ஏதோ தெளிவின்றி அடுத்த கடிதத்தில் பதில் எழுதியிருந்தான் ஜனன். அதன் பிறகு எத்

தனையோ கடிதங்களில் அவனுக்கு என் மனதைத் தெளிவாகக் காட்டி எழுதினேன்.

வாயினில் வந்ததெல்லாம் – சகியே
வளர்த்துப் பேசிடுவீர். – பாரதி

அம்மா இன்றுதான் என்னிடம் மனம் விட்டுப் பேசினாள். நான் கவிதாவைப் பற்றிக் குறிப்பிட்டபோது அவளடைந்த மகிழ்ச்சி. அடுத்த அறையில் வாணியினதும் கவிதாவினதும் குரல் கேட்கவே, பேச்சைக் கூர்ந்து கவனித்தேன்.

"ஏன் கவிதா. நீ போகவேண்டாம். எங்க கூடவே இருந்திடேன்"

"அதெப்படி உங்க கூட எப்பவும் இருக்கலாம் வாணி." – இது கவிதாவின் குரல்.

"ஏன் எனக்கு அண்ணியாகிவிட்டால் எங்க கூடவே நிரந்தர மாக இருக்கலாம். உன்னை எனக்கு வரவர பிடித்திருக்கே கவிதா."

"உனக்குப் பிடித்தால் போதுமா? உங்க அண்ணாக்கு என்னை பிடிக்க வேண்டாமோ" கேலி மிளிர்ந்தது கவிதாவின் குரலில்.

"அதெல்லாம் பிடிக்கும். உனக்குப் பிடித்தால் சரிதான். ஆமாம், எந்த அண்ணாவை உனக்குப் பிடிக்கும். ஜனன் அண்ணா உன் போக் கேயில்லை. சங்கீத் அண்ணா தான் உன் போக்கு. ஜனன் அண்ணாக்கு வீணை வாசிக்கவோ, படம் போடவோ, பாடவோ வராது. பேச்சுப் போட டியும், கிரிக்கெட் அடியும் தான் வரும். ஆனால் சங்கீத் அண்ணாக்குத் தான் இதிலெல்லாம் ஆர்வம், ரசனை, திறமை எல்லாமே உண்டு. சங்கீத் அண்ணாதான் உனக்குப் பொருத்தம். இல்லையா கவிதா?"

"ஏய்.....ஏய் என்ன வம்பு இது. ஏது... ஏது? சீரியஸாகப் பேசப் படிச்சிட்டாய்? எனக்கு அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். இந்தக் காதல், கத்தரிக்காயெல்லாம் எனக்குத் தேவையில்லை" என்று பேச்சை முடிக்கும் முன்னே குறுக்கிட்டாள் வாணி.

"காதல் வேண்டாம். அப்போ கல்யாணம் மட்டும் வேணும் என்கிறாயாக்கும்" என்றவாறே வெளியே ஓடினாள் வாணி. அத்து டன் அவர்கள் பேச்சு முடிந்து விட்டது.

என்னைப் புறமெனவுங் கருதுவதோ – கண்கள்
இரண்டிலில் ஒன்றையொன்று கண்டு வெள்குமோ.

– பாரதி

ஏனோ தெரியாது. கவிதாவின் மனதை ஏதோ ஒன்று அரித்துக் கொண்டிருக்கிறது. தனிமையில் தன்னை மறந்து சில தடவை கண் கலங்க உட்கார்ந்திருப்பாள். ஆனால் யாராவது பேச்சுக் கொடுத்தாலோ உடனே பெரிதாய் வாயடிப்பாள். கலங்கிய கண்ணீர் மறைய மறையப் பேசிக் கொண்டிருக்கும் அவள் ஏனோ என் விழிகளிற்கு இழைத்து வருவது போலிருக்கும். ஒருவேளை தன் சித்தியை, குடும்பத்தாரைப் பற்றிக் கவலைப்படுகிறாளோ. அவளிடம் கேட்டு அவள் கவலை யைத் தீர்க்க முடியவில்லை. அவள் தான் துன்பப்படுகிறாள் என்பதை எனக்கே காட்ட மறுத்து, மறைக்கும் போது, அவளிடம் பேசத் தயக்க மாயிருக்கிறதே.

ஓரிருமுறை கண்டு பழகியபின் – வெறும்
ஒப்புக்குக் காட்டுவதிந் நாணமென்னடீ. – பாரதி

இன்று என்னுடைய அறைக்குக் கவிதாவும், வாணியும், விஜிதா வும் வந்திருந்தார்கள். ஏதோ ஜனனைப் பற்றிப் பேசிக் கொண்டிருந் தோம். ஏதோ பேச்சுவாக்கில், விளையாட்டாக இல்லையா அண்ணி” என்று கவிதாவை ஜாடையாக வாணி கேட்டபோது, அவள் முகம் அடைந்த மாற்றம். குங்குமச் சிமிழாய்க் குனிந்து சிரித்துவிட்டு, வெளியே நழுவிட்டாள் கவிதா. அவள் நிச்சயமாக என்னை விரும்பா விட்டால், எதற்காக அப்படி முகம் சிவக்கச் சிரிக்க வேண்டும். மாறா கக் கோபப்பட்டல்லவா இருக்கவேண்டும்.

நினைவு நல்லது வேண்டும்
நெருங்கின பொருள் கைப்பட வேண்டும். – பாரதி

இப்படி எத்தனையோ சின்னஞ்சிறிய நிகழ்ச்சிகள் கவிதா எனக் குரியவள் என்பதை உறுதிப்படுத்தி விடவே, ஜனனுக்கு அத்தனை யும் எழுதினேன். அம்மாவின் சம்மதம் கிடைத்தது முதற்கொண்டு ஒன்றுமே மறைக்காமல் எழுதி வந்தேன். நானும் அவளும் இணைந்து விட்டால் இலக்கியக் காதலர்களாகவே வாழ்வோம். கவிதாவின் இன்ப வாழ்விலேயே என் நினைவுகளில் நீங்காத இன்பம் துலங்கும்.

எண்ணி யெண்ணிப் பல நாளுமுயன்றிங்
கிறுதியிற் சோர்வோமோ? – பாரதி

ஜனனிற்கு இன்னும் ஏனோ நம்பிக்கை இல்லை போலும். இன்னும் இரண்டு மாதங்களில் வரப் போவதாக எழுதியிருந்ததை அம்மாக்குக் கூடச் சொல்ல மறந்து விட்டேன். இன்று வந்த கடிதத்திலும் கவிதாவைப் பற்றிக் கேட்டெழுதியிருந்தான். பைத்தியம். என்னுடைய கடந்த வாழ்வு போல் இதுவும் ஆகி விடக் கூடுமோ என்று ஏன் சந்தேகப்படுகிறான்? ஜெயா எனக்கு எல்லாவிதத்திலும் தகுந்தவள் தான். ஏன் மேலானவள் கூடத்தான். ஆனால் எதிலுமே எல்லையைத் தொட நெருங்காத நான் கலை உணர்ச்சியில் எல்லையைத் தீண்டும் நேரத்தில், கலை உணர்வென்பதே ஊற்றெடுக்காத ஜெயாவுடன் எப்படி இன்பமாய் வாழ இயலும்? ஆனால் கவிதாவின் கதையே வேறு அல்லவா?

காதலொருவனைக் கைப்பிடித்தே,
அவன் காரியம் யாவினும் கைகொடுத்து. – பாரதி

கவிதாவிற்குத் தான் இப்பவே எவ்வளவு அக்கறை என்மேல். எனக்குத் தகுந்த மாதிரி, எனக்குப் பிடித்த மாதிரி, எல்லாவற்றிலும் அழகு மிளிர அலங்கரித்து விடுகிறாளே! ஆரம்பத்தில் என் குறைகளை நிவர்த்தி செய்ய, என்மேல் பரிதாப்பட்டுத்தான் இவைகளைச் செய்கிறாளோ என்று சந்தேகப்பட்டேன். ஆனால் அது தவறு. அவளுடைய சொல்லுக்கும், செயலுக்கும், ஏன் அவளுடைய மௌனத்திற்கும் கூடக் காரணம் அன்பே ஒழியப் பரிதாபம் இல்லையென்று புரிய இவ்வளவு காலம் தேவைப்பட்டதே என் மூளைக்கு.

நானொருவன் மாட்டிலும்,
பிரிவென்பதோர் நரகத் துழலுவதோ? – பாரதி

கவிதா உன்னை விட்டு என்னால் இருக்க முடியாது. உருவில் பிரிந்தாலும், என் உணர்வில் குடியேறிவிட்ட எனக்கு உன் நினைவு, ஏன் நீயே துணைதான். ஆனாலும் பத்திரிகை ஆசிரியர் மகாநாட்டிற்காக இரு வாரம் போக வேண்டுமென்பதை நினைத்தாலே கசப்பாயிருக்கிறது. அதனால்தான் நான்கு நாட்களாக அதைக் குறைத்தேன். நீ

வந்தபின், என் நெஞ்சில் சுடரேற்றியபின், பிரிவு என்றால் என்ன என் பதை இப்போதுதான் புரிய முடிகிறது. உன் மனமும், என் பிரிவால் வாடிவிடக்கூடாதென்றுதான் நான்கு நாட்கள் பயணம் என்று சொன் னாலும், அங்கு சென்றபின் தான் எதுவும் நிச்சயமாகத் தெரியும். அன் புக்கவி, உன்னைப் பிரியவே மனம் துணியல்லையே. கவி! நீ அரு கில் இருந்தால் என் துயரே தெரியவில்லை. கவி! உன்னை விட்டு நான் வாழ முடியாது. நீயின்றி எனக்குத் தனிவாழ்வே கிடையாது. உன்னைப் பிரிந்து, வேண்டவே வேண்டாம், பிரிவென்பதே நமக்குள் வேண்டாம்.

சொல்லவும் கூடுவதில்லை
அவை சொல்லுந் திறமை
தமிழ் மொழிக்கில்லை – பாரதி

கவிதா! இன்னும் சில மணியுள் நான் புறப்பட்டாக வேண்டும். பைத்தியம் பிடித்தாற் போலிருக்கிறதே. முன்பு அதிர்ச்சியாலேற்பட்ட பைத்தியம் விலகிவிட்டது. ஆனால் இந்த முறை மீண்டும் பிடித்து விடுமோ. கவியின் பிரிவு ஒன்றைத் தவிர எந்த நிகழ்ச்சியுமே என் நினைவுகளைத் தடம் புரளத், தடுமாறச் செய்யாது. முன்பாவது ஆசை வைத்திராத நிலையில், அதிர்ச்சி சிறிதளவுதான். ஆனால், என் கவிதா வின் விடயத்தில் தோன்றிய ஆசை மறைந்து அன்பு பெருகிவிட்டது. ஆசையில் தோல்வி அடையலாம். அன்பில் தோல்வி அடையவே மாட்டேன். அந்தப் பேரிடி வருமாயில், அதிர்ச்சிகளைத் தெரிவதற்கோ, உணர்வதற்கோ, என் உணர்வுகள் தெளிவாயிருக்கவே வேண்டாம். ஏன் இப்படித்தான் தோல்வி. தோல்வி என்று எழுதுகிறேனோ தெரி யாது. அவளைப் பிரியப் போகிறேனென்ற உணர்வுதான் இப்படி யெல்லாம் எண்ணவும், எழுதவும் தூண்டுகிறதே ஒழிய வேறொன்று மில்லை. கவிதா இத்துடன் இதனை இப்போதைக்கு முடித்துக் கொள் கிறேன். கவிதா, கவிதா, நெஞ்சம் எல்லாம் கொள்ளைகொண்ட அன்புக் கவி, நான் திரும்பி வரும்போது, உனக்கு என் அன்புப் பரிசாக என் திறந்த உள்ளம் தேடி வரும் கவி.

என் நினைவெல்லாம் நிறைஞ்ச கவி, என் அன்பில் சங்கமித்த கவி! கவி!!

# 10

குண முறுதியில்லை – எதிலும்
குழப்பம் வந்த தடீ! – பாரதி

"கவிதா அக்கா, கவிதா அக்கா. உங்களைத் தேடி யாரோ வந்திருக்கிறாங்க" என்றவாறே உள்ளே ஓடிவந்த மீனா, வித்யாவின் நிலையைக் கண்டதும் திடுக்கிட்டு விட்டாள். டைரியும் கையுமாகப் பிரமை பிடித்தாற் போல் அமர்ந்திருந்த வித்யாவைப் பிடித்து உலுக்கினாள். கண்களில் நீர் வழிந்தோடத், திக்கிப் பிரமை அடைந்தாற் போலிருந்தவள் தன்னை ஒருவாறு சமாளித்துக் கொண்டு,

"யாராம் அது. நானில்லை என்று சொல்லி விடு" என்றாள்.

"யாரோ சேகராம், உமாவாம், உங்க வீட்டுக்குக் கிட்டே இருந்தவங்களாம்."

"சேகரும் உமாவுமா? உமாவும் எப்படி வந்தாள்?" என்றவாறே வெளியே விடுவிடுவென ஹோலிற்கு வந்தாள் வித்யா.

"வித்யாக்கா" என்று ஆவலுடன் கூவியவாறு அருகே ஓடி வந்தாள் உமா.

"ஸ்.. ஸ்.. நானிப்போ கவிதா. வித்யாவை மூட்டை கட்டி வைத்திடு. அதெல்லாம் அப்புறம் சொல்றன். ஆமாம் இதென்ன மாப்பிள்ளையும் பெண்ணுமாகக் கோலம், எங்கிட்டே கூடச் சொல்லாமல்" என்று தொடங்கியவளை அடக்கினான் சேகர்.


"வித்யா... மறந்திட்டன். நீ எங்க கூட வெளியே வந்திட்டு வரலாமே. சொல்லிட்டு வாயேன். ஆறுதலாகப் பேசலாம்" என்றுதான் தாமதம்,

"இதோ வாணிக்கிட்டே சொல்லிட்டு, ட்ரெஸ் மாத்திட்டு வந்திடுறன்" என்று உள்ளே ஓடியவள், ஐந்து நிமிஷத்தில் தயாராக வந்தாள்.

டாக்ஸி சேகரும், உமாவும் தங்கியிருந்த ஹோட்டலை அடைந்து அவர்கள் ரூமை அடைந்ததுதான் தாமதம், வித்யா கேள்விமேல் கேள்வியாய்க் கேட்டுத் துளைத்தாள். உமா பதிலே பேச முடியாமல் திண்டாடினாள். தானிருந்தால் உமாவிற்கு இன்னும் சங்கடமாயிருக்

கும் என்று உணர்ந்ததால், காப்பி வாங்கிவரும் சாக்கில் சேகர் வெளியேறிய பின்தான், ஆறுதலாக எல்லாவற்றையும் விளக்கினாள் உமா.

“நீ போனபிறகு எவ்வளவோ நடந்திட்டுது. அன்று அம்மா உனக்குப் போட்ட கூச்சலில் அக்கம் பக்கத்துக்கெல்லாம் எங்க காதல் விசயம் தெரியாமல் போய்விடுமா? ஊரெல்லாம் தெரிந்தும் கூட அம்மா ஆரம்பத்தில் சம்மதிக்கவில்லை. காமாட்சி அத்தைக்கும், நம்ப வீட்டுக்கும் போக்கு வரத்தே இல்லை. ஆனால் நான் மட்டும் ஆத்துக்குப் போறபோது அவவைப் பார்த்து இரண்டொரு வார்த்தை பேசுவதுடன் சரி. முதல் ஆறு மாதமும் இப்படித்தான் போனது. பிறகு அம்மா வேறு இடத்தில் ஊருக்குள் மாப்பிள்ளை பார்க்க ஆரம்பித்தாள், ஊருக்குள்ளே யார்தான் வருவாங்க. அப்படியும் இல்லாமல், வந்த இரண்டு மூன்று வரன்களையும் எனக்குப் பிடிக்கல்லை என்று நேரடியாகவே சொல்லிட்டன். ஒரு வருஷம் முன்னாடி அவருக்கும் வேலை கிடைச்சிட்டுது. எனக்காக அவரும் தான் எவ்வளவு காலம் காத்துக் கிடப்பது. அப்போதுதான் அவரின் கடிதம் ஒன்று அம்மாவில் கையில் கிடைத்ததும் அம்மா கூச்சலிட்டாள், “சோத்துக்கு வக்கில்லாத குடும்பமே என் பெண்ணை மயக்கிட்டுதுகள்” என்று. அத்தைக்கு என்ன, வசந்தா மன்னிக்கே கோபம் வந்திட்டுது. திருப்பி கேட்டுவிட்டாங்க. அம்மாவை, “ஏன், உங்க பெண்ணின் கடிதம் கிடைத்திருக்கு என்று அந்தக் கடிதத்தில் சேகர் எழுதியிருக்கிறது உங்க கண்ணுக்கு மறைஞ்சா, மற்றவங்க கண்ணுக்குமா மறைஞ்சிடும்” என்று, “சேகரோ தனக்குக் கிடைத்த வேலையில் தான் நிரந்தரமாகுமட்டும் கல்யாணம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று விட்டார். கடைசியாய் நாலு மாசம் முந்தித்தான், வேலை நிரந்தரமாச்சு. அதன் பிறகு வழிக்கு வந்தார். அதன் பிறகென்ன. கலியாணத்திற்கு அம்மா வரவேயில்லை. அத்தை, அவர் வீட்டுக்காரங்க எல்லாம் வந்தாங்க. கோயில்லே நடந்தது. அத்தை கூட நான் பக்கத்து வீட்டிலேயே இருந்தும், அம்மா என்கூடப் பேசுறதில்லை. இப்ப இரண்டு மூன்று கிழமையாத்தான் உறவு முளைச்சிருக்கு. அவ பாட்டியாகப் போகிறாவென்று தெரிந்ததும்...” என்று முறுவலித்தாள் உமா. அவளைக் கேலிசெய்து கொண்டிருக்கையிலேயே காப்பியும், கையுமாக உள்ளே வந்தான் சேகர்.



"ஏய் உமா, வித்யாவின் கேள்விக்கெல்லாம் விளக்கம் சொல்லி முடிச்சிட்டியா? போனதடவை உன்னைப் பார்க்கணும் என்று வந்தப்போ, நீ அவங்ககூட பேரதேனியாக்குப் போய்விட்டாதாய் அடுத்த வீட்டுக்

காரங்க சொன்னாங்க. அன்று மாலையே ஊருக்குப் போகவேண்டியிருந்ததால் உன்னைச் சந்திக்க முடியவில்லை. இந்த முறை உன்னைப் பார்க்கணுமென்று நான் புறப்பட்டதும் தானும் கிளம்பிட்டாள். ஆமாம். எங்க கதையை விட்டுத் தள்ளு. சொல்ல மறந்திட்டன். நம் கல்யாணத்திற்கு முன்பு கூட, இரண்டு தடவை உன்னைப் பார்க்க வந்தேன். வீடு பூட்டிக் கிடந்தது. எனவே பேசாமல் திரும்பிட்டன். ஆமாம், இதென்ன கவிதா என்று. பழைய பேரைச் சொல்லிட்டுப் புதுக்கதை. நல்லவேளை நான் வித்யா என்று கேட்க, அந்த பொண்ணு யோசிச்சிட்டு கவிதா அக்காவையா என்றுட்டு உள்ளே ஓடிட்டு" பேசியவாறே காப்பியை வித்யாவிடம் கொடுத்தான் சேகர்.

தான் வந்ததிலிருந்து இப்போ வரும் வரை மட்டும், சங்கீத்தின் டைரியைப் படித்துக் கொண்டிருந்தது மட்டும் விளக்கினாள் வித்யா.

"எனக்கென்னவோ பயமாயிருக்கண்ணா. சங்கீத்திற்கு அதிர்ச்சி தரக்கூடிய விஷயமாதலால் தான் யோசனையாயிருக்கு. பாவம் என்று பழகப் போக, அவர் இப்படிக் கதையைத் திருப்பி விட்டாரே. சங்கீத் விடயத்தில் நான் கள்ளமில்லாமல் பழகியது, பெரும் தப்பாயிட்டுது. எல்லாம் என்னால் வந்த வினை. ஜனனுக்கென்றால் நான் எழுதி, நடந்ததெல்லாம் விளக்கிவிடலாம். எப்படி சங்கீத்திடம் சொல்வது" என்று வெகுநேரம் கலங்கினாள் வித்யா.

இறுதியில் டாக்டர் வேதகிரி மூலம் சங்கீத்திடம் மெள்ள மெள்ளப் பக்குவமாய்ச் சொல்லி விடவேணும் என்றும், தானே இதுபற்றி டாக்டரைச் சந்தித்துப் பேசுவதாய்க் கூறி, அவளைத் தேற்றினான் சேகர். நேரமாகவே வித்யாவை வீட்டில் கொண்டுபோய் விட்டு வருவதாய் கூறிய சேகரைத் தொடர்ந்து எழுந்தாள் வித்யா.

அரைமணி நேரம் கழித்து வீட்டின் படிகளில் ஏறிய வித்யா, அதிர்ச்சியடைந்தவளாய் அப்படியே நின்று விட்டாள்.

"ஏன் கவி, ஆச்சரியமாக இருக்கிறதா. நான் அப்போது எங்கிருந்து பேசினென்று சொன்னேனோ, அங்கிருந்த பேசவில்லை. இன்று காலையே ஊருக்கு வந்துவிட்டேன் என்றாலும் நேரே ஆபிசிற்குப் போக வேண்டியிருந்ததால் வீட்டிற்கு நேரே வரமுடியவில்லை. அது தான் ஒரு சின்ன விளையாட்டு. நாளை வரவேண்டியவன், இப்போ

வந்தால் உன் முகம் எப்படி இருக்கும் என்று பார்க்கத்தான் கவி." என்றான் ஆவலுடன்.

குறும்பும் குதூகலமும் குலாவும் அவன் குரலும், கண்ணும்... என்ன செய்கிறோமென்றே உணராதவளாய்த் திடுக்கிட்டு நின்ற வித்யா, மறு விநாடி உள்ளே விடுவிடு என்று ஓடிவிட்டாள். அப்போதுதான் வாசலில் படியடியில் நின்று கொண்டிருந்த சேகரைக் கண்டதும் வெளியே வந்தான் சங்கீத்.

"நீங்கள் யாரைப் பார்க்க வேண்டும்?" என்றவாறே சங்கீத் வெளியே வரவும், சேகரின் டாக்ஸியைத் தொடர்ந்து வந்து நின்ற காரில் இருந்து இறங்கிய டாக்டர் வேதகிரி சொல்லி வைத்தாற் போல் வீட்டுப் படிகளில் ஏறவும் சரியாயிருந்தது.

"என்னைப் பார்த்தா, யாரைப் பார்க்கணுமென்று கேட்கிறாய்? அடடா சேகர்தானே. நீ, நீ எப்போ வந்தாய்? அதுவும் இங்கே." ஆச்சரியம் மலரக் கேட்டார் டாக்டர் வேதகிரி.

"உள்ளே வாருங்களேன், உட்கார்ந்து பேசலாமே. கவி, கவி, விஜிதா வந்திருக்கிறதாய் வாணிகிட்டே சொல்லு. மேலே படிக்கிறாள் போலிருக்கிறது. நீங்கள் மேலே போங்கள் விஜி." என்றவாறே தாயாரிடம் சொல்வதற்காகப் பின்கட்டுக்குச் சென்றான் சங்கீத். அதுதான் சந்தர்ப்பம் எனச் சேகர் டாக்டரிடம் நடந்ததைச் சுருக்கமாக விளக்கி முடிக்கவும், மலர்வதி அம்மாளும், சங்கீத்தும் திரும்பி வரவும் சரியாயிருந்தது. சேகரைப் பற்றி அறிமுகப்படுத்தி விட்டுப் பேச்சைப் பொது விடயங்களில் திருப்பினார் டாக்டர் வேதகிரி.

"கவிதா, ஜனன் வரப் போவது உனக்குத் தெரியுமா? இன்னும் இரண்டு கிழமைகளுக்குள் வந்து விடுவான்." என்றது டாக்டர் வேதகிரியின் குரல்.

"கவிதா, குளிர்மையாய் ஏதாவது குடிக்கக் கொண்டு வாயேன்" என்ற மலர்வதி அம்மாளின் குரல், வித்யாவிற்குக் கேட்டதும் தான் தாமதம், ஏற்கனவே எடுத்துக் கையில் வைத்திருந்த குளிர்பானத் தட்டைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள். டாக்டர் விஷயத்திற்கு வர அடிபோடுகிறார் என்ற அவள் உள்ளுணர்வு கூறியது. வித்யாவின் தடுமாற்றத்தை உணர்ந்தாலும், அதைக் காட்டிக் கொள்ளாதவர் போல் டாக்டர் வேதகிரி.

“இங்கு வந்த இரண்டு வருடங்களில் நீ ரொம்ப மாறிவிட்டதாய் உமா கூடச் சொல்கிறாள் என்கிறான் சேகர்” என்றவாறே ஆரஞ் ஜூசைக் கையில் எடுத்தார் டாக்டர். அவசரமவசரமாக ஜூசைக் குடித்து முடித்தான் சேகர்.

“சரி, சரி, நானும் வருகிறேன், உமா தனியாகக் காத்திருப்பாள். வருகிறேன் மாமி, வருகிறேன் வித்யா” என்றவாறே எழுந்த சேகர் நாக்கைத் கடித்துக்கொண்டான், தன் தவறை உணர்ந்தவனாக.

“வித்யாவா? யாரை என்ன சொல்கிறீங்கள்?” என்று கேட்கத் தொடங்கிய சங்கீத்தை இடைமறித்துவிட்டு,

“சேகர் நாளை மாலை நேர்சிங் ஹோமில் சந்திப்போமே, பாய்” என்று குறிப்பாக சேகருக்கு உணர்த்தவே, சேகரும் மெல்ல எழுந்து விடைபெற்றான். சங்கீத்தைத் தனியே அழைத்து சென்று மெல்ல விடயத்தை வெளியிடத்தான் நினைத்திருந்தார் டாக்டர். ஆனால் சேகரின் தடுமாற்றம் விஷயத்தைக் குழப்பி விட்டது.

“ஏன், கவி, கதவோடு கதவாக நிற்கிறாய். ஏன் இப்படி முகம் இருண்டு கிடக்கு? இங்கே வாயேன்.” சங்கீத்தின் அழைப்பை இடைவெட்டினார் டாக்டர் வேதகிரி.

“வேண்டாம் சங்கீத், கவிதா நீ போகலாம். நான் சங்கீத்துடன் கொஞ்சம் பேச வேண்டியிருக்கிறது” என்று சங்கீத்துடன் அவன் அறையை நோக்கிப் போக எழுந்ததுதான் தாமதம், இதுதான் சமயம் என்று வித்யா உள்ளே நழுவி விட்டாள்.

உள்ளே தன் அறைக்குள் ஓடிச் சென்று, கதவைத் தாளிட்டுக் கொண்டு கட்டிலில் விழுந்த அவள் இதயம் படபடத்துக் கொண்டேயிருந்தது. ஒவ்வொரு நிமிஷமும் அவள் துடிப்பின் வேகம் அதிகரித்துக் கொண்டே சென்றது. சங்கீத் இதை எப்படித் தாங்கிக்கப் போறாரோ தெரியாது. என் மடத்தனத்தால் வந்த பிரச்சினை இது. அவர் சொல்லையும், செயலையும் விளையாட்டாக எடுத்திராவிட்டால், இந்தப் பிரச்சனையே வந்திருக்காதே. முன்னமே ஜனனைப் பற்றிச் சொல்லியிருக்கலாமே. பெரதேனியாக்குப் போன அன்று கூடச் சந்தேகப் படவில்லையே, என் முட்டாள் மனம் என்று தன்னைத்தானே நொந்து கொண்டாள்.

சங்கீத் ஏற்கனவே மணமானவர், எனவே இப்போதைக்கு, கசப் படைந்திருந்த அவர் மனம் இன்னொருத்தியை நாடாதென்று நினைத் ததுதான் பைத்தியக்காரத்தனம். கடவுளே, கடவுளே போகுமிடமெல் லாம் என் துர்அ நிர்ஷ்டம் துரத்தித் துரத்தியா என்னைக் கவ்விப் பிடிக்க வேண்டும், என்ற எண்ணங்களில் தவித்துக் கொண்டிருந்தாள். ஒவ் வொரு விநாடியும், ஒவ்வொரு மணித்தியாலமாகக் கடிகாரத்தில் ஊர்ந்து கொண்டிருந்தது. வெகுநேரம் வரை பொறுத்திருந்து பொறுமை இழந் தவளாக, வெளியே எழுந்து வருவோமா என்று யோசித்தவளாகக் கட்டிலிருந்து எழும்பியவள் தடாலென்ற அந்தச் சத்தத்தைக் கேட்டுத் திடுக்கிட்டு விட்டாள். அடுத்த கணம் கதவைத் திறந்து கொண்டு தடு மாற்றத்துடன், வெளியே ஓடி வந்தவள் சங்கீத்தின் அறையுள், டாக்டர், கீழே விழுந்து கிடந்த சங்கீத்தை தூக்க முயன்று கொண்டிருந்ததைக் கண்டதும் அவளுக்குச் சப்த நாடியும் ஒடுங்கி விட்டது. மறுகணம், தன்னைச் சமாளித்துக் கொண்டு எழுந்து கொண்டான் சங்கீத்.

வெறிக்க வெறிக்க வித்யாவையும், டாக்டரையும் மாறிமாறிப் பார்த்தவன் மறுகணம் டாக்டரை ஒரு நெட்டில், அறைக்கு வெளியே தள்ளியவன், கதவை உள்ளே தாளிட்டுக் கொண்டான். டாக்டரும், வித்யாவும் கதவை மாறி மாறித் தட்டியதுதான் மிச்சம். மூடிய கதவு மூடியதுதான். அறை யன்னல் வழியே எட்டிப் பார்த்தாள் வித்யா. கட்டிலில் குப்புற விழுந்து கிடந்து, பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்த சங்கீத்தைக் காணத்தான் முடிந்ததே தவிர வேறு ஒன்றுமே செய்ய முடியவில்லை. மலர்வதி அம்மாளும், அப்போதுதான் விஜிதாவுடன் கீழே இறங்கி வந்த வாணியும் கேட்ட கேள்விகளிற்கு,

"ஒன்றுக்கும் பயப்படவேண்டாம். சங்கீத் விழுந்தவுடனேயே ஒரு இன்ஜெக்சன் கொடுத்துவிட்டேன். பக்குவமாகச் சொல்லியிருக்க வேண்டிய விடயம், சேகரின் பேச்சு சந்தேகத்தை ஏழுப்பி விட்டது. இனி மறைத்தென்ன? பயப்படவேண்டாமென்று தான் சொல்றேனே. அவனைத் தொந்தரவு பண்ண வேண்டாம். சற்றே தனியாக இருக்க விடுங்கள்" என்றவாறே விஜிதாவை அழைத்துக் கொண்டு வெளி யேறினார் டாக்டர் வேதகிரி.

பெண்ணென்று பூமிதனில் பிறந்துவிட்டால் மிகப்
பீழையிருக்குதடி தங்கமே தங்கம். – பாரதி

பொழுது விடிந்து வெகுநேரமாகியும் சங்கீத்தின் வீணையொலி கேட்கவேயில்லை. ஏறக்குறையக் கடந்த இரண்டு ஆண்டுகளாகக் காலையில் வீணையின் கானத்திலேயே, துயில் கலையும் வித்யா அன்று அந்த வீணையொலியைக் கேட்காமலே எழுந்தாள். உறங்காமலே பொழுதைக் கழித்திருந்த வித்யா, சாதாரணமாய் இருப்பது போல் காட்டிக் கொள்ள முயன்றாள். ஆனால் மலர்வதி அம்மாளால் அப்படி இருக்க முடியவில்லை. மத்தியானம் வரை பொறுத்துப் பொறுத்துப் பார்த் தவள் அடக்க முடியாமல் குமுறி விட்டாள். பெற்ற மனமில்லையா?

"கவிதா, உன் மேலே எனக்குக் கோபமில்லையம்மா. குலம் விட்டுக் குலம் தாவி, ஜனன் இன்னொரு பெண்ணைக் கைப்பிடிப்பதை நான் அப்ப விரும்பவில்லை. ஆனால் போகிறபோது அவன் மனசை ஏன் கலங்கடிப்பானென்று பேசாமல் இருந்து விட்டேன். நேற்று இரவு டாக்டர் அப்புறமாகப் போன் பண்ணி எல்லாம் விளக்கமாகச் சொன் னார். நீதான் வித்யா என்று சொல்ல முடியாமல், சாதி பார்த்ததால் என் வயத்தில் நானே நெருப்பை வாரிக்கொட்ட வேண்டி வந்திட்டுதே. சங் கீத்தை நினைச்சால், பெத்த வயிறு பற்றி எரியுதம்மா.

அவனுக்குப் பழையபடி ஒன்றும் ஆகிவிடக்கூடாதேயென்று தான் வேண்டாத தெய்வத்தையெல்லாம் வேண்டி வேண்டிக் குமையு றன். கவிதா, கவிதா ஜனனாவது காலப்போக்கில் வேறு யாரையாவது கல்யாணம் செய்து கொள்வான். ஆனால் நீ... நீ... சங்கீத்தால் அது முடியாதம்மா. தயவுசெய்து சங்கீத்திற்காக உன் மனதை மாற்ற மாட் டயாம்மா. உன்னைக் காலில் விழுந்து கெஞ்சிக் கேட்கிறேன். கலப்பு மணத்தில் பிறந்த பெண்ணென்று ஜனனுக்காக ஏற்க மறுத்த அதே மனம்தான், இன்று சங்கீத்திற்காக இப்படிக் கெஞ்சுது. இல்லையென்று மட்டும் சொல்லிவிடாதயம்மா. சங்கீத்துக்கு நீ கிடைக்கவில்லையென் றால், அவன் பழையபடி ஆகிவிட்டானென்றால் என்னால் தாங்கவே முடியாது, முடியாதம்மா" என்று குமுறிக் குமுறி அழுதாள் மலர்வதி அம்மாள்.

வித்தியாக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை, மௌன மாகத் தனக்குள்ளே கலங்கிக் கொண்டிருந்தாள். ஏற்கனவே போராட் டம். இடிக்கு மேல் இடிமாதிரி. மலர்வதி அம்மாளின் வேண்டுகோள் வேறு.

"என்னை மன்னிச்சிடுங்க அத்தை. என்னால் அந்த உதவியை மட்டும் செய்ய முடியவே முடி..."

"முடியாதென்று மட்டும் சொல்லிடாதே கவிதா. நீ இல்லாமல் அவனுக்கு வாழ்க்கையே இல்லை. அவன் வாழவே மாட்டான். அவனால் வாழ முடியவே முடியாதம்மா" குறுக்கிட்டுக் கெஞ்சினாள் மலர்வதி அம்மாள்.

"ஒருத்தனை மனசார நினைச்சிட்டு, இன்னொருத்தனுக்கு வாழ்க்கைப்பட உனக்கு மனசு வராதம்மா. ஆனால் இந்தக் காலத்தில் அப்படி எல்லாப் பெண்களாலும் இருக்க முடியாதம்மா. உன்னைக் கொஞ்சம் மாற்றப் பார்த்தால் அது முடியாத விஷயமல்ல. சங்கீத்தின் நிலைமையைக் கொஞ்சம் யோசித்துப் பாரம்மா, கவிதா."

"ஜனனை மனசால் மட்டுமே நினைச்சிருந்தால், ஒருவேளை... ஒருவேளை சங்கீத்திற்காக மாற முயற்சித்துப் பார்க்க ஒருவேளை சந்தர்ப்பங்கள் தூண்டியிருக்கலாம். ஆனால் என் நிலையில் அதுவும், அதுவும் முடியாதம்மா." தடுமாறித் தத்தளித்தாள் வித்யா.

"கவிதா, ஜனன் உன்னை வெறும் காதலியாகத் தான் நினைக்கிறான். ஆனால் சங்கீத் டாக்டரிடம் என்ன சொன்னான் தெரியுமா? டாக்டர் முழுவதும் சொல்லி முடிக்கு மட்டும் வாயை மூடிக்கொண்டிருந்தானாம். பிறகு சொன்னது என்ன தெரியுமா? அப்போ, அப்போ கவிதா என் மனைவியில்லையா? மனைவி ஆக முடியாதா? அவள் என் மனைவியாக முடியாதா? என்று கதறியபடி விழுந்து விட்டானாம். டாக்டரும் மெதுவாக, மெல்ல மெல்லப் பக்குவமாகத் தானாம் சொன்னார். சேகர் வந்ததும், ஜனன் வரப்போகும் நாடகள் கிட்டியதும் எல்லாமாகத் சேர்ந்து விடயத்தை விரைவில் போட்டுடைக்க வேண்டி வந்துவிட்டது. அதன் பிறகு ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை இதுவரை அவன். அவனைப் பெத்த வயிறம்மா. அவனை மறுத்துவிடாதே. ஏற்கனவே வாழ்க்கையில் ஒரு தடவை விரக்தியடைந்தவன். நீ மறுபடியும் யோசித்து..."

"ஐயோ அத்தை, இதுக்குப் பிறகும் என்னால் மறைக்க முடியவில்லை. நான் ஜனனுக்குக் காதலியாக மட்டுமில்லை அத்தை. நான்... நான்... நான் அவர் மனைவியாயிட்டேனத்தை. ஊரறியத் தாலி கட்டா

விட்டாலும் நான் அவரின் மனைவிதான் அத்தை" துயரம் பொங்க வெடித்த வித்யாவை, வியப்புடன் பார்த்தாள் மலர்வதி அம்மாள்.

"ஆமாம் அத்தை. முருகன் சந்நிதியில் அவர் பூவும், பொட்டும் வைச்சு மட்டும் அவர் என்னை ஏற்கலையம்மா. நான் அவருக்கு மனதால் மட்டும் மனைவியல்ல அத்தை. எல்லாத்தாலும் எல்லாத்தாலும் அவர் மனைவியாகிட்டேனத்தை". விம்மி வெடித்தாள் வித்யா. வியப்பு மாறாத குரலில் திகைப்புடன்.

"அப்படி என்றால், அப்படியானால் நீ சொல்லறதைப் பார்த்தால்..." சொல்ல வந்ததைச் சொல்லவும் முடியாமல், மெல்லவும் முடியாமல் திக்கு முக்காடினாள் மலர்வதி அம்மாள்.

"அத்தை, அத்தை, பிரியப் போகிறோம் என்ற உணர்வோ, ஜனனின் வழக்கமான அவசரமான குணமோ, எதுவோ, எப்படியோ எங்களை சேர்த்திட்டுது. அதற்காக வருத்தமே படல்லை அத்தை. ஆனால் இப்போதாவது... இதுக்கு மேல், இவ்வளவு தூரம் நடந்த பிறகு, நான் எப்படி அத்தை உங்க சங்கீத்துக்கு மனைவியாக முடியும்? சங்கீத் இப்படிப் பழகுவாரென்றே நினைக்கவில்லையே. என் படத்தை, என்னைப் பேராதனையில் கீறின போது கூட, அவர் ஏதோ என்னுடன் கொண்டிருந்த பாசத்தை நினைச்சுப் பெருமைப்பட்டேனே ஒழிய, விகல்பமாக நினைக்கவேயில்லை. அவரும் அடிக்கடி சொல்வார் தன் வாழ்வு கலையோடுதான், இன்னொருத்தியுடன் அல்ல என்று. அதனால் தான் நான் கண்மூடித்தனமாக இருந்திட்டன். பிறந்ததுமே அம்மா இல்லை. அப்புறம் அப்பாவும் போயிட்டார். ஆதரவற்ற சித்தியின் பிடியில் இருக்கையில் ஜனனின் அன்பு மழையாக வந்தது. வந்து வந்த சுவடு மறைய முன்பே உடன் அவர் போக வேண்டிவந்துவிட்டது. நீங்கள், டாக்டர் எல்லோரும் காட்டிய அன்பு அளவில்லாமல் திடீரென்று வந்தது. ஆனால் சங்கீத்துடன் தான் கவிதை, சித்திரம், பாட்டு, வீணை என்று சேர்ந்து, ஒரு போக்கில் ஓடியது. ஜனனின் அண்ணா அவர், அவருக்கு வாழ்க்கையில் பிடிப்பேற்படுத்தி, அவரைப் பழையபடி ஆக்குவது என் பொறுப்பென்று ஜனனும் ஆரம்பத்தில் எழுதுவார் அத்தை. எல்லாம் சேர்ந்து இப்படியாக்கி விட்டதே. நான் எதிர்பார்க்கவே இல்லை அத்தை. எதிர்பார்த்திருந்தால் இவ்வளவு தூரம் அவர்கூட நெருங்கிப் பழகியிருப்பேனா அத்தை" விசும்பிக்கொண்டே

இருந்த வித்யாவையும் தேற்ற முடியாமல், தானும் தேற முடியாதவளாய் விக்கித்து நின்றாள் மலர்வதி அம்மாள். வெகுநேரம் கழித்துத் தான் வாயைத் திறந்தாள் மலர்வதி அம்மாள்.

"கவிதா, எப்படியென்றாலும் எனக்கு நீ மருமகள் தானம்மா. அது சங்கீத் மூலம் கிடைக்காட்டாலும், ஜனன் மூலம் கிடைச்சிருக்கு. சங்கீத்தும் நீயும் பழகிறதை நான் கூடத் தப்புக் கணக்குத்தான் போட்டுட்டன் சங்கீத் மாதிரி. யாரைத் தான் இதில் குறை கூற முடியும்? எப்படியோ ஜனனின் மனைவியாகத் தீர்க்க சுமங்கலியாக இருக்க வேண்டும். சங்கீத்தின் தலை எழுத்தெப்படியோ, அப்படியே நடந்திட்டுப் போகிறது. இதற்கு மேலே நடக்கிறதெல்லாம், ஆண்டவன் போட்ட கணக்குப்படிதான்" என்று வித்யாவை அன்புடன் அணைத்துக் கொண்டாள் மலர்வதி அம்மாள். தாயின் அரவணைப்பையே அறிந்திராத வித்யாவும்,

"அத்தை, அத்தை நீங்க எனக்கு அத்தையில்லை, அம்மாதான் அம்மாவேதான்" என்று கண்ணீர் வழிய விம்மியவாறே, மலர்வதி அம்மாளின் அரவணைப்புள் தன்னை இழந்துவிட்டாள்.

தங்கள் பேச்சிலேயே ஆழ்ந்து விட்டிருந்த அவர்கள், வெளியே ஓர் உருவம் தயங்கியபடி வந்ததையோ, அவர்கள் அறைக்குள்ளே பேசிக் கொண்டிருந்ததை எல்லாம் கேட்டுத் தானும் குமுறியதையோ அறியவில்லை. அந்த உருவம் வேறு யாருமில்லை. சங்கீத்தினது உருவமேதான்!

## 11

உள்ளதெலாமோர் உயிரென்று தேர்ந்தபின்
உள்ளங் குலைவதுண்டோ? – பாரதி

தென்றல் கலந்து, குலாவிய அந்தக் குடும்பத்தில் எதிர்பாராத புயல் வீசி இரண்டு கிழமைகளிற்கு மேலாகி விட்டது. ஆமாம்! ஒவ்வொருவரும் தத்தம் எண்ணப் புயல்களுள்ளே தங்களை இழந்துவிட்டனர். இனி நடப்பதெல்லாம் அவன் செயல் என்று தன்னைத் தானே தேற்றிக் கொண்டாள் மலர்வதி அம்மாள். ஆனால் வித்யாவின் நிலை

அப்படியா? ஏறக்குறைய இரண்டு ஆண்டுகள் கழித்து ஜனன் வரப் போகிறான் என்ற இன்பக்கனவில் மிதக்க முடியாமல் சங்கீத்தின் நினைவும், அவன் போக்கும் தடுத்தது. இரண்டு வாரங்கள் அவன் அறையே தஞ்சமென்று அடைபட்டுக் கிடந்தான் தனிமையிலே. வித்யா அவன் அறைப் பக்கமே எட்டிப் பார்க்கவில்லை. சங்கீத் அறையையே ஒட்டி பாத்ரூம் இருந்ததாலும், வேளாவேளைக்கு மலர்வதி அம்மாள் அவனறைக்கே சாப்பாட்டை அனுப்பி விடுவதாலும் அவனை நேருக்கு நேராகச் சந்திக்கும் சங்கடம் வித்யாவுக்கு இருக்கவில்லை. டாக்டர் வேதகரி ஒருவர் தான் அவனோடு தொடர்ந்து பேசிய ஒரேயொரு ஆள். ஒரு நாள் வித்யாவைப் பற்றிப் பேச்செடுத்த போது, அந்தப் பேச்சை ஆரம்பத்திலேயே கத்தரித்து விட்டானாம் சங்கீத். என்றாலும் முன் போல் சகஜமாகப் பேசி வருகிறான் என்று ஏதோ பேச்சுவாக்கில் அவர் மலர்வதி அம்மாளிடம் சொல்வது வித்யாவின் காதில் விழுந்தது. சங்கீத்தின் போக்கு புதிராயிருந்தாலும், இந்த அளவிற்கு ஏதோ தன்னைத் தேற்றிக்கொண்டானே என்று தன்னையும் திருப்திப்படுத்திக் கொள்ள முயன்றாள் வித்யா. ஆனால் சங்கீத்தின் விடயத்தில் ஒன்றேயொன்று தான் அவளை உறுத்தியது. சாதாரணமாக மாலை நேரத்தின் பிறகு, விடியும், நேரம் வரை அவனை மது ஆட்கொண்டிருக்கிறது, பழைய படி குடியின் போதைக்கு அவன் ஆளாவதை அவரால் தடுக்க முடியவில்லை என்று டாக்டர் குறைப்பட்டுக் கொண்டார்.

ஜனனின் வருகைக்காக, வீடே மெல்ல மெல்ல அமர்க்களப் படத் தொடங்கி விட்டிருந்தது. அவன் வருகை பற்றி அக்கறையே படாதவன் போல் தான் ஆரம்பத்தில் சங்கீத் இருந்தான். கட்டுநாயாக்காவில் வந்து சேரும் விமானத்தையும் நேரத்தையும் பற்றி ஜனன் அறிவித்தபோது தான் மற்றவர்களின் பரபரப்பில் தானும் ஒரு ஆளாகக் கலந்து கொண்டான். வாணிக்கும் மீனாக்கும் முழுவதும் புரியாவிடினும், நடந்ததை ஓரளவு ஊகித்துக் கொண்டிருந்ததால், எதையுமே வெளிக்காட்டாது இருந்தனர். திங்கட்கிழமை இரவு ஜனன் வருவதாக இருந்தது. அடுத்த வெள்ளிக்கிழமை மாலை அவன் வரவையொட்டி சிறு விருந்தொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. முக்கியமாக அவன் சக டாக்டர்களிற்காகத்தான் அது. டாக்டர் வேதகிரி தான் முன்னின்று எல்லா ஏற்பாட்டையும் மும்முரமாகக் கவனித்தார்.

நின்னெழில் விழியருள் காண்பதற்கு எங்கள்
நெஞ்சகத்து ஆவலை நீயறியாயோ? – பாரதி

ஒவ்வொருவருமே எதிர்பார்த்துக் கொண்டிருந்த அந்தத் திங்கள் மாலை வந்தே விட்டது. இரண்டு கார்களில் வீட்டாட்களும், இன்னும் இரண்டு மூன்று கார்களில் ஜனனின் சக டாக்டர்களுமாக, விமான நிலையத்தைப் பத்து மணிக்கே அடைந்துவிட்டனர். அவர்களின் பொறுமையைச் சோதிப்பதுபோல், விமானம் இன்னும் மூன்று மணி நேரம் தாமதமாக வருகிறதென்று அறிந்தபோது, இரண்டாண்டுகளாக அவர்களிற்கு இருந்த பொறுமையெல்லாம் அடியோடு மறைந்து விட்டது போலிருந்தது. மலர்வதி அம்மாளும், டாக்டர் வேதகிரியின் மனைவியும், உறக்கத்திற்கும் விழிப்புக்கும் இடையில் போராடிக் கொண்டிருந்தனர். மீனா, ராஜு, லதா எல்லோரும் சிறிது நேரத்திலேயே நாற்காலிகளிலேயே ஆழ்ந்து தூங்கி விட்டார்கள். வாணியும், விஜிதாவும், வழக்கம் போல் அரட்டை அடித்தவாறு. ஏரோட்றோமின் புதிதாகக் கட்டப்பட்டிருந்த பகுதியைச் சுற்றிப் பார்க்கச் சென்று விட்டனர். அவர்களிலிருந்து தனிமையை நாடி விலகி விட்டாள் வித்யா. தனிமையிலேயே தன்னை மறந்து வெகுநேரம் ஆழ்ந்திருந்தாள்.

"ஜனன், ஜனன், ஜனன்" என்று ஆயிரந் தடவை அவள் இதழும் இதயமும் இணைந்து துடித்துக் கொண்டிருந்தது.

"எப்போப்பட்ட சூழலில் என்னைச் சந்திக்கப் போகிறார். அவருக்குப் பிறகு நடந்தது எல்லாம் தெரியாதே. என்னைக் கண்டதும் என்ன செய்வார் என் ஜனன்? ஜனன், ஜனன் இந்தப் பிரிவை என்னால் இனியும் தாளமுடியாது" என்று துடித்துக் கொண்டிருந்தாள். லவுஞ் ஓரமாகக் கண் மூடியபடி நாற்காலியில் சாய்ந்திருந்த அவள் மனம் கற்பனையில் சிறகடித்துப் பறந்தது. கருநீல மைசூர் சில்க் புடவையும், இடுப்பு வரை தொங்கிய ஈரங்காயாத கூந்தலில் செருகிய ஒரு வெள்ளை ரோஜாவுமாக எழில் தேவதைபோல், கண்மூடிச் சாய்ந்திருந்தவாறு, நினைவுகளின் தாலாட்டில் அமர்ந்திருந்த அவளருகே மெல்ல நெருங்கினான் சங்கீத். அவளையே ஒருகணம் உற்றுப் பார்த்தவன் மெல்ல,


"கவிதா, கவிதா" என அழைத்தான்.

திடுக்கிட்டுக் கண்களைத் திறந்தாள் வித்யா. அவள் எதிரில் இருந்த சாய்வு நாற்காலியில் அமர்ந்து கொண்ட சங்கீத், கையில் அது வரை புகைந்து கொண்டிருந்த சிகரெட்டை வீசிவிட்டு, அவளைப் பார்த்து மென்மையாய்ச் சிரித்தான்.

"ஏன் கவிதா, என்மேலே உனக்கு நம்பிக்கை இல்லையா? பின் எதற்காக எழும்பி நழுவப் பார்க்கிறாய்? தயவுசெய்து கொஞ்ச நேரம் இரேன்... முன்பு, உன்னைத் தனிமையில் சந்தித்தால்.. என் உணர்வு களின் பிரவாகத்தில் மூழ்கி விடுவேன் என்றுதான் இவ்வளவு நாளும் உன்கூடப் பேசத் தயங்கினேன். ஆனால் இப்போ... இந்த ஏமாற்றம்... என் உணர்வுகளெல்லாம் அடங்கிவிட்டதால் தான், துணிவாக உன்னு டன் பேச முன்வந்திருக்கிறேன். ஏன் அப்படிப் பார்க்கிறாய்? கவி... ஐ மீன் கவிதா.. ஏன் இப்போ கண் கலங்குகிறாய்? நீ கண் கலங்காமல் வாழ்வதற்காக எடுத்த முடிவை உங்கிட்டே சொல்லலாம் என்று முன்னே முயன்றாலும், இப்போதுதான் சந்தர்ப்பம் கிட்டியது. ஜனன் வரும் போது, நீ சிரிச்ச முகத்தோடு அவனை எதிர் நோக்கிக் காத்திருக்க வேண்டும்... கவிதா... ஆரம்பம் தொட்டே விளங்கச் சொன்னால் தானே உனக்கு விளங்கும்.. ம்.. நீயும் அம்மாவும் அன்று பேசிக்கொண்டி ருந்தபோது, தற்செயலாக உங்க பேச்சைக் கேட்க நேர்ந்தது. நீ ஜன னின் காதலி மட்டும் அல்ல... மனைவி..."

"சங்கீத்" என்று குறுக்கிட்ட வித்யாவைச் சைகையாலேயே அமர்த்தி விட்டுத் தொடர்ந்தான் சங்கீத்.

"நான் பேசவேண்டியது எல்லாவற்றையும் பேசி முடிச்ச பின் நீ சொல்ல வேண்டியது அத்தனையும் தாராளமாகச் சொல்லலாம்..ம்.. உனக்கு என் பழைய கதை தெரியும். எதுக்குச் சொல்கிறேன் என்றால், என் கலை ஈடுபாட்டையும் அதனால் விளைந்த வினைகளையும் விளக்கத்தான். ஜெயா நல்லவள் தான் அவள் குணத்தில் குறை கூற முடியாது. இயற்கையாக ஊற்றெடுக்க வேண்டிய கவிதை உணர்வுகள் அவளில் பிணையாததால் தான் என் ஏமாற்றம் அளவு கடந்தது. மற் றவர்களைவிடக் கலைஞர்கள் எதிர்ப்பார்ப்பதும் அதிகமாதலால், அவர் களிற்கு ஏமாற்றமும் அதிகம் தானில்லையா? அவளுடன் வாழ்க்கை நடத்த ஆரம்பித்த முதல் நாளே எனக்கும், அவளிற்கும் இடையே நிரப்பவே முடியாத பிளவிருப்பதை உணர்ந்து கொண்டாலும், வேறு



வழியில்லாததால் வாழ்க்கை ஊர்ந்தது. அவள் கலைகளில் திறமை சாலியாக உன்னைப் போல் இருக்கத் தேவையில்லை. அற் லீஸ்ற் அதை, கடைசி அனுபவிக்கத் தான் தெரியாவிடினும், சரி சும்மா மேலோட்டமாக ரசிக்கக் கூடவா தெரியாமல் இருக்க வேண்டும்.''

"ஆக சமையல், துவையல், அவியல், தோயல் இவ்வளவு தான் அவள் உலகம். எவ்வளவுதான் மகிழ்வாயிருக்க முயற்சி செய்தாலும், இதயத்தின் மூலையில் அந்தத் தீராத ஏக்கம் உறுத்திக் கொண்டிருந்தது. அதன் பலன்... என் ஏமாற்றம், என் எரிச்சல், என் பொறுமையின்மை. போகப் போக பெரும் புயலாக மாறியது எம் வாழ்க்கையும். இறுதியில் அவளை இழந்தேன். அடிபட்டு என் சித்தத்தையும் இழந்தேன். நினைவு தெளியுமட்டும் எந்த உலகில் இருந்தேனோ தெரியவில்லை. எனக்கே புரியாத கனவுலகில் இருந்திருப்பேனென்று நினைக்கிறேன். அப்புறம் என் வாழ்வில் நிம்மதியே இல்லை. காலும் ஊனப்பட்டதால் ஏற்பட்ட மன வேதனையை மறைக்க, எல்லோரிடமும் எரிந்து விழுந்தேன். படுக்கையே கதி என்று கிடந்தேன். அப்படிக் கொந்தளிக்கும் உள்ளப் புயலில் சிக்கிக் கொண்டிருந்த போதுதான்... ம்.. உன்னை முதன் முதலாகக் கண்டேன்."

"அதன்பிறகு நடந்ததெல்லாம் உனக்குத் தெரியும் தானே! ஆரம்பத்தில் கலைகளின் நிறைவையெல்லாம் கண்டு பகிரும் நட்புரிமையோடு தான் பழகினேன். அப்புறம் உன்னையே ஏன் நான் உரிமையாக்கக் கூடாது என்ற நினைப்பு எனக்குள்ளே துளிர்விட ஆரம்பித்து விட்டது.. ம்.. ஆனால் எங்கே நான் அதை வெளிப்படுத்தினால், நீ விலகிப் போய் விடுவாயோ என்ற நினைப்பொருபுறம், என் பழைய வாழ்வு மறுபுறமாக, என் நினைப்பெல்லாத்தையும் எனக்குள்ளேயே மறைச்சிட்டேன். அதனால் தான் கவி என் மனைவி என்று என் நெஞ்சத்தில் உன்னைக் கொலுவேற்றி மகிழ்ந்தேன். கள்ளமில்லாமல் வெள்ளை உள்ளத்தோடு என்னுடன் நீ பேசிய போது, நீயும் என்னை விரும்புகிறாய் என்று கோட்டை கட்டியது என் மனம். முதன்முதலாக நீ வீணையுடன் அமர்ந்திருப்பதைக் கண்டு நிறைஞ்ச மனமுடன், அதைப் பிறகு சித்திரமாக வரைந்தேன். ஆனால் அதெல்லாம் கனவு, இடிந்த மணல் கோட்டைகள்."

"டாக்டர் முதலில் உன் கதையை ஆதியோடந்தமாய்ச் சொன்ன போது என்னால் தாளவே முடியவில்லை. உன்னைக் காதலித்தேன் என்று சொல்வதை விட, உன் கலை உணர்வுகளையும், திறமைகளையும் அதிகம் காதலித்தேன். ஏன் பூஜித்தேன் என்று சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும். கவிதா! ஆனால் தெய்வத்தைப் பூஜிக்கும் சக்தி

இந்தப் பக்தனுக்கு இருக்கவில்லையோ. என்னவே, நீ என் கைக்கு எட்டாத வெறும் கவிதையாகவே போய்விட்டாய். அம்புலி வேணு மென்று அடம் பிடிக்கும் குழந்தை நிலாவின் பிரதிபிம்பத்தை கண் ணாடியில் பார்த்துத் திருப்திப்பட்டுக் கொள்வது போல, உன்னை நேரடியாக அடைய முடியாவிடினும், உன் இனிமையான நினைவு களை, உன் நெஞ்சில் மலரும் கலை உணர்வுகளை, உன் சுகந்தமான நினைவு தரும் திறமைகளை மட்டுமே எனக்குச் சொந்தமாக்கி, அதில் என்னை ஆற்றிக் கொள்ள முயன்றேன். இப்போ ஓரளவு வெற்றியும் பெற்றுவிட்டேன்."

"ம். ம். குளப்ப முயலாமல் மிச்சத்தையும் சொல்ல விடு கவிதா! நான் ஞானியில்லை உடனேயே முற்றாக மனதை உறுதிப்படுத்த. சாதா ரண சராசரி மனிதன்தான் நான். எப்போதுமே என் மனம் சபலப்படா திருக்கும் என்றும் கூற முடியாது. சபலம் அதிகம் படைத்தவர்களே கலைஞர்கள் தான். அவர்கள் இலட்சியமும் அதிக உயர்வானதுதான். அதே போலப் பலவீனங்களும் அதிகம் தான் அவர்களிற்கு. ஏமாற்ற நினைவுகள் காலப்போக்கில் சில சமயம் எழுந்தால்... அந்த வேளை யில் என் இதயத்துள்ளேயே நீ இசை மீட்டுவாய். இல்லையென்றால் என் உணர்வுகளில் கலந்துருகிப் பாடுவாய். அல்லது என் நெஞ்சிலே கோலம் போட்டுச் சித்திரங்கள் தீட்டிடுவாய். இந்த மூன்றுமே போதுமே. நீ என்னைப் பிரியலாம். ஆனால் நான் உன்னைப் பிரிய முடியாது. ஏனென்றால் என் விருப்பங்களே நீதானே. உன் கலைதானே. ம்.. நான் விரக்தியடைந்து விடுவேன் என்று யோசிக்காதே! நான் என் புறத் தேவைகளுக்காக மனைவியாக உன்னை எதிர்பார்க்கவில்லை. அதை விட உன்னை என் கலைத் துணைவியாகத் தான் எதிர்பார்த்தேன். இதிலாவது நான் ஏமாறக்கூடாது. நீ இனியும் என் கூடப் பேசவோ, பழகவோ தயங்கக் கூடாதம்மா. ஜனன் வந்ததும் நானே தெளிவு படுத்திவிடுவேன் அவனுக்கு எல்லாத்தையும். அப்புறம் உங்கள் இரு வரையும் கணவன் மனைவியாக்கிட்டுத்தான் மறுவேலை.

கவி, கவிதா, நீ ஜனனோடு மனம் நிறைஞ்சு, மஞ்சளும் குங்கும மும், மலரும் மங்கள நாணுடன், பிள்ளைச் செல்வங்களோடு பூரண மாய் வாழவேண்டுமென்பதுதான் என்னுடைய கனவு. அந்தக் கனவு நிச்சயம் நனவாகும் கவிதா." நீண்டதொரு பிரசங்கமே நடத்தி

விட்டான் சங்கீத். அவனையே, அவன் பேச்சையே கேட்டுக் கொண்டிருந்த வித்யாவின் விழிகளில் கண்ணீர் வழிந்து கொண்டேயிருந்தது.

"சங்கீத், சங்கீத் எல்லாம் என்னால் வந்த வினை"

"சுத்தப் பைத்தியக்காரத்தனமாய்ப் பேசாதே. ஏற்கனவே நீ அழக் கூடாது என்று எத்தனை தடவை முன்பு சொல்லியிருக்கிறேன். இப் போதும் என்ன சொல்லத் துடிக்கிறாய் என்று எனக்குத் தெரியும். கொஞ்சம் கொஞ்சமாக இந்தக் குடிப் பழக்கத்தையும் விட முயற்சிப் பேன். அந்தப் போதையில் இருக்கையில் தான் என் நினைப்புகள் தறிகெட்டு ஓடுது. அந்த ஓட்டங்களிற்கும் கடிவாளம் போடாவிட்டால் நான், நான் மிருகமாகி விடுவேன். எனவே கொஞ்சம் கொஞ்சமாக இந்த மதுவின் பிடியிலிருந்து விலகத்தான் யோசிக்கிறேன். ஆனால்... எதற்கும் வேளை வரவேண்டாமா. ஏதோ கடவுள் தான் என்னைப் பழையபடி மாற்றவேண்டும். சரி, சரி, ஏற்கனவே நேரமாகி விட்டது. ஜனன் பிளேன் இன்னும் அரைமணியில் வந்து விடும். உன் ஜனன் உன்னிடம் வந்திடுவான். மற்றவர்களைத் தூக்கத்திலிருந்து எழுப்பி விட்டு வருகிறேன்." என்றவாறே எழும்பியவன் மற்றவர்களை நோக்கி நடந்தான். அவனையே வைத்த விழி எடுக்காது பார்த்துக் கொண்டிருந்த அவள் விழிகளில் என்னதான் தடுக்க முயன்றும் முடியாமல் கண்ணீர் பெருகிக் கொண்டிருந்தது.

விமானம் வரப் போவதற்கான ஒலிபரப்பைக் கேட்ட வித்யா, புதுத் தெம்புடன் நிலை கொள்ளாமல் தவித்தாள். தூரத்தே, வெள்ளைத் தாரகைகளினூடே, அசையும் தாரகையாக வந்து கொண்டிருந்த விமானம் வரவரப் பெரிதாகி, ரன்வேயில் வேகமாக ஓடிப் பேரிசைச்சலுடன் மெதுவாக ஊர்ந்து நின்றது. அடுத்த பதினைந்து நிமிடங்களில் அவள் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த, அதே ஜனனின் உருவம் சுங்கப் பரிசோதனை அறையின் படிக்கட்டுகளில் ஆர்வமாக இறங்கி ஓடி வருவது தெரிந்தது. டக், டக் என்ற சூஸின் சப்தத்தோடு போட்டி போட்டுக்கொண்டு ஓடி வந்த ஜனன், மலர்வதி அம்மாளையும், சங்கீத்தையும் ஆர்வத்துடன் தழுவிக்கொண்டான். வாணி, மீனா, பாலு அவனைத் தொத்திக் கொண்டார்கள். டாக்டர் வேதகிரி ஆவலோடு கைகுலுக்கியதற்கென்ன அவன் கண்கள் வேகமாக யாரையோ தேடியது. ஒரு கணம், ஒரே கணம் அவளைக் கண்டதும் தன்னையே அடக்க முடி

யாது "வித்யா" என்று அழைத்துவிட்டான். அவன் குரலில் பொங்கிய ஆர்வம், ஆசை, அத்தனையும் அவள் உடலை ஒரு கணம் சிலிர்க்கச் செய்துவிட்டது. கண்கள் இரண்டும் குளமாக அவனையே பார்த்துக் கொண்டு சிலையாக நின்றாள் வித்யா.

"கண்ணொடு கண்ணினைக் கவ்வி, அண்ணலும் நோக்கினான், அவளும் நோக்கினாள்" சங்கீத்தின் கேலியான குரல் அவளை மட்டு மல்ல, ஜனனையே திடுக்கிட வைத்து விட்டது. மறுகணம், சட்டென்று சாம்பிய வித்யாவைத் திரும்பிக்கூடப் பார்க்காமல், சக டாக்டர்களை நோக்கி நடந்தான். அதன் பிறகு வித்யாவின் பக்கம் மறந்து போய்த் தானும் அவன் திரும்பவேயில்லை.

காரில் வீட்டுக்குத் திரும்பியபோது கலகலப்பாகப் பேசிக்கொண் டிருந்த ஜனனின் குரலின் தொனியில் ஏக்கம் இழையோடுவதை, சங் கீத்தால் மட்டுமே புரிந்துகொள்ள முடிந்தது. காரணம் தன் ஏமாற்றத் திலேயே மூழ்கிக் கிடந்த வித்யாக்கு, அவனது ஏக்கம் புரிய நியாய மில்லைத்தானே. அன்பின் பெலவீனமும் அதுதானே. அன்பு கொண்ட நெஞ்சங்கள் ஒவ்வொன்றும், தத்தம் அன்பை மற்றவர்கள் புரிய வேண் டும், தம்முடைய அன்பு மற்றவரைச் சுற்றிப் படர்ந்திருப்பதை அவர் கள் புரிந்து கொள்ள வேண்டுமென்பதைத் தாம் உணர்த்தி விடவேண் டும் என்பதைச் செயல்படுத்த நினைக்கும் துடிப்பிலேயே லயித்து விடுவதால், மற்றவர்களும் அதே நிலையில் தான் இருப்பார்கள் என் பதை உணரத் தவறி விடுகிறார்கள். அதற்கு வித்யா விதிவிலக்க வில்லையே.

நித்தமுனை வேண்டிமனம் நினைப்பதெல்லாம் நீயாம்
பித்தனைப்போல் வாழ்வதிலே பெருமையுண்டோ?

– பாரதி

வெள்ளிக்கிழமை மாலை ஐந்து மணியிருக்கும். ஜனனின் வீடு நண்பர்களும் உறவினர்களுமாக நிறைந்து கொண்டிருந்தது. ஜனன் விமான நிலையத்திலிருந்து திரும்பிய அடுத்த நாளே, ஏதோ வீட் டையே மறந்து விட்டவன் போல், அவனைச் சுற்றித் திரிந்த டாக்டர் பட்டாளத்திற்கிடையே பொழுதைக் கழித்தான். எவ்வளவுதான் கலகலப் பாக இருக்க முயன்றும் முடியவில்லை. அவன் படும் வேதனையை

ஓரளவு வித்யா உணர்ந்திருந்தும், தனிமையாகப் பேசும் சந்தர்ப்பம் கிட்டாமல், ஊமைக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாள். தான் இரு தடவையும் ஜனனுடன் பேச முயன்றபோது, வெடுவெடுத்து விட்டு வெளியே போய்விட்டான். இன்று எப்படியாவது அவனுடன் பேசியே தீருவேன் என்று சங்கீத் சொன்னதை நம்பிக் கொண்டு வாளாவிருந் தாள் வித்யா. தேனீர் விருந்து முடிந்து, ஆண்கள் தங்களுக்குள்ளே ட்ரிங்ஸ் பார்ட்டி நடத்திக் கொண்டிருந்தார்கள். சாதாரணமாக இருக்கும் சங்கீத் அன்று அவர்களிடையே, கொஞ்சம் மது வாசனையுடனேயே உலாவினான். ஜனன் இதைக் கண்டாலும், அவன் மன நிலையே சரி யாய் இராததால், அவன் அதைக் கருத்திற் கொள்ளவில்லை. ஆண்க ளும், பெண்களுமாக குழுமியிருந்த இடங்களில் வித்யாவைத் தேடித் தேடிக் களைத்து விட்டன அவன் கண்கள். முதலில் கலகலப்பாகவும், சகஜமாகவும், அதேசமயம் அடக்கமும் அழகும் மிளிர விருந்தினர் களிடையே நடமாடிக் கொண்டிருந்தவள் திடீரென மறைந்து விட் டாள். எங்கே, எங்கே என்று எண்ணமிட்டவாறே மேலோட்டமான பேச்சில் ஈடுபட்டுக் கொண்டிருந்தான் ஜனன். ஏழு மணியிலிருந்து ஒன்பது மணி வரை அவளைத் தேடித் தேடிச் சோர்ந்து விட்டது அவன் மனம். பத்து மணிக்கு மேல்தான் விருந்தினர்கள் இரவு விருந்து முடிந்து மெல்ல, மெல்லக் கலைந்தனர். கடைசியாக டாக்டர் வேதகிரியும் சங்கீத் தின் போதையேறிய நிலையைச் சுட்டிக்காட்டி, அவனைக் கவனிக்கு மாறு கூறிவிட்டு, மகளையும், மனைவியையும் அழைத்துக் கொண்டு வெளியேறினார். வெளியேறு முன் நெடுநேரமாக அவர் பேசிக் கொண் டிருந்த விஷயங்களின் பிரமிப்பில் ஆழ்ந்திருந்தான் ஜனன்.

சற்று முன் பாட்டும், பேச்சுமாகக் கோலாகலம் நிறைந்திருந்த அந்த வீட்டில், இப்போ அமைதி ஆட்சி செலுத்திக் கொண்டிருந்தது.

"வாணி, மேலே போய்க் கவிதாவைச் சாப்பிட அழைச்சிட்டு வாயேன். நேரமாகிறது இல்லையா?"-மலர்வதி அம்மாளின் குரல் ஜனனின் காதில் எட்டியது.

"தலையை வலிக்கிறது என்று அப்பவே மாடிக்குப் போய்ப் படுத்தவ இன்னுமா கீழே வரல்லை அம்மா?" என்றவாறே வெளியே வந்த வாணி சங்கீத்தின் நிலையைக் கண்டதும்.

"ஜனன் அண்ணா, ஜனன் அண்ணா சங்கீத் அண்ணாவைப் பாரேன்." என்று பதறினாள்.

ஜெயா இறந்து, நினைவை இழந்து குணமாகியபின் மதுவையே தொடாத சங்கீத் இப்போ சிலகாலமாக மறுபடியும் அந்த பழக்கத் தைத் தொடங்கியவன் இன்று போதையின் எல்லையை எட்டிக் கொண் டிருப்பதைக் கண்டதும் திடுக்கிடாமல் என்ன செய்வாள்? இருவரு மாக அவனை அணைத்துச் சென்று அவனது படுக்கையில் சாய்த்தனர். அவனது சூசையும், ரையையும் கழற்றி ஆடைகளைத் தளர்த்திவிட்டு வெளியே வந்தான் ஜனன். மாடிக்குப் போன வாணி மீண்டும் கீழே இறங்கி வந்தாள்.

"அம்மா, கவிதாக்குப் பசிக்கல்லையாம். தலையை வலிக்கிறதாம். மாத்திரை இரண்டு போட்டும் நிற்கலையாம். வேலை அலுப்பொரு பக்கம், தூக்கம் வரல்லை என்று விட்டு, விடியவிடிய முழிச்சிருப்பது இன்னொரு பக்கம். பேதாக்குறைக்கு ஏதோ அமுதிருக்கிறாள் போலி ருக்கிறது. ஏன் அண்ணா அவளிற்கு ஒரு ஸ்லீப்பிங் ரபிலற் கொடுக் கவா?" என்றவாறே உள்ளே வந்தாள்.

"அந்த செல்பில் இருக்கும். கொஞ்சம் ஸ்ராங் ஆனது தான். பரவாயில்லை ஒன்றை மட்டும் கொடு" என்று பட்டும் படாதவாறு கூறியவாறே, வெளியே போர்ட்டிக்கோ அருகே வந்தான் ஜனன்.

"ஏன் ட்ரைவர், சங்கீத் அண்ணா இரண்டு மணி போல் எங்கோ போனார். வர்றபோது ஆறு மணியாகி விட்டதே!" சாதாரணமாய்த் தான் ஜனன் கேட்கிறான் என்று நினைத்தவாறு ஒரு படத்தின் பெயரைக் குறிப்பிட்டான் ட்ரைவர்.

"பெரிய தம்பி போற போதே கொஞ்சம் எடுத்திருந்ததால் தடு மாறிக் கொண்டிருந்தார். நான் தான் திரும்பப் படம் முடியப் போய் அழைச்சிட்டு வந்தேன்" என்று பட்டும் படாதவாறு அந்தப் படத்தின் பெயரையும் குறிப்பிட்டான்.

"ஏன் வேறு படம் ஒன்றும் இல்லையா பார்ப்பதற்கு. போயும் போயும் இந்த மட்டரகமான படத்திற்கு ஏன் தான் போனாரோ" என்று நினைத்தவாறே உள்ளே வந்தான் ஜனன்.

“ஜனன் அண்ணா, நான் உன் கூடவே படுக்கப் போகிறேன். உன் ப்பொரின் டிரிப்பைப் பற்றி இன்னும் சொல்லவில்லையே அதிகமாக” என்றவாறே வாணியும் மீனாவும் வந்தார்கள்.

இரவு உடையை மாற்றி விட்டு அவனது அறையுள்ளேயே அவர் கள் படுத்துவிட்டார்கள். இர்வு நெடுநேரம் வரை பேசிக்கொண்டிருந்த அலுப்பு வேறு, வேலை செய்த களைப்பு வேறு, படுத்த உடனேயே தூங்கி விட்டார்கள். மலர்வதி அம்மாள் படுக்கப் போகும் போது கூட, கவிதா மேலே தனியப் படுத்திருக்கிறாளென்பதைக் குறிப்பிட வாய் திறந்த போது, ஏதோ பேச்சுக் குறுக்கிடவே, அவளும் அதைப்பற்றிப் பிறகு மறந்து விட்டாள்.

இவர்கள் எல்லோரையும் விடத் தன்னை மறந்து அதிக நித்தி ரையில், ஆழ்ந்த மயக்கத்தில் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தாள் வித்யா.

ஆமாம்! வாணி மேலே அறைக்குப் போன போதுதான், ஸ்லீப் பிங் ரபிலற்ஸ் இரண்டை முன்னம் எப்பவோ, டாக்டர், சங்கீத்துக்குக் கொடுக்கச் சொல்லிக் கொணர்ந்த அந்த மாத்திரையை விழுங்க விட்டுப் படுக்கையில் சாய முற்பட்டுக் கொண்டிருந்த போதுதான், உள்ளே ஓடி வந்த வாணி, ஜனனின் பரிசுகளையும் கதையையும் கேட்கும் ஆவ லில் என்ன மாத்திரை என்று குறிப்பிடாமல்,

“தலையை வலிக்கிறதென்றாயே, இதைப் போடட்டாம். ஜனன் அண்ணா தந்தார்.” என்று மாத்திரையை அவள் கையில் திணித்து விட்டு ஓடிவிட்டாள்.

ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்த வித்யாக்கு, முன்பின் யோசி யாமல் ஜனன் கொடுத்தது தலைவலி மாத்திரையாக்கும் என்று நினைத் துக் கொண்டு அதையும் போட்டதுதான் தெரியும். அப்புறம் காலை வரை கண் விழிக்காமலே கிடந்தாள். அவள் இரண்டு தடவையும் ஸ்ராங் கான மாத்திரைகள் உட்கொண்டதை மட்டுமா உணரவில்லை? அதற் கப்புறம் நடந்ததையே உணராமல், அடுத்த நாள் பொழுது விடிந்தும் கூட நடந்ததை அறியவே இயலாத அளவிற்குத், தூக்க மயக்கத்தில் கிடக்க நேரிடும், என்பதையே உணராமல் அடித்துப் போட்டவள் போல் கிடந்தாள் வித்யா.

கூடத்திலிருந்த கடிகாரம் இரண்டு தடவை அடித்து ஓய்ந்தது. இரவின் நிசப்தத்தில் எல்லோருமே தூங்கி விட்டனர் ஜனனைத் தவிர. எண்ணங்கள் புரண்டோடப் புரண்டு புரண்டு படுத்துப் பார்த்தான் ஜனன். தூங்கத் தெரியாத கண்களைச் சபித்துக் கொண்டே சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். எழுந்து நிலவொளியில் உலாவிவிட்டு வரலாமென்ற எண்ணம் மேலிடக் கட்டிலை விட்டு எழுந்து வெளியே வந்தான். தோட்டத்தில் உலாவிக் கொண்டு நிலாவைப் பார்த்துக் கொண்டிருந்தவன், ஏதேச்சையாக, வித்யா படுத்திருந்த அறையை நோக்கினான். அவள் அறையில் விளக்கெரிவதைக் கண்டான். ஒருவேளை தலைவலியால் இன்னும் அவதிப்படுகிறாளோ என்று யோசித்தவாறே உள்ளே வந்தவன், யாரோ மாடிப்படிகளில் இறங்கும் ஓசை கேட்கவே திடுக்கிட்டுத் திரும்பினான். வித்யாதானாக்கும் என்று நினைத்துத் தன்னை அறியாமலே கூப்பிட வாயெடுத்தவன், கையில் ஏதோ ஒரு பொருளைச் சுற்றிப் சுற்றிப், பாக்கெற்றுள் போட்டவாறு தள்ளாடித் தள்ளாடி வித்யாவின் அறையிலிருந்து வெளியேறி மாடிப்படிகளில் இருந்து இறங்கித் தன் அறையை நோக்கிச் சென்று கொண்டிருந்த சங்கீத்தைக் கண்ட அவனிற்கு ஏற்பட்டது.... அதிர்ச்சியா, ஆச்சரியமா, வெறுப்பா, கோபமா, துக்கமா என்றே சொல்ல முடியாத வண்ணம் எவ்வளவு நேரம் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தானோ அவனுக்கே தெரியாது. திகைப்பிலிருந்து விடுபட்டவனாய் சங்கீத்தின் அறையை நோக்கி நடக்க முயன்றவன், மறுகணம் திரும்பித் தன் அறைக்குள் வந்து படுக்கையில் குப்புற வீழ்ந்தான்.

அடுத்த நாள் விடியும்வரை அவன் நிலைகெட்ட மனம் எங்கெல்லாமோ தாவியது. உள்ளம் உடையும்படி கேவிக்கேவி அழுதான் ஜனன். வித்யாவைத் தன்னருகிலேயே இருத்தித் தன் குமுறலையெல்லாம் சொல்லித் தீர்த்துவிட வேண்டும் போலிருந்தது அவனுக்கு.

“வித்யா என்னை வரவேற்க எத்தனை, எத்தனையோ பேர் வந்திருந்தார்கள். ஆனால் அத்தனை பேருக்குமிடையே உன் முகம்தான் நினைவிலாடிக் கொண்டிருந்தது. லண்டனிற்குப் போய் இரண்டு கிழமைக்குள்ளே, ஒரு கடிதம் டாக்டரிற்கும், ஒரு கடிதம் வீட்டிற்கும் போட்டேன். டாக்டர் நான் சொன்னபடி உன்னைப் பாதுகாப்பான இடத்தில் விட்டிருக்கிறாரென நான் எவ்வளவு நிம்மதியாயிருந்தேன்.

அதற்குப் பிறகுதான் என் ஆசைகளையெல்லாம் கொட்டி உனக்கு முதன் முதலாகக் கடிதம் எழுதினேன். உன் அன்பையும், ஆசையை யும் தேக்கித்தேக்கி நீ எழுதிய கடிதங்களிற்கும் பதில் எழுதிக் கொண் டிருந்தேன் கடந்த ஒன்றரை ஆண்டுகளாக. நீ என் வீட்டில் கவிதா வாக வளைய வருகிறாய் என்று எத்தனை தரம் நினைத்து எனக்குள்ளே சிரித்திருப்பேன். அண்ணா உன்னைப் பற்றி எழுதும் வரை இறுமாப் புடன் எத்தனை கனவுகள் கண்டிருப்பேன். அத்தனையும் வெறும் கானல் நீராகி விட்டதே. வித்யா, வித்யா! உனக்குத் தெரியுமா எத்தனை இரவுகள் உன் பிரிவால் வாடியிருப்பேனென்று? எத்தனை இரவுகள் உறக்கமில்லாமல் தவித்திருப்பேன். தோன்றும் இன்பக் கனவுகளை யும், உணர்ச்சி அத்தனையையும் தேக்கி கடிதத்தில் எழுதி உனக்கு அனுப்பிய பிறகுதான் என் வேகம், வேதனை ஓரளவாவது குறையும். சில சமயங்களில் படிப்பும் வேண்டாம், பட்டமும் வேண்டாம், நீ மட் டும், உன் தூய அன்பு மட்டுமே வேண்டும், உன் அருகில், உன் அணைப் பிலே என் கனவுகள் எல்லாம் கலந்திட வேண்டும் என்று ஏங்கித் துடிப் பேன். ஒவ்வொரு கணமும் என் இதயம் துடிக்கும் போது, ஒவ்வொரு கதை பேசி என்னைத் துடிக்க வைப்பாய். ஒருகணம் குமிழ்ச் சிரிப்பு டன், கொள்ளை அழகுடன் உன்னுடைய கண்கள் மலர்ந்து சிரிக்கும். மறுகணம் விம்மி விம்மி உன் கண்கள் அழும், உறக்கம் வராமல். என் கண்களைத் திறந்தால் “என்ன ஜனன், நான் எவ்வளவு நேரந்தான் காத்திருப்பது உங்கள் கனவுகளில் கலந்துவிட” என்று செல்லமாகச் சிணுங்குறாயே! என்று நான் கண்களை மூடிக் கொள்வேன். உடனே மறுபடி, “ஏன் ஜனன், நித்திரை வரவில்லையா? உங்கள் நினைவில் கலந்து நான் நினைவாகவே மாறிவிட்டது போதாதோ? உங்கள் கனவில் வேறு நான் வரவேண்டுமோ?” என்று குறும்பாகக் கொஞ்சுவாய். உன் கொஞ்சலிலும் கொஞ்ச நேரம் உறங்கி விட்டாலும், ஓடி வந்து விடுவாய் என்னை எழுப்பிட. “இவ்வளவு நேரம் நீங்கள் என்னைக் கனவு கண் டது காணாதா? எனக்கும் உங்களைக் கனவு காண ஆசையிருக்காதா என்ன? நீங்கள் என் கனவில் கலக்க ஓடி வாருங்களேன்” என்று சிணுங்குவாய்.

“வித்யா, வித்யா ஏன் இப்படி வாட்டுகிறாய்” என்று தவித்தால். “நான் தவிக்கவில்லையே ஜனன். ஏன் தெரியுமா? என் நினைவோடு, என் நினைவின் தவிப்பும் சேர்த்து உங்களுக்கே உரித்தாகி விட்ட

தால், எனது பங்கையும் சேர்த்துத்தான் இப்படித் தவித்துப் போகிறீர்கள்" என்று குறும்பாக சிரிப்பாய். இப்படி எத்தனை எத்தனை கதைகளாய்ச் சொல்லுவாய்? உன்னையே நாடி, நாடி உருகியதெல்லாம் உனக்குத் தெரியாதா? இனிமையாக, ஆசையெல்லாம் கொட்டிக் கொட்டிக் கவிதையாய் நீ வடித்து அனுப்பும் உன் கடிதங்கள் வந்ததும் தான் கொஞ்சமாவது என் தவிப்பு அடங்கும்."

"அதன் பிறகு, அதன் பிறகு.... தான் சிறகொடிந்து விட்டேன் வித்யா. ஆமாம் அந்த ஒன்றரை வருஷங்களாக நான் தவித்த தவிப்பு வேறு. இப்போ தவிக்கும் தவிப்போ.... ஆமாம் சங்கீத் அண்ணாவின் கடிதங்களைப் படிக்கையில் நான் அடைந்த ஆச்சரியமும், அகோரமான மன வேதனையும், அண்ணாவின் நினைவுகள், உன்னைப் பிரிந்தால் திரும்பப் பறிபோய் விடுமோ என்ற ஒரு நினைப்பே என்னை உலுக்கி எடுத்தது. நான் உன்னை விரும்புவது தெரியாமல், அவன் கவிதாவாக உன்னை உருவேற்றிப் பக்கம் பக்கமாக எழுதும் கடிதங்களைப் படிக்கும் போது உண்மையை எழுத முடியாமல் தவிப்பேன். உனக்கு இதில் சம்மதமில்லையென்று அவன் நினைக்கவில்லை ஆக்கும். அப்படி எழுதியிருந்தாலாவது நீ எனக்குத் துரோகம் செய்யவில்லை என்று அந்த ஒரு ஆறுதலாது கிட்டியிருக்கும். ஆனால் உன் கடிதம் வந்ததும் என் மனநிலை மாறிவிடும். அண்ணா உன்னை விரும்பினாலும், நீ என்னைத் தான் விரும்புகிறாய் என்று தெரிஞ்சும் கூடச் சந்தோஷப்பட முடியவில்லை. காரணம் அண்ணாவின் நிலை தான். ஏற்கனவே இழப்பை அனுபவித்தவன். இன்னொரு இழப்பையும் அனுபவிக்க நான் காரணமாக இருக்கலாமா? என் மனதில் பெரிய புயல் வீசியது. இறுதி முடிவெடுக்க, அண்ணாவின் அடுத்த கடிதமே வழிகோலியது. 'நீ இல்லாவிட்டால் தனக்கு வாழ்வே இல்லை' என்று உருக்கமாக எழுதி, என்னையே அம்மாவிடம் சம்மதம் பெற்றுத் தரும்படி எழுதியிருந்த அந்தக் கடிதம் என்னை ஒரு முடிவுக்கு வரச் செய்தது. நீ அண்ணாவிற்கே உரியவளாகி விட வேண்டும் என்ற முடிவுடன், உனக்குக் கடிதம் எழுதுவதை நிற்பாட்டினேன். டாக்டருக்கும் நீ என்னை மறந்து விடும்படி உனக்குத் தெரிவிக்கச் சொல்லி எழுதினேன். அப்புறம் அண்ணா, அம்மாவின் சம்மதம் வழியவே கிடைத்து விட்டது என்றும், போதாக்குறைக்கு அம்மாவும் தன் திருப்தியெல்லாவற்றையும் காட்டி எழுதிய கடிதத்தைப் படித்துப் பெருமூச்சு

விடத்தான் முடிந்ததே ஒழிய வேறு வழி தெரியவில்லை. நான் வேறு இடத்தில் தங்கிப் படிக்க வேண்டி வந்ததால் உன் கடிதங்களும் கிடைக்கவில்லை. நானும் நீ உன் எண்ணத்தை அண்ணா மீது மாற்றிக் கொண்டு விட்டாய் என்று கணக்குப் போட்டு விட்டதால், எனக்குத் திருப்பி முகவரியிடப்பட்டு வந்த அந்தக் கடிதங்களைப் படிக்காமலே கிழித்துவிட்டு, உன்னை மறக்கத் துடித்தேன். ஆனால்...

நீண்ட பிரிவின் பின் உன்னை ஏரோட்ரோமில் கண்டபோது நான் அடைந்த மகிழ்ச்சி. எவ்வளவோ என்னைக் கட்டுப்படுத்த வேண டுமென்ற முடிவுடன் வந்திருந்தாலும் உன் கனவுக் கண்கள் முன் அத் தனையும் சிதறி விட்டது. உன் பெயரைக் கூடக் கூப்பிடாமல் இருக்க என்னைக் கட்டுப்படுத்தும் சக்தி என்னைக் கைவிட்டுவிட்டது. அண ணாவின் நிலை ஒருபுறம், என் ஆசைகள் அத்தனைகளின் ஏக்கம் மறுபுறம், என்னால் உன்னிடம் பேச முடியாதே தடுத்துவிட்டது. டாக் டர் இன்று பின்னேரம் தான் நடந்ததை விளக்கிச் சொன்னார். அப் போது ஏற்பட்ட மகிழ்ச்சி, நீ இன்னமும் என்னைத்தான் விரும்புகிறாய், உன் திறமைகளிற்கு, உன் வீணை இசைக்கோ. உன் இனிமையான பாட்டிற்கோ, உன் எழுத்து வன்மைக்கோ என்னால் ஈடுகொடுக்க முடி யாவிட்டாலும், தூய்மையான அன்பிற்கு முன் இவையெல்லாம் தோற்றுப் போய் விடத்தான் செய்யும். அண்ணாவின் கலைப் பித் தால், அவன் முன்னைய திருமணம் சிதறி விட்டதென்பதற்காக, உன் கலைப்பித்தால், உன் கலைகளின் தேர்ச்சியால் உன்னையும் அப்படித் தப்புக் கணக்குப் போட்டது என் தவறென்று தோன்றியது. மகிழ்ச்சி எட்டிப்பார்த்தது என் மனதில், ஆனால் மறுபடி... இரவு பிறக்கு முன்னமே என் மனதில் இருள் பிறந்து விட்டது. ஆமாம்! அந்த நிகழ்ச்சியின் அர்த்தம்.

இரவின் தனிமையில் அண்ணா உன்னைத் தேடி உன்னறைக்கு வந்து, உன்னறையில் இருந்து வெளியேறும் வரை, ஏதாவது உனக்குப் பிடிக்காத முறையில் அண்ணா நடக்க முயன்று, அதற்கு உன்னிட மிருந்து வந்த பதில் மௌனமானால், அதற்கு அர்த்தம் உனக்கும் சம் மதம் என்றுதானே. வித்யா, வித்யா என்னை ஏன் இப்படிப் பைத்திய மாக்குகிறாய். போதாக்குறைக்கு, இன்று பின்னேரம் உன் தலையில் இருந்த அதே பூச்சரம் அண்ணாவின் கையில் கசங்கி இருப்பதைக்

கண்டபோது, என் மனம் இன்னும் ஏன் சிதறவில்லை? உனக்கு எப்படி மனம் வந்தது வித்யா? அண்ணாவிற்கு எப்படி சம்மதித்தாய்? கடவுளே கடவுளே ஏன் இப்படி வதைக்கிறாய்? இன்னும் தொடர்ந்து இங்கிருந் தால் எனக்குப் பைத்தியமே பிடித்துவிடும். வரும்போதே டாக்டர் ஜேம்ஸ் அங்கு தந்த வேலையை மறுபடி வந்து முழு நேரமாகச் செய் வேனென்று சொன்னது நல்லதாகிப் போட்டது. மிச்சம் இருக்கிற மாதங்களையும் எங்கோ கண்காணாத இடத்தில் கழித்து விட்டுத் தொலைந்து விடுவதுதான் சரி." தனக்குத் தானே குமுறிக் குமுறி எழுதி, பேப்பரில் தன் ஆத்திரத்தையெல்லாம் கொட்டினான் ஜனன். அப்பு றம் அத்தனை தாளையும் ஓரேயடியாக கிழித்துக் கூடையில் போட்டு விட்டு, தன் சூட்கேசை எடுத்து அடுக்கத் தொடங்கினான்.

## 12

எங்ஙனம் சென்றிருந்தீர் – என
தின்னுயிரே! என்றன் இசையமுதே. – பாரதி

ஜனன் வந்து ஒரு வாரமாகியும் தன் பக்கமே திரும்பாததை எண்ணி, எத்தனையோ தடவை வித்யா அவனுடன் தனித்துப் பேச முயற்சித்தும், அவன் நழுவி விடவே, இறுதியில் சங்கீத்தின் உதவியை நாடுவது என்று தீர்மானித்து அதன்படி நடந்தும் கொண்டாள். ஆனால் சங்கீத்தின் முயற்சிக்குக் கிடைத்த பரிசு, .... முகத்தில் அடித்தாற்போல் கத்திவிட்டு வெளியேறிவிட்டான் ஜனன். அப்படியும் சங்கீத், மீண் டும் அவனிடம் பேச்சுக் கொடுக்க முயன்றபோது, என்ன வெறித்தன மாய்க் கத்தி விட்டான் ஜனன். எப்படியும் இன்று பேசி ஒரு முடிவு கட்டவே வேண்டும் என்று வித்யா தானே தன்னிலைமையை எடுத்து சொல்ல விரும்பியதால் தானாகவே பேச்சை ஆரம்பித்தாள் சமயம் பார்த்து. அதுவும் பயன் தராது போய்விடவே, டாக்டர் சொன்னால் தான் அவன் கதையை இருந்து பொறுமையாய்க் கேட்பான் என்ற எண்ணமுடன், அவரிடம் போய் ஆதியோடந்தமாய் விளக்கி, அவ ரையும் வீட்டிற்குக் கூட்டிக்கொண்டு வந்தான் சங்கீத். ஆனால் அவன் செய்தி அறிந்ததும் திகைத்து விட்டான். ஆமாம், எங்கோ நண்பன் வீட்டுக்குப் போவதாகக் கத்தி விட்டு, சூட்கேசும் கையுமாக ஜனன்

போய் இரண்டு மணிக்கு மேலாகி விட்டது என்று வித்யா விளக்கிய போது என்ன செய்வதென்றே அவனுக்குப் புரியவில்லை. தன்னால் வந்த வினையென்று, தன்னையே நொந்தவனாய், ஸ்டேசனுக்கும், பஸ் ஸ்டாண்டிற்குமாகக் காரில் பாய்ந்ததுதான் மிச்சம். எங்கே போனான் என்ற கேள்விக்குறியுடன் தொங்கிய முகத்துடன் திரும்பிய அவனைப் பார்க்க வித்யாக்கே சகிக்கல்லை. அன்றிலிருந்து, ஒவ்வொரு நாளும் அவன் வரவிற்காக அத்தனை பேரும் காத்துக் கிடந்ததுதான் மிச்சம்.

ஜனன் போய் வாரங்கள் ஊர்ந்து விட்டன. ஏன் ஏறக்குறைய இரண்டு மாதங்களாகி விட்டன. டாக்டர் வேதகிரிதான், அவர்கள் வீட்டிற்கு வருவதும் தேற்றுவதுமாயிருந்தார். வாணிக்குக் கல்லூரியில் இடம் கிடைத்து விட்டதால், அவள் அங்கேயே ஹொஸ்டலில் தங்கிப் படிப்பைத் தொடங்கியிருந்தாள். ஆரம்பத்தில் சாதாரணமாய்த் தானும் பேசிக் கொண்டு வந்த மலர்வதி அம்மாள், ஏனோ இப்போ வித்யாவுடன் பேச விரும்பாததாலோ என்னவோ, வித்யாக்கு இருந்த கொஞ்ச நஞ்ச நிம்மதியும் பறிபோய் விட்டது. ஏற்கனவே பாதிக்கப்பட்டிருந்த மனம், இன்னும் அதிகமாகத் தொய்ந்து விட்டதாலோ என்னவே, அவள் உடல் நிலை வேறு நொய்ந்து கொண்டு போனது. உணவிலோ, உறக்கத்திலோ கூட ஈடுபாடு காட்டாமல் ஏனோ தானோ என்று சுருண்டு சுருண்டு சோர்ந்து படுத்துக் கொண்டிருந்த வித்யாவைப் பார்க்க சங்கீத்திற்க்கு தன் மேலேயே ஆத்திரம்.

“ஏன் வித்யா, வீட்டுக்குள்ளேயே அடைபட்டுக் கிடக்கிறாய்? போதாக்குறைக்கு மயக்கம், மயக்கம் என்று சுருண்டு படுக்கிறாய், சரியாகச் சாப்பிடாமல் இருந்தால் வேறு எப்படி இருக்கும்? போன ஜனன் திரும்பி வரத்தானே வேண்டும். இப்படி உன்னையே உருக்குலைத்துக் கொண்டு போனால்... எனக்கு... எனக்கு குற்றமுள்ள மனமானதால் குறுகுறுக்குதே” என்று கூடச் சொல்லிப் பார்த்தான். அடிக்கடி பேசாமல் விலகியிருந்த சங்கீத்தே மீண்டும் மீண்டும் வலிய வந்து பேச்சுக் கொடுத்து அவள் நிலையை மாற்ற முயன்று கொண்டிருந்தான். டாக்டர் வேதகிரி தனது நேசிங் ஹோமைப் பெருப்பித்துக் கட்டுவதில் ஈடுபட்டுக் கொண்டிருந்ததால், அடிக்கடி அவரால் வந்து போக முடியவில்லை. அவர் வித்யாவைச் சந்தித்து எத்தனையோ கிழமைகள் ஆகிவிட்டது.

ஜனன் போன இரண்டு மாதங்களில் நான்கு கடிதங்கள் போட்டி ருந்தான். ஆமாம், ஒருக்கால் சிறீதரன் வீட்டிலிருந்து அன்று புறப்படு வதாக ஒரு கடிதம், இன்னொரு தடவை இன்னொரு நண்பன் வீட்டில் இருந்து புறப்படுவதற்கு முன் இன்னொரு கடிதமாகச் சுருக்கமாக நாலு வரி எழுதியிருந்தான். ஒரு கடிதத்திலாவது விலாசத்தை, மறந்து தானும் குறிப்பிடவில்லை. அவனையே நினைத்து நினைத்து உருகிக் கொண்டிருந்த வித்யாக்குத் தலையை எங்கே முட்டிக் கொள்வதென்று தான் தெரியவில்லை. ஆனால் அன்று காலை வீட்டிற்கு, டாக்டர் வேத கிரி அவளில்லாத சமயம் வந்தபோது, சங்கீத்திடம் அன்று ஜனன் வந்து விடுவதாய்த் தனக்கெழுதியிருந்ததாக தெரிவித்த செய்தியைக் கேட்ட போது, அவள் மனதில் மறுபடியும் ஆசைக் கனவுகள் துளிர்விடத் தொடங்கிவிட்டது.

"கவிதா அக்கா, கவிதா அக்கா, டாக்டர் மாமா உங்களை ஒருக்கா வந்திட்டுப் போகட்டாம்" என்று கூவியபடி மாடிப் படிகளில் ஏறிப் பாய்ந்து வந்த ரமேஸ், கவிதாவின் மருட்சியான பார்வையைக் கண்டு திடுக்கிட்டு விட்டான். மாடிப் படியருகில் நின்று கொண்டிருந்த வித்யா, தடாலென்று நிலைதடுமாறி விழுந்ததும், அவன் பயந்தே போய் விட்டான்.

"மாமா, மாமா, டாக்டர் மாமா, கவிதா அக்காவை வந்து பாருங் களேன்" வீரிட்டுக் கத்தினான் ரமேஷ். அவனின் கூப்பாட்டிலிருந்தே ஏதோ நடந்திருக்கிறதென்று ஊகித்துவிட்ட டாக்டர், மேலே ஓடினார். அலங்கோலமாக, மாடிப்படியருகே கிடந்த வித்யாவைப் பரிசோதித் தார். வியப்புடன் மெல்ல அவளை எழுப்பி அவள் அறைக்குத் தாங் கிச் சென்று, படுக்க வைத்தவருக்கு, அவளைச் சுற்றி நின்ற அவர் களைப் பார்த்து என்ன சொல்வதென்றே தெரியவில்லை.

"ஒன்றும் இல்லை. உடல் ரொம்பப் பலவீனமாக இருக்கிறது. சாதாரண மயக்கம் தான். ஜனன் வந்ததும் எல்லாம் சரியாகி விடும்" என்று மென்று விழுங்கினார். மீனா கொணர்ந்த குளுக்கோஸ் போட்ட பானத்தை வித்யா எழுந்ததும் குடிக்கக் கொடுத்துவிட்டு, அங்கேயே தங்கியிருந்தார் இரவு பத்து மணி வரை. ஆனால் ஜனனைக் காண வில்லை. நேரமாகி விடவே, ஜனன் வந்தவுடனேயே தன்னை வந்து அவசியம் சந்திக்கும்படி கூறிவிட்டு, விடைபெற்றார்..

நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும்
நேர்பட வைத்தாங்கே... —பாரதி

வானத்தில் பூரணச்சந்திரன் தண்ணொளியைப் பரப்பிக் கொண்டு பவனி வந்து கொண்டிருந்தான். தூக்கம் பிடிக்காமல் தோட்டத்தில் நின்ற பவள மல்லிகை மரத்தடியில் கிடந்த பெஞ்சில் சாய்ந்து கிடந்த ஜனனின் நினைவுகள் எங்கெல்லாமோ சிறகடித்துப் பறந்தது. அவன் நினைவெல்லாம், வித்யாவின் கடிதத்தில் இருந்த ஒவ்வொரு வரியிலும் மாறி மாறித் தடம் புரண்டு கொண்டிருந்தது. டரவுசர் பாக்கட்டைத் தொட்டுப் பார்த்தான். அவளுடைய கடிதம் மடமடப்பதை அவன் கைகள் உணர்ந்தன. கடிதத்தின் சாரம்தான், அவன் நிலையை அடி யோடு மாற்றி விட்டது.

ஆமாம்! வித்யாதான் அவனை நேரில் சந்தித்துப் பேசும் சந் தர்ப்பம் கிட்டாது போய்விடுமோ என்ற அச்சத்துடன், ஜனன் வரப் போகிறானென்று டாக்டர் வேதகிரி சொன்னதுமே, தன் உள்ளத்தைத் தாளில் கொட்டத் துணிந்து விட்டாள். இரவு பன்னிரண்டு மணிபோல், வந்திறங்கிய ஆரவாரமெல்லாம் அடங்கிய பின், கூடத்தில் அவன் தனியே இருப்பதைக் கவனித்துவிட்டு அந்தக் கடிதத்தை எடுத்துக் கொண்டு வந்தாள். மேலே சுற்றிக் கொண்டிருந்த மின் விசிறியைப் பார்த்தவாறு இருந்த ஜனன், தன் முன்னால் நின்ற வித்யாவைக் கண்ட தும் தடுமாறினான். மறுகணம், அவன் மடியில் அந்தக் கடிதத்தைப் போட்டுவிட்டு மறைந்து விட்டாள் வித்யா. வாசிப்பதா விடுவதா ஒரு சில நிமிஷத் தயக்கம். ஆனால் அதை வாசிக்காமல் விட முடியவில்லை ஜனனால். ஜனன் சென்றது தொட்டு, நடந்த நிகழ்ச்சிகள் அத்தனை யையும் இடைவிடாது கோர்வையாய்த் தொகுத்து எழுதியிருந்தாள். சங்கீத் தன்னை விரும்பியது, சங்கீத்தின் டைரியைத் தான் படித்தது, ஏரோட்ரோமில் சங்கீத் தன் மனதைத் திறந்து காட்டியது, இறுதியாக டாக்டர் வேதகிரி அன்று மாலை தன்னிடம் வந்து திருமணத்திற்கு விரைவில் ஏற்பாடு செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டது என்று புதிர் போட்டு விட்டுச் சென்றது, எல்லாமே தெளிவாக எழுதி யிருந்தாள். ஜனன் மீண்டும் ஒருமுறை அதைப்பிரித்துப் படித்தான். கடிதத்தின் கடைசிப் பகுதி அவன் மனதை அடியோடே மாற்றி விட்டது.

"ஜனன் நீங்கள் நினைக்கலாம், நான்தான் சங்கீத்தின் ஆசைகளையும், கனவுகளையும் வளர்த்தேனென்று. என் உள்ளத்திற்குள்ளேயே வளர்ந்திருந்த உங்கள் கனவுகளிலே என்னை இழந்திருக்கையில், அவர் என்னைத் தன் கனவுகளில் வளர்ப்பதை நான் உணரவேயில்லை. ஏன், இன்னும் கூட... நீங்கள் சங்கீத்தையும், என்னையும் பிணைத்து, உங்களை என்னிடம் இருந்து பிரித்துக் கற்பனை செய்வதை நினைக்கையில்... வேதகிரி மாமாவிடம் சங்கீத்தையே என்னைத் திருமணம் செய்யச் சொன்னீர்களாமே. உங்கள் நெஞ்சைத் தொட்டுச் சொல்லுங்கள் ஜனன், உங்களைத் தவிர, நான் வேறொருவருடன் வாழ, என்னால் முடியுமா? ஒருவனுக்கு ஒருத்தி என்ற நியதியில் கலந்த நான், ஊரறிய உங்களால் ஏற்கப்படாவிடினும், உங்கள் மனைவியை, இன்னொருவருக்குத் தாரை வார்க்க நீங்கள் முன் வந்தாலும், நான் ஏற்பேன் என்று நினைக்கிறீர்களா?"

கடிதத்திலேயே ஆழ்ந்து விட்ட ஜனன் தன் கண்களிரண்டும், வளையணிந்த கரங்களால் மூடப்படுவதை உணர்ந்தான். அதே கரங்கள்... இரண்டு ஆண்டுகளிற்கு முன்தான் விளையாடி மகிழ்ந்த அதே வித்யாவின் கரங்கள் என்பதை எப்படி அவனால் மறக்க முடியும். படபடக்கும் தன் கரங்களால் மெல்ல, அவள் கரங்களை விலக்கினான் ஜனன்.

"ஜனன் ஜனன்... இன்னுமா என்னைப் புரியவில்லை" நிலவொளியில் மங்கிப் பளபளத்துக் கொண்டிருந்த வித்யாவின் கண்கள் அவனை வட்டமிட்டது. அருகில் அவன் காலடியில் மண்டியிட்டு அமர்ந்த வித்யாவை வெகுநேரம் பார்த்தான் ஜனன்.

"வித்யா... வித்யா, முற்றும் விடுபடாத புதிரான நிலையில் தான் இன்னும் இருக்கிறேன். உன் கடிதம் உன்னைப் பொறுத்தளவில் நீ எனக்கே உரியவள் என்று காட்டி விட்டது. ஆனால்... அன்று டின்னர் நடந்த அன்று, அண்ணா மாடிப்படிகளிலிருந்து தனியே இறங்கி வந்து கொண்டிருந்ததைக் கண்டுவிட்டு... உன்னைத் தவறாக எடைபோட்டு விட்டேன். அவன் கையிலிருந்த, அந்தப் பூச்சரம், தற்செயலாக எங்கேயும் விழுந்து கிடந்ததைக் கண்டு எடுத்திருக்கலாம் தானே. மாடியில் நீ மட்டும் படுத்திருந்ததால் நான் தப்புக் கணக்குப் போட்டு விட்

டேன். அண்ணா, குடிபோதையின் வேகத்தால், தடுமாறி மாடிக்கு வந் திருக்கக் கூடும்..."

"ம் என்ன சொல்றீங்க ஜனன், எப்ப இது நடந்தது."

"ம் அதுக்கு இப்ப என்ன? பழைய கதையை விட்டுத் தள்ளு வம்... வித்யா, வித்யா, இத்தனை நாளா உன்னைப் பிரிந்து..."

"ஜனன் இப்ப கூட எனக்கு ஏதோ பயம், பயமாயிருக்கு. நாலு பேருக்கு முன்னால் உங்கட மனைவி என்று சொல்ல முடியாத நிலை வந்திடற மாதிரி ஒரு கலக்கம்... ஏனோ என்னையறியாமல் மனம் கலங்கிக் கொண்டிருக்குது. எவ்வளவுதான் என்னை நான் தேற்றிக் கொண்டாலும், என்னவோ பக்குப் பக்கென்று இருக்கிறது. அதனாலே... அதனாலே..." என்று தயங்கியவளைப் பார்க்கவே பரிதாபமாய் இருந் தது ஜனனுக்கு.

"அதனாலே... அதனாலே. ஏன் வித்யா இவ்வளவு தயங்கு கிறாய்? என்கிட்ட சொல்லக் கூடாவா?" ஆதரவுடன் அவள் கரங்களைப் பற்றினான் ஜனன்.

"இருங்கள், ஒரு நிமிஷத்தில் வந்து விடுகிறேன்" என்றவாறே மங்கிய நிலவொளியில் வீட்டை நோக்கி நடந்தாள் வித்யா.

ஐந்து நிமிடம் கூட இருக்காது. அவசரமாகத் திரும்பி வந்தவள் அவனருகே வந்ததும் தயங்கினாள். கையிலிருந்த அட்டைப் பெட் டியை ஜனனிடம் நீட்டினாள் வித்யா. பழைய ஞாபகங்கள் அலை மோத அந்தப் பெட்டியைத் திறந்தவன் உள்ளே மெல்லிய இளஞ் சிவப்பு ரிஷி பேப்பரிற்கிடையில் மின்னிக் கொண்டிருந்த கொடியில் பிணைத்திருந்த தங்கத் தாலியைக் கண்டதும், அவனை அறியாமலே, அதைக் கையில் எடுத்தான். எதிரே தலை கவிழ்ந்த வண்ணம் மௌன மாக நின்ற வித்யாவை ஊடுருவி நோக்கினான் ஜனன். புதிதாக இட்ட குங்குமமும், பின்னலில் தழையத் தொங்கிய மல்லிகைச் சரமும் மீட் டிய மனோராம்மியமான பழைய நினைவுகளின் சுகானந்த ராகத் தினால் அவன் உணர்வெல்லாம் சிலிர்த்தது. வித்யாவின் கழுத்திலே மங்கல நாண் பொருத்தப்பட்டிருந்த அந்தக் கொடியை, இரண்டு கைகளாலும் சுற்றிப் பிணைத்தான் ஜனன். கண்கள் கலந்திட, நெஞ்சம் நிறைந்திட, நித்தியத்திற்கும் இணைந்திட்ட நிறைவினிலே, நிறைந்த

அமைதியிலே கணங்கள் ஓடின. வானிலே முகில்களை விலத்திக் கொண்டு எட்டிப் பார்த்த நிலவின் கதிர்களால், கட்டவிழ்ந்த பவள மல்லிகைப் பூக்கள், தோட்டத்தில் புகுந்து விளையாடிய தென்றலில் சிலிர்த்துக் கொட்டியது.

"வித்யா" உணர்வு நிறைந்தால் உதட்டில் பேச்சு அதிகம் வராது தானே.

"ஜனன் ஜனன்" வித்யா மட்டும் அதுக்கு விதிவிலக்கா என்ன?

"க்கும்... ம்.. ம்.. ம்.. என்ன எனக்குக் கூடச் சொல்லாமல் நடத்தப் பார்த்தீங்களா? நிலவே சாட்சி, மலரே சாட்சி, நீங்கள் இருவருமே ஒருவர் ஒருவரிற்குச் சாட்சி என்று விஷயத்தை முடிச்சிட நினைச்சிட் டாலும், கடவுள் என் பக்கம்தான் இருக்கிறார் இல்லையா?" குறும்பு டன் எழுந்த சங்கீத்தின் குரலைக் கேட்டதும், ஜனனின் பிடியிலிருந்து திடுக்கிட்டு விலகினாள் வித்யா.

"ஏன் கவிதா, ஜனன்? என்னடா? அப்படியே திகைத்துப் போயிட் டீங்க. உன்னோட எப்படியாவது பேசி ஒரு முடிவுக்கு வரவேண்டு மென்று உன் அறைக்குப் போனால், ஆள் இல்லை. எங்க மறுபடி போயிட்டான் என்று திட்டிக் கொண்டு வந்தா, நல்லா நிலா காயுது. கொஞ்ச நேரம் உலாவி விட்டு வரலாமென்று. இந்தப் பக்கம் வந்தால், பேச்சுக் குரல் கேட்கிறதே என்று பார்த்தால்... இப்ப, இந்தப் பக்கம் வந்திருக்காவிட்டால், இந்தக் கல்யாணத்தைப் பார்க்கக் கிடைச்சிருக் குமா எனக்கு?"

"அண்ணா.. அண்ணா" ஒன்றும் சொல்ல முடியாமல் தடுமாறி னான் ஜனன்.

"உஷ் பேசாதே! இப்போதுதான் புத்திசாலித்தனமாக நடந் திருக்கிறாய். அதை விட்டுத் தள்ளு. உங்க இரண்டு பேருக்கும் என்னு டைய நிறைவான வாழ்த்துக்கள். நித்தியத்திற்கும், சத்தியமான சங்க மத்தில், கவிதா நீ தீர்க்க சுமங்கலியாய் இருக்க வேண்டுமம்மா!" சங்கீத்தின் குரல் உணர்ச்சியில் ஊசலாடியது.

"சரி, சரி, சிவபூஜையில் கரடி நுழைந்த மாதிரி நான் எதுக்கு இங்கே. நடத்துங்கள்.. ம்.. ம் நான் வர்றேன்" என்று குறும்பாகச் சிரித்த

வாறு வீட்டுப் பக்கம் நோக்கி நடந்த சங்கீத்தைப் பார்த்தவாறே நின்றார்கள் ஜனனும் அவன் மனைவியும்.

இனம் விளங்கவில்லை. எவனோ
என்னகம் தொட்டு விட்டான். — பாரதி

"ஜனன் அண்ணா, உங்களிற்குத் திடீரென்று என்ன வந்துவிட்டது. பழைய அண்ணாமாதிரி இப்பதான் இருக்கு.. எண்டாலும் சும்மா, சும்மா சிரிக்காமல் நான் கேட்ட அந்தப் பிளேனை பூட்டித் தாங்களேன்" ஜனன் அருகே நின்ற ரமேஸ் அவன் சேட்டைப் பிடித்து இழுத்தான். மடியில் அமர்ந்திருந்த லதாவைத் தூக்கிக் கொஞ்சியவாறே எழுந்தான் ஜனன்.

"இருடா, ரமேஸ். வந்து நானே முழுக்கப் பூட்டித் தாறன். வித்யா, கவி, கவிதா அண்ணாவோட பேசிக்கொண்டிரு. இதோ வந்திடுறன்" என்றவாறே மாடிப் படிக்கட்டில் இறங்கினான் ஜனன். விழியாலேயே விடை கொடுத்த வித்யாவைப் பார்த்துச் சிரித்தான் சங்கீத்.

"ஏன் கவிதா, அந்தத் தாலியை சேலையாலேயே போர்த்து, மூடி மறைச்சால், விஷயம் எப்படி வெளியாக முடியும். உனக்குத் தயக்கமாயிருந்தால் அம்மாட்ட நானே சொல்லிடட்டுமா?"

"எதை அம்மா கிட்ட சொல்லப் போறாய் சங்கீத்? அதை என்னென்று நானும் அறியலாமா?" கேள்வியைத் தொடுத்தவாறே படிகளில் ஏறிவந்து, கொண்டிருந்தார் டாக்டர் வேதகிரி.

"அதெது? அம்மாகிட்ட சொல்ற விஷயம் அண்ணா? எனக்குத்தான் கொஞ்சம் சொல்லேன்" உல்லாசமாகச் சிரித்தவாறே டாக்டரைத் தொடர்ந்து வந்தான் ஜனன்.

"என்ன ஜனன், ஒரேயடியாய்ப் பல்லைக் காட்டிக் கொண்டு வருகிறாய். அப்பாடா, எத்தனை மாதங்களிற்குப் பிறகு அதே பழைய கலகலப்பையும் சிரிப்பையும் காண முடிகிறது. என்ன இப்போ எல்லாம் சமரசமாகி விட்டதா?"

"சமரசமோ, சமத்துவமோ? எல்லாத்தையும் அவட்டையே கேட்டுத் தெரிஞ்சு கொள்ளுங்கோ டாக்டர்" கடைக்கண்ணால் வித்யாவைச் சீண்டினான் ஜனன்.

"அவகிட்டயா? அப்படி என்டால் 'கவிதாட்டயா' என்றது மறந்து, இப்போ 'அவகிட்டயா' என்றாகி விட்டதா? அப்படி என்றால்..." டாக்டர் புரிந்த மாதிரிச் சிரித்தார்.

"அப்படியென்றால், அப்படித்தான். அவன் கவிதாவை அவ கிட்ட என்று சொன்னால், கவிதா அவனை இனி அவர்கிட்டே என்று சொல்ல வேண்டியது தானே முறை. நேற்றிரவு, வானும் நிலவும் சாட்சியாக, திரு ஜனார்த்தன் அவர்கள் செல்வி கவிதாவை, மன்னிக்கணும், செல்வி வித்யாவைத் தன்னுடைய மனைவியாகத் திருமாங்கல்யம் அணிவித்து ஏற்றுக் கொண்டார்கள்" குறும்பாகச் சிரித்தான் சங்கீத்.



"அடடே, அப்படியா ஜனன், எனக்குக் கூட இன்விறரேஷன் இல்லையா கவிதா."

தலையையே நிமிர்த்தாது சிரித்த வித்யாவைப் பார்த்து, "அம்மாவையும் கூப்பிட்டு வாறான், டாக்டர் நீங்கள் இருக்கும் போதே சொல்லிட்டால் பிரச்சனை முடிஞ்சது" என்றவாறே எழுந்தான் சங்கீத்.

"பரவாயில்லை, இப்பவாவது புத்திசாலித்தனமாக நடக்க மூளை வேலை செய்திருக்கே. இந்த நேரத்தில் இன்னொரு ஹப்பி நியூசையும் தெரிவித்து விடுறேன்."

"அதென்ன டாக்டர், இன்னொரு நியூஸ்," புறப்படப் போன சங்கீத் திரும்பி வந்ததும் டாக்டர் கதையைத் தொடரத் தயங்கினார்.

"அது.. அது கவிதாட்டயே கேட்டுப் பாரேன்."

"என்ன டாக்டர் அது? எதைச் சொல்றீங்க?" சீரியஸாகக் கேட்டாள் வித்யா.

"என்னது வித்யா ஒண்ணுமே சொல்லவில்லையே?"

"எனக்குத் தெரிஞ்சால் தானே, நான் உங்களுக்குச் சொல்றதுக்கு ஜனன்" குழப்பமுடன் டாக்டரைப் பார்த்தாள் வித்யா.

"இதென்ன இரண்டு பேருமே முழிக்கிறீங்கள்? முன்னுக்கு வர வேண்டியவைகள் பின்னுக்கும், பின்னுக்கு வரவேண்டியவைகள் முன்னுக்குமாய் நடந்தால் முழிக்கத்தான் வேண்டிவரும். நான் கூடத் தான் திடுக்கிட்டிட்டேன். இதென்னடா ஜனன் இப்படி அவசரப்பட்டிட்டானே என்று. ஏதோ நடந்தது நடந்திட்டுது. விஷயம் அறிஞ்சுதான் திடீரென்று, தாலி கட்டிட்டாயோ என்று நான் நினைச்சன்..." இழுத்தடித்தார் டாக்டர்.

"டாக்டர், இதென்ன கதையெல்லாம் கதைக்கிறீங்க. சொல்றதைச் சற்று விளக்கமாகத் தான் சொல்லுங்களேன்" சற்றே எரிச்சல் கூட வந்துவிட்டது ஜனனுக்கு.

"எதைப் பற்றி..." வித்யாவும் இழுக்கவே, இருவரையும் மாறி மாறிப் பார்த்தார். பிறகு சங்கீத் தான் நிற்பதால் தான் அங்கு டாக்டர் தயங்குவதை உணர்ந்ததும்,

"சரி சரி நீங்கள் ஏதோ அவர்களிடம் பேச வேண்டுமானால் நான் அப்புறம் வர்றேன்" என்ற சங்கீத்தை, மீண்டும் இருக்கையில் தள்ளினான் ஜனன்.

"சும்மா இருங்கண்ணா, அப்படி என்ன இரகசியம் டாக்டர். நீங்கள் சொல்லித்தான் விடுங்களேன்" என்று ஜனன் அவரப்படவே,

"ஓகே. இதுக்கு மேல மறைப்பானேன். கவிதா, தாய்மை அடைஞ்சிருக்கா. ஜனன் நீ அப்பாவாகப் போறாய்." டாக்டர் முடிக்கவில்லை.

"டாக்டர்" வீறிட்டுக் கத்தினாள் வித்யா.

விழிகள் பிதுங்க டாக்டரையே நோக்கினான் ஜனன்.

"என்ன உளர்றீங்கள்? பயித்தியம் மாதிரி" ஆத்திரமும் கோப முமாய்ப் படபடத்தாள் வித்யா.

"இதுக்கேன் இப்படிப் பதட்டப்படுறீங்க. ஜனன், செயலுக்குப் பின் வர்ற விளைவுகளைச், செய்கையில் ஈடுபடுறதற்கு முன்னமே யோசித்திருக்க வேண்டும். ஜனன், நீ அவசரப்பட்டுட்டு..."

"தயவு செய்து வாயை மூடுங்கள் டாக்டர். விளையாடுறதற்கு நேரமா இது? விவஸ்தை கெட்டுப்போய் அட்வைஸ் வேறயா?" ஆவேச மாகக் கத்தினாள் வித்யா.

"அப்படியென்றால், அப்படியென்றால்... நான் அன்று கண்டது... சங்கீத் அண்ணா... அண்ணா நீ... நீ..." சங்கீத்தையே வெறித்து நோக்கி னான் ஜனன்.

"சங்கீத்துக்கென்ன, அவருக்கென்ன? என்ன சொல்றீங்க ஜனன்" வெறி பிடித்தவள் மாதிரி ஜனனின் சேட்டைப் பிடித்து உலுக்கினாள் வித்யா. மறுகணம், தடதடவென்று மாடிப் படிகளில் இறங்க முற்பட டுக் கொண்டிருந்த சங்கீத்தைப் பார்த்துத் திகைத்து விட்டான் ஜனன்.

"ஜனன், ஜனன், சங்கீத்தைப் பிடி, கமோன் ஜனன்" டாக்டர் தான் முதலில் பிரமையிலிருந்து விடுபட்டுக் கத்தினார்.

சங்கீத்தின் கால் சற்று ஊனமாயிருந்ததற்கென்ன, அவன் வெறி பிடித்த வேகத்திற்கு, திகைப்பிலிருந்து முற்றாக விடுபட்டிராத ஜன னால் ஈடுகொடுக்க முடியவில்லை. மறுகணம், தடால்... சத்தத்துடன், கால் தடுக்க விழுந்து விட்ட சங்கீத் வெறிக்க வெறிக்க ஜனனைப் பார்த்த வாறு மல்லாந்து கிடந்தான். பதறியவாறு அவனருகில் ஓடிவந்த ஜன னுக்கு, அத்தனை குழப்பத்திற்கிடையிலும் தான் ஒரு டாக்டர் என்றது நினைவிற்கு வரத்தான் செய்தது. சங்கீத்தின் நிலையைப் பார்த்து...

"ஐயோ ஜனன், உனக்கு நான் துரோகஞ் செய்து விட்டேனடா," அலறினான் சங்கீத்... விம்மி வெடித்துக் கொண்டிருந்த குமுறலை அடக்கியவாறு, முரண்டு பிடித்துக் கதறிக் கொண்டிருந்த சங்கீத்தைப் பலவந்தப்படுத்தி அவன் அறைக்கு அழைத்துச் சென்று அமர வைத் தான் ஜனன். தலையணைக்கடியில் இருந்த டைரியை இழுத்தெடுத் துப் பக்கங்களைப் படபடவென்று புரட்டினான் சங்கீத். வாடிப்போன

அந்த மலர்ச்சரம்... அதே மலர்ச்சரம் அந்த டைரிக்குள் இருந்து ஜனனின் காலடியில் வந்து விழுந்தது. மறுகணம் அந்த நினைவினிலே, அந்த நினைவிலே பொறி தட்டிப்போய் விட்டான் ஜனன்.

"ஐயோ, ஜனன் மோசம் போட்டேன்டா, ஜனன் ஜனன், கவிதா உனக்குத் துரோகஞ் செய்து விட்டேனே. எல்லாமே புரிஞ்சிட்டுதடா" கண்ணீர் வழியத் தலையைப் பிடித்துக் கொண்டான் சங்கீத்.

"ஜனன், டேய், ஜனன், நான் அதைப் பொய்யென்று நம்பி ஏமாந்திட்டேன்டா. நான் ஏமாறலையடா, கவிதாவை, உன்னை ஏமாத்திட்டன்டா" தலையைக் கட்டிலில் மோதிமோதிக் கதறும் சங்கீத்தைப் பார்க்கச் சகிக்கவில்லை.

"அண்ணா, கொஞ்சம் பொறுமையாய் இருங்கள். நான் சொல்றதைக் கொஞ்சம் கேளுங்கள்" சங்கீத்தை ஓரளவு தான் தடைப்படுத்த முடிந்தது ஜனனால். தான் கட்டியெழுப்பிய காதல் கோட்டை, மீண்டும் தவிடு பொடியாவதை நினைக்கத் தானும் சக்தியற்றவனாகத், தன்னையே தன் குமுறலையே தடைபோட முடியாதவனாய் தவிக்கையிலே, சங்கீத்தின் துடிப்பையையா இவனால் கட்டுப்படுத்தி விட முடியும்.

"ஜனன், ஐயோ என்னை அப்படிப் பார்க்காதேயடா, நான் வேணுமென்று செய்யலை, என்னை ஒன்றும் கேட்காதே, இதைப் படிச்சுப் பாரன், இதென்ன கடவுளே, என்னை ஏன் இப்படிப் துரோகியாக்கி விட்டாயே" கண்ணீர் கரகரவென்று வழிந்தோடப், புலம்பியவாறு அந்த டைரியை வீசினான் சங்கீத். டைரியைப் படித்துத் தான் பார்க்கலாமே என்ற நினைத்தவாறு அதைப் பிரித்தான் ஜனன்.

ஏதோ எழுத்துக்கள் தெரிந்தனவே தவிர, அவனால் தொகுத்து வாசிக்க முடியவில்லை. "விடுங்கள் அதை" லபக்கென்ற டயரியைப் பறித்த வித்யாவின் கோலம் பார்க்கப் பயங்கரமாயிருந்தது. மாடிப் படிக்கட்டின் கைப்பிடியில் தலையை முட்டி முட்டி மோதிக் கதறியவளை, டாக்டர் வேதகிரி முரட்டுத்தனமாகத் தடுத்து விடவே, கீழே இறங்கி ஓடிவந்தாள். ஜனனின் கையிலிருந்த டைரியை அவள் ஏற்கனவே படித்திருந்தால், அவளால் தொடர்பாக வாசிக்கக் கூடிய இடத்தைக் கண்டு பிடிக்கக் கூடியதாயிருந்தாலும், அவளிருந்த நிலையில்

அவளால் வாசிக்க முடியவில்லை. வாசிக்க முடியாத ஆத்திரத்தில் வாசிக்க முயன்று கொண்டிருந்தபோது, சங்கீத்தின் கேவல் அவளை இடை வெட்டியது.

"கவிதா, கவிதா, உனக்கு மாற்ற இயலாத கொடுமையைச் செய் திட்டேனம்மா" கதறி வெடித்தவாறு, வித்யாவின் கைகளைப் பிடித்து அரற்றிய சங்கீத்தின் கைகளை உதறித் தள்ளினாள் வித்யா.

"சீ என்னைத் தொடாதே, தொடாதே.. ஐயோ அம்மா.. ஜனன் ஜனன்" என்று கதறியவளை டாக்டர் வேதகிரி தான் ஆசுவாசப் படுத் தினார். ஓவென்று கண்ணீர் வழியக் கதறியவாறு கீழே விழுந்தாள் வித்யா. சங்கீத்தை ஒருவாறு அடக்கிக் கொண்டிருந்த ஜனன், வித்யா வின் நிலையைக் கண்டதும் அவள் பக்கம் திரும்பினான். அடித்துப் போட்டாற்போல் சுருண்டு கிடந்த வித்யாவைத் தூக்கி, சங்கீத்தின் படுக்கையில் வளர்த்தி விட்டு, அவளைப் பரிசோதித்தவர் யோசனை யோடு ஜனனைப் பார்த்தார். மழையடிச்சு ஓய்ஞ்சு விட்டமாதிரி மௌன மாகக் கணங்கள் ஊர்வது போல் பிரமை ஜனனுக்கு. யன்னலூடு வெறித்து நோக்கிக் கொண்டிருந்த அவன் மனக் குமுறலின் எதிரொலி யாக, சங்கீத்தின் கேவலும், வித்யாவின் முனகலும் வெகுநேரம் தொடர்ந்து ஒலித்துக் கொண்டேயிருந்தது.

## 13

குணமும் உறுதியில்லை – எதிலும்
குழப்பம் வந்ததடி. – பாரதி

மெல்ல டைரியை எடுத்து மீண்டும் பக்கங்களைப் புரட்டினான் ஜனன்.

நேற்று வெள்ளிக்கிழமை, ஜனனின் விருந்து இனிதாக நடந்து கொண்டிருந்தது. என்னதான் முயன்றாலும் என்னால் என் மனதின் உணர்வுகளை அடக்கவோ, ஆற்றவோ முடியவில்லை. அன்று ஏரோட் ரோமில் கவிதாவுடன் தெளிவான மனநிலையுடன் தான் பேசினேன். ஜனனின் வரவால் ஏற்பட்ட மகிழ்ச்சியோ, என்னவோ, அன்று முழுதும் என்னையே மறந்து உற்சாகமாகவே இருந்தேன். ஏன், அதற்குப் பிறகு

கூட, மனம் சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தாலும் கூட, உல்லாசமாக இருப்பதாக் உலகுக்குக் காட்டிக் கொண்டு இருந்தேன். உதட்டிலே சிரிப்பும், பேச்சும் கொடி கட்டிப் பறந்தது. ஆனால் உள்ளத்திலோ ஆறாத காயமாகக் கவிதாவின் பிரிவு இரத்தமாகக் கசிந்து கொண்டிருந்தது. சிற்சில சமயங்களில் எதிர்பாராது ஏற்பட்ட நிகழ்ச்சிகள், அந்தக் காயத்தை விரைவில் ஆற விடாமலே கிளறிக் கொண்டிருந்தது. கவிதா சந்தோஷமாயிருக்க வேண்டுமென்ற வேகம் என் உள்ளத்தினுள்ளே சுடர் விட்டுக் கொண்டிருக்கையிலேயே, அந்தச் சுடரின் சூட்டிலேயே என் கனவுகள் கருகிக் கொண்டிருந்தன. அந்தச் சூட்டின் தாக்கத்திலே வெம்பியே போய்விடுவேனோ...

இந்த வேதனையை மறைக்க ஒரு வழி. குடிதான் எனக்கு மறுபடி கைகொடுத்தது. அன்று வெள்ளிக்கிழமை. காலையில் கூட, கவிதாவின் வாடிய முகத்தைப் பார்த்தபோது, அவள் வாட்டத்திற்கு நான் தானே காரணம் என்று உறுத்திக் கொண்டிருந்த மனதை மாற்ற மதுவை நாடினேன். எங்காவது வெளியே போய் வரலாமென்ற எண்ணத்துடன், ட்ரைவரைக் காரை எடுக்கச் சொன்னேன். ஏதோ ஒரு தியேட்டர் முன் காரை நிறுத்தி விட்டு படம் பார்க்கச் சென்றேன். பார்க்கப் போன படம் கூடவா என் கதையை நினைப்பூட்ட வேண்டும். இரண்டு நண்பர்கள் ஒரு பெண்ணை விரும்புவதும், ஆனால் இறுதியில் அந்தப் பெண் தான் விரும்பிய அதே இளைஞனை மணந்து கொள்வதால், ஏமாற்றம் கண்டவன் தேர்ந்த முடிவு. வேண்டவே வேண்டாம். தற்கொலை என்பது சுத்தப் பயித்தியக்காரத்தனமல்லவா?

எவ்வளவுதான் மறக்கப் பார்த்தாலும் ஏன் இப்படி நினைப்பூட்டுகிறாள் கவிதா? என் உறுதியெல்லாம் காற்றாய்ப் பறந்து விடுமா? படம் முடிந்து அதிக வேதனையுடன் வந்தேன், ஊருக்காகச் சிரித்துக் கொண்டு விருந்தில் கலந்தேன். மதுவின் போதை என்னை ஆட்கொண்டதற்கென்ன, கவிதாவைத் தேடித்தேடி என் கண்கள் அலைந்தன. ஆனால் அவள் என்ன கண்ணாமூச்சியா விளையாடுகிறாள்? விஸ்கியை கிளாசில் ஊற்றிக் கொண்டிருந்தபோது, வாணி ஜனனிடம் வந்து ஸ்லீப்பிங் ரபிலற்ஸ் கேட்பதும், கவிதா நித்திரை கொள்ளாததாக்கும், அவளுக்குத் தலையிடி என்பதும் அரைகுறையாக என் காதில் விழுந்தது நினைவிருக்கிறது. வெகுநேரமாக எதிர்பார்த்துக் காணாததால் ஏற்பட்ட ஏமாற்றம் ஒரு பக்கம், தலையிடி என்று படுத்திருக்கிறாளே

அவளைப் பார்த்து உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் மறு புறம்... இன்னொரு கிளாஸ் விஸ்கியை எட்டி எடுத்த எனக்குள்ளே ஒரே தடுமாற்றம். அறைக்குள் சென்று படுக்கப் பார்த்தால், தூக்கமும் வரவில்லை. ஏதோ ஒரு வெறி, ஏதேதோ நினைவுகள், பின்னேரம் பார்த்த படத்தில் பார்த்த விரசமான காட்சிகள் அந்தக் காட்சிகளில்; அவர்களிடையே கண்ட நெருக்கம்... மதுவும் மனமும் மருகியது. சற்று நேரம் அவளுடன் பேசிக் கொண்டாவது இருந்திட்டு வரலாமே என்று எண்ணியவன் மாடிக்குப் போக எழுந்தது ஞாபகத்தில் இருக் கிறது. அப்புறம் என்ன கால்கள் தடுமாறியதா? எதுவுமே நினைவில் இல்லை.

பொழுது விடிந்து வெகு நேரமாகி விட்டது. எழும்பினேன் திடுக்கிட்டு, படுக்கையில் கூட அல்ல, நிலத்திலே 'காப்பற்' மேலேயே படுத்துத் தூங்கி விட்டேன் போலிருக்கிறது. ஏதேதோ கனவுகள். பழையபடி நினைவையே இழந்த மாதிரிச் சிக்கலான மனநிலையுடன் எழுந்து கட்டிலில் அமர்ந்தேன். நேற்று நடந்தவைகள்... நேற்று டைரி கூட எழுதவில்லையே. எழுந்து ஒருவாறு எழுதினேன். அதன்பிறகு நேற்றிரவு விருந்தின் போது அணிந்திருந்த சேர்ட்டையும், காற்சட் டையும் மாற்ற முயன்ற போதுதான் நிலத்தில் கிடந்த அந்தச் சரம். அது... நேற்று மாலை கவிதா தன் பின்னலில் சூட்டியிருந்த மல்லிகை யும் கனகாம்பரமும் கலந்த சரமல்லவா? இது எப்படி என் அறைக்கு வந்தது. நான் இவ்வளவு நேரமும் கண்டது கனவாய்த் தானிருக்க வேண்டுமென்று முடிவு கட்டினது சரியென்றால், இந்தச் சரம் எப்படி இங்கு வந்தது. ஒருவேளை கவிதா இங்கு வந்திருந்தபோது விழுந் திருக்க வேண்டும்.

என்னுடைய இந்த எண்ணம் சரிதான். நான் கண்டது கனவு தான். இல்லையென்றால் ..சே..சே.. அப்படி மட்டரகமாகவா கவிதா வுடன் நடந்திருப்பன். நேற்று அவளோடு முறை தவறி நடந்திருந் தால், இன்று கவிதா எப்படி வழக்கம் போல் சாதாரணமாய்ப் பேசிப் பழகியிருப்பாள். அவள் வழக்கம்போல் இருப்பதிலேயே தெரிகிறது நான் கண்டது கனவென்று... நல்லவேளை... ஏதும் தவறாக உண்மை யாக நடக்க விடாமல் இறைவன் தான் காப்பாற்றி விட்டான். இனியும் அப்படி நடக்கக் கனவில் கூட நினைக்க மாட்டேன். இதுவரை சில

நேரங்களில் கவிதாவைக் கண்டு சஞ்சலப்பட்டது தவறு என்று உணர்த்திவிடத்தானாக்கும் இப்படி ஒரு கனவு வந்திருக்கிறது. இந்தக் கனவின் சூடு ஒன்றே போதும், என் காதல் நினைவுகளை, வேண்டாத நினைவுகளை அழித்துவிட. ஆமாம், இனிமேல் நிச்சயமாகக் கவிதா என் கலை உணர்வுகளுக்கு நிறைவளிக்கும் கலைத் தேவதையே யொழியக், காதலி, மனைவி என்பதெல்லாம் பழைய, பழைய கற் பனைக் கதைகள் தான்...

டைரியைப் படித்து முடிக்காமலேயே, வித்யாக்கும்; ஜனனுக் கும் நடந்தது முழுதும் விளங்கி விட்டது. ஜனன் தனியே இருந்து டைரியைப் படித்துக் கொண்டிருக்கையில், சற்றே தெளிவு பெற்று எழுந்த வித்யா, தானும் எழுந்து படித்து விட்டு இடிந்து போய் உட் காந்து விட்டாள்.

அன்று தானே பாவித்த இரு மாத்திரைகளை விட வாணி தந்த மாத்திரையையும் போட்டது ஞாபகத்திற்கு வந்தது. மறுநாள் விடிந்த பின் வாணி வந்து எழுப்பியதும் ஞாபகத்தில் வந்தது.

"என்ன கவிதா இது, இவ்வளவு மோசமாகப் படுத்திருக்கிறாய். அதுவும் இதென்ன கோலம் நைற் கவுணை மாற்றி விட்டு எழும்பி வாயேன். என்னைக் கேலி செய்வாயே அறம்புறமாய்ப் படுப்பே னென்று. இப்ப நீ மட்டும் என்னிலும் வெகு திறமாகத் தான் படுத்திருக் கிறாயாக்கும். சரி சரி பத்து மணியாகப் போகிறது. இப்போ தலையிடி சரியாய்ப் போயிட்டுது தானே" என்று உலுப்பியதும் நினைவிற்கு வந்தது.

அப்படியென்றால்... நாட் கணக்குக் கூட, என் கவனத்தில் விட்டுப் போய்விட்டதா இத்தனை மனக் குழப்பத்தில்..? பொறி தட்டினால் போல் எல்லாம் நினைவிற்கு வரவே, கதிரைப் பிடியிலே, இருந்த இடத்திலேயே இருந்து தலையை மோதியடித்தாள் வித்யா.

"என்னடா ஜனன் இது. கவிதா தலையைப் போட்டு அடிப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கிறாயே?" பதறியவாறு ஓடிவந்தாள் மலர்வதி அம்மாள். வாணி விடுமுறைக்கு வீடு திரும்பியிருந்தாள். அவளை ஸ்ரேசனிலிருந்து அழைத்து வந்தவள். சங்கீத்தின் அறைக்குள் இருந்து ஏதோ அழுகையும் பேச்சும் கலந்து ஒலிப்பதைக் கேட்டதும் என்னவோ ஏதோ ஓடி வந்தவள் கவிதாவைப் பிடித்துத் தடுத்தாள்.

“இதென்ன கவிதா உன்கோலம். நீ வேறு ஏனடா அழுகிறாய் சங்கீத். என்ன ஜனன், என்ன இந்தக் கோலம்.. என்னடா நடந்தது?” படபடத்தாள் மலர்வதி அம்மாள்.

பிரமை பிடித்தாள் போல் நின்று கொண்டிருந்த வாணிக்கும் என்ன செய்வதேன்றே புரியவில்லை. சங்கீத்தைத் தடுத்துக் கொண்டிருந்த டாக்டரையும், அவன் புலம்புவதைக் கேட்டுக் கொண்டு, வெறித்த பார்வையுடன் அமர்ந்திருந்த ஜனனையும், வெறிபிடித்தவள் போல் விம்மிக் கொண்டிருந்த வித்யாவையும் கண்ட மலர்வதி அம்மாளிற்கோ, வாணிக்கோ அடியும் விளங்கவில்லை, நுனியும் விளங்கவில்லை. என்ன நடந்ததென்பதை விளக்கக்கூடிய நிலையில் ஜனன் கூட இருக்கவில்லை. டாக்டர் வேதகிரி, மெல்ல வாணியை வெளியே அனுப்பிவிட்டுத் தயங்கித் தயங்கி மலர்வதி அம்மாளிடம் விஷயத்தை வெளியிட்டார். மலர்வதி அம்மாளுக்கோ பிரிக்கவே முடியாத சிக்கலுக்குள் அகப்பட்டு விட்ட அந்த நிலையைக் கண்டு என்ன சொல்வதென்றே புரியவில்லை. யாரையும் பிழை கூற முடியாத வண்ணம் விதி விளையாடி விட்டது. விளையாடி விடுவதுடன் மட்டும் விதி திருப்தி அடைவதில்லையே. விளையாட்டின் பின்வரும் வினையையும் விதைத்த பின்தானே விதி திருப்தி அடைகிறது...

தூண்டிற் புழுவினைப் போல்,
வெளியே சுடர் விளக்கினைப் போல்
நீண்ட பொழுதாக, எனது நெஞ்சந்
துடித்ததடி..
– பாரதி

யாருமே எதிர்பாராமல் எல்லாமே நடந்து முடிந்து விட்டது. வீடே சுடுகாடாய் மாறிவிட்டது போல் இருள் மண்டிக் கிடந்தது. ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு யுகமாய்க் கழிவது போல் ஒரு பிரமை. ஆனால் காலமோ தன் கதியை மாற்றாது இயங்கிக் கொண்டுதான் இருந்தது. எப்படியோ ஒரு மாதம் உருண்டோடித்தான் விட்டது.

ஆரம்பத்தில் தலைதலையாக அடித்துக் கொண்ட மலர்வதி அம்மாள் போகப் போகத் தன்னைத் தானே மாற்றிக் கொண்டாள். வித்யாவின் நிலையோ.... அழுகையும் கண்ணீருமாக ஆரம்பத்தில் தவித்துக் கொண்டிருந்தவள், போகப் போக எதிலுமே பிடிப்பில்லாமல்

முடங்கிக் கொண்டாள். சங்கீத்தின் நிலைதான் அதிகம் பாதிக்கப் பட்டு விட்டது. தான் செய்த பிழையென்று அவன் துடிப்பதை மாற்று வதற்காவது, வித்யா தன் குமுறலை அடக்க வேண்டியதாயிற்று. ஜனனோ ஆரம்பத்தில் முடிவு செய்ய வழியில்லாமல் தவித்தான். இறுதியில் தன்னைத் தானே மாற்றிக் கொண்டான். வித்யாக்கோ சங்கீத்தை ஏற் கும் மனநிலை இல்லை என்பது திண்ணமாகத் தெரிந்தும் கணவன் என்ற உரிமையைத் தான் எடுப்பதா அல்லது தகப்பன் என்ற உரிமை யைத் தமையனுக்கு விட்டுக் கொடுப்பதா என்பதற்கு வித்யா வழி விட்டால் தானே! வித்யாவிடம் எவ்வளவோ கெஞ்சிப் பார்த்து விட் டான். அவன் முன்வந்தென்ன, பயன் என்னவோ கிட்டவில்லை. டாக் டர் வேதகிரி கூட எவ்வளவோ சொல்லிப் பார்த்தார்.

“ஜனனே உன்னை ஏற்க முன் வரும்போது நீ ஏன் தயங்கு கிறாய்? வாழ்க்கையிலே வேணுமென்றா தவறினாய்? தெரியாமல் நேர்ந்து விட்ட ஒரு தவறிற்காக, இப்படி ஒரு முடிவு எடுக்கக் கூடாது. விவாகரத்துக் கோருபவர்கள், விதவைகள் கூட மறுவாழ்வு தேடும் போது நீ ஏன் தேடக்கூடாது” என்று எவ்வளவோ வாதாடிப் பார்த்தா லும் அவள் ஜனனுடன் வாழ முன் வரவில்லை. அவர் ஜாடைமாடை யாகக் கருவிலே குழந்தையை இல்லாமல் ஆக்கி விட்டால் கூட, ஒரு சுமுகமான வழி கூடுமென்று கோடி கட்டிப் பார்த்தார். ம், க்கும்... எதற் கும் மசியவில்லை வித்யா.

“சங்கீத்தையும் ஏற்க மறுக்கிறாய். இப்போது ஒரு வார்த்தை சொல். ஜனன் உடனே சம்மதித்து விடுவான். என்ன சொல்கிறாள்” என்று டாக்டர் கெஞ்சினதெல்லாம் வெறும் கதைகளாய்த் தான் போனது. அக்கம் பக்கத்துச் சனங்களும் ஏதோ கசமுசத்து அடங்கி விட்டனர்.

“ஏதோ இரகசியமாக ஜனனுக்கும், அந்தப் பெண்ணுக்கும் கல் யாணம் முடிஞ்சிட்டுதாமே. அவ பெரிய இடத்துப் பெண் இல்லை என்றது மட்டுமல்ல, ஏதோ கலப்பு சாதிக்காரியாமே” என்ற மென்று விழுங்கிக் களைத்துப் போய் விட்டனர்.

“எவ்வளவு காலத்திற்குத் தான் அவர்களுக்குக் கண்ணாமூச்சி” ஆட்டம் காட்டுவது. நானும் விரைவில் லண்டன் போக இருப்பதால், நீ ஏன் என்னுடன் வரவில்லை என்று விடுப்புப் பிடுங்குவார்களே?

எங்கள் குடும்ப மானத்தையாவது கார்ப்பாற்றுதற்காகத் தானும் ஓமென்று சொல்ல மாட்டாயா?" என்றெல்லாம் கூடச் சாக்குப் போக்குக் காரணம் காட்டினான் ஜனன். ஆனால் முடிவு, ஏற்கனவே தீர்மானித்ததாய்த் தானிருந்தது வித்யாவின் விஷயத்தில்.

வித்யாவாவது தன் வாழ்வு பறிபோய் விட்டதற்காக அழுதாள். ஆனால் சங்கீத்தோ இன்னொருத்தர் வாழ்வைப் பறித்து விட்டதற்காக அழாமல் அழுதான். தனக்கு மற்றவர்களால் பிழை செய்யப்பட்டு விடப்பட்டது என்பதை உணர்வதை விடத், தான் மற்றவர்களுக்கு மாற்றவே முடியாத பிழை செய்து விட்டதை உணரும் போது மனச் சாட்சி குத்திக் கிளறும் போது... தண்டனைகளிலேயே கடுமையான தண்டனை, மனச்சாட்சி கொடுக்கும் கோரமான தண்டனைதானே, ஜனனால் கூட, சங்கீத்தை அண்டவோ, தேற்றவோ முடியவில்லை.

அறிந்து செய்தாலென்ன? அறியாமற் செய்தாலென்ன? தவறு தவறுதானே. கவிதா... அவள் ஒரு கலைவாணி, கலையின் பூரணி. அப்படிப்பட்ட கலைத் தேவதையைச் சாதாரண பக்தனான என்னால் பூஜிக்கப்பட வேண்டுமே ஒழிய, கணவனாக உரிமை கொண்டாட நினைத்தேனே. அதற்காக இப்படியா அவளை மிதித்துப் புழுதியில் வீச வேண்டும்" என்று குமுறினான் அவன். மற்றவர்களை ஏறெடுத்துக் கூடப் பார்க்கத் தைரியமில்லாமல், தன் வாழ்வின் நாட்களைத் தன் அறைக்குள்ளேயே சிறைப்படுத்திக் கொண்டான்.

பெண்ணென்று பூமிதனில் பிறந்து விட்டால் – மிகப்
பீழையிருக்குதடி தங்கமே தங்கம். – பாரதி

"ஜனன் அண்ணா, ஜனன் அண்ணா உனக்கேதோ கடிதம் வந்தி ருக்கு" கையில் கவருடன் ஓடி வந்தான் ராஜீ. அடுத்த கிழமை ஏதோ ஒரு பட்டிமன்ற பேச்சொன்றில் பங்கு பற்றுவதற்காக, ஏற்கனவே அழைப்பு வந்திருந்ததால், அதை என்ன செய்து தட்டிக் கழிக்கலா மென்ற யோசனையுடன் அமர்ந்திருந்தான் ஜனன். தலைப்பு வேறு.

"ஒருவனுக்கு ஒருத்தி என்பது கற்பனைக்கு உகந்த தலைப்பு. நடைமுறைக்கு ஒவ்வுமா ஒவ்வாதா?"..... நேரில் சொல்ல முடியாதவை களை ரேடியோவில் பேசும்போது..... ரேடியோ பேச்சிலாவது வித்யா அதைக் கேட்க முன்வருவாளா?

......ம் உற்சாகமின்றி அந்தக் கவரைப் பிரித்தான் ஜனன். லண்டனிலுள்ள, பிரபலமான மருத்துவப் பயிற்சி நிலையத்தில் பணியாற்ற விரும்பினால், சம்மதத்தை அறிவித்து விட்டு, விரைவில் புறப்பட ஆயத்தம் செய்யும்படி, டாக்டர் ஜேம்ஸிடமிருந்து தனிப்பட்ட முறையில் வந்திருந்த கடிதம் அது. பேசாமல் மூடி வைத்தான் அந்தக் கடிதத்தை. எதிலுமே உற்காசமிழந்தவனாய் நடமாடிக் கொண்டிருந்தான் ஜனன். கைக்கெட்டியும் வாய்க் கெட்டாத வித்யாவின் இழப்பு. அவன் உல்லாசத்தையே மீண்டும் சிறகொடிக்க வைத்துவிட்டது. குடியே தஞ்சமென்று ஆரம்பத்தில் கிடந்த சங்கீத்தின் போக்கிலே இப்போ சில காலமாக மாற்றம் ஏற்பட்டுக் கொண்டிருப்பதை அவனால் புரிய முடிந்தது. வித்யாதான் ஏதோ அந்த மாற்றத்திற்குக் காரணம் என்பதை ஊகிக்க முடிந்தாலும், அவன் அதைத் துருவி ஆராய விரும்பவில்லை. சங்கீத் ஓரளவு பழையபடி தன் வாழ்வை இசையிலும், சித்திரத்திலும், இலக்கியத்திலுமே கழித்துக் கொண்டிருந்தான். ஆபீசுக்கு வேறு ஒழுங்காய்ப் போய் வந்தான் பழையபடி. வித்யாவின் மனம் என்னவோ, அடியோடு மாறாவிட்டாலும், புறம் எப்படியோ மாறிக் கொண்டு தான் வந்தது. அவள் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும், அவள் உருவம் மாறிக் கொண்டு வந்தது போலவே காலம் அவளது மனதையும் மாற்றிக் கொண்டு வந்தது. தாய்மையின் பொலிவு அவளை மெல்லத் தழுவத் தழுவ, அவள் ரணமும் ஆறத்தான் செய்தது, ஜனன் கட்டிய தாலியோடு அவன் மனைவியாக ஊரார் கணிக்கும் போதோ, அல்லது இரவின் தனிமையில் தன்னிலையை எண்ணி இரகசியமாக கண்ணீர் பெருக்கும் போதோ, அவள் உள்ளம் நெருஞ்சி முள்ளாய் உறுத்தத்தான் செய்தது. சங்கீத்தின் பழைய கோலம், அவள் தாய்மையின் உணர்வுகளைத் தட்டிப்பார்த்தது, தாய்மையின் உன்னத உணர்வுகளில் தியாகமும், சேவையும், பொறுமையும், மன்னிப்பும் மலர்ந்து விடுவது இயற்கை தானே.

"மதுவின் போதைதானே இந்த இக்கட்டுக்கெல்லாம் காரணம். தயவுசெய்து நடந்ததை மறக்கப் பாருங்கள். நடந்தவைகளைக் கெட்ட கனவாக எண்ணி விட்டால் நடக்கப் போகும் நாட்களிலாவது நன்மை வரலாம். அத்தையின் கோலம் கூட உங்களை மாற்றாதா? எப்படி மனம்

உடைந்துவிட்டா. போதாக்குறைக்கு என்னை வேறு இன்னும் உடைக்கப் போகிறீர்களா? என்று கெஞ்சினாள் வித்யா.



"மது ஒன்றுதானே என் மனப்போராட்டத்தை மறக்க வைக்கிறது கவிதா" என்று கண் கலங்கின சங்கீத்தைப் பார்க்கப் பாவமாகக் கூட இருந்தது அவளுக்கு.

"மனப் போராட்டம் என்று சொல்லி என்ன பிரயோசனம்? கொஞ்ச நேரத்திற்கு மறப்பதற்காக இந்தக் குடி என்று குடித்துக் கொண்டிருந்தால் வாழ்நாள் பூராக் குடித்துக் கொண்டிருக்கத்தான் வேணும். அப்படிக் குடித்துக் குடித்துச் சீரழிவதைப் பார்த்து அத்தை ..... அதைப் பார்த்து நாங்கள் வேற அழியவேண்டுமா? இப்படிக் குடித்துக் கொண்டே இருந்தால், முன்பு செய்த அதே தவறை, இன்னொரு தடவை செய்ய முற்பட மாட்டீர்களென்று என்ன நிச்சயம்?"

"கவிதா......." கத்த எடுத்த சத்தம் தொண்டைக்கு வெளியே வரக் கூடவில்லை அவனுக்கு.

"இதோ பாருங்கள். எனக்கும் இந்தக் கலைப்பித்து ஆர்வம் இருப்பதால் தான் கெஞ்சுகிறேன். உங்கள் திறமைகள், கலை உணர்வுகள் கருகக் கூடாது. அதை வளரவிடாமல் செய்த இன்னொரு பாவம்... அதை வேற என் தலையில் எதற்கு விழச் செய்கிறீர்கள்" பேசிப் பேசி களைத்துப் போய் விட்டாள் வித்யா.

"இன்னொரு தடவை, அதே தவறு" ... அந்தச் சொல்லின் சூட்டிலேயே வெந்து கொண்டிருந்த சங்கீத்திற்கு, இதைவிட்டால் வேற சந்தர்ப்பம் வருமா என்று யோசித்தவன் எப்படியாவது அவளை மடக்கி விட வேண்டும் என்பதிலேயே அவன் கண்ணாயிருந்தான்.

இதோ பார் கவிதா.... உன்னுடைய நல்ல மனதிற்கு என்னை மன்னிப்பது சுலபமாயிருக்கலாம். ஆனால் என் மனச்சாட்சி என்னை மன்னிக்கப் போவது என்பது ஒருக்காலுமே இல்லை. உன்னுடைய நிலையைப் பார்க்கும் போது, என்னால் எப்படி நிம்மதியாக இருக்கலாம்? உனக்குச் செய்த துரோகத்திற்கு ஈடு கட்ட என்னால் எத்தனை ஜன்மம் எடுத்தாலும் முடியாது. ஆனால்... உன்னுடைய நிலைக்குப் பரிகாரம் தேடவாவது எனக்கொரு சந்தர்ப்பம் கொடுக்க மாட்டாயா? நீ ... நீ என்னை ஏற்றுக் கொண்டால் கூட, நான் தயார் தான், காரணம் நீ சுமக்கும்..... ஆனால் ஆனால் உன் மனம் ஜனனுக்குத் தான் என்று நல்லாத் தெரியும். என்றபடியால் தான் கெஞ்சுகிறேன். நீ அவனோடு

சேரச் சம்மதித்தால் ...நானும் உன் விருப்பப்படி நிச்சயம் இந்தக் குடியையே தொடமாட்டேன். எனக்கு இப்படிக் கேட்க எந்தவித யோக்கியதையும் இல்லைதான். என்றாலும் என்றாலும்.. ப்ளீஸ்.... கவிதா..." கண்ணீர் வழிய, அவள் கைகளைப் பற்றிக் கொண்டு கெஞ்சியபோது, அவளுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. இறுதியில் அவன் குடியை மாற்றுவதற்காகப் "பார்க்கலாம்" என்று பட்டும் படாததுமாகக் கூறியே தீரவேண்டியதாயிற்று. அந்த ஒரு சொல்லினாலேயே, சங்கீத்தின் போக்கு மறுபடி மாறியது. வித்யாவின் திருப்திக்காக, ஆபிஸ் விட்டால், கதை, கவிதை எழுதுவதிலும், ஓவியந்தீட்டுவதிலும், வீணை மீட்டுவதிலும் பொழுதைக் கழிக்க முயன்று கொண்டிருந்தாலும், எதிலுமே சோகத்தின் சுருதி இழையோடத் தான் செய்தது. பத்திரிகைக்கும், புத்தகத்துக்குமாக மாறிமாறி எழுதிக் குவித்துக் கொண்டிருந்தாலும். வித்யாவையும் ஜனனையும் நோட்டம் விட்டுக் கொண்டுதானிருந்தான். எந்தக் கதையை எழுதினாலும் எல்லாத்திலுமே, பெண்ணுக்கு ஒரு புதுவாழ்வு என்ற ரீதியிலேயே அவன் பேனா ஓடியது. எழுதும் கதைகளிலே வரும் பெண் கதாபாத்திரங்களுக்கு வாழ்வு கொடுத்தோ, என்னவோ, குற்றம் புரிந்த தன் மனதின் குறுகுறுப்பைக் குறைக்க முயன்று கொண்டானோ என்னவோ?

## 14

கணமும் உள்ளத்திலே – சுகமே
காணக் கிடைத்ததில்லை. – பாரதி

ஜனனின் நிலைதான் திண்டாட்டமாயிருந்தது. எவ்வளவு தான் முயன்றாலும், வித்யாவின் பிடிவாதத்தை வெல்ல முடியவில்லையே.

"இன்னும் ஒரு மாதத்திற்குள் திரும்பப் போக வேண்டும், அதற்கிடையில் ஓமென்று ஒரு வார்த்தை சொல்ல மாட்டாளா. இங்கு நிம்மதியாக இருக்க முடியாதென்று, லண்டனுக்குப் போகச் சம்மதமென்று எழுதியது முட்டாள்தனமாக அல்லவா இருக்கிறது. இங்கிருந்தால் ஒரு வேளை வித்யாவின் மனதை மாற்றி விடலாமோ... இல்லை .... இல்லை.. அங்கு போவதற்குச் சம்மதித்ததும் நல்லதுதான். ஒரு வேளை, என் பிரிவே, அவள் மனதை மாற்றத் தூண்டும். அன்பின் தத்துவமே, உற

விலும் பார்க்கப் பிரிவில் தானே அதிகம் அடங்கியிருக்கிறது". நினைத்து நினைத்தே களைத்துப் போனான் ஜனன்.

வாணியும் விடுமுறை முடிந்து கொஸ்டலிற்குத் திரும்பிவிட்டதால், பேச்சுத் துணைக்குக் கூட ஆளில்லாமல் தவித்தான் ஜனன், எத்தனை தரம் தான் வித்யாவிடம் கேட்டுப் பார்ப்பது. இன்னொரு தரம் கேட்டுப் பார்போமோ?.... கேட்டால் என்ன... இன்னொரு தரம் மௌனம் தான், அவளது முடிவாகக் கிட்டும். ஆனால்... ஆனால்.. நேற்று, அவளை மடக்கி, நான் திரும்பவும் லண்டனுக்குப் போவதாகச் சொன்னபோது, அந்தக் கண்களில் படர்ந்த ஏக்கம். என்னை ஏற்கவும் முடியாது, மறுக்கவும் முடியாது திண்டாடுகிறாளே? நான் தான் முழு மனசோட சம்மதிச்சாப் பிறகும் ஏன் அவள் தயங்க வேண்டும்... என்னுடைய வித்யா எனக்குக் கிடைக்க மாட்டாளா? அவளை நெருங்க நெருங்கத் தானே அவள் விலகி, விலகி ஓடுகிறாள். நான் விலகி விலகி ஓடினால், அவள் ஒருவேளை என்னை நெருங்கி...? தங்களை நாடுபவர்களை விடத், தங்களை அலட்சியப் படுத்துபவர்களைத் தானே பெண்மனம் நாடுகிறது.

அந்த மனோதத்துவ டாக்டருக்குக் கூட அவள் மனதின் கணக்குப் பிடிபடவில்லை. அதுதான் சரியான வழியோ.... தனக்குள்ளே சோர்ந்த கலங்கிப் போனாலும் லண்டனுக்குப் புறப்படுவதற்கான ஆயத்தங்களையும் கவனித்துக் கொண்டு தானிருந்தான் ஜனன்.

வித்யா – ஜனன் இருக்கிறான். தனக்குத் தாலி கட்டிய கணவன் இருக்கிறான் என்ற எண்ணமுடன், ஜனனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளில் தவறிவிடவில்லை. ஆனால் அவனிடம் காட்ட வேண்டிய உரிமையில் மட்டும், பங்கு கேட்கவில்லை. முன்பென்றால் அவளையே சுற்றிச் சுற்றி வந்த அவள் ஜனன், இப்போ ஏறெடுத்துக் கூடப் பார்ப்பதில்லையே. அந்தப் பாரமுகம் வேறு அவளை வாட்டியது. அவர் தோற்றத்தை விட அவள் எண்ணத்தில் தான் படிப்படியாக மாறுதல் தோன்றியது. ஜனன் போகப் போகிறான், போனால் இன்னும் மூன்று, நான்கு ஆண்டுகளிற்குத் தாய்நாடு திரும்பமாட்டான் என்ற எண்ணம் பெரும் சுமையாய்க் கனத்துக் கொண்டிருக்க, அவன் அசட்டைத்தனம் அவளை இன்னும் புழுங்க வைத்தது.

"ஜனன், ஜனன், நீங்கள் வலிய வலிய வரும்போது நான் விலகி விலகி ஓடினேன். இப்போ, நானாக வலிய ஓடி வரப் பார்த்தாலும், என்னால் முடியவில்லையே. உங்களை ஏற்கவும் முடியாமல் மறுக்கவும் முடியாமல் நான் படும்பாடு. சங்கீத்தின் சந்தோஷத்திற்காக, நான் உங்களுடன் லண்டன் வரச் சம்மதித்தது ஏன்? இப்போ அவரடைந்த முன்னேற்றமான மாற்றம் அவர் சொற்ப காலத்திலேயே தலை சிறந்த எழுத்தாளர்களுடன் போட்டி போடும் அளவிற்கு வளர்ந்து விட்டார். அவருக்குத் திருமணம் அவரது கலை உணர்ச்சிகளுடன் தான் அதிலேயே அவர் தன்னைப் புடம் போட்டுக் கொள்வார். ஆனால் எனக்கு.. எனக்கு.. ஜனன், ஜனன் எவ்வளவு தான் நீங்கள் என்னை அலட்சியப் படுத்தினாலும், உங்கள் மனதில் அடியில் நான் தான் ஒளிந்து கொண்டிருப்பேன் என்று எனக்குத் தெரியாமலா போய்விடும்? அதை உங்களால் மறைக்க முடியவில்லை. ஒருவளை, நீங்கள் உண்மையிலே என்னை வெறுத்து ஒதுக்கி விட்டாலாவது, நானாக விலகாவிட்டாலும், தானாக விலக்கப்பட்டு விடுவேனே. ஆனால் மாறாக நீங்கள் என்னை ஏற்க முன்வரும்போது, உங்களை நெருங்கவிடாமல், என் வயிற்றின் சுமை கனக்கிறதே... உங்களை ஏற்கும், தகுதி இல்லையே... இன்று என்னை ஏற்பீங்க ...என்றுமே இதே மாதிரி ஏற்பீங்க என்பது என்ன நிச்சயம்? சரி! நீங்கள் தான் ஏற்றாலும், நாளை சங்கீத், என் குழந்தைக்கு அப்பா நீங்களில்லை என்று சொல்லமாட்டார் என்பது என்ன நிச்சயம் அப்ப அந்தக் குழந்தையின் மனம் என்ன பாடுபடும்?...

சரி! அந்தக் குழந்தைக்காக நான் சங்கீத்தை ஏற்றால், நினைக்கவே கசப்பும், வேதனையும் தான் வருகுது. உங்கள் ஒருவருக்கே உடலாலும் உள்ளத்தாலும் வாழவேண்டும் என்று கனவு கண்டதெல்லாம் பகல் கனவு தானா? நான் களங்கப்பட்டு விட்டதற்காக ஒரு பாவமும் அறியாத, அந்த உயிரைக் கருக்கவும் மனமில்லை. டாக்டர் மாமா சொல்றார் என்றதற்காக, அது கருகினால் என் களங்கம் வெளியில் மறைஞ்சிடும். என் மனதிருந்து அந்தக் களங்கம் எப்படி மறைய முடியும். உடலாலும், உள்ளத்தாலும் உங்களது மனைவியான அன்றே நான் தாயாகியிருந்தால், இந்த நிலை எனக்கு வந்திருக்குமா? அல்லது இந்த முறை இப்படியா நான் தாயாக வேண்டும்? இறைவா! இந்த நிலை

எந்தப் பெண்ணுக்குமே வரவேண்டாம். குழந்தையை அழிக்கவும் மனமில்லை. என்னை அழிக்கக் கூட மனமில்லையே. நான் மான மிழந்தவள் தான் வாழும் வாழ்க்கையில் பயனில்லா விடினும் வாழ்க் கையை நானே முடிக்கவும் விருப்பமில்லையே. தற்கொலை... சிசுக் கொலை... இது கோழைத்தனம் என்று பின்வாங்கினாலும், இப்படியா நான் சீரழிய வேண்டும். ம்.... எதற்காக நான் தற்கொலையைப் பற்றி யோசிக்க வேண்டும். இதில் என் தவறென்ன? இப்படி எல்லோருமே தற்கொலையைத் தான் சரியென்றால், எத்தனை பேர் இன்று அப்படிச் செய்திருப்பார்கள்"... என்று மனமே நைந்து போக நினைத்து நினைத் துக் களைத்துப் போவாள் வித்யா.

"ஜனன், ஜனன்.. உங்களைப் பிரிந்து எப்படி என்னால் வாழ முடி யும் எங்காவது கண்காணாத இடத்திற்கு ஓடினாற் கூடப் பரவா யில்லை. ஓடிவிட்டால் உங்கள் குடும்ப மானம்.. அன்று அன்று... ஜனன் என்னை நீங்கள் தொட்டுத் தாலி கட்டிய மறுநாள் காலை, கோயிலுக் குப் போனபோது என் கழுத்து எதிர்பாராமல், பக்கத்து வீட்டுப் பணக் கார மாமியின் கண்ணில் தட்டுப்பட்டுவிட்டது. விடுத்து விடுத்து அவள் கேட்ட கதைக்கு, நான் விடுகதையாய்ப் பதில் சொல்லிச் சமாளிக்கப் போக, அவள் அந்தத் தாலிக்குரியவர் நீங்கள் தான் என்று நம்மைத் தம்பட்டம் அடித்துத் திரிவதால், நீங்கள் மட்டும் லண்டனுக்குப் போனால்... உங்க மானம், மரியாதை எல்லாமே போய்விடுமே.. ஆனால் உங்களை விட்டு எவ்வளவு நாளிற்கு எவ்வளவு தூரத்திற்குத் தான் என்னால் ஓடமுடியும்? எனக்குள்ளேயே கலந்துவிட்ட உங்களை விட்டு.. என்னை விட்டு, என்னால் ஓடமுடியுமா?.. பழமையான இலட் சியங்களின் புதுமைக்குப் பெண்ணாக வாழவேண்டுமென்று நினைத்த படியாற் தானோ, என்னவோ, பழமைக்கும் புதுமைக்கும் இடையே இரண்டும் துருவங்களிற்கு இடையே சிக்கி விட்டேனே" என்று தனக் குத் தானே புலம்புவதைத் தவிர என்ன செய்வாள்.

"உறுதியில்லாத மனதை எனக்கேன் தந்தாய் கடவுளே? நானா கச் சாகத்தான் வழியிருக்கிறது. ஆனால் அதற்கு எனக்கு விருப்ப மில்லை. நீயாகவாவது என்னை ஏற்கமாட்டாயா சாவே" என்று தனக் குள்ளேயே யோசித்துக் கொண்டிருந்தவளின் காதுகளில், வானொலி யில் இருந்து மிதந்து வந்த அந்தப் பாடல் தானாக வந்து விழுந்தது.

மனநாட்டிய மேடையில் ஆடினேன்
கலை காட்டிய பாதையில் வாடுகிறேன்
உயிர் காதலிலே, உடல் மேடையிலே
இந்த வாழ்க்கையின் முடிவெங்கே...
இந்த வாழ்கையின் முடிவெங்கே....
வெறும் காவியக் காதல் போலே
எந்தன் காதலும் ஆனதனாலே....

காவியக் காதல், காவியக் காதல். ஜனன் ஜனன் ... நீங்க சொன்னீங்களே. காவியத்திலே பிணையாத காதலர்களல்ல நாங்கள் என்று ஆனால் இன்று அது பொய்யாய்ப் போயிட்டுதே. தன்னை அடக்கவே முடியாமல் முழங்கால்களிற் கிடையில் முகத்தைப் புதைத்து அழுதவளின் அழுகையைக் கூட்டத் தானோ என்னவோ ரேடியோவில் ஒலிபரப்பான அடுத்த பாடல் கூடச் சதி செய்தது.

ஒருவனுக்கு ஒருத்தி யென்றே
உறவு கண்டோம் திருக்குறளினிலே
உலகமென்னும் தமிழ்கோவிலினிலே
நெஞ்சிருந்தால் நினைவிருக்கும்
நினைவினில் ஒரு மலரிருக்கும்
ஒரு மலரில் மனது வைத்து,
உறவு கண்டால் நல்ல சுகமிருக்கும்
கங்கையிலே குளிக்கயிலே,
காவிரியில் மனது வைத்தால்
அந்த சுகம் இதுதருமோ,
இந்தக் சுகம் அது தருமோ?

மேலும் கேட்க முடியாதவளாய் வானொலியை நிறுத்த அறைக்கு வெளியே வந்தாள், ஏற்கனவே தங்கள் அறைகளுக்குள் இருந்து அந்தப் பாடலைக் கேட்கச் சகிக்காது வானொலியை நிறுத்துவதற்காக ஏதேச்சையாக வெளியே வந்த ஜனனையும், சங்கீத்தையும் கண்டவள், மீண்டும் தனது அறையை நோக்கி, மாடிக்கு ஓடினாள். அந்த ஒரு கணம் சங்கீத்துக்கு ஜனனுக்கு மௌனமாகச் சென்று ரேடியோவை நிற்பாட்டினான் சங்கீத்.

அவனை ஒரு கணம் பார்த்த ஜனன், மேலே படியில் ஏறிக்கொண்டிருந்த வித்யாவை மறுகணம் பார்த்தான். அவனை அறியாமல் அவன் கால்கள் அவளைத் தொடர, அவனை அறிந்த வண்ணம் சங்கீத்தின் கால்கள் ஜனனைத் தொடர்ந்தது.

"வித்யா, வித்யா ஏனம்மா இப்படி அழுகிறாய்? வித்யா.. வித்யா" ஜனனின் அன்பான குரலும், ஆதரவான கைகளும் அவள் அழுகையைக் கூட்டத்தான் செய்ததே ஒழியக் குறைக்கவில்லை. இத்தனை கிழமைகளாக அடக்கி வைத்திருந்த அழுகையையெல்லாம் அவள் வெளிக்கொணரட்டும் என்று அமைதியாகக் காத்திருந்தான் ஜனன்.

"வித்யா, இதோ பார். நாளை மறுநாள் இந்நேரம் நான் பிளேனில் இருக்க வேண்டும். கடைசியாகக் கேட்கிறேன். கேட்கிறேன் என்பதை விட்டுக் கெஞ்சுகிறேன் என்று நானா சொல்ல வேண்டும். இப்போதாவது ஓமென்று ஒரு சொல் சொல்ல மாட்டியா? மாட்டேனென்று சொல்லி விடாதே! ஏனிந்தப் பிடிவாதம்? நானில்லாமல் உனக்கு வாழ்க்கையில்லை. நீயில்லாமல் எனக்கு வாழ்க்கையில்லை. இரண்டு பேரின் வாழ்விற்கும் வழிவிடுவது உன் கையில் தான் இருக்கிறது வித்யா." வித்யாவின் கைகளைப் பற்றிக் கொண்டு அழாத குறையாகக் கெஞ்சினான் ஜனன்.

"டாக்டர் வேதகிரி, டாக்டர் வேதகிரி. உன்னை இன்று ஏதோ ரெஸ்றிற்கும் போகச் சொல்லியிருக்கிறார்... அந்த கைனோகொலஜிஸ்ரிக் டாக்டரிடம் எங்கள் விபரம் எதுவுமே சொல்லத் தேவையில்லை. எனக்கு இன்றைக்கு பிரிட்டிஷ் எம்பஸிக்கும் போக வேண்டியிருப்பதால் வேறு வழியில்லை. அண்ணாவுடனே போயிட்டு வந்திடு". அப்போதாவது சங்கீத்துடன் பேசி ஒரு முடிவிற்கு வரமாட்டாளா என்ற நப்பாசை. "சரி அதிருக்கட்டும். உன் முடிவை மாத்தவே மாட்டியா வித்யா?" பழையபடி, அந்த முடியாத கதைக்கு முடிவு தேடத் துடித்தான் ஜனன். பிரியப் போகிறோம் என்று உணர்விலேயே, ஆட்பட்டுக் கொண்டு, அந்த உணர்வின் துடிப்பிலே அகப்பட்டுக் கொண்டிருந்த அவன் குரலைக் கேட்கவே சகிக்கவில்லை வித்யாக்கு.

"தயவு செய்து, என்னைச் சோதிக்காதீர்கள் ஜனன். ஏற்கனவே உறுதியில்லாத மனதுடன், போராடிக் கொண்டிருக்கிற, என்னை நீங்கள் வேறு ஏன் குழப்புகிறீர்கள் ஜனன். உங்களைப் பிரியவும் வழியில்

ல்லாமல், உங்களோடு சேரவும் வழியில்லாமல் தவித்துக் கொண்டிருக் கிறேன் நான். உங்களை ஏற்றால் என்ன நடக்கும்? பெயரளவில் தான் உங்களிற்கு நான் மனைவியாக இருக்க முடியும். என்னுடைய தூய் மையான அன்பு ஒன்று தான் உங்களிற்குச் சொந்தம்.. ஆனால் அது என்றோ உங்களிற்குச் சொந்தமானதுதானே. இதைத் தவிர வேறெ தைப் புதிதாக உங்களிற்கு தர இருக்கிறது. ம் நினைச்சாலே சங்கீத்தின் நிலையை பார்த்தீர்களா? நேற்று என் முடிவைத் திட்டவட்டமாகச் சொல்லிவிட்டேன் என்னை மனைவியாக ஏற்பாராம் எனக்குச் சம்ம தம் என்றால். அல்லது என் குழந்தையை மட்டும் வேணுமென்றால் கூடத் தான் எடுத்துக் கொள்வாராம், நான் உங்ககூட லண்டன் வருவ தென்றால். என்ன பைத்தியக்காரத்தனம், நான் மறுத்ததும், மறுநிமிஷம் போத்தலை நாட ஆரம்பித்துவிட்டார். அத்தை அதைப் பார்த்து மறு படி அழுகை. இரவு பூரா நெஞ்செல்லாம் நோகிறது என்று தூங்கா மலே முனகிக் கொண்டிருந்தா, இதெல்லாம் பார்க்கும் போது...

"வித்யா, திரும்பத் திரும்பச் சொல்றன் எல்லாரும் உன் முடி வால் பாதிக்கப்பட வேண்டுமா? உன் மூடக் கொள்கைக்கு" ஆத்தி ரமா, வலியா எது அவனின் குரலில் இருந்ததோ, அதைப் பகுத்தறி யும் மனநிலையில் வித்யா இருந்தால் தானே.

"இதொன்றும் மூடக் கொள்கையில்லை. ஜனன், என் மனம் உங் களை நாடுற அதே சமயம், உங்களை நாடுற தகுதி எனக்கில்லையே என்று அறிவு தடுக்கிறதே. அறிவு ஒரு பக்கம், மனம் மறுபக்கம், விருப் பம் ஒரு பக்கம், மறுப்பு ஒரு பக்கமாய், அங்கும் இங்குமாய்த் தவிக் கிற இந்த இரண்டுங் கெட்டான் மனநிலையுடன் எப்படி உங்களுடன் சேர்ந்து வாழ முடியும் எவ்வளவு தான் முயன்றாலும் என்னை மாற் றவே முடியவில்லையே. இப்படிப்பட்ட மன நிலையோடு மன நிறை வாக வாழ முடியும் என்ற நம்பிக்கையே இல்லை ஜனன். அது ஒரு போதும் நடக்க முடியாது. அந்த நம்பிக்கையின் சுடர் எப்போதோ அணைந்து விட்டதே."

"இப்போதைக்கு உன்னால் முடியாவிட்டால் பரவாயில்லை, வித்யா. முடியாதென்கிறவைகளை முடியுமாக்கவும், முடியுமென் கிறவைகளை முடியாதாக்கவும் கூடிய சக்தி காலத்திற்குத் தான் இருக்குது."

"காலம், காலம்.. இத்தனை காலம் காலமாக, பண்பாடு, கலாச் சாரம் என்று ஒருவனுக்கு ஒருத்தியென்று..."



"வித்யா, இப்படிச் சுற்றிச் சுற்றிப் பழையதையே கதைத்துக் கொண்டிருப்பதால் என்ன பிரயோசனம்? நீ ஏன் இப்படிப் பழமைக்கு புதுமைக்கும் இடையே பாலம் அமைக்கவேண்டுமென்று திண்டாடுகிறாய்? ஒருவனிற்கு ஒருத்தி என்ற நியதி இருக்க வேண்டியது தான். உள்ளத்தாலும் உடலாலும் ஒருவனுடன் இணைந்த வாழ்வு சிறந்ததுதான். நான் மறுக்கவில்ல. ஆனால் அந்த நியதிக்குள்ளே தான் வாழவேண்டுமென்று, நம்மை நாமே அழித்துக் கொள்ள வேண்டுமா? அந்த நியதி நம் வாழ்விற்காகவேயொழிய, நம் அழிவுக்காக வில்லையே. அது நம் வாழ்வில் நம்மை அறியாமலே புக வேண்டியது. இந்த நியதி, கோட்பாடு, வீட்டுக்குள்ளேயே பூட்டியிருந்த பெண்ணுக்கு, அல்லது பாலிய திருமணமுறை வலுவுள்ளதாயிருக்கிறவரை பொருத்தமாயிருக்கும். இல்லையா?"

"அப்படித்தான், ஆனால்.. ஆனால்..."

"பிறகென்ன ஆனாவும், ஆவன்னாவும் பெண்ணுரிமை வேண்டும், பாலியத் திருமணமுறை பிழையென்கிறாய். ஆனால் அந்த முறைகளைக் களைந்து வருகிற காலகட்டங்களில், எதிர்நோக்கிற பிரச்சனைகளைச் சமாளிக்கிற மனப்பக்குவம் இல்லை. இன்று ஆணும் பெண்ணும் சமமாகப் பேசிப் பழகும் வாய்ப்புள்ள சூழலிருக்கையில், ஒருவரை ஒருவர் விரும்பிப், பின் வேறொருவரை ஏற்கவேண்டிய நிலை வரும்போது, வாழவேண்டுமே என்ற கட்டாய நியதிக்காக வாழத் தொடங்குபவர்கள், பின் அவ்வாழ்க்கையிலே தம்மை அறியாமல் கலந்துவிடுவது கூட இயற்கையின் நியதிதான். அதுபோல் தான் இதுவும், இன்றைய நிலையில் நீ அண்ணாவை ஏற்க மறுப்பதற்கு என்ன காரணம்? உடலிற்கு நீ வழங்கும் இடத்திலும் உள்ளத்திற்கு நீ வழங்கும் இடம் கூட இல்லையா? உன் உடலுக்கு உணர்விற்கு, ஏன் உன் பூ, பொட்டு, தாலி என்று நீ போற்றும் பண்பாட்டிற்கு எல்லாமே நான் தான் சொந்தம். ஏன் உன் உடலிற்குக் கூட நான் முதல் சொந்தம் படைத்தவன் அப்படி இருக்கும் போது என்னை ஏன் விலக்குகிறாய்."

"நீங்கள் சொல்லுறது பிழை என்று சொல்லவில்லை. ஆனால் அதற்காக அதை என்மீது திணிக்கப் பார்க்க."

"நான் திணிக்கப் பார்க்கவில்லை. கொஞ்சம் யோசித்து பாரேன். இது இருபத்தோராம் நூற்றாண்டு, நாகரீகக் கோலத்தில் ஈடுபட்டு, உன்

போன்ற நிலையைத் தானாகவே தேடிக் கொள்ள வேண்டிய நிலை வந்த பிறகு, இன்னொருவனுடன் சந்தோஷமாக இந்தக் காலப் பெண்கள் வாழவில்லையா? அல்லது கணவனுக்காக தீக்குளித்த காலம் போய், இன்று விதவைகள் மறுமணம் செய்யும் காலம் வரை சமுதாயத்தின் கருத்து மாறவில்லையா? உன் கதையைப் பார்த்தால் இப்படியெல்லாம் உலகில் நடக்காமலா இருக்கிறது? உடலால் வாழ்வது முக்கியமானவர்களுக்கு உள்ளம் அவசியமில்லை. ஆனால் உள்ளத்திற்கு முக்கியத்துவம் வகிப்பவர்களுக்கு ஏனையதெல்லாம் இரண்டாவது இடம் தான். எந்த மனிதத் தன்மையான கணவனும், தன் மனைவி தானாக மாசைத் தேடிக் கொள்வதை விரும்பமாட்டான். ஆனால் மாசு அவளை மடக்கிவிடும்போது, அவன் அவளை ஏற்காது விட்டால் அவனுக்கு மனிதப் பண்பே கிடையாது. இல்லையா வித்யா? அவன் அதை ஏற்கத் தன் மனதை பக்குவப்படுத்திக் கொள்ளத்தான் வேண்டும். அதுதான் பெருந்தன்மை. அதேபோல் வழி தவறியவர்களும் புதுவாழ்வைத் தேடும் மனப்பக்குவத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். ம்... கதைக்கும், நாடகத்திலும் சோக முடிவு சுவைக்கத்தான் செய்கிறது. ஆனால் அதே ஆட்கள் தம் நிஜ வாழ்வில் அந்த சோக ரசத்தை விரும்புகிறார்களா? இல்லையே! அது எப்படியோ உன் முடிவும் அப்படித் தான் வித்யா. கதைக்காகவும் கற்பனைக்காகவும் வாழ்வதை விட்டு, போராடும் பக்குவத்தோடு, தீரத்தோடு வாழ்க்கையை வாழ்ந்து காட்டுவது தான் சரி வித்யா. அதை விட்டுக், கோழைகளாக மாற முற்படுவது பைத்தியக்காரத் தனம். அதை விடக் கோழைத்தனம் என்ன தெரியுமா? புதுவாழ்வு காண வழிகண்ட பிறகும்; அதைத் துணிவோடு அக்சப்ற் பண்ணாமல் கோழையாகி விடுவது தான். கதை, கற்பனை, படம், பாட்டு. இது எல்லாத்துக்கும் ரசிக்கும் சோகம், நிஜத்தில் ரசிக்காது என்பதை ஏற்க வேண்டும். அதை ஏற்று, அதை வெளிப்படையாகவே அந்தக் கதை, கற்பனை, படம் பாட்டு இன்றும் என்னென்னத்திலோ, எழுத்திலோ, பேச்சிலோ, நடிப்பிலோ, நாட்டியத்திலோ எல்லாத்திலேயுமே வெளிப்படையாகக் காட்டவும் துணிவு வேண்டும். காட்டுவதை வெளிப்படையாக ஏற்கவும் துணிவு வேண்டும். அந்த மனப்பக்குவம் உனக்கு வரவேண்டும். காலம் தான் உனக்கு அதைத் தரவேண்டும்.”

"நீங்கள் சொல்வது, சொல்வது ஆனால் பிள்ளை.

"ம்... பிள்ளை பிள்ளை என்று அதன் வாழ்க்கையயும் பார்க்கத் தான் வேண்டும் நீ இப்படியே, தனியே இருப்பதால், நாளைக்கு அந் தக் குழந்தையின் தகப்பன் யாரென்ற கேள்வி வரும்போது மட்டும், அந்தக் குழந்தையின் வாழ்க்கை பாதிக்கப்படாமலா இருக்கப்போகி றது? தகப்பன் இருந்தும், தகப்பன் இல்லாத பிள்ளையாக வளரு வதைவிட்டு, தகப்பன் உள்ள பிள்ளையாக வளருவது மேலில்லையா? சரி, பிள்ளைக்காக அண்ணாவைக் கட்டி, நாளைக்கு உங்களிரு வருக்குமிடையில் பிளவு ஏற்பட்டால்? அண்ணாமேல் இருந்த மதிப் பெல்லாத்தையும் இழந்துவிட்டு உன்னால், விருப்பம் இல்லாமல், வெறுப்பான மன நிலையோடு, எவ்வளவு நாளைக்குத்தான் உன் னால் அண்ணாவோடு ஒத்து வாழமுடியும்? நாளைக்கு பிள்ளைகாகத் தானும் ஒத்து வாழமுடியாத ஒரு கட்டம் வந்தால், அது இன்னும் மோச மாக அல்லவா இருக்கும். அப்போது பிள்ளையின் நிலை? அதை விட இப்போது கூட என்னுடன், வெறும் பெயரளவிலாவது மனைவி யாக வந்தால், நாளைக்குப் பிள்ளையால் பிரச்சனை வராது. என்ன இருந்தாலும் அது அண்ணாவின் பிள்ளை கூட அல்லவா. உனக்கு என் மேல் நம்பிக்கை வரவேணுமென்றால், நாளைக்கு நமக்கொரு குழந்தை பிறந்து, இந்தப் பிள்ளையோடு பாரபட்சமாக நடப்பேனென்று நீ நினைத்தால் அதை மாற்றக் கூட வழியிருக்கு. மருத்துவத்தால் ஆக முடியாதது என்ன இருக்கு வசெக்ரமி செய்து அப்பாவாகும் தகுதியை நான் இழக்கத் தயார். அப்போதாவது நீ என்னை நம்புவாயா? இவ்வ ளவு சொன்ன பிறகு கூட, தனியத்தான் இருப்பாயென்றால், அப்போ பிள்ளையின் எதிர்காலம், அது என்னவாகப் போகிறது. இப்போ சொல்! பிள்ளையென்ற சாட்டுச் சொல்வது உனக்குச் சரியாகப்படு கிறதா வித்யா?.... ம் ... உன் முடிவால், சரியான முடிவு நீ எடுக்கா விட் டாலும், எங்கள் குடும்ப மானம், உனக்குத் தனிவாழ்வு, எனக்கு, அண் ணாக்கு எல்லாருக்குமே துயரம் தான். கொஞ்சமாவது யோசித்து பாரேன்."

"நீங்கள் சொல்வது சரிதான் ஜனன். ஆனால் இப்போ உடனே, என்னால் எப்படி...?"

"சரி இப்போ வேண்டாம், பிறகு அந்த மனநிலை வரட்டுமே. அது மட்டும் பெயரளவிலாவது என் மனைவியாக, எனக்கொரு ப்ரண்டாக ஆவது வரக்கூடாத? சரி.... அப்படியில்லையென்றால் என்றாவது ஒரு நாள் இந்தத் தனிமை வாழ்வின் நிலை, உனக்கு வேதனையைத் தந்து, துணையின்றி நீ வாழமுடியாது என்பதை உணரும் போதாவது என்னுடன் சேரமாட்டாயா வித்யா?" ஜனனின் குரலில் தொனித்த ஆர்வம்.... ஆனால் வித்யாவின் குரலில் அதன் சுவடே தெரியவில்லை.

"அந்த நிலை என்றாவது வருமென்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்களா? அப்படி ஒரு நாள் வருமென்று நான் நம்பவேயில்லை ஜனன்."

"நீ நம்பினாலும், நம்பாவிட்டாலும் நான் நம்புறன் வித்யா. உன்னை என்னால் நன்றாகப் புரிந்து கொள்ள முடிகிறது. என்றைக்காவது ஒரு நாள், பழையவைகளைக் கெட்ட கனவாக எண்ணி மறந்து, என்னோடு சேர்வாய் என்ற நம்பிக்கை எனக்கு நிச்சயமாக இருக்கிறது..."

"நீங்கள் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தால் பிரயோசனமில்லை. கடைசியாகச் சொல்றன் ஜனன். என்னை நம்ப வேண்டாம். உங்களுடைய தூய்மையான அன்பிற்கும், பெருந்தன்மையான குணத்திற்கும் எனக்குத் தகுதியே இல்லை." பேசிக் கொண்டே போனவளை இடைமறித்தான் ஜனன்.

"தகுதி இருக்கிறது, இல்லை என்கிறதெல்லாம் அன்பு முழுமையடையாத மனங்களிற்கு மட்டும் தான் சொந்தம். நம்மைப் போன்றவர்களுடைய அன்பில் தகுதி என்ற சொல்லுக்கே இடமில்லை. தகுதி என்பது எடுக்கிறவர்களிற்கு அல்ல, கொடுக்கிறவர்களிற்கு மட்டுமே உரியதென்று, உன்னுடைய அந்த வாதத்திற்கு உணர்த்தி விடேன் வித்யா."

"ஜனன், உங்களுடன் பேசிவெல்ல இயலாது. என்னை நம்பவே வேண்டாம். நாளைக்கு அந்தக் குழந்தைக்கு அப்பா யார் என்ற கேள்விக்குப் பதில் சொல்ல, என் கழுத்திலிருக்கிற தாலியால் பதில் சொல்ல முடியாதுதான். அந்தக் கோணத்திலிருந்து ஏனோ இதுவரை நான் யோசிக்கவில்லை தான். என்றாலும்... என்றாலும்.. என்னுடைய இடத்தை

நிரப்ப ஒருத்தி உங்களிற்கு வருமட்டும் இப்படித்தான் சொல்லிக் கொண் டிருப்பீர்கள். அப்படி ஒருத்தி வருவதை, நானோ, இந்தத் தாலியோ தடுக்கப் போவதில்லை. எனக்கோ, குழந்தைக்கோ, அனாதை விடுதிக்கா பஞ்சம். அதுதான் என் வாழ்விற்கு முடிவாயிருக்க...."

"வித்யா, வித்யா. இப்படிப்பட்ட முடிவு கதைக்கு ரசமளிக்கும். வாழ்க்கைக்கு அல்ல. நான் உன்னை ஒன்று மட்டும் கேட்கிறேன். சத்தியமான பதில் சொல்லுவாயா? என்ன? நீ என்னை முழுமையாக விரும்புகிறாயா? பரிபூரணமாக நம்புகிறாயா? சொல்லு வித்யா. சத்தியமாகச் சொல்லு" ஜனனின் பொறுமையே கரை கடந்த மாதிரித் தோன்றியது.

"ஜனன், ஜனன். சத்தியமாகச் சொல்றன். உங்களை முழுமையாக விரும்புகிறேன். வணங்குகிறேன் என்று சொன்னால் கூடத் தப்பில்லை. ஜனன், உங்களுடைய குணங்களைப் பார்க்கும்போது."

"அப்படியென்றால், என்னை நீ முழுமையாக விரும்பி முழுமையாக வணங்குகிறாயென்றால், உன்னைப் பொறுத்தளவில், நான் உனக்குத் தெய்வம். அப்படித்தானே. வணக்கம் உரியது தெய்வத்திற்குத் தானே. அப்படியானால் தெய்வத்திடம் உண்மையான பக்தி கொண்ட பக்தன், தெய்வத்தின் விருப்பத்தைத் தனக்கு விருப்பமோ, இல்லையோ, தனக்குப் பிடிக்காத ஒன்றையும், தெய்வ விருப்பத்திற்காகத், தன்னை ஒறுத்துச் செயல்பட வேண்டும். உண்மையற்ற பக்தனாய் இருந்தால், தெய்வத்தின் விருப்பத்தைவிடத் தன் விருப்பத்தை நிறைவேற்றுவதிலேயே தன் தகுதியின்மை அது இது என்று ஏதேதோ காரணமற்ற சாக்குகளைக் காட்டித் தன் இஷ்டப்படி நடக்க முயல்கிறான். தெய்வம் பக்தன் என்பதெல்லாம் ஒரு எல்லைக்குட்பட்ட வரைதான். அன்பின் முழுமையை, அதன் எல்லையைத் தாண்டிவிட்டால், தெய்வம் பக்தன் என்ற பேதம் மறைந்து, தெய்வமே பக்தனாக, பக்தனே தெய்வமாக மாறிவிடலாம். தெய்வம் ஒருநாள் பக்தனாக் மாறலாம். அல்லது பக்தனே ஒருநாள் தெய்வமாக மாறலாம். கோயிலைப் பூட்டி, பக்தன் உள்ளே வரமுடியாமற் தடுத்து விட்டால் மட்டும், தெய்வம் பக்தனை அடைய முடியாதென்று நினைக்கிறது மதியீனம். உன்னுடைய இதயத்தைப் பூட்டி வைத்து விட்டால் மட்டும், நான் உன்னைப் பிரிந்து போய்விடுவேனென்று நினைக்காதே."

"இப்போதைக்கு அப்படித்தான் சொல்வீர்கள். ஆனால் காலம் உங்கள் மனதை மாற்றும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கு ஜனன்."

"லுக் கியர் வித்யா. அந்த நம்பிக்கை அந்த நப்பாசை எல்லாத் தையும் மூட்டை கட்டி வைத்துக் கொள். எனக்கு வெறும் காதலியாக மட்டும் உன்னைத் தேடவில்லை. காதலியாக, மனைவியாக, தாயாக எல்லாமாகத் தான் தேடினேன். அதை நீ ஏற்காது விட்டாலோ... ம்.. அவைகளை நிரப்ப இன்னொருத்தி வரமாட்டாள் என்ற உண்மையை மட்டும் மறந்திடாதே உனக்கு ஒன்றே மட்டும் சொல்றன் வித்யா."

"அதைத் தானே நானும் சொல்றன் ஜனன். நான் சொல்வதும் உண்மை தான் என்று நீங்கள் கூட உணர மறுக்கிறீர்."

"இது உண்மையல்ல வேறும் போலித்தனமான மனபக்குவ மற்ற தன்மை வித்யா. உண்மை என்பது உணரப்பட வேண்டியதொன்று. அதை வெறும் வாய்ப் பேச்சாலோ, வாதாட்டத்தினாலே உணர்த்தி விடமுடியாது. அதைப் புரிஞ்சு கொண்டாயென்றால், நான் சொன்னது, சொல்வது எல்லாமே நல்லா விளங்கும் வித்யா."

"இதோ பார் வித்யா, திரும்பத் திரும்ப சொல்றன் காலம் மாறும் போது, கண்மூடித்தனமாக மாறி வாழ்க்கைப் பாதையை மாற்று என்று வாதாடவில்லை நான். ஆனால் காலப்போக்கின் மாறுதல்களால், புதிய புதிய பிரச்சினைகள் வரும்போது, அதையும் எற்க நம்மைப் பக்குவப்படுத்திக் கொள்ளத்தான் வேண்டுமென்கிறேன். காதலித்த வன் கைவிட்டுவிட்டால், சாவு தான் முடிவு என்று அன்று நாங்கள் கண்ட அமராவதியின் கட்டத்தை எத்தனையோ பேர் தவறு என்று இன்று தாண்டிவிட்டார்கள். இல்லையா? காதலித்தவன் விட்டுவிட்டால், இன் னொருவனைக் கல்யாணம் செய்யலாம் என்று திரையில் காட்டினா லும், அவள் மணமாகி வாழ்வதை ஏற்கும் மனபக்குவம் அன்று எம்மவர்களிடையே இருக்காததால் தான் அந்தக் காதலர்களின் சாவில் தேவதாஸ் படம் அப்படி வெற்றி கண்டது. ஆனால் அப்படிப் பார்த்தால், இன்று எத்தனை பெண்கள் செத்துத் தொலைந்திருக்க வேண்டும். உண்மையில் அப்படியா நடக்கிறது? இல்லை. அவர்கள் வாழப் பழகிக் கொண்டு தான் வருகிறார்கள். அதனால் தான் கல்யா ணப் பரிசு படம் அவ்வளவு அமோகமாக வெற்றி கண்டது. ஏன் தெரி யுமா? ஒருவனை விரும்பி, இன்னொருவனைக் கல்யாணம் செய்து

கொண்ட எத்தனையோ பெண்கள், அனுபவ பூர்வமாகக் கண்ட, அப் பட்டமான இரகசியமான உண்மை அது. அந்தப் பெண்கள், தங்க ளைத் தாங்களே திரையில் கண்டபோது நிச்சயம் ஆதரவு தரத்தான் செய்தார்கள்.

அந்தக் காலத்திலே, வீட்டுக்குள்ளே பெண் அடைபட்டுக் கிடக் கையில் ஏற்படாத விபரீதங்கள், இன்றைக்கு பெண்களும், ஆண்க ளைப் போல் வெளியுலகில் நடமாடுகையில், அவர்களின் உணர்வு களும் பாதிக்கப்படத்தான் செய்கிறது. அப்படிப்பட்ட பாதிப்புகளை, ஆண்களைப் போலவே இவர்களும் ஏற்கப் பக்குவப்படுத்திக் கொண் டார்கள். சலனமே படாத ஆண்கள் எப்படி இருக்க முடியாதோ, அப் படித்தான் சலனமே படாத பெண்களும் இருக்கமுடியாது. இன் றைக்கு பெண்கள் இன்னும் பலவிதமான சோதனைகளைச் சந்திக்க நேரிடுகிறது. பெண்கள் உள்ளத்தால், உணர்வினால் மட்டுமல்ல, உட லாலும் பாதிப்படையும் சந்தர்ப்ப சூழ்நிலைகள், அவர்கள் விரும் பியோ, விரும்பாமலோ ஏற்படத்தான் செய்கிறது".

"அதை நான் மறுக்கவில்லையே. ஆனால்...."

"ஒருவனை விரும்பிய பெண், இன்னொருவனால் கெடுக்கப் பட்டால், விரும்பியவனை மறந்து, அந்த வில்லனுக்கு வாழ்க்கைப் படும் காலக்கட்டம் மாறிக் கெடுத்தவனை மறந்து விரும்பியவனையே கல்யாணம் செய்து கொண்டு மீண்டும் சந்தோஷமாக இருக்கும் கதை களைக் கேட்டதில்லையா வித்யா? பெண் கெடுக்கப்பட்டு விட்டாள் என்று விரல் விட்டு எண்ணும்போது, அவளைக் கெடுத்த அந்த ஆணும் தான் கெட்டலைகிறான் என்று அவர்களையும் அந்த எண்ணிக்கையில் சேர்க்கும் மனப்பக்குவம் என்றுதான் எம்மவர்களுக்கு உதயமாகுமோ தெரியாது. இதோ பார்,, கெடுக்கப்பட்டதால் கருவுற்ற குழந்தையை ஊருக்குத் தெரியாமல் அழித்து விட்டோ, அழித்து விடாமலோ, கோழையாகத் தானும் செத்துத் தொலையாமல், துணிவோடு தனியே வாழ்ந்து வரவில்லையா எத்தனையோ பெண்கள்? இப்படிப்பட்ட ஊமைக் காயங்களோடு அந்தப் பெண்கள் வாழ்ந்து வருகிறார்கள் தான். வாழப்பழகிக் கொண்டு விடுகிறார்கள் தானே. அதுதான் சரி. அதே போல, தன் கருவிலே உருவான குழந்தையைப் பெற்றெடுக் கும் ஒரு பெண், இன்னொருவனைக் கல்யாணம் செய்து சந்தோஷ மாக வாழ்வதை நாம் இந்தக் காலத் திரைப்படங்களில் பார்த்து,

அதைச் சரியென்று ஏற்றுக் கொள்வதில்லையா? அதை ஏற்கிறோம் எப்போது? அந்தக் குழந்தையின் தகப்பன் ஒரு கெட்டவனாக, ஒரு வில்லனாகத் தோன்றினால், அந்தப் பெண் இன்னொருவனுக்கு மனைவியாகலாம். உனது நிலையில் உள்ள பெண்ணுக்கு ஒரே ஒரு வித்தியாசம் என்னவென்றால், உன் குழந்தைக்குத் தகப்பன் ஒரு கெட்டவனாக, வில்லனாகத் தோன்றாதுதான். அண்ணா அப்படிப்பட்டனவாக, ஒரு வில்லனாக இருந்திருந்தால், நீ எனக்கு மனைவியாவதில் தப்பில்லை. அவர் நல்லவர். தெரியாமல் செய்த தவறொன்றினால் நீ அவருக்கு மனைவியாக வேண்டும் என்றால், தவறியவன் கெட்டவனா நல்லவனா என்பதற்குத் தான் நாம் முக்கியத்துவம் கொடுக்கிறாமே ஒழிய தவறிழைக்கப்பட்டவளின் மனநிலைக்கு அல்ல. அண்ணா ஒரு வில்லனாக இருந்து, உன்னைக் கெடுத்து, உன்னைத் தாயாக்கி விட்டு ஓடிப் போய் விட்டால், நீ எனக்கு மனைவியாவதில் பிழையில்லை என்று கணிக்கும் இந்தச் சமுதாயம், அண்ணா ஒரு நல்லவனாக இருந்து, உன்னைக் கெடுத்து, அதாவது என்னையே விரும்பி எனக்காக வாழ்ந்து கொண்டிருந்த உன்னைக் கெடுத்து, உன்னைத் தாயாக்கி விட்டு, வாழ்வு கொடுக்க முன் வந்து, தான் தனது சந்தோஷமான வாழ்வுக்கும் சேர்த்து வழி அமைக்க முன் வந்தால், அதை நீ ஏற்க மறுப்பது சரி என்று ஏற்க யோசிக்க வேணும். அப்படிப்பட்ட ஒருவரை, ஒரு நிமிஷம் தானும் உன் மனதில் விரும்பாத ஒருவரை, மதிப்பெல்லாம் இழக்க வைத்து, வெறும் ஈனப்பிறவியாக நீ, நினைக்கும் ஒருவரை மறுப்பதில் தவறில்லை, எனக்கு மனைவியாவது தான் சரி எப்போது தான் இந்தச் சமுதாயம் கணிக்கப் போகிறதோ? ஏன் நீ கூடக் கணிக்கப் போகிறாயோ?”

“நீங்கள் சொல்றது சரி தான் ஜனன், எப்பவுமே கெடுத்தவன் நல்லவனா, கெட்டவனா எனகிறதைத்தான் நாங்கள் கணக்குப் பார்க்கிறோமே தவிர, கெடுக்கப்பட்டவளின் மனதை நாங்கள் பார்க்கிறதில்லை தான். அது எனக்கு என்று வந்தபிறகுதானே நான் கூட அந்தக் கண்ணோட்டத்தைப் பார்க்கிறேன்.”

“நல்லவனான அண்ணாக்கு ஒரு சாவு, அல்லது பைத்தியம் பிடித்தல், இப்படிப் பிரச்சினைகளை எதிர்நோக்கப் பயந்து, அப்படி ஒரு தப்பிக்கும் வழியில் அவர் முடிவு தேடினால், அப்போமட்டும் நீ

எனக்கு மனைவியாவதில் தவறில்லை என்று இந்தச் சமுதாயமோ, திரைப்படங்களோ இலகுவாகப் பிரச்சனையை முடித்து விடும். ஆனால் அவர் உயிரோடு இருந்தால், நல்லவனோ, கெட்டவனோ அவனிற்கு நீ வாழ்க்கைப் படவேண்டும். நடந்துவிட்ட ஒரு தவறுக்காக பிள் ளைக்கு அப்பா என்று ஒன்றிற்காக, விரும்பாத ஒருவரை ஏன் வெறுக் கும் ஒருவரைக் கலியாணம் செய்து, நாளாவட்டத்தில் புரையோடிப் போன புண்ணால், விவகாரத்திற்கு வழி தேடுவதிலோ, தன் வாழ் வைப் பணயம் வைப்பதிலோ மட்டும், பிள்ளைக்கு சுபீட்சம் கிடைக் கவா போகிறது? அதைவிட, ஒருத்தரை ஒருத்தர் புரிந்து கொண்ட மனப்பக்குவம் கொண்ட நாம் இருவரும், வாழ்க்கையில் இணைந் தால் எல்லோருக்குமே நல்லது தானே. அப்படி என்னோடு சேராமல் தனியே இருந்து அப்பா பேர் தெரியாத பிள்ளையாக, ஒரு பாவமறி யாத பிள்ளை வளர்வது சரியென்று உனக்குப் படுகிறதா? இதோ பார் வித்யா. நடந்துவிட்ட ஒரு சிறு தவறுக்காகத், தண்டனை அடைவ தால் அந்தத் தவறு, நிவர்த்தி செய்யப்படவா போகிறது. அல்லது அந் தத் தண்டனையை நிறைவேற்றுவதால் அதைவிட இன்னும் பெரிய தவறுகளிற்கு வழிகோலுவது சரியாகப் படுகிறதா வித்யா? சுருக்கமா கச் சொன்னால், சந்தர்ப்பவசத்தால் தவறிழைத்தவனும் வாழவேண் டும், தவறிழைப்பட்டவள் இன்னும் கட்டாயமாக வாழத்தான் வேண் டும் என்ற உண்மையை இன்னுமா உணரவில்லை நீ? நல்லதோர் வீணை செய்தே அதை நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ என்று பாடுவாயே! இந்தப் பாட்டிற்குப் பதில் கேட்டால் வீணையை எறிவது தவறு என்பாய். வீணையைத் திருத்தி மீண்டும் சுருதி சேர்க்க வேண் டுமென்பாய் இல்லையா? அதேமாதிரித்தான், தவறிழைத்த அண்ணா நிலையும், தவறிழைக்கப்பட்ட உனது நிலையும் ஒரு தவறுமே செய் யாது உருவான பிள்ளையின் நிலையும் நலங்கெடப் புழுதியில் எறி யப்படத் தேவையில்லை. இதைவிட எனக்குச் சொல்ல எதுவுமே தெரியாது. இது தான் நான் சொல்லக்கூடியது. இனி உன் இஸ்டம் வித்யா.” மூச்சு விடாமல் பேசிய ஜனனேயே பார்த்துக் கொண்டிருந் தாள் வித்யா.

“நீங்கள் சொல்வது நியாயம் தான் ஜனன். ஆனால் அத்தை என்ன சொல்வார்கள், மற்றவர்கள்...” என்று ஆரம்பித்தவளை மறுபடி வெட்டினான் ஜனன்.

“மற்றவர்கள், மற்றவர்கள்... இன்னும் எவ்வளவு காலத்திற்குத் தான் மற்றவர்கள் பேச்சுக்காக எம் சமுதாயம் வாழப் போகிறதோ? வித்யா, நீ மற்றவர்களுடைய வாழ்க்கையை வாழப்போவதில்லை. அதுபோல் தான் அவர்களும் உன் வாழ்க்கையை வாழப் போவ தில்லை. இந்தப் பெண்களே இப்படித்தான். சமத்துவம், புதுவாழ்வு வேண்டும் என்று வாய் கிழியப் பேசுபவர்கள் கூட, தமக்கென்று அது வந்ததும் மற்றவர்கள், ஊராட்கள் என்ன பேசுவர்களோ என்று முடங்கி விடுகிறார்கள். இதெல்லாம் வெறும் பைத்தியக்காரத்தனம். எல்லாப் பெண்களுமே பொதுவாக, மறுவாழ்வு தா, சமத்துவம் தா என்று ஆண்களிடம் கேட்பதற்கு முன்னால், அது கிடைத்தால் அதை ஏற் கத் தான் தயாரா என்று, தம்மைத் தாமே கேட்டுக் கொள்ள வேண் டும். ஏனென்றால் ஆண்களின் மனநிலை பக்குவப்பட்டு வரும் இந் தக் கால கட்டங்களில் கூட, ஊருக்கும் உலகத்திற்கும் பயந்து தன் நியாயமான உணர்ச்சிகளுக்கு மதிப்புக் கொடுக்காத, கோழையாகத் தனக்குத் தானே எதிரியாகிக் கொள்கிற, சாதாரண பெண் வர்க்கத்தில் நீயுமா கூடச் சேரப் போகிறாய்? ஒவ்வொரு பெண்ணும், தானே தனக்கு முதல் எதிரி. அவளுக்கு அடுத்த எதிரி யார்? ஏனைய பெண் சமுதாயம் தான்... மாமியார், நாத்தனார், மருமகள் என்று. கடைசியாகத் தான் ஆண் என்ற வர்க்கம் பெண் வர்க்கத்திற்கு எதிரியாகிறது. மனம் பண்படாத பெண்ணுக்கு புதுவாழ்வையோ மறுவாழ்வையோ திணிப் பது எவ்வளவு மடமையோ, அதேபோல், புதுவாழ்வு நாடும் ஒரு பெண், அதைப் பெறச் சந்தர்ப்பம் இருந்தும், சமுதாயச் சொட்டைகள் அது, இது என்ற சாக்குகளால், அந்த வாழ்வை இழப்பது அதை விடப் பெரிய மடமை. இந்தக் காரணத்தை மட்டும் மீண்டும் என் கிட்டே எடுக்காதே வித்யா.”

“அதுக்காக இல்லை. ஜனன்... என்னதான் நீங்கள் சொல்வது நியாயமாகப்பட்டாலும், பிள்ளை, அந்த... அந்த சங்கீத்தின் உரிமையை... அது...”

“வித்யா, உரிமை என்ற பேச்சென்ன வேண்டியிருக்கு இங்கு. பிள்ளையின் பிற்காலத்தைப் பற்றி யோசிக்க வேண்டியதுதான். அது தான் உன் பிரச்சனை என்றால், அந்தப் பிள்ளை அப்பா பேர் சொல்லாத பிள்ளையாக வளருவது, அதுதான் திறம் என்று கருதினால், இனி முடிவு உன்னைப் பொறுத்தது. இந்த உண்மையை நீ உணர்ந்தால் சரி.”

“ஜனன். நீங்கள் சொல்வதுபோல், உண்மை என்பது உணரப் படவேண்டியதுதான். அதனால் என் முடிவு, நான் ஏற்கனவே எடுத்த முடிவுதான். அதாவது இன்றைய நிலையில் நிறையாத மனதுடன் நிறைவான வாழ்க்கையை ஆரம்பிக்க என்னால் நிச்சயம் முடியாது. ஆனால்... ஆனால் என்னுடைய இந்த முடிவிலே என்றாவது தோல்வி காண்பேனேயானால், இப்போதைக்கு என்னால் நம்ப முடிய வில்லை தான்.. ஆனால் நம்ப முடியாத விஷயங்கள் தானே உலகில் நடந்து கொண்டிருக்கின்றன இல்லையா? சரி. அப்படிப்பட்ட சூழ் நிலை, மனநிலை என்றைக்காவது..... என்றைக்காவது உருவாகினால், உங்களிடம்... உங்களிடம் நிச்சயமாக....”

“நிச்சயமாக என்னிடம் வருவாய் வித்யா. அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை உருவாகி, உனது மனநிலை மாறி, நிறைஞ்ச மனசோட நமது வாழ்க்கை ஆரம்பிக்கத் தான் போகிறது. சங்கமித்த உள்ளங் களிற்குப் பிரிவு என்பது என்றுமே கிடையாது. அதுக்காக என்றைக் குமே உனக்காகக் காத்திருப்பேன். நீ வருவாய் என்ற நம்பிக்கை யிலே, என் வாழ்க்கை பூராகக் காத்திருக்கக் கூடத் தயார்தான். கடைசி யாக ஒன்றே ஒன்றை மட்டும் நினைவில் வைத்துக் கொள். எங்கிருந் தாலும், எவ்வளவு காலம் கடந்தாலும், என்றென்றுமே உனக்காக, உன் ஜனன் காத்திருப்பான். உடலால் வாழும் வாழ்வை விட, உள்ளத்தால் வாழ்வது, அந்த மானசீக வாழ்வு மேன்மையானது தான். ஆனால் அதற் காகக் காலம் பூராகக் காத்திருக்க வைத்து விடமாட்டாயே. ஒருத்திக்கு ஒருவன் என்ற நியதி மாறி, ஒருவனுக்கும் ஒருத்தி என்ற கதைகள், கற் பனையில் மட்டுமல்ல, நடைமுறையில் கூட செயற்படலாமல்லவா? நான் காத்திருக்க வேண்டிய காலத்தைக் கணிப்பது உன் கையில் தான் இருக்கிறது. கடைசியாகச் சொல்றன். நீ மாறுகிறாயோ, இல்லையோ, நான் மாறாமல் உனக்காகக் காத்துக் கொண்டிருப்பேன். ஒவ்வொரு கணமும் நீ இந்த ஜனனை வேண்டாம், வேண்டாமென்று சொல்லும் போது, அந்த ஒவ்வொரு கணமும், இந்த ஜனன் உன்னை வேண்டும், வேண்டும் என்று நினைத்துக் கொண்டு காத்திருக்கிறான் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்.”

ஏதோ பத்து மேடைகளில், அடுத்தடுத்து ஆற்றிய சொற்பொழி வுகள் எல்லாம் முடிந்த மாதிரி ஒரு கணம்... ஒரு கணம் அவள் கைக ளைத் தன் கைகளில் ஏந்திய ஜனன்.... மறுகணம் அறையை விட்டு

வெளியே வந்தான். ஜனன் அறைக்கு வெளியே வரப் போகிறான் என்பதை உணர்ந்ததுமே, அவனுக்கு முன்னமேயே அந்த இடத்தை விட்டு அவசரவசரமாக வெளியேறினான் சங்கீத். அடுத்து என்ன செய்யப் போவது என்பதைத் தீர்மானித்தவனாய்க் காரை எடுத்துக் கொண்டு, டாக்டர் வேதகிரியின் நேசிங்ஹோமை நோக்கி வேகமாகச் செலுத்தினான்.

## 15

**சொல் ஒன்று வேண்டும். தேவ சக்திதனை நம்முன்பே**
**நிலைபெறச் செய்யும் சொல் வேண்டும். – பாரதி**

விடுவிடு என்று எப்படியோ வீடு வந்து சேர்ந்து விட்டாள் வித்யா. எப்படித்தான் அத்தனை மனக் குழப்பத்திற்கிடையிலும் வீடு வந்து சேர்ந்தோமென்று இருந்தது அவளுக்கு. அவளுக்கு சற்று முன்தான் பிரிட்டிஷ் எம்பசிக்கு அவசரமாக வெளியே போய்விட்டு வீடு திரும் பியிருந்த ஜனன், அவளைக் கண்டதும் திடுக்கிட்டு விட்டான். பத்தி ரக்காளி போல், பறக்கப் பறக்க மாடியில் ஏறி ஓடிய அவளைப் பார்த்த வனுக்கு அவள் கோலத்தைப் பார்த்ததும் தொடர்ந்து தானும் போவதா, விடுவதா, என்ற தயக்கம். எதற்கும் கொஞ்சநேரம் விட்டுப் பார்ப் போமே, என்ற கூடத்திலேயே காத்திருந்தான். வித்யாவின் சாடையை இன்னும் காணவில்லையே என்று எண்ணமிட்டவனாக எழும்பிய வன், வாசலில் காரைப் பார்க் பண்ணிவிட்டு வீட்டுள் அவசரமசரமாக வந்த சங்கீத்தை கண்டதும் என்ன என்பது போல் அவனைப் பார்த்தான்.

வித்யா அன்று டாக்டர் வேதகிரியின் நேர்ஸிங் ஹோமிற்குக் காலையிலேயே போனாள். ஏதோ அம்னியோசென்சிஸ் அல்ராசவுண்ட் ரெஸ்ற் என்று அவளுடன் கூடவே ஜனன் இருக்க விரும்பியதற் கென்ன, டாக்டர் ஜேம்ஸ்ஸின் அவசரக் ஹோல் வேறு அவளுடன் போக முடியாது அவனைத் தடுத்து விட்டது. என்ன நடந்தது என்பது போல் சங்கீத்தைப் பார்த்தான் ஜனன்.

"கவிதா வந்து விட்டாளா ஜனன்" யோசனையோடு கேட்ட அவனுக்கு யோசனையோடேயே "ம்.ம்." கொட்டினான் ஜனன். வித்யா படிகளில் இறங்கி வருவதைக் கண்டதும். அதுவும் அவள் முகம்

இருந்த கோலத்தைப் பார்க்க.. படபடவென்று மாடியிலிருந்து இறங்கி வந்த வித்யா, நேரே சங்கீத் முன்னால் போய் நின்றாள். மறுகணம் யாருமே எதிர்பாராத வண்ணம் சங்கீத்தின் கன்னத்தில் அவள் அறைந்த அறையில் சங்கீத் என்ன, ஜனனே கூட நில தடுமாறித்தான் போனான்.

"வித்யா, உனக்கென்ன, இது என்ன" குழப்பத்துடன் தடுக்கப் போன ஜனனை, இடைவெட்டினான் சங்கீத்.

"நீ இதில் தலையிடாதே ஜனன். கவிதா, உன்னைத் திருப்பித் தொட்டு அறைய எனக்கு ஒரு நிமிஷம் கூட எடுக்கா.."

"என்னை, திருப்பி அறையவா? நல்லாச் சொல்லுவீர்கள். அன்று, என்னை, அந்த ஒரு நாள் தொடவரும்போதே, இந்த அறையை நான் திருப்பித் தரக்கூடிய சுய உணர்வோடு இருந்திருந்தால், இன்று இந்த நிலை எனக்கு வந்திருக்காது. அதற்குள் இன்னொரு முறை என்னைத் தொட்டு அறைய, நீங்கள் எனக்கு என்ன, தாலி கட்டிய புருஷனா... என்ன அதிகாரம்..." ஆத்திரத்துடன் கத்தினாள் வித்யா.

"தாலி கட்டியா உன்னை நான் தொட்டேன். தாலி கட்டாமலே உன் பிள்ளைக்கு, என்னை அப்பாவாக்கி விட்டேன். அந்த உரிமையில் தான் சொல்கிறேன். உன் வரட்டுப் பிடிவாதத்திற்காக அப்பா இருந்தும், அப்பா இல்லாத பிள்ளையாக, ஏன் என் பிள்ளை வளர வேண்டும். அதனால் தான், அதனால் தான் அப்பா இல்லாமல் என் பிள்ளை வளருவதை விட, அதை அறிந்து அழித்து விடுவது 'பெற்றர்' என்று நான் நினைச்சதில் என்ன பிழை?"

"வாயை மூடுங்கள் சங்கீத், அதை அழிக்கச் சொல்ற உரிமையை நான் உங்களுக்குத் தந்தேனா? நீங்களே எடுக்கப் பார்த்தது, சீ அதுவும் இப்படி என்னை மடக்கப் பார்த்து, போதாக்குறைக்கு டாக்டர் வேதகிரி கூட, சே...! வெட்கமில்லை.. அவருக்கு டாக்டர் பட்டம் வேற..." படபடவென்று பொரிந்தவளை இடையில் மறித்தான் ஜனன்.

'வித்யா, இப்ப என்ன நடந்தது? ஏன் இப்படிப் பதறுகிறீர்கள் இரண்டு பேரும்?"

"பதறாமல் என்ன.. இந்த சங்கீத்தும், டாக்டர் வேதகிரியுமாகச் சேர்ந்து என் குழந்தையை எனக்குத்..." மேலே பேச முடியாமல் விக்கி விக்கி அழுதாள் வித்யா.

"இது தான் நடந்தது ஜனன், தன்ர பிடிவாதத்தினாலே வித்யா பாதிக்கப்படுறாள். நான் செய்தது பிழைதான், இல்லையென்றில்லை. இப்படியே இருந்தால்... இதற்கு முடிவு. டாக்டர் மாமா, டாக்டர் சேகரை அல்ராசவுண்ட் எடுக்கச் சொன்னதுக்கென்ன, ரெஸ்ற் முடிவைப் பற்றித் தன்னோடு கவிதாவைப் பேசும்படி டாக்டர் சேகருக்குச் சொல்லி விட்டார். டாக்டர் சேகர் வெறும் யூனியர் டாக்டர். ரெஸ்ற் முடிந்து, கவிதாவிடம் டாக்டர் வேதகிரியைச் சந்திக்கச் சொல்லி விட்டுப் போய் விட்டார். டாக்டர் வேதகிரி அவர் .. நான் கேட்ட..." சங்கீத்தை முடிக்க விடவில்லை வித்யா.

"டாக்டராம் டாக்டர். இவரும், அவருமாகச் சேர்ந்து நடத்த நினைத்த நாடகம். ம்.... அவர் கெஞ்சுகிறார் பிள்ளை, ஸ்கான் ரெஸ்ற் டிவோம்ட் என்று எனக்குச் சொல்ல, என்னைக் கருச்சிதைவு செய்யும் படி. அல்லாவிட்டால்... அதைச் செய்வது, சட்ட விரோதம், என் விருப்பம் இன்றி என்று சட்டமும். விரோதமும்... உங்களுக்கெல்லாம் யார் என் குழந்தையை அழிக்கிற அதிகாரம் தந்தது?" அடக்க முடியாமல் அழுதாள் வித்யா.

விடயம் இப்போது ஓரளவு விளங்கி விட்டது ஜனனுக்கு. நடந்தது இதுதான்.

சங்கீத்திற்கு அன்று காலையில் வித்யாவிற்கும் ஜனனுக்குமிடையே நடந்த விவாதத்தைக் கேட்ட பிறகு, மூளையே குழம்பின மாதிரி தான் இருந்தது. வேற வழியே தெரியவில்லை. வித்யா நேசிங் ஹோமிற்குப் புறப்படமுன் அவன் அங்கு பறந்தடித்துக் கொண்டு சென்று எப்படியாவது குழந்தையை அழித்து விடச் சொல்லிக் கெஞ்சினான். குழந்தையை அழிக்க ஒரு வழி... குழந்தை ஊனமுள்ள குழந்தையென்று நம்பினால், அந்தக் குழந்தையின் எதிர்காலத்தை உத்தேசித்துக் கவிதா அந்தக் குழந்தையை அழிக்கச் சம்மதித்தால் ..... சங்கீத் கெஞ்சினான். அவனைப் பார்க்கப் பரிதாபமாக மட்டுமல்ல பயமாகக் கூட இருந்தது டாக்டர் வேதகிரிக்கு.

சங்கீத்தின் மனநிலையை நோக்க, அவனுக்குப் பழையபடி அதிர்ச்சி கொடுக்க, அதன் விளைவுகளை எதிர்நோக்க, அவருக்கு சம்மதமில்லை. அந்த அதிர்ச்சி அவனைப் பாதித்தால், இனி இன்

னொரு சந்தர்ப்பத்தில் அவன் குணமடைவானோ என்னவோ... சங்கீத் வேறு கவிதாக்குப் பிள்ளை இருப்பதால் தானே எப்பவும் பிரச்சனை... பிள்ளை இல்லையென்றால் கவிதா ஜனனுடன் கூடிய காலக் கதியிலாவது போய்விடுவாள் தானே. கவிதா தானாகத் தன் பிள்ளையை இழக்கச் சம்மதிக்க மாட்டாள். பிள்ளையை நாமாக அவள் இழக்கும்படிச் செய்து விட்டால்" டாக்டர் வேதகிரிக்கே கூட மனக் குழப்பமாகத் தான் இருந்தது. எனவே டாக்டர் சேகரிற்குச் சொல்லி விட்டார். ரெஸ்ற் முடிவுகளைப் பற்றி அன்று ஏதும் பேச வேண்டாம் அதைப்பற்றித் தானே அடுத்த நாள் அவளுடன் பேசுவதாக கடைசி அந்தக் கொஞ்ச நேரத்திற்குள் ஒரு தெளிவான முடிவை எடுக்கலாம் என்ற நப்பாசை அவருக்கு. தூரத்தில் வித்யா ரெஸ்ற் செய்ய வேண்டிய அறையை நோக்கி நடப்பதைக் கண்டதும் டாக்டர் சேகருடன் பேச்சைக் கத்தரித்து விட்டு மெல்லத் தன் கொன்சல்ற்றிங் அறைக்குச் சென்று விட்டார்.

அறைக்குள்ளே காத்திருந்த சங்கீத்தின் மனநிலை, அவரைத் தயங்க வைத்தது என்னவோ உண்மைதான். ஆனால் அறைக்குத் திரும்பும் வழியில் தூரத்தே வந்து கொண்டிருந்த வித்யாவைக் கண்டதும். அவர் டாக்டர் மனச்சாட்சி அவரைக் கிண்டத் தொடங்கிவிட்டது. என்னதான் குடும்ப நண்பராய் இருந்தாலும். ஒரு டாக்டருக்குரிய கடமை உணர்ச்சி அவரை, வித்யாவிடம் பொய் சொல்லத் தயங்க வைத்தது. அங்கவீனமான பிள்ளை என்றால், வித்யா அனேகமாக அதை அழிக்கத் தயங்கமாட்டாள் தான். சரி அப்படி அழித்தால் கூட, அவள் ஜனனுடன் சேர்ந்து வாழாமல் இருக்கக் கூடிய சாத்யக் கூறும் இருக்கத்தான் செய்கிறது. அதை முடிவு செய்கிற உரிமை வித்யாவினது தான். ஆனால் அவள் என்ன முடிவு எடுக்கப் போகின்றாள் என்பது அவர் கூறும் முடிவில் அல்லவா இருக்கப் போகிறது. மாறி, மாறி சல்லடையாய்த் துளைத்த அவர் மனதை, இறுதியில் ஒரு டாக்டருடைய மனச்சாட்சி, கட்டுப்பாடு தான் ஒரு நிலைக்குக் கொண்டு வந்தது.

அதன் பலனாகத் தான், அவரும் சங்கீத்தும் விவாதிக்க வேண்டி வந்துவிட்டது. சங்கீத்தின் கெஞ்சலும், அவரது மறுப்பும், அவர்களிற்

கிடையே இருந்த சமூகமான பேச்சு நிலையை மாற்றிவிட்டது. தங்களை மறந்து அவர்கள் விவாதித்துக் கொண்டிருந்த அந்த நேரத்தில் தான், வித்யா அவரைத் தேடிவந்தாள். அவர் அறைக்கு வெளியே வந்து காத்துக் கொண்டிருந்தவள், திடீரென்று அவர்களின் பேச்சில் அவள் பெயர் அடிபடுவதைக் கேட்டதும் திடுக்கிட்டாள். மெல்லக் கூர்மையாகக் கவனித்துக் கேட்டவள்.... ஓ... இதற்குத்தானா, டாக்டர் சேகர், டாக்டர் வேதகிரி அவளிடம் முடிவைப் பற்றிக் கூறுவார் என்று தனக்கு முடிவைச் சொல்லாமல் கடத்தினார்.

தான் சந்தேகப்பட்டமாதிரி பிள்ளைக்குக் குறைபாடென்று ஒன்றும் இல்லை, குறைபாடுடைய பிள்ளையாய் இருந்தால், அதை வேண்டாமென்ற தான் சொல்ல நினைத்தது...சே...சே.... இந்த சங்கீத்தும், டாக்டரும்... மேலே அங்கே நிற்கப்பிடியாமல், டாக்சியைப் பிடித்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்து விட்டாள் வித்யா.

செய்யிறதையும் செய்துவிட்டு, வந்து வியாக்கியானம் வேறயா? மெல்ல அவளை ஆசுவாசப்படுத்தி விளங்கப்படுத்தலாம் என்ற யோசனையுடன் மறுபடி பேச்சை ஆரம்பித்தான் சங்கீத்.

"இதோ பார் கவிதா, உன் பிள்ளையை மட்டும் அழிக்கப் பார்க்கவில்லை நான், என் பிள்ளையும் தான்..... அதைத்தான் நான் அழிக்கப் பார்த்தேன். அந்தப் பிள்ளைக்கு அப்பாவாக நான் இருக்க முடியாவிட்டால், எனக்கு அந்த உரிமை இல்லாவிட்டால், அந்தப் பிள்ளை அப்பா இல்லாத பிள்ளையாக வளருவதை நான் விரும்பவில்லை. அதற்கு ஒரே வழி, அதை, அதை அழிப்பதுதான். அதுக்கு... எனக்கு உரிமை... அந்தப் பிள்ளையின் நன்மைக்காக..." அவனைப் பேச விட்டால் தானே வித்யா.

"உரிமை, உரிமை. அதைப் பற்றிப் பேசுற உரிமையே இனிமேல் உங்களுக்குக் கிடையாது. எப்ப அதை அழிக்க வேண்டுமெனக் கங்கணம் கட்டினீர்களோ, அந்த நிமிஷமே, அந்த உரிமையையும் சேர்த்து அழிச்சிட்டீங்க. உங்களை மாதிரி, ஜனன் ஒரு நிமிஷம், ஒரு நிமிஷம் கூட நினைக்கவில்லை. தன் பிள்ளை இல்லையென்ற தெரிஞ்சும் கூட, அதை அழிச்சிட்டு என்னை மட்டும் தன்னோட வரும்படி ஒருக்கால் கூட அவர் கேட்கவில்லை. அதுக்கு மேல அதுக்கு மேல, அவர் தானே

அப்பா என்ற ஸ்தானத்தை இழக்கத் தான்.... இழக்கத் தான்.... காரணம் அவர் அந்தப் பிள்ளைக்கு, எனக்கு அவர் கொடுத்த மதிப்பு, மனிதா பிமானம். இத்தனை நாளும் அவர் கெஞ்ச கெஞ்ச, எத்தனையோ காரணங்களுக்காக மறுத்தேன். இன்று காலையில் கூட அவர் கேட் டார். அப்பா இல்லாத பிள்ளையாக அது வளரவேண்டாம். அப் பாக்கு அப்பாவாக நான் இருக்கிறேன், என்னோட வந்து விடு என்று. நான் கொண்டிருந்த அத்தனை வைராக்கியமும் நொறுங்கின மாதிரி அப்ப இருந்தது. அப்ப கூட என் அடிமனத்தில் ஒரு கலக்கம்.... என்ன இருந்தாலும், உங்கள் உரிமையை, உங்களுடைய பிள்ளையை, நான் இன்னொருத்தருக்கு கொடுப்பதா? என்னால் உங்களோடு வாழமுடி யாது நிம்மதியாக என்ற என்னுடைய மனநிலைக்காக உங்கள் உரி மையை ஜனனுக்குக் விட்டுக் கொடுக்கிறதா என்று."

"அந்தத் தயக்கத்திற்கு நீங்களே முடிவு காட்டி விட்டீர்கள். உங் களுடைய அந்த உரிமையை, அழித்துக் கொண்டு விட்டீர்கள் சங்கீத். ஆமாம்.... அப்படித்தான் என்னைக் கெடுத்த உங்களுக்கு என் பிள் ளையை, ஒரு உயிரை. உங்கள் பிள்ளையையே அழிக்க நினைச்ச உங்களுக்கு அந்த பிள்ளை, பிள்ளையாக இருப்பதை விட..... ஜன னுக்கு ..... இன்னொருவர் பிள்ளையை ஏற்க முன்வரும் ஜனனுக்கு இந்த பிள்ளைக்காகத் தனக்கென்று ஒரு பிள்ளையே வேண்டாமென்று சொல்ற ஜனனுக்கு..... ஜனன் .... ஜனனுக்கே" வார்த்தைகள் மேலே வராமல் தவித்தாள் வித்யா.

நூலிழை அறுந்து விடாமல் இருக்க வேண்டுமே என்ற தவிப் போடு துடித்துக் கொண்டிருந்தது ஜனனின் இதயம் மறு நிமிஷம்... ஓடிவந்து அவன் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டு, உடைந்து விட்டாள் வித்யா. அணைபோட்டுக் கிடந்த வெள்ளம் உடைப்பெடுத் தாற் போல் ஓவென்று அழுதவளை, அழட்டும்! நன்றாக அழட்டும் என்று அவள் அழுது அடங்கும் வரைப் பொறுமையாகக் காத்திருந் தான் ஜனன். வித்யாவின் அழுகை எல்லாம் நின்று,வெறும் கேவலாக மாறிய பின்னர்.... அவனால் அதற்கு மேலும் பொறுக்க முடியவில்லை.

"உண்மையாகவா வித்யா... உண்மையாகவா வித்யா... வித்யா" ஆதாரத்துடன் அவள் முகத்தைத் தன் இரு கைகளிலும் ஏந்தினான் ஜனன்.



"ஆமாம் உண்மைதான்" என்பது போல், அழுத கண்ணீரைத் துடைத்துவிட்டு, மெல்ல, மிக மெல்லச் சிரித்தாள் வித்யா. வித்யா. அந் தச் சிரிப்பிலே, இடியும் முழக்கமுமெல்லாம் அடங்கியபின் அடித்த கோடை மழைச் சாரலிடையே எட்டிப் பார்க்கும் ஆதவனாக கண் ணீர்க்கிடையயில், அவள் கண்களின் ஒளி எட்டிப் பார்த்தது. அந்தச் சிரிப்பிலே... தன்னையே நம்ப முடியாதவனாக ஸ்தம்பித்து விட்டான் ஜனன் ஒரு கணம்.

காலம் காலமாகக் காத்துக்கிடந்த அந்தச் சிரிப்பு....

அதிலே அவன் தன்னை இழந்தான், தன் நிலை மறந்தான். தன் சூழலை மறந்தான். அவனை அறியாமலேயே அவனது இரு கை களும் அவளை இறுக அணைத்தன. இமைகொட்டாது அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தான் சங்கீத்... இனித் தனக்கேது வேலை என்ற மாதிரித், தன் அறைக்குள் மெல்ல நழுவினான், தன் கதவை இறுகத் தாழிட்டான். எப்படியோ, ஒரு நல்ல முடிவு... ஒரு மாதிரியாகக் கிடைத்து விட்ட மாதிரி ஒரு பிரமை.

மேசை மீதிருந்த, அந்தக் கவரை எடுத்துப் பிரித்தான். யுத்த நில வரங்கள் சேகரிக்கும் பத்திரிக்கை நிருபராக அவனை ஏற்று, மத்திய கிழக்கிற்குப் போகும்படி அறிக்கையிடப்பட்ட கடிதமும், பிரயாணத் திற்கான ஒரு ஏர்லைன்ஸ் ரிக்கற்றும், மெல்ல அவனை எட்டிப் பார்த் தது. மௌனமாக அதைக் கவருக்குள் போட்டுவிட்டு மீண்டும் கவன மாகக் கவரை வைத்தான். நாளைக் காலை இஸ்ராயேலுக்குப் அவன் புறப்பட்டு விட்டால் அவனுக்குத் துணை வெறும் பேப்பரும், பேனா வும் தான்.

அந்த அறையில் தூசி படிந்து கிடந்த அவன் வீணை அனாதை யாக விடப்பட்ட மாதிரி அவனை வா, வா என்ற அழைப்பது போல ஒரு பிரமை. அவன் அத்தனை வருஷங்களாகப் பொத்திப் பொத்தி வைத்த அந்த வீணையை, அவனுடன் தூக்கிக் கொண்டு போக முடியாதே. அவனைத் தவிர, அந்த வீணையைத் தொட்டவளே, அந்த வீணையை மட்டுமல்ல அவனையும் விட்டுப் போகப் போகிறாள். ஏனோ, அந்த வீணையைத் தான் விட்டுப் போகிறோமே என்ற எண் ணம் ஊசி முனையாய் வலித்தது. ஏனோ, அப்போதைய மனநிலை

யில்... அது அபாரமாகக்கனத்தது. அடுத்ததடவை... ம்.... எப்போ அதைத் தொடப்போகிறான்? எத்தனையோ மாதங்களிற்குப் பிறகோ? மீண்டும் அவன் அந்த வீட்டிற்கு வந்து, தூசி தட்டி, அவன் கைப்பட்டு மீட்டப்படும் வரை, அந்த வீணை ஒன்றுதான் அவனுக்காகக் காத்திருக்கப் போகிறது. அந்த எண்ணமே அவனுள்ளே சுமையாக அழுதது.

யார் காத்திருந்தலென்ன, காத்திருக்காவிட்டாலென்ன? அந்த வீணை அவனுக்காகவே காத்திருக்கத் தான் போகிறது.

யார் கண்டது? ஒரு வேளை.... ஒரு வேளை.... ஆண்டுகள் பல ஓடியபின் அவனுக்கென்று ஒருத்தி வந்து, அந்த வீணையை, அவன் மட்டுமே கேட்கிறதற்காய் மீட்டிட வந்து சேருவாளோ என்னவோ.

ஆண்டவன் ஏற்கனவே போட்டுவிட்ட அந்தக் கணக்கு அப்போ அவனுக்கு எப்படித் தெரியும்? அது அன்றைய மனநிலையில் அவனுக்குத் தெரிய நியாயமில்லையே!

கடவுளின் எதிர்காலத் திட்டங்களெல்லாம் நமக்குத் தெரிகிற ஒன்றல்லவே!

அறையின் ஒரு மூலையில் இருந்த அந்த வீணையை எடுத்து, அமைதியாகத் தூசி தட்டி, அழகாகச் சுருதி கூட்டினான். கவிதை... கவிதா இல்லாவிட்டால் என்ன? கானம் இசைக்க முடியாதா என்ன? கானம் என்பதற்குத் தான் மொழி என்று ஒன்று தேவை என்றில்லையே. எனவே அதற்குக் கவிதையும் தேவையில்லைதான்.

அடுத்த கணம், அவன் நெஞ்சத்தின் அடித்தளத்திலேயே புதைந்து விட்ட அனர்த்தமான ஆசைகள், ஆழமான இழப்புகள்... உறுத்துகின்ற உண்மைகள்... ஊனமான காயங்கள் அத்தனையும் அவன் விரல்கள், அந்த வீணையிடம் சொல்லாமல் சொல்லி அழுதது.

தனக்கு மட்டுமே. மௌனமாகச் சொல்லக் கேட்ட, அந்த சோகக் கதையில், கனமாக நனைந்துவிட்ட, அந்த வீணையின் நெஞ்சம் கூட ஒரு கணம் நலிந்து, நைந்தது.

தந்தியின் நரம்புகள் நடுங்கின.

ஒரு கணம்... ஒரே கணம்... ஒரே ஒரு கணம்தான். மறுகணம் அந்த வீணை... தன்னை மறந்தது... தன் நிலையை இழந்தது.. தனக்கு இயற்கை வகுத்த நியதியைக் கூடத் துறந்தது. தன்னை ஆட்கொண்டு விட்ட அந்த சங்கீதப் பிரியனுக்காகத் தனக்குத் தெரிந்த செய்தி ஒன்றைச் சொல்லத் துடித்துத் துடித்துத் தன் நரம்புகளை மெல்லத் தளர விட்டது.

மனமெலாம் கொள்ளை கொள்வதற்காய்
மகரந்த வீணை யான் காத்திருக்க
மறுகலாமோ நீ மாதான கவிதைக்காய்
மதிகலங்கி இன்று சலியாதே
மனமொப்பி நாளை களிப்பாயே
மாகானம் தருமிறை சேதியிதே
மறுபடியும் சொந்தம் வருவதற்காய்
மணமுடிக்க மலரொன்று தருதற்காய்
மாதேவி மாதானாள் சங்கீதாவாய்
மணியான கானமென் மொழியுமிதே
மனதிலே பொருளும் தெளியும் வரை
மடியேத்தி எனை நீயும் மகிழாயோ!

அந்த வேணுகானத்தில் கொஞ்சிக் குலாவி வெளிவந்த அந்தச் செய்தி, அந்த சங்கீத்திற்கு அப்போது புரியவில்லை. புரிந்திருக்க நியாயமில்லை. ஆனால் அவனுக்குப் புரியும் வகையில் சொல்லவும் அந்த வீணைக்கும் எந்தவொரு மொழியும் தெரியவுமில்லை. ஆனால் அந்தச் செய்தி அவனுக்கும் புரியும் வரை, அந்த வீணை அவனுக்காகக் காத்திருக்கத்தான் போகிறது. அது மட்டுமல்ல... அவனுக்காகவே எங்கோ பிறந்து, எங்கேயோ வளர்ந்துவிட்ட அந்தக் கானக் குயில் சங்கீதாவும், அவனுக்காக இன்னும் அதிக காலம் காத்திருக்கப் போவதில்லை என்பது அந்த ஆண்டவன் போட்ட முடிச்சு. அவன் போட்ட முடிச்சை எவரால் மாற்ற முடியும்? அதற்குச் சங்கீத் மட்டும் என்ன... விதிவிலக்கா என்ன? அந்த முடிச்சைப் பற்றி ஏதும் அறியாமலேயே அவன் விரல்கள் அந்த வீணையின் நரம்புகளை ஆசையுடன் வருடின.

நெஞ்சமெல்லாம் நைந்து நெக்குருகும் வண்ணம், அவன் மடி மீதிருந்த அந்த வீணையின் நரம்புகளை அவன் விரல்கள் இன்னும் அதிவேகத்துடன் வருட....

அடுத்துப் பிறந்த அந்த அற்புத கானம்...

**நல்லதோர் வீணை செய்தே – அதை**
**நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?**

அந்தக் கானத்தில் பிறந்த அவன் கேள்விக்கான பதில்... அந்த பாரதிக்கு மட்டுமா புரியவில்லை. இந்த சங்கீத்திற்கும் தான் தெரிய வில்லை. ஆனால் அதற்கான பதில் அவன் அறையை ஒட்டிய அந்த நடுக் கூடத்திலே, இன்னமும் வித்யாவை ஆதரவோடு அணைத்துக் கொண்டிருந்த அவனின்... அந்த ஜனனின் விரல்கள் வேகத்திலே விநோதமாய்ப் பிறந்து தவழ்ந்தது அனுராகமாய்.

முற்றும்

## மனோ ஜெகேந்திரன்

அவுஸ்திரேலிய மாநகரான சிட்னியை வாழ்விடமாகக் கொண்ட திருமதி மனோ ஜெகேந்திரன் அவர்களின் பிறப்பிடம் ஈழத் தமிழுக்கு முகவரி தந்த யாழ்ப்பாணம். இவர் இளவயது தொட்டே சுந்தரத் தமிழைச் சுவைத்ததன் பயனாய் தான்பெற்ற இன்பத்தை ஏனையோருடன் கவிதை, கட்டுரை, பாடல், வில்லிசை, சிறுகதை போன்ற வடிவங்களில் பகிர்ந்து மகிழ்ந்தவர்.

ஆரம்பப் பள்ளி பருவத்து வருடாந்த சஞ்சிகையில் பிரசுரமான 'மலர்கள்' என்ற கன்னிக் கவிதையைத் தொடர்ந்து 'பாத பூஜை', 'கோலத்திற்கு வெளியே' போன்ற சிறுகதைகளையும், 'சத்தியம் சாய்வதில்லை', 'அவள் ஏன் அலரி மலரானாள்', 'அர்ச்சனைக்கு அவளும் ஒரு மலர்' போன்ற குறுநாவல்களையும் எழுதிப் படைப் பிலக்கியத்தில் தனக்கென ஒரு பாதையை வகுத்துக் கொண்டார்.

பல மேடை நாடகங்களை எழுதிய இவரின் கவிதைகள் பலரின் பாராட்டை மட்டுமல்ல போட்டிகளில் பரிசும் பெற்றுள்ளன.

கவிதை, பாடல் இவருக்கு நன்கு கைவந்ததனால் வில்லுப்பாட்டு வடிவம் சிறப்பாக எழுத முடிந்து அது மேடைகளிலும் வானொலி களிலும் பரிணமித்தது.

கலைகளில் சிறந்த ஓவியக்கலையை ஆதர்சித்துக் கொண்ட இவர் பல ஓவியப் போட்டிகளில் பரிசு பெற்றதோடு, மத்திய கிழக்கில் ஓவிய ஆசிரியையாகப் பணிபுரிந்தார். இவரின் எழுத்துக்கள் இலங்கை, மலேசிய பத்திரிகைகளிலும், தமிழ்முரசு, தமிழ்ச்சுடர், பிரகாசம் போன்ற அவுஸ்திரேலியச் சஞ்சிகைகளிலும் அவுஸ்தி ரேலியக் காலாண்டுச் சஞ்சிகையான 'கலப்பை' இதழ்களிலும் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கதாகும். கலப்பை இதழில் வெளி வந்த படைப்புகளுக்கு இவரே ஓவியம் வரைந்திருக்கின்றார்.

இலங்கையில் சட்டத்தரணியாகவும், விரிவுரையாளராகவும் பணி யாற்றிய இவர், மேடைப் பேச்சுகளிலும் முத்திரை பதித்தவர். தற்போது அவுஸ்திரேலியாவில் சிட்னியில், கவியரங்கம், நூல் அறிமுகம், கருத்துரைகள் போன்றவற்றில் பங்கேற்கும் இவரே பெண் பேச்சாளர்களில் முன்னணியாளர் என்பது நிஜமானது; புகழுரையல்ல.

தற்போது நாவல் துறையில் காலடி வைக்கப் பாதை போட்டதுதான் இவர் எழுதிய 'நல்லதோர் வீணை செய்தே...' என்ற நாவலாகும். இதுவே நூலுருவாகும் இவரின் முதல் நூலாகும்.

---

ஜெகன் பதிப்பகம், 19, Ripley Place, Hassall Grove, NSW - 2761, Australia.
E Mail - Manojegan @ One. Net. 94.
Phone Number - 61 2 96289925 - Fax Number - 61 2 96596599